உ

கணபதி துணை.

ஸ்ரீ வாகீசாய நம:

# திருவதிகைப் புராணம்.

திருக்கைலாயபரம்பரை போம்மபுரம்,

ஸ்ரீ சிவஞானபாலயதேசிக ராதீன வித்துவானும்

நமசிவாய நாவலர் மாணாக்கருமாகிய

திருவதிகை

வாகீசபக்த நாவலரென்னும்

## ஸ்ரீ அப்பாவையரவர்கள்

இயற்றியது.

இஃது

ஷை திருவதிகை தேவஸ்தான தருமகர்த்தர்கள்

ஸ்ரீ சிவஞானத்தம்பிரான் சுவாமிகள்

முத்துசாமி செட்டியார்.

க. அ. குப்புசாமிசெட்டியார்,

இவர்கள் வேண்டுகோளின்படி

பண்ணுருட்டி

ப. வெ. பரசுராமசெட்டியார்

பக்கிரிப்பாளையம் வீதி

மார்க்கண்டகுலதிலகராகிய,

பா. சுப்பராய செட்டியார்.

அ. க. சிவசிதம்பரப்பிள்ளை.

இவர்கள் முயற்சியால்

அன்பர் பலர்செய்த சிறிதுபொருளுதவியைக்கொண்டு

சென்னை:

மஹாலக்ஷ்மி விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சுபகிருது௵ கன்னி௴

# திருவதிகை க்ஷேத்திரத்தில்

# அநாதிகாலத்து சிலாசாதனத்தின்,

## பிரசித்தபத்திரம்.

கங்கபல்லவ கோத்திரத்து, நிருபதுங்கராஜன், தான் பட்டத்திற்குவந்த (கசு) பதினாறாவதாண்டில் திருவீரட்டானம் புதுக்கிப்பற்பலதிருப்பணி செய்தனன். (இவ்விஷயம் ஷ டி திருவீரட்டானங் கோயில் மூலஸ்தானத்து அர்த்த மண்டபத்து வாயிலில் இடதுபக்கத்துச் சிலையிற்றீட்டப்பட்டுள்ளது.)

ஆன்மூர் நாட்டுப்பெருங்குளத்தூர் வாழும்முனைப்பேரரையன்மகன், முனையகோன் இளவரையன், பின்னர் இத்திருவீரட்டானம் புதுக்கி இத்தேவர்க்கு நந்தாவிளக்குக்காக, அதியரையமங்கல நகரத்தார்க்கு, பொன், (க) ஒன்பதுமா (அம) எண்பதுகழஞ்சுகொடுத்தனன் (அச்சாதனத்தில் அதியரையமங்கல நகரத்தார்க்கென்றே இருக்கின்றன. இப்பெயர் தேவாரங்களில் பலவிடங்களிலும் வருகின்றமையால். இதற்கு அதியரையமங்கலமென்றே அக்காலம் பெயர்வழங்கிவந்திருக்கலாமென்று உத்தேசிக்கப்படுகிறது.)

ஷ டி கங்கபல்லவ கோத்திரத்துத், தெள்ளாற்றெறிந்த நந்திபோத்தரையர் நந்தாவிளக்குக்காக (௫௦௦) நூறுகழஞ்சுபொன்கொடுத்தனர் (இது வலப்பக்கத்து கல்லில் அடிக்கப் பட்டுள்ளது, இவையிரண்டும் ௲௨௱ - ஆயிரத் திருநூறு வருடங்கட்கு முன்நடந்தன, இவ்வரசனுக்கு தெள்ளாற்றெறிந்த என்று வந்தமைக்குக்காரணம் இவ்வரசன் தெள்ளாற்றென்னு மிடத்தில் நடந்த ஒருபெரியயுத்தத்தில் பகைஞர்களைவென்று செயங்கொண்டகாரணத்தாலவ் வெற்றியேபட்டமாக முன்பெயரிலமைந்தன.)

பரகேசரிவர் மரான திரிபுவன சக்கரவர்த்தி இராஜேந்திர சோழதேவர் (௯௦௦) தொளாயிரம்வருடங்கட்கு முன்நிலம்விடுத்தனர்.

இராஜகேசரி வர்மரான திரிபுவன சக்கரவர்த்தி குலோத்துங்க சோழ தேவர் (அ௦௦) எண்ணூறு வருடங்கட்கு முன் விளக்கின் நெய்க்கு ஆடும், நிலமும் விடுத்தனர், இவ்வரசற்கு, முன்னுள்ளவனுக்கு இராஜகேசரியென்றும் பின்வருபவனுக்குப், பரகேசரியென்றும், மாறி மாறி முறையாகவரும் பட்டப்பெயர், (இராஜகேசரி பரகேசரியிரண்டும், பட்டப்பெயர்.)

அவர்பின்னிரண்டாவதுகுலோத்துங்கன் (௬௦௦) அறுநூறுவருடங்கட்கு முன்னிலம்விடுத்தனன்.

### பாண்டியராஜாக்கள்திருப்பணி

மாரவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி, விக்கிரமபாண்டியன் மாரவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி வீரபாண்டியன் இவர்கள் நிலம்விடுத்தனர்.

கோனேரிமெய்கொண்டான், பெருஞ்சிங்கன் இவர்களும் நிலம்விடுத்தனர், இவர்கள்காலம் பேற்படவில்லை.

இவையனைத்தும் அக்காலத்து(ரூபபேத)தமிழ்ப்பாஷையால்எழுதப்பட்டிருக்கின்றன. இவை (Government Epigrahec Department.) கவர்மெண்ட் எபிக்கிராப்டி பார்ட்மண்டாரால், எடுக்கப்பெற்றுகிடைத்தன இனியெடுக்காது எஞ்சின்ன்றன பலவும்அவரால், இனியொருக்கால் யெடுக்கநேர்ந்தால் வெளிப்படுத்தலாம்: நிற்க.

இச்சிலாசாதன நோக்கங்கண்டுழி ஆயிரத்திருநூறு வருடங்கட்கு முன் திருப்பணிசெய்யப் பெற்றதென்று கொள்ளக்கிடக்கின்றன. அக்காலந்திருப்பணிசெய்தவன். நிருபதுங்கராஜனென்றும், அவன் சோழபாண்டியற்கு முன் திருப்பணிசெய்தவனென்றும் ஏற்படுகிறது பின்னர்முனைப்பேரரையன்-நந்திபோத்தரையன்,இராஜேந்திரசோழன், குலோத்துங்கசோழன் திரிபுவனசக்கரவர்த்தி,விக்கிரமபாண்டியன் வீரபாண்டியன்முதலியஎண்ணிறந்தசக்கரவர்த்திகளால், திருப்பணிசெய்யப் பெற்றிருப்பதால், இச்சோழ பாண்டியர்கள் இவ்விடத்திற் பூசித்திருப்பார்களென்றே யுத்தேசிக்கப்படுகிறது.

அல்லதூஉம்.இந்நகர் சுற்றிலும்பிரகாரங்களிலும் உள்ளும்பலவிடங்களில் சிவலிங்கமேமிகுதியாய்க்காணப்படுதலின், மேற்குறித்துள்ள சக்கரவர்த்திகளும் அரசர்களும், ஓரோர்காலத்து. வீரட்டானேசுரரை வழிபடுங்கால்ஸ்தாபித்துப் பிரத்தியேகமாகவழிப்பட்ட சிவலிங்கமென்றுமதிக்கப்படுகிறது.

இவர்கட்சரிதமுதலியவற்றை நன்குவிளக்கத்தக்க, நூல்கள் செந்தமிழ்நடையிலும், ஸமஸ்கிரதநடையிலும் ஒன்றுங்கிடைத்திலது, இச்சோழ பாண்டியரிங்கண் பூசித்தசரித்திரமுடையார் உலோகோபகாரம் நாடித்தருவரேல் அது எவ்வகைப்பஷையிலிருப்பினும்மொழிபெயர்த்து திருவதிகைப்புராணம் இரண்டாம்காண்டம் ஆக, இனியொன்று இதனுடன்சேர்த்து அச்சிட்டு வெளிப்படுத்துவாம்.

அப்பிரதிகள் கிடைக்குமாறு வீரட்டானேசுரர்திருவருட்புரிக.

இங்ஙனம்.

அடியார்க்கடியன்.

**வாகிசபக்தன் அப்பாவு.**

பண்ணுருட்டி ஸப்ரிஜிஸ்டிரார்

அண்ணாமலை செட்டியார் அவர்கள் பி. ஏ.

இயற்றியது.

# Preface.

I have perused thiswork Thiruvathigai Puranam (திருவதிகை புராணம்) of Appaviayer of Panruti with very great interest and I am glad to say that I have found it highly instructive both from a religious and a literary point of view. It exhibits deep study wide knowledge and unique skill on the part of the author who in his usual way has spared no pains to make his treatise highly beneficial to his readers and I may add that the sublimty of his thoughts and the felicity of expressions employed throughout are only equal to the grandeur of the subject. As regards the style it is simple elegant and flowing and it may safely be asserted that the author has succeeded in adding delicacy to the already sweet Tamil which the name itself implies.

Further the similes the metophors and other figures of speech in which the work abounds are so apt and sweet that they reflect great credit on the poets powers of observation and reflection. Besides in one of the chapters he has taken opportunity to introduce certain curiously wrought stanzas which afford evident indication of his literary skill and his mastery over the Tamil language.

For the subject matter of the work the author is indebted to K. R. Sivachidambara Mudaliar lateTamil Pundit of Saint Joseph's College Cuddalore an eminent Tamil scholar poet and sage who in his splendid little work entitled Thiruvathigai Manmium திருவதிகை மான்மியம்) a store house of precious truths in clear and concise language proves the excellence of the Saiva Religion and its claim to universal recognition and establishes the Superiority of Thiruvathiga Sthalam (திருவதிகைஸ்தலம்) over other sacred places. The work is evidently the result of patient and thorough research and ripe knowledge and deserves the careful study of one and all. In the present Puranam the author has dealt with the events dwelt upon in the said Manminm in a very able and elaborate manner and has besides brought to bear upon it the impress of his originality and poetic genius.

The work besides is highly characteristic of the author who is a pious unassuming Tamil scholar of real merits and as such is calculated to melt the mind of the reader and inspire him with piety and love for God as well as to elevate his morals and ennoble his character thereby creating an evident desire to follow in the foot steps of our great saints whose noble mission was to elevate mankind from their moral and spiritual degeneration. And as if to justify his claim to the title of Vakisa Bakta Navalar (வாகீசபக்த நாவலர்) he has invoked the blessing of Thirunavukkarasu Swamigal by prefixing each chapter of his work with a stanza devoted to his praise.

By the publication of this work, our poet has done great and inestimable service to the cause of Saiva Religion, which forms the very core of Hindvism. Our Lord Siva is the self same Supreme Being who is called ParaBrahmum (பரப்பிரம்மம்) in Vedanta sastras and Para Sivam in Saiva Siddhanta Sastras. He is Omnipresent and Omniscient and dwells in all souls. The doctrines of Hindnism are based strictly on scientific principles, and are of universal application; and these are truly andfaithfully conveyed in the Saiva Siddhanta Phiiosphy. Theyaresuited toall classes andgrades ofpeople and are calculated to satisfy the aspirations of one and all and bring consolation to their minds. These facta can be clearly made out by the reader of this Puranam in which the author has taken opportunity to inculcate several other paiuciples of the Hindu faith, and enumerate the various daily observances in the temples of Siva, which though apparently are meaningless have each a spiritual significance indicative of the reverence to which our Devine Father is entitled.

One of the chapters is devoted to extol the glory of Lord Siva Who in the exercise of his five great functions (பஞ்சகிருத்தியம்) is represented as making his sacred and joyous Dance. All-pervading though he is, yet he remains unaffected by his operations. The manifestation of God in the form of Nataraja, the Celestial Dancer on the worldly stage, asin Chidambaram is indicative of the noble-truth that He is similarly dancing in the minds of His devotees as the very life of their life, and that those who are capable of comprehending Him in this light can remain unaffected by their worldly cancerns thoug hthey may be in the very midst of them.

The chief item of interest in this Puranam lies in the life of Thirunavukkarasu swamigal, and his services in connection with the

Temple and God in Tiruvadigai. It is the scene of his toils, trials and persecutions, his devoted services to the Supreme Being and his many acts of self denial and devotion. It was reserved for him to bring out prominently, and exhibitpublicly the ancient greatness and glory of God in this sacred place, as manifesting Himself in the Siva Lingam of the great Temple there. It being impossible to comprehend the incomprehensible, and the fact of the all prevading nature of God being conceivable only by the privileged few who are yogeesand Guanees, it is the Will of our Lord Siva in His unbounded mercy to manifest himself in Temples in a certain form, so that He may be accessible to worship by all people, in view to the forgiveness of their sins and the attainment of their salvation. As explained by the late esteemed Pundit K, R. Siva Chidambara Mudaliar in his valuable work, the shape of Siva Lingam partakes of the form of Sri Pranava Panchaksharam (ஸ்ரீ பிரணவபஞ்சாக்ஷரம்) The Tamil country would seem to be the favoured land of God, as it is here that he has manifested Himself in various forms, and made his many wonderful and miraculoussports. The Samana king Pallava who was quite discomfited and disgraced in his attempts to dissuade saint Appar from his belief, at last prostrated at his feet and beggedtor forgiveness which our saint graciously granted, and directed him to demolish all Samana Temples, and with the materials to erect a Temple dedicated to Siva and worship Him there. This temple is still in existence to the east of the great Temple of Sri Veerattesuarer though in a deplorably ruined condition.

The reader will do well to ponder over these and other matters so admirably dealt with in this work and it is hoped that the author's merits will receive due recognition at the hands of the Tamil public.

*B. Annamali Chettaiar B. A.*
*Sub Registrar, Panrutti.*

---

## கூரத்தாழ்வார் நாயுடு அவர்களைப்பற்றியது.

Tiruvadi is one of the ancient shrines of Siva. In its early days it appears to have had another name which is now obsolete and not generally known to the public. In Thevaram we find that Swami Appar addresses Siva in this shrine as "Adiyaraya Mangalathan." and at a still more remote period we see that Munayak'on

Elavarayan one of the kings of Pallava family who flourished about 1200 years before, made an incription on the walls of the Temple that he had made certain endowments for it in the above name.

The exact date of the origin of the Temple is not known; but from what we can gather from the late epigraphic survey of the Temple we may assert that it should have renewed at some time between 1200-1500 years before, as Archeloy proves the absence of Temples and written language before 2000 years and History declares that the institution of Temples among Hindus other than the jains is purely of Brhamanical origin, which should therefore necessarily be at some subsequent date to the Aryan Emigration into Southern India.

We can not image to oursclf the Temple as it now stands as the Temple in its primitive age. The Temple has evidently undergone various changes in its form and structure since the date of its foundation. The prime Temple Garba Graham' is clearly of very ancient date, and the other portions of the Temple were gradually added at long intervals. The grand imposing tower in front of the Temple is only of recent origin. The figure of too fishes beautifully linked by a hook and a ring on the sculptures of the small tower walls at the entrance to the Temple is a very strong proof that it should have been the work of one the Pandyan Kings as we all know that fish is the emblem of the Kings of that dynasty.

The Temple appears to have no Sthalapuranam of its own. A few years back appeared from an illustrious author a book under the title of 'Tiruvadi Manmyam' compiled for the most part from information regarding the past history of the shrine, contained in anicent religions works. I believe that the present puranam by Appavier is the first poetical work that appears as its Sthalapurnam. It is a pretty large work written in sweet Mellodious metre abounding in all the beauties and excellence of Tamil literature. The ideas of the author are lofty and liberal and they do not sink into 'sectarian spirit'. The one remarkable feature of the work is the author's deep flowing love and devotion to Swami Appar, which is evidenced by the opening stanza of each chapter which is a fervent prayer to "Swami Thirunavukkarasu" and this peculiar attachment of his to that Venerable sage has justly won for him the enviable name of Vagisa Baktha Navalar.

*P. V. Kuruttalvar Naidu.*

உ

சிவமயம்.

# சிறப்புப் பாயிரம்.

திருக்கைலாயபரம்பரை.

## திருவாவடுதுறையாதீனத் துவித்துவான்,

## சுப்பிரமணியத் தம்பிரான் சுவாமிகள்,

## இயற்றியது.

பொன்னார்பொகுட்டுப் பூந்தடத்துப்புனற்பாய் வாளைவெருண்டெழுந்து
மின்னார்கந்திக்குலையுதிர்க்கு மேன்மைத்திருவா மூரதனிற்
பன்னாளுழவுத் தொழின்மரபிற் பயின்ற புகழனார் தாஞ்சே
யுன்னுந்தவத்தாலுற்பவித்த வுரிமைத்திருநாவுக்கரசை. (க)

சீரார்சிகரி மிசைநின்றுஞ் செழுஞ்சந்தனமுமகிற் கோடும்
பாரார்பரவவந்திழியும் பணிலக்கெடில வடபாங்க
ரேரார்புரங்களொரு மூன்றுமெரிய நகைத்தவீரட்டர்க்
காரார்கடுவெஞ்சூலைதனைக் கைக் கொள்ளென்றுவிடுத்தருளி. (உ)

இனியவட மீன்புறங் காட்டுமெழிற்கற்புடைய திலதவதி
பணிநாண்மலர்த்தாண் மிசைப்பணிந்து பண்பாயுழவாரப்பணியுங்
கனிநேர்செஞ்சொற்பாமாலைக் கரைந்துபாடியருள்பெற்ற
தனைநேரதிகைப் பரமற்குத்தனிப்புராணந் தந்தளித்தான். (ங)

வேறு

அன்னவன்யாரெனில்வீரசைவர்களாதீனத்தை யன்பாய்ப்பாடு
நன்னயமார் நமச்சிவாயப் புலவன்மாணாக்கன் நன்மை சான்ற
பொன்னை நேர்மணியையன்றவத்தினில் வந்துதித்த நல்லபுனித சீலன்
பன்னலரும் வாகீசபக்த னெனப் பாவல்லோர்ப்பகருஞ் சீரோன். (ச)

தேனாரும் பூங்கடுக்கைத் திருமுடியிலணிந்தருளுஞ் சிவனார்மன்னுங்
கானாருமலர்த்தடஞ் சூழ்திசைமா நகர்குடக்கிற் கருதுஞ் சீர்த்திப்
பானாரும் பண்ணுருட்டிப் பதியதன்கண் பகர்வீரசைவமேலோ
னானருங்கொடியார்க்கு மகத்தடிமை பூண்டவப்பா வையன்றானே. (ரு)

முற்றும்.

திருக்கைலாயபரம்பரை
திருவாவடுதுறை ஆதினத்துவித்துவான்.
ஸ்ரீ. மீனாட்சிசுந்தரம்பிள்ளை மாணாக்கர்,
செப்புக் கோயில்,

## சு. சோமசுந்தர ஐயரவர்களியற்றியது.

பொன்பூத்தநறவொழுக்கும்வண்டகம் பாய்முண்டகத்தின்பொகுட்டுமேய
மின்பூத்தமான்மகனு நான்முகனுந்தினம் பரவுவிமலன் வாழுந்
தென்பூத்தகன்னலெலாஞ்செந்நெலெனச்செழித்தோங்கும்மருதவேலி
மன்பூத்தமாவதிகைத்தமர்போகமேவதிகைப் பச்சிமத்தில். (க)

மையேறுபொழிலெல்லாமெழிலிவந்துகண் படுக்கும்வளத்தாலந்தக்
கையேறுபொதும்பரெலாம்வெதும்புகுரன்மயிலாடும்பூங்காவெல்லாம்
வெய்யேறுவுருவிலிக்குப்பேருவிலமர் வேத்திரமாய்விளங்கியன்னோன்
றுய்யேறுவையமெனச் சையமுறுதென்றலவண் சூழாநிற்கும். (உ)

உயங்குசிறுகத்திகைகட்பித்திகையிலீர்த்தகம்பமோங்குந்தூய
தயங்குபெருமாடமெலாமோடமுறுகலனென்னச்சார்தபௌவ
மியங்குதிரைபரியொழுக்கமென்னநிரைபரியோடுமிடங்களெல்லாம்
வயங்குமுரசடிப்பதவணியங்குகடன் முரசென்னவளமார்மாடம். (ங)

இன்னவளஞ்சால்பண்ணுருட் டியினி லெந்தைபுகலாகமத்துட்
பன்னுவாதுளவீரமோங்குசிவநெறி கொண்டுபத்தியான
தின்னவரம்பிணையுடைத்து யெனவுலகமகங்களிக்கவங்கலிங்க
மன்னுசிவசையோகக் குழைந்தைவேலெனவொருவன்வாழ்ந்தான்மன்னோ (ச)

அவன்மதலைதனையுன்னிய திகைமா நகரடைந்தாங்களவிலாத
பவமகற்றுந்தலஞ்சூழ்ந்தகாடனைத்து மறவெரிந்துபருத்தயிஞ்சி
நவமாகவியற்றி பிரதோடஞ்சைவாசரியர் நால்வர்க்கான
சிவமகிழுங்குருபூசை நடப்பகலின்படைப்பாதி சிறப்பச்செய்து. (ரு)

அப்பணியுமுடியார்க்குக்கழலென்றேயிவ்வகில முன்ன முன்னம்
அப்பணியுமுடியார்த்த சிவபெருமான்சன்னதியி லசைந்துவோசை
அப்பணியுமுடியானித்தழகுபெற மணிசெய்தேயமைத்தானாக
அப்பணியுமுடிந்தளவின் மணியையரெனப்பெயரொன்றடைந்தானன்றே.()

பெருவாகடத்தினையு மொருசோதிடத்தினையும் பெற்றியான்
வருவாகடத்திலுறு பதிபாசமுணர்நூலும் வாழியாக்கற்று
வொருவாகடத்தினுக்கு நல்லுறுதிபயப்பது நற்பணியேயென்று
வெருவாகடத்திரண்டினை வென்றோன்றனக்குபணி மேலாய்ச்செய்து. (எ)

அருளார்ந்தகல்விமிகுகேள்வியன்பறிவுநலமார் நன்மார்க்க
மிருளகன்றவைராக மடக்கம்வஞ் சனையடக்கலினியசெய்கைத்

தெருளகன்ற நிலையாமையுணர்தல் சபதபமாதிசெய்கையோடுப்
பொருள்விரும்பாநினைவோடு புண்ணியமே பொருளென்றுபொருந்திவாழ்ந்து.

வருநாளிற்சிவபெருமானருளொன்றே யுருவெடுத்துவந்தாற்போல
கருநாளையருத்துமகன்றந்தையெனுங் குறணிறுவிக்காப்பான்போலும்
பெருநாள மரைப்பொகுட்டு மேயகலைச்சாரதா பீடமேபோ
லருநாளினவம்போக்கிச் சிவமாக்கு மதலையொன்றை யளித்தானாக. (௯)

மணிசெய்த தவப்பயனா யழகொழுகப் புகழ்பரவு மருவுநீல
மணிகண்டானருண்ஞான மணம்வீசமோனமணம்மன்னிநாற
மணிவீரசைவமணங்கந்திப்பமலரொன்று மலர்தலேய்ப்ப
மணியையரீன்றவந்த மதலையுமேசெவ்விபெற வளர்ந்தமாதோ. (௧௦)

அம்மதலைக்கப்பாவென்றேசெல்வ வபிதானமிடவன்றேனுஞ்
செம்மாந்துவரியதிரா விடபாடையிலக்கிணத்தின்வரம்புதேர்ந்து
விம்முசிவசன்மார்க்கச் சிவானந்தப்பரவையினின் மிகவுமூழ்கி
யெம்மான்வாழதிகைக்கேயவனருளாற் சொன்மாலையிசைத்தான்பல்ல. (௧௧)

வாதநாராயணனூல்வாய்மலர்ந்த காந்தத்துட்கிடந்துமன்னுங்
காதையதாமதிகைமான்மியந்தன்னைச் செய்யுநலங்கருத்திலந்த
மாதவர்வாழதிகைசிவன்றன தருளேதூண்டுதலிலழகுவாய்ப்ப
சீதவயல்நாட்டணியாகிய வற்றைக்கற்பனையிற் செறிந்துநிற்க. (௧௨)

பொருட்குறைதலாயதசக்குற்றங் கடனையகற்றிப்பொற்புவாய்ப்ப
யருட்குரியபுராணமிதேயெனவகிலங்குதுகுலிப்பவருளிச்செய்தா
னிருட்கடுவையுண்டானைத்தினம்பணியுஞ் சிவஞானயெந்தையந்த
மருட்கலத்தலில்லாதநூலினைத்தானரங்கேற்றமனத்துட்கொண்டு. (௧௩)

நன்னாளிற்கவிவல்லோர பலலோர்கள்செறியசிவஞான நல்லோன்
றன்னாளிலிவர்க்கு தீக்காநாமமணிந்திடவே தனதுட்கொண்டு
வந்நாளில்வாக்கரசென்றிடப் பெற்றவபிதானமதையேமாற்றி
யெந்நாளும்வாகீசபக்த நாவலனென்னவிசைத்தானங்கண். (௧௪)

அதுகண்டபுலவரெலாஞ் சிரந்துளக்கிக் கரம்புடைத்துவற்றேயென்று
விதுகண்டகடலெனவே மனங்களித்து மிகப்பலவாய் வியந்துபேசி
பொதுகண்டநடமாடுங் குஞ்சிதத்தாளொக்குமிந்த புராணமென்று
மதுகண்டவண்டெனவே யவரவரும்வரைந்தேகிவாழும்நாளில். (௧௫)

இப்பெரியகாப்பியத்தை மார்க்கண்டகுலசுப்பராயனென்னு
மொப்பருநற்றவத்தன் சிவசிதம்பரநல்வரத்தனிவரொருங்குசேர்ந்து
செப்புரியபுகழ்படைத்த யன்பாளர்செய்தபொருளுதவிதன்னாற்
றப்பிலாதச்சியற்றியுலகோங்கவே. புரிந்துசந்தார்மன்னே. (௧௬)

முற்றும்.

இஃது.

## சமரச வேத சன்மார்க்க சங்கவித்துவான்களி

## லொருவராகிய,

சென்னைப் புராணிகர்,

# பொ. சுந்தரம்பிள்ளையவர்க

## ளியற்றியது.

நிலமண்டிலவாசிரியப்பா.

திருவளர்ந்தோங்குஞ் செழுமலர்ச்சோலை, யுருவளர்ந்தோங்கு முயர்திருவதிகைப்; பதியஃதென்னுற் பகரவும்படுமோ, கதிதருமத்தலங்காண் புழிக்கண்ணன்,மலரயன்காணுமலரடிகொண்டரன், நலவதிகைப்பதிதனிலே நாவலூர்ப், புலவர்திருமுடி புனையச்செய்த, நலமதுதேர்ந்த நயங்கண்டுணர்ந்த, மனவாசகமறுமதிப் புறுவறிஞர், கனமுறுமதிகைக்கண்டுணர்ந்திருந்த, பெரியரறிவர்ப் பெருமைகொளதிகை, தெரியவிளக்குந் திருத்தலபுராணம், எவ்வுழியவ்வழியியம்புதல் காந்தம், திவ்விய முறுஞ்சனற்கு மாரசம்மிதை, வழியேவந்தவாய், மையாகும், பழியிலத்தலம் பண்பை விளக்கத், துணிந்தவர் வித்வசிரோமணித்துகடீர், மணிவீர சைவமணிவழிவந்த, மணியையரீன்றமாப் பெருவீர, மணியப்பா வெனும்மாப்பெயர் பெற்ற, மதியுடைய யறிஞன்மாப்பெருஞ்சோதி, கதிதருமதிகைக் கருணைக்கடவுள், விதியுடன் பணிந்தவித்தகச்சைவ, நிதியாம் நாவுக்கரசெனும் வேந்தன், திருவடிமறவாத்திண்மை வழியால், வொருவாகிச நாவலனென்னும், சிறப்புப்பெயருறுந்தீரர்க்கல்விச் சிறப்புடையாண்மையாற் சீர்பெற்றுலவும், அத்தலபூராணமருந்தமிழாற் புனைந், தொத்தவாய்ப் பாடொன்றுந்தவரு,•துரைத்த நடைகொண்டுறுமிலக்கணவழி, விரைவிற் பார்க்கிற்றெரியா தொன்றும், முன்பின்பார்த்துப்பின் பேதுணிக, என்னுமிலக்கணக் கொத்தெனுமியற்றமிழ், நூலாசிரியர் நூண்முறையறிந்தவர், தோலாவுடைமைத் துணிந்தவராவர், வீரசைவம் விளக்கவந்தருளியத், தீரர்தினந்தொறுந் திருவருணடி, அவ்வீரட்டரடியார் தம்பெருமை, செவ்வையுறும் பணிதெரிந்துபாடிய, தவவலியுடையர் தம்பெருமையினை, பவவலியுடையார் பாடினும் பாவம், நாசமாமென நாந்தெரிந்துணர்த்த, வாசகமன மறலாமைவேண்டுமே.

முற்றும்.

இஃது

புரசை - அஷ்டாவதானம்

சபாபதிமுதலியாரவர்கள் மாணாக்கர்,

திருமயிலை - வித்துவான்

## சண்முகம்பிள்ளையவர்கள்,

இயற்றியது.

---

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

திருவந்தபெருங்கருணைத்திறத்துலகம் பெருவாழ்வைச்சிறப்பினெய்தக்
கருவெந்துவிழக்கடைக்கணருள்சுரந்து திருத்தில்லைக்கனகமன்றி
லருமந்தநடம்புரியுமாணிக்கக் கூத்தனருட்படிவாஞ்சைவக்
குருமணிகளோர்மூவர்தமிலிருவஞ் சீர்த்திக்குலவுநாட்டில். (௧)

வில்லமண்மாசறுத்தோங்கும் வாகீசப்பெருந்தகையார்வருந்தாவண்ண
மல்லல்செய்யுங்குடர்நோயைத்தடுத்தாண்ட தன்றியடையாதார்சேர்மூன்
றெல்லையில்வெந்தவியவைதிகத்தேரூர்ந்துற நகைத்தவொருவன்மேவு
மெல்லையில்சீர்த்திருவதிகைவீரட்ட மான்மியமின்றமிழனம்மா. (௨)

நன்னயத்தசொற்புணர்த்தல் சொற்சுருங்கனவிலாழமுடையதாத
லுன்னவிளங்கிடவைத்தன் முறையினிறுத்திடலுலகமலையாதோங்கல்
மன்னும்விழுமியபயத்தல்செவிக்கினிமை தரன்முன்னாமாட்சியோங்க
லென்னவையுமிலதாகவென்னலனு முளதாகவியம்பினால். (௩)

இனையணியாரெனினறைதும்பதிக்குக் குடபாலிலிருஞ்செல்வர்க்குத்
தனதனிகரெனப்புகல்வார்பலர்மருவும் பண்ணுருட்டித்தலஞ்செய்நோன்பான்
மணிதவருக்கொண்டனனென் றுலகுரைக்குமாண்புடையமணிப்பேர்க்கொண்
டனையனையரன்றவத்துதித்தானொரு†பஞ்சாக்கரநாமத்தமிழ்வல்லோன்பால்.[ட

செந்தமிழினிலக்கியமு மிலக்கணமுங்கற்றுணர்ந்து சிவனையன்றி
யந்தமில்வீட்டொருநெறியைத்தரு முதலின்றெனத்தேர்ந்திட்டநாதிசைவன்
நந்தலில்சீர்ப்பரம்பரையிற் பச்சகந்ததேசிகர்பானலக்கதீக்கை
முந்துவீராகமமுறையிற் பெறுமப்பாவையனாமுனைவன்மன்னோ. (௫)

† பஞ்சாக்கரநாமத்தமிழ்வல்லோனென்பவர் நமச்சிவாயநாவலர்.

முற்றும்.

அஷ்டாவதானம்,

## பூவை. கலியாணசுந்தரமுதலியாரவர்கள்,

இயற்றியது.

---

இரட்டையறுசீர்விருத்தம்.

உலகுபுகழ்நமதன்னையாந்திலகவதியம்மை யுயர்நல்லார்வத்
துஞற்றுதிருப்பணிகொண்ட வயின்வதிகைவீரட்டத்துண்மைசூழ்ந்தங்
கிலகுநவரசவலங்காரவதிசயமேவு மெழிலந்தித்த [ருமெச்சத்
தினியதொடைபொருட்சொன்னய மிசைந்தபெருங்காப்பியமென்றெவ
தலமகிமைக்கிருப்பிடமாப்புராணமது சொற்றிட்டான்றனித்தவீர
சைவநெறிவழுவாதபயன்சிறந்த மணியையன்றவத்துதித்து
உலவருரைவாகீசபத்தநாவலனெனவே வழுத்துந்தீக்கை
வாய்ந்தநாமத்துடனே யோங்கிவளரப்பாவாம்வண்மையோனே.

---

பரங்கிப்பேட்டை வித்துவான்.

## ஸ்ரீ முத்துத்தாண்டவராய பிள்ளையவர்கள்

இயற்றியது.

திருந்து தொழின்மறை யருந்தவ முகத்து
மடங்கெழு நோக்கி னுடங்கிடைத் துவர்வாய்க்
கடைகழி மகளி ரிடைகழி கில்லாது
கொடிவா னேந்து மடிதிறற் பரமன்
பொற்பதி புகூஉ மற்புளா ரதிகை
யாரண மிசைக்குங் காரண மனைத்தும்
விற்பன கவிஞ ரற்புளம் வியப்பச்
செந்தமிழ் நிறீஇத் தன்பெயர் விளக்கினன்
செறிபத முரனு மறுபதஞ் செறிந்து
குண்டிற் குசேசயக் கோட்டின மாணு
ரண்டரு மருளு மனுர்விழி யொரீஇத்
தளையவிழ் குவளை தாழ்மல ரளைஇக்
கண்டுணுந் தேறற் பண்ணு ருட்டிக்
கிணிமால் சொல்லு மணிமா லேந்தல்
தாவாத் தவத்துக் கோவா யுதித்தோன்
பாவலர் பரவு நாவலர் பெருந்தகை
யிப்பா னந்தியா ரொப்பா
னப்பா வைய னரும்புலக் கோனே.

---

இந்நூலரங்கேற்று வித்தவராகிய பண்ணுருட்டி கந்தசாமிப்பிள்ளை குமாரர்

## அ. க. சிவசிதம்பரப்பிள்ளை யவர்களைச் சுட்டி

ஆனந்தூர்வீரசைவமடம்

## பு. தெ. கனகசபை ஐயரவர்கள்

## இயற்றியது.

நாற்றிசையும்மேனாடும் புகழ்பரவுமரியநடு நாட்டின்கண்ணே
காற்றுலவுபொதும்பரெலாங் குயிற்கூவுபொழிலணித்தாய்க்கலந்துவாழுஞ்
சாற்றறுஞ்சீர்த்தொண்டர்களே மிகவிரவிச்சார்ந்தோங்கித்தயங்குந்தூய
போற்றும்வானவர்விரவுமதிகையெனு நகர்குடபாற்பொருந்தியோங்கும். (௧)

பொழிலோங்குமளிபண்ணுருட்டி நகர்தனிலோங்கும்புகழ்வாய்ந்துற்ற
யெழிலோங்குமொருகங்காகுலத்தனருஞ் சிவம்போற்றுமேந்தலானோன்
தொழிலோங்குநன்னடையதுளுவ வேளாளகுலதோன்றலானோன்
வழகோங்குகந்தசாமித் தவத்தாலுலகோங்கவவதரித்தோன். (௨)

வனப்புமிகவணிந்துரையும் பாவலர்க்கேபணிபூண்டொழுமாண்போன்
நினைப்பெல்லாமரனடிக்கே செலுத்துசிவபத்தியொடு நிலவுமாண்போன்
வினைப்பறிக்குமத்திமுகன்றனையெப்போதும் போற்றும்விருதுகொண்டு
இனைப்போதுமுளமறவாச் சிவசிதம்பரப்பெயராற்றிகழுநல்லோன். (௩)

மாமேவுமரியதிராவிடபாடை தனையறிந்துவாழும்வீரத்
தேமேவுசைவமூர்த்தியையடைந்து திகழதிகைமான்மியத்தைப்
பாமேவுதமிழ்ப்பாடை தனிற்புரிந்துநல்கென்றுப்பலகால்வேண்டத்
தூமேவுவாகீசபக்தவப்பூபவகத்தோர்ந்து சொற்றான்மன்னோ. (௪)

அவ்வாறுசொற்றகாப்பியங்கண்டு வகங்களித்துவதிகைமேவுஞ்
செவ்வண்ணப்பெருமான்முற் சன்னதியிற்சிவஞானதேவராதி
திவ்வியநன்மாதவர்கணெருங்கியுறச் சுபதினத்திற்சிறப்பினோங்க
நவ்விகரத்தோன்மகிழ வரங்கேற்றியதுமுடிந்தன்றுடன்னில் (௫)

அதிகைசிவபெருமாற்குவபிடேக சிறப்புமுதலாகவாண்டு
துதியோங்கவிழாவியற்றிச் சிவனடியார்கூட்டமெலாந்துளக்கவுண்ண
நிதியோங்குமகேச்சுர பூசைப்புரித்துவாங்கடைந்தநேயர்க்கெல்லாங்
கதியோங்குசிறப்பியற்றி முடித்தனனிங்கிவன்புகழைக்கழறப்போமோ. (௬)

வேறு.

[வண்ண
எண்ணரியபுராணநன்னூலனைத்து மாராய்ந்திசைபெறவேமூவுலகுமிலங்கும் மண்ணியலும்புலவரெலாம்மதித்துப்பேச வதிகைநகர்மான்மியம்வண்டமிழாற்செய்தான், புண்ணியர்கடவமுயலும் பண்ணுருட்டிப்பொலிவுபெறுமணியையன்புதல்வனைக், கண்ணியனும்பவநீத்தவாகீசப்பேர்க்கலந்தவப்பா வையனைனுங்கவிஞரேறே. (௭)

இந்நூல்செய்யுங்காலுபசரித்தவராகிய, பா. சுப்பராயசெட்டியா
ரவர்களைச்சுட்டி புதுப்பேட்டை

# மு. அப்பாதுரைஐயரவர்கள்

## இயற்றியது.

மாமேவுகடலாரநடுவோங்குநிலவுலக மதாணிதன்னிற்
றாமேவுநாப்பணுறுமணியென்னும் நடுநாட்டிற்றுலங்குமந்த
பாமேவுநடுமணியிலோங்குபெரு வொளியென்னும்பகுக்குஞ்சீர்சாற்
றேமேவுதிகைநகர் மேல்பண்ணுருட்டியினிற்றிகழுமேலோன். (க)

நன்னலமேயெப்போதும் பிறர்க்கியற்றக்கருத்துன்னிநடக்குநல்லோன்
றன்னுளத்தேபொய்மாற்ற மறியாதுவடைந்தாரைத்தானாய்ச்செய்வோன்
புன்னகைகொண்டெப்போது முபகரிக்குங்குணம்பூண்டுபொருந்திவாழ்வோன்
மன்னுசிவசன்மார்க்கக்குண சீலன்றவபாலன்மறையிலோங்கும். (உ)

வாதுளாகமவீரசிவலிங்கபூசையும் வளமைபூண்டோன்
கோதகன்றமார்க்கண்ட குலத்திலவதரித்தபெருங்கொள்கையாளன்
சீதமனப்பாவாடைதவத்திலுலவதரித்த செல்வன்மிக்க
மாதுமையாளிறைசிவத்தைப் பணிசுப்பராயனெனவிளங்கும்வள்ளல். (ங)

அருளேறுமணியையன் மதலையப்பாவகத்தோர்ந்துயருளிச்செய்த
பொருளேறுவதிகைபுராணந் தனிற்பாயிரநேமிமுனிவர்பூசை
தெருளேறப்புரிபடலம் பாடுமட்டுமெருகிருந் துசிறப்புசெய்து
யிருளேறுமனத்தரும்நன்னெறிபிடிக்க யுபசரித்துயின்புற்றானே. (ச)

---

சிவமயம்.

# கூடலூர் துரைசாமிதேசிகர் அவர்கள்

## இயற்றியது.

பூவளர்பிரமன்பொறிவளர் மருமன்புகழ்வளர்புரந்தரன்புலவோர்
நாவளர்கலைமின்னைவிலருமதிகை நற்புராணத்தைநற்றமிழாற்
சேவளர்பெருமானுளங்களித்திடவே செப்பினன்றிகழும்பண்ணுருட்டி
மாவளர்புயத்தான்மணியையனளித்த மாசிலப்பாவுமாமணியே. (க)

சொன்னோக்கும்பொருணோக்குந் தொடைநோக்கும் நடைநோக்குந்துலங்குமற்ற
யென்னோக்குமதிகமதாயிருப்பதினு லீததிகையிருந்துவாழு
முன்னோக்கமுடையபிரான் றிருவருளென்றறிஞரெலாமொழிவாரானுற்
புன்னோக்கமுடையவன்யானென்னை யெடுத்திதன்சீர்த்திபுகல்வேனம்மா. (உ)

---

உ
திருச்சிற்றம்பலம்.
இஃது.
திருப்பாதிரிப்புலியூர்
ஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரியசுவாமிகள்
மாணாக்கர்
## தி. அ. குப்புசாமிப்பத்தர்
இயற்றியது.

உலகெலாமளித்தாள்பங்கருளொருத்தனுறுதலமெவைக்குமுன்னேயு
மொருதலமதிகைமான்மியமுன்னியொப்பில்சீர்ப்புராணமாவிசைத்தான்
விலகுருப்பத்திநற்றமிழ்க்கவிஞன்வீரசைவாகமவொழுங்கன்
மெய்த்தவவேடப்பொலிவினன்சாந்தநற்குணமெய்மையனெனத்தான்
புலவர்கண்மெச்சுமிலக்கணப்புகழிலிலக்கியமிக்கவன்சைவ
புண்ணியசதுரன்வேண்டியவாறுபொய்யிலார்க்கருள்வள்ளுவனே
வலகிலாப்பவங்களுருவகைக்கருதுமருமணிபெற்றநல்லொளிபோ
லணிதருமப்பாவையனற்பேரோனவனல நீடுவாழ்குகவே.
முற்றும்.

பண்ணுருட்டி
## நல்லத்தம்பிசெட்டியார் அவர்கள்
இயற்றியது.

பாட்டுவந்துமுற்றுந்தக்கார்க்குதவு பண்புடையானெனவயங்கு
வாட்டுகவியிருள்பாறவபுங்குகவிச்செல்வனெனவழுத்தநின்ற
வேட்டுவதிகைத்தலத்தின்புராணமதைத் தென்மொழியல்விளக்கினனால்
நாட்டுபுகழ்க்கவிகளுக்குச் சீமான்நன்வாகீசநாவலோனே.

பண்ணுருட்டி
பீடர்ஸ்கூல் தலைமை உபாத்தியாயரும்,
ஸ்ரீலஸ்ரீ. நமசிவாய நாவலர் மாணாக்கருமாகிய
## க. ச. துரைசாமிமுதலியார் அவர்கள்
இயற்றியது.

அந்நாளிற்புலவனெனவிருந்த சிவப்பிரகாசனவன்கீழ்வந்தோர்
தன்னாளிற்காவியங்கட்பலசெய்து யுலகினுக்குத்தந்தாரீண்டு
யிந்நாளிற்பண்ணுருட்டிமணியைய னீன்றவப்பாவென்னுமேலோ
னெந்நாளுமோங்கதிருவதிகைமான் மியந்தமிழாலியற்றினனால்.
முற்றும்.

# திருவதிகைப்புராணக் கைபொப்பதாரர்களின்

# அட்டவணை

## பண்ணுருட்டி.

திருவேங்கடவுடையார்
நரசவுடையார்
கிருஷ்ணவுடையார்
தியாகராசவுடையார்
சிவசிதம்பரப்பிள்ளை
கந்தசாமிவுடையார்
துரைசாமி உடையார்
நரசிங்கசெட்டியார்
கொழுந்தைவேலுசெட்டியார்
வி. சவளி. இராமசாமிசெட்டியார்
நா. சவளி. சுப்பராய செட்டியார்
வாழப்பந்தல். அப்பாசாமி செட்டியார்
சிகாமணி. முத்துசாமி செட்டியார்
சிதம்பரசெட்டியார்
க.ச. துரைசாமி முதலியார்
கா. அரங்கப்பசெட்டியார்
தில்லைமுத்துபடையாச்சி
சவளி. நடேசசெட்டியார்
சொக்கப்பசெட்டியார்
மூக்கு. மாணிக்கசெட்டியார்
சே. நா. நாராயணசெட்டியார்
இராமசாமிசெட்டியார்
மாணிக்கசெட்டியார்
சண்ணப்பசெட்டியார்
வெ. முத்தியசெட்டியார்
சுப்பராயசெட்டியார்
தனபாலு. இராமசாமி செட்டியார்
ஷை கோவிந்தசெட்டியார்
உமாபதிப்பிள்ளை
வா. முனிசாமிமுதலியார்
இராமசாமிவுடையார்
பாவாடைநாட்டான்
முத்துசாமி ஆசாரி
பட்டணம். சுப்பராய ஆசாரி
அப்புசாமி ஆசாரி
கு. நடேச உடையார்
வேலுசாமி செட்டியார்
பள்ளிக்கூடத்தா படையாச்சி
கோ. இராஜம் செட்டியார்
சல்லா. ரங்கையசெட்டியார்
ரு. கோவிந்தசாமி நாய்க்கர்
வீரண்ணநாய்க்கர்
அ. நாராயணசாமிநாயக்கர்
கண்ணப்பநாய்க்கர்
சன்னவீரப்பசெட்டியார்
சாமிநாதப்பிள்ளை
பால்ரெட்டியார்

## இலிங்காரெட்டிபாளையம்

பா. துரைசாமிசெட்டியார்
செ சுப்பராயசெட்டியார்
வெ. சுப்பராய செட்டியார்
பாவாடைசெட்டியார்
நீலகண்டசெட்டியார்
குப்புசாமிசெட்டியார்
சீலை. சுப்பராயசெட்டியார்
ஏமாதிரிசெட்டியார்
வீரட்டலிங்கசெட்டியார்
அருணாசலசெட்டியார்
இராசமாணிக்கசெட்டியார்
வி. கு. சுப்பராயசெட்டியார்
மா. கோபால்செட்டியார்
உபாத்தியாயர்-வெங்கடாசல செட்டியார்.

வி. பொன்னுசெட்டியார்
கேணிகுளம-ஐயாபுரிசெட்டியார்
இராமசாமி-செட்டியார்
குப்புசாமிசெட்டியார்

## புதுப்பேட்டை.

புதுப்பேட்டை, நாட்டாண்மை
ஏகாம்பரசெட்டியார்
சங்கு. சீனிவாசசெட்டியார்
பெத்துசெட்டியார்
தேசிசெட்டியார்
இராமலிங்கசெட்டியார்
பாப்புசெட்டியார்
திருமலைசெட்டியார்
நமசிவாயசெட்டியார்
கிருஷ்ணசாமி செட்டியார்
சி. சபாபதிசெட்டியார்
சிவசிதம்பரசெட்டியார்
அருணாசலசெட்டியார்
வாடாமலைபெருமாள் செட்டியார்
சோ. சிதம்பரசெட்டியார்
தி. முத்துகிருஷ்ணசெட்டியார்
கோ. சுப்பராயசெட்டியார்
கோ. கோவிந்தசாமிசெட்டியார்
அருணாசலசெட்டியார்
கெங்காசெட்டியார்
பாவாடைசெட்டியார்
ஆதிமூலப்பிள்ளை
கண்ணப்பசிதம்பரசெட்டியார்
வேல். ரங்கசாமிசெட்டியார்
அப்பாதுரைசெட்டியார்
பெரியகுடி, நாகம்மாள்

## பண்டாரக்கோட்டை.

அருணாசலசெட்டியார்
கு. சுப்பராயசெட்டியார்
சி. வெங்கடாசலசெட்டியார்
ப. சோமலிங்கசெட்டியார்
தே. சாமிசெட்டியார்
தோப்பு. பெத்துசெட்டியார்
சுப்பராயசெட்டியார்

## ஆனத்தூர்.

மடம். தெய்வசிகாமணிஐயர்
இலட்சுமணரெட்டியார்
முத்துலிங்காரெட்டியார்
வீணைதீர்த்தாப்பிள்ளை
கு. கந்தப்படையாச்சி
ந. சபாபதிப்பிள்ளை
ம. வைத்திலிங்கமுதலியார்
மு. ந. சுப்பரமணியசெட்டியார்
வெ. இராமசாமி முதலியார்
மூலை. இராமலிங்காரெட்டியார்
தனபாலுசெட்டியார்
வைத்திலிங்காரெட்டியார்
கொ. மாணிக்கம்பிள்ளை
இராமகிருஷ்ணரெட்டியார்

## விழமங்கலம்.

விழமங்கலம். சே. மாணிக்கசெட்டி[யார்
கோபாலு-மாணிக்கசெட்டியார்
ஷை வேலாயுதசெட்டியார்
அங்குசெட்டிபாளையம், அப்பாயி[செட்டியார்
ஷை வெங்கடசாமிசெட்டியார்
திருவமூர், பாப்புரெட்டியார்
வைத்தியம். க.பொன்னுசாமிபிள்ளை
திருவதிகை-மாணிக்கவுடையார்
வண்டிப்பாளையம்-பா. கிருஷ்ணசாமிப்பிள்ளை

## சென்னப்பட்டணம்.

M. L. V. பிரஸ் அ. கந்தசாமி முதலியார்
கொ. செ. வீராசாமிசெட்டியார்
தடவர்த்தி-முகந்துசெட்டியார்
அப்பா அண்டு கம்பெனியார்
பெனுகொண்டசுப்பராயசெட்டியார்
செ. எ. இரத்தினவேலுசெட்டியார்
மாணிக்கசெட்டியார்
தாதா செகநாதசெட்டியார்
தில்லைவேணி அப்பாசாமிசெட்டியா
மோதிச்சிந்து-குலாபிசிந்து சேட்
மோதிச்சிந்து சந்தரபானு சேட்
மாஜிங்ஜிகல்சிந்து சேட்
டாவிதேவிச்சிந்து சேட்

# சூசிபத்திரம்.


| | பக்கம் |
|---|---|
| கடவுள்வாழ்த்து ... ... ... ... ... | ௧ |
| அவையடக்கம் ... ... ... ... ... | ௪ |
| சிறப்புப்பாயிரம் ... ... ... ... ... | ௫ |
| திருநாட்டுப்படலம் ... ... ... ... ... | ௬ |
| திருநகரப்படலம்... ... ... ... ... ... | ௧௭ |
| நைமிசவனப்படலம் ... ... ... ... ... | ௩௨ |
| வீரட்டலிங்கோற்பவப்படலம் ... ... ... ... | |
| கெடிலோற்பவப்படலம்... ... ... ... ... | |
| நகரேற்றுப்படலம் ... ... ... ... ... | |
| திருவிழாப்படலம் ... ... ... ... ... | ௪௯ |
| பிரமன்பூசித்தபடலம் ... ... ... ... ... | ௫௪ |
| திரிபுராதிகளுற்பத்திப்படலம் ... ... ... ... | ௬௨ |
| திரிபுராதிகட்டிருவதிகையடைந்துபூசித்தபடலம் ... | ௬௪ |
| திரிபுராதிகளரசாக்ஷிப்படலம் ... ... ... ... | ௬௮ |
| திருமால்பௌத்தாவதாரப்படலம் ... ... ... | ௭௦ |
| தேவர்கட்கைலையடைந்தபடலம் ... ... ... | ௭௨ |
| திரிபுரதகனப்படலம் ... ... ... ... ... | ௭௫ |
| கெருடன்பூசித்தபடலம் ... ... ... ... | ௮௦ |
| தருமன்முதலியஐவர்பூசித்தபடலம் ... ... ... | ௮௩ |
| தலவிசேடப்படலம் ... ... ... ... ... | ௯௨ |
| அட்டவீரட்டமூர்த்திநாமவிசேடப்படலம் ... ... | ௯௪ |
| தீர்த்தவிசேடப்படலம் ... ... ... ... ... | ௯௭ |
| திருஞானசம்பந்தர்த்திருநடங்கண்டபடலம் ... ... | ௯௯ |
| பஞ்சகிர்த்தியநடனமகிமையுரைத்தபடலம் ... ... | ௧௦௩ |
| திருநாவுக்கரசுசுவாமிகட்குச்சூலைநோய்நீங்கியபடலம் ... | ௧௦௫ |
| குணதரவீச்சுரப்படலம் ... ... ... ... | ௧௧௯ |
| வாகீசப்படலம் ... ... ... ... ... | ௧௨௧ |
| சுந்தரமூர்த்திசுவாமிகட்குத்திருவடிசூட்டியபடலம் ... | ௧௨௨ |
| நைமிசமுனிவர்பூசித்தபடலம் ... ... ... | ௧௨௫ |

உ

திருச்சிற்றம்பலம்.

# திருவதிகைப்புராணம்.

## விநாயகர் காப்பு.

மாமேவு சங்கரனோர் தோலழகா முகத்தயிலவண் வாவென்றோதத்
தாமேவும் புழைக்கையினைச் சுழற்றுபூதன் றந்தைமடித் தலத்தையீர்த்துப்
பாமேவுந் தோலழக ஞானேனீ யோவென்னப் பகருஞ்செய்யக்
காமேவும் யானைமுகக் கடவுளிரு சரணமதைக் கருத்துள்வைப்பாம். (௧)

## வீரட்டநாதர்.

கணையுடையாட் கணையெடுக்கிற் கருங்கோட்டை யழியாது வென்றுகண்டு
யிணையறுமா மலைமகளே மலைவில்லை யெடுத்திடுத விசைவென்றுன்னித்
துணையிருட்கரத்து தனுவதையளித்துக் கணையெடுத்துத் துட்டர்தம்மைத்
திணையழிய நகைத்தெரித்த வதிகைசிவ பெருமானைச் சிந்தைசேர்ப்பாம். (௨)

## திரிபுரசுந்தரி.

எம்பிரான் முப்புரத்தைச் சுடுஞான்று மாற்கணையா யெடுத்தகாலைத்
தம்பிரான் வடிவதனிற் சார்ந்தோங்குஞ் சத்திமிகத் தழலாய்ப் பொங்கி
நம்பிரான் செயங்கொள்ள நாமேவிற் றனுவெடுப்ப மெனவெடுத்து
வம்பரா தியையழித்தத் திரிபுரசுந் தரிப்பதத்தை வணங்கிவாழ்வாம். (௩)

## சபாநாயகர்.

வெம்பந்தந் தனையகற்றி வீடளிக்கு மெனமறைகள் வியந்துசொல்லும்
நம்பந்தக் கரிமொழியென் றொருதாளை நாட்டியொரு தாளைத்தூக்கி
தம்பந்த மகற்றியவெங் குருவாழுஞ் சிவபாத விதயர்தந்தச்
சம்பந்தன் றொழுநடிக்குஞ் சேவடியே துணையாகச் சார்ந்துவாழ்வாம். (௪)

## சிவகாமவல்லி.

பிறைமிலைச்சு மௌலியினிற் கங்கைநிரீஇ நடித்தவொரு பெற்றிநோக்கிக்
குறையறுநங் கொழுநனொரு பெண்கொடியைக் கொண்டாடுங் கொள்கைந
விறைபுரியுஞ் செயல்நன்று லெனப்பிணங்கி நடநோக்கியிருந்துவாழுங்[ன்று
கறைகூந்தற் சிவகாம வல்லியிரு பதக்கஞ்சங் கருத்துள்வைப்பாம். (௫)

## தலவிநாயகர்.

சீர்பூத்த புகர்முகத்தின் கோடொடித்து மேருவெனுஞ் சிலையின்மீது
பார்பூத்த பாரதத்தை யுலகறியத் தீட்டியநற் பருத்தகோட்டைத்
தார்பூத்த வங்கையினிற் கொண்டிரு வதிகையினிற் சார்ந்துவாழுங்
கார்பூத்த யானைமுகக் களபவிநா யகன்சரணங் கருத்துள்வைப்பாம். (௬)

### குமாரக்கடவுள்.

வேலேந்து மறுமுகவ னொருமயிலின் மீதேறி விரவத்தந்தை
மேலேநன் முடிமீதி லணிந்திருந்த கொக்கிறகை மெல்ல நோக்கிக்
காலேந்து நம்மினத்தி னிழிச்சாதி தனையணிந்தான் கடவுளென்று
பாலேகு மயிற்றருக்கிச் சாரவதன் மீதோனைப் பரவிவாழ்வாம். (எ)

### திருநந்திதேவர்.

ஞானநெறி தனையடைய விரும்பியவர்ச் சரியைமுதல் நன்குசெய்து
மோனநெறி யாயசிவ ஞானநெறி யடைவதுபோன் முதல்வன்றுளைத்
தானகத்திற் பெறநினைப்போர் வரமுதலிற் பத்திகொடு சாரநின்ற
வானவர்க டொழுதேத்தும் நந்தியிரு பாதமலர் வழுத்துவாமால். (அ)

### அகத்தியமுனிவர். (வேறு.)

ஒருநொடிப் போதில்வீசு மோதநீ ருறிஞ்சிடாது
பெருசிலை நாட்டிச்சென்ற பெரியவ ரிறும்பூதெய்த
வருதிரை யோதநீரை வற்றிட வுறிஞ்சிநின்ற
கருவறு பொதியவெற்பின் கடவுளை வணக்கஞ் செய்வாம். (கூ)

### திருஞானசம்பந்த சுவாமிகள்.

மறையினைக் கொண்டு மாண்ட மைந்தரை யெழுப்பிடாது
நறையுற வருந்தி நின்ற நான்முகன் புந்தி நாண
மறையினைக் கொண்டுமாண்ட மைந்தனை மருகறன்னிற்
குறையற வெழுப்பி நின்ற குருவினைப் பணிவாமன்றே. (க0)

### திருநாவுக்கரசு சுவாமிகள்.

வாரணங் கொல்லவந்த காலையில் வருந்திவீழ
வாரணந் தன்னைச் செற்று மகிழ்ந்தவரிறும்பூதெய்த
வாரணங் கொல்லவந்த காலையில் வருந்திவந்த
வாரணம் வணங்கி யேகும் வாகீசற் பணிவாமன்றே. (கக)

### சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

தாமுனி யடியைச் சூட்ட பெற்றுமெய்ச் சிவத்தின் றூய
மாமல ரடியைச் சூட்டப் பெருதவர் மனத்துள் நாண
பாமல ரணியு மண்ணற் பரிந்தடி முடியிற் சூட்டப்
பூமல ரென்ன யேற்ற புலவனைத் துதிப்பாமன்றே. (கஉ)

### மாணிக்கவாசக சுவாமிகள்.

அம்மறை நாதன் றேன்றி யருட்பெறக் குறித்திடாது
செம்மையற் றனவென் றுன்னிச் செழுமறைப் பிரமனுண
விம்மிய வாசகத்தை விமலன்வந் தெழுதப் பெற்ற
பொம்மலர் வாத வூரர்ப் பொன்னடி வணங்கு வாமால். (கரு)

## தண்டி.

தந்தையின் பாதப் போதைத் தான்சிதை வுறப்புரிந்துச்
சிந்தையி லச்சத் தோடு வாத்திகீழ்ச் சிவத்தினுக்கு
யந்தயார்க் கிரமாட்டி யடைவுடன் கைலை சென்ற
யெந்தையா மையன்றாய விணையடிப் போற்றுவாமால். (கச)

## அறுபத்து மூவர்.

கூறுநாயகி யோடுருவிய, நீறுகொண்ட நிமலன் வடிவதை,
மாறிலாது வணங்கிய மாட்சியா, ரறுபத்தொடு மூவரருள்வரே. (கரு)

## சேக்கிழாரநாயனார்.

மன்றுறுஞ் சிவனடிப்பத மன்னிய வுணர்வா
யன்றெ ழுந்தவோர் மொழிகொடு வுண்ணலின் வாக்காய்
நன்று மாக்கதை மொழிந்ததைத் தென்றிசை நாட்டுங்
குன்றை மாநகர்ச் சேக்கிழாற் குரிசிலைப் பணிவாம். (கசு)

## மெய்கண்ட சிவாசாரியார்.

†மடந்தை கைவளை யான்பேர் பின்வரு களப்பாள னென்னுந்
திடந்தரு வபிதா னத்தான் பெற்றிடச் சுதனாய்த் தீதிற்
கடந்தையி னின்று போந்து காங்கயன் பால்வளர்ந்த
+குடந்தி நுறைசேர் நல்லூர்க் குருவினைப் பணிவாமன்றே. (கஎ)

## அருணந்தி சிவாசாரியார்.

கருத்துறை கடப்பான் வேண்டி மெய்கண்டான் பாதப்போதே
பெருத்துறை யாகக் கொண்டு பெரியநூற் புலவ னென்ன
வொருத்துறை ஞான போத முண்மைகண் டான்பாற் கண்ட
திருத்துறை யூரான் பாதஞ் சென்னியிற் சூட்டுவோமால். (கஅ)

## மறைஞானசம்பந்த சிவாசாரியார்.

பேசரு போதஞ் சித்தி யார்முதற் பெரிய நூலை
யாசிரி யவராய் நின்ற வாகம பண்டிதன்பாற்
றேசுறப் பெற்று தீக்கை யாவையுஞ் சிறப்பப் பெற்ற
மாசறு கடந்தைச் சம்பந் தன்றனை வணங்கி வாழ்வாம். (கக)

## உமாபதி சிவாசாரியார்.

கடிக்கவினி தழித்தாம னெழுதிய முடங் கற்கண்டு
படிக்கவிந் தனத்தோன் மாட்சி யறிந்துவீ டளித்த பண்போன்
குடிக்கவிர்ப் பாகந் தந்தோன் கோயிலிற் றுவச மேற்ற
கொடிக்கவி புனைந்த கீர்த்திக் குரவனைப் பணிவாமன்றே. (உ௦)

---

† அச்சுதகளப்பாளன். + குடந்திநுரை எனபது வெண்ணே.

### பொம்மபுரம் சிவஞானபாலய தேசிகர்.

ஒங்குகல்லாடைப்பூதி சிவலிங்கமுருத்திராக்கந்
தாங்குறுநீற்றுப்பையு மாத்திரைக்கோலுந்தாங்கி
வாங்குறுதிரைசுருட்டும் வாரியிற்றோன்றநின்ற
பாங்குறுபாலசித்த மூர்த்தியைப்பணிவாமன்றே. (உக)

### வீரசைவம் சமயகுரு.

+ கறைமங்கலங்குழலிவெருவ முடங்கற்றீட்டிக்கவின்றேரிட்டு
நிறைமங்கலம்பெரிய†வறுதலத்தி னிறைக்கோலால்நிபிட ஞானப்
பறைமங்கலம்முழக்கிவீரசைவ நாதமெழப்பண்ணுங்கோமான்
றறைமங்கலத்துறு*தன்விளக்கபெயர்த்துதியேனேற்றோடமாமே. (உஉ)

### சிதம்பரம் பச்சைகந்த சுவாமிகள்.

நச்சணியுங்கண்டத்தான்றிருவடியே துணையென்றுநாடிநின்று
யெச்சமிலாப்பலசீடர்தங்களுக்குத் தீக்கையினையியற்றியோங்கி
முச்சகமுமடிபணிந்துமுன்னின்று வணங்கவருமுதல்வனை
பச்சகந்தவையனெனுங் குரவன்மலர்ப்பதம்பரிந்துகாக்குமாதோ. (உங)

### பண்ணுருட்டி
### போதகாசிரியர்.

## நமசிவாயநாவலர் சுவாமிகள்.

சைவநிலையானபலகலையுணர்ந்து வீரசைவகலையுமாய்ந்து
தெய்வநிலைமுழுதுணர்சுப்பிரமணியன் மகவாகித்தெங்குவானந்
தைவரும்நல்வளஞ்சாரும் பண்ணுருட்டிதனிற்பலமாணுக்கர்கட்குக்
கைவரப்பல்கலைதெரித்த நமச்சிவாயன்பதமேகாக்குமாதோ. (உச)

## அவையடக்கம்.

---

சீர்சான்றதிருவதிகைமான்மியத்தைத் தென்மொழியாற்சிறப்பச்செய்து
பேர்சாரப்பாடியிவண்தருகவெனத் துறைசையமர்பெம்மான்றுனை
யோர்சாரமுடிமீதுகொண்டசிவ ஞானமெனுமெந்தையிங்கு
பார்சாரப்புகன்றமொழிமறுக்காது சிறியேனுன்பாடினேனே. (உரு)

---

+ கறை, மங்கு. அல். அம். எனப்பிரித்துப் பொருள்கொள்க.

† அறுதலம்-சடுத்தலமாகிய கோல். தலங்களாறுவன-பக்தஸ்தலம், மகேசுரஸ்தலம், பிரசாதஸ்தலம, பிராணலிங்கஸ்தலம், சரணஸ்தலம், ஐக்கியஸ்தலம். இதனது விரிவைச் சித்தாந்த சிகாமணியிற்காண்க.

* தன்விளக்கப்பெயர்-சிவப்பிரகாசம். தன்-சிவம், விளக்கம் பிரகாசம்.

அடியனேன்செய்தமிழின்றிறமனைத்து மிவ்வள்ளலன்பாய்க்கேட்டு
கடியேறுகொன்றையணிசிவபெருமா னருளென்றுகனிந்துயெந்தை
வடிவானநீறுதன்றுவிந்நூலை யரங்கேற்றிவழங்குவித்தான்
படிமீதிலிவர்க்கென்னகைம்மாறு செய்கேனிப்பாவியேனே. (உசு)

அவையடக்கங்கூறுபவரளவிறந்த நூலுணர்ந்தவான்றோரேனு
மவையடக்கம்புகல்காலையிழிகுணத்தா லுரைக்கின்றதறமேயன்றோ
வவையடக்கஞ்சொலத்துணிந்த வடியேனப்படியல்லயறிந்தேனில்லை
வவையடக்கப்புகுந்தேனுனறிவாளர் நகைநாணுந்தறிந்தான்போல. (உஎ)

திருப்பெருகுஞ்சிவபெருமானித்தமிழை யுள்ளத்திற்றிகழக்கொண்டு
விருப்படைந்துயேற்றருளுமெய்யடியா ரருச்சித்தமேன்மையானப்
பருப்புகழ்கொண்மலர்தன்னைத்தூயதிரு முடிமீதுபண்பானேற்றுச்
செருப்படியைக்கண்ணப்பனுலேற்ற காதையதுதிறத்தினாலே. (உஅ)

# சிறப்புப்பாயிரம்.

சீர்பூத்தபொதும்பரெலாம்பூவையுங்கோவையு மடர்ந்துசெழியவோங்கும்
பார்பூத்துவளஞ்சாருமதிகைமான் மியந்தமிழாற்பாடினுனு
லேர்பூத்தவிலக்கியமுமிலக்கணமு முழுதுணர்ந்தவினியமேலோன்
நீர்பூத்தபண்ணுருட்டிதன்னிலுறை அப்பாவுநாவலோனே. (உகூ)

அவையடக்கம் முற்றிற்று.

---

உ

திருச்சிற்றம்பலம்.

# திருநாட்டுப்படலம்.

மன்னியவாக்கின்மன்னும் மனமுதற்கரணந்தன்னைத்
துன்னியசிவத்தின்பாலே தோய்வித்துசமணராதிப்
பன்னருங்கொடுமையாளர்ப் பற்றினைமுற்றுமாற்றி
யுன்னருமரன்றாட்சேர்ந்த யுத்தமற்பணிவாமன்றே. (க)

இமமலைப்புதல்வியோடு விலகியசிவபிரானு
மமர்திருவதிகையென்னு மருந்தலந்தன்பாற்கொண்டு
சமமறவுலகுக்கெல்லாஞ் சார்வளந்தன்னுலோங்கிக்
கமமுனைப்பாடிநாட்டின் கனவளஞ்சிறிதுசொல்வாம். (உ)

உய்தருதெய்வந்தன்னு ளுயர்மதிசூடிபோலுஞ்
செய்தருசமயந்தன்னுட் சிறந்ததுசைவம்போலும்
மைதருகூந்தற்சத்தி மார்களிற்சிவையேபோலுந்
தெய்வநன்னாட்டின்மேலாந் திருமுனைப்பாடிநாடு. (௩)

உலகுறுமலையின்மேலா முயர்கிரியிமயம்போலு
மிலகுறுமனுவின்மேலா மினியபஞ்சாக்கரம்போன்
மலைவிலாமுறையிற்சைவ துவாதசமறையேபோலுந்
திலகநன்னாட்டின்யேலாந் திருமுனைப்பாடிநாடு. (௪)

உடம்பினிற்றலையும்நோன்பு ளுயிர்க்கொலைபுரிந்திடாமை
நடந்தனிலிறையும்பூவில் நல்லதாமரையுந்தான
மடமறுவோதனத்தை வழங்கலுஞ்சிறத்தற்போலத்
திடமுறுநாட்டின்மேலாந் திருமுனைப்பாடிநாடு. (௫)

உத்தரந்தனிற்பிறங்கி யுத்தமநதியும்பின்னைச்
சுத்தநற்றெக்கணத்துத் தூயநற்கெடிலமிந்தச்
சத்துவநதிகளுப்பண் சார்ந்துபல்வளத்தாலோங்கிப்
பத்தர்கட்புகழநின்ற திருமுனைப்பாடிநாடு. (௬)

பொருவருங்கெடிலமென்னும் புண்ணியநதியின்மூழ்கி
வெருவுறுபிறவிநீத்து விருப்புறுவீடுபெற்றுக்
கருவினையறுத்துத்தூய கதியினையளிக்குமம்மா
திருவுறுகெடிலம்பாயுந் திருமுனைப்பாடிநாடு. (௭)

சென்னியர்தனக்கிராச தானியாய்ச்செழிப்புற்றோங்கி
மன்னியவாக்கின்மன்னர் மனமுதற்கரணந்தன்னாற்
றன்னியற்பத்திபூண்ட நற்றலந்தன்னைக்கொண்டு
பன்னருஞ்சிறப்பின்மேலாந் திருமுனைப்பாடிநாடு. (௮)

உலகுறுதலத்துண்மேலா யுயர்ந்துபல்லோருமுய்ய
யிலகுநல்லிங்கமாக விலகுறுவதிகையென்னு
மலகுறவதிகம்போல வத்தலமுற்றவிந்த
நலகுறுநாடுமேலாந் திருமுனைப்பாடிநாடு. (௯)

துன்புறுபசியுண்மாழ்கித் துயருறுமவரைநோயில்
வன்புறவிருந்திட்டோரை மறைவிதிவிலக்குவாரை
வன்புறவரன்றாட்கன்பு செய்துருவழுக்களுரைத்
தன்புடையில்லதந்தச் சார்முனைப்பாடிநாடு. (௧௦)

வாக்கின்மன்னவரும்நம்பி வந்தவதரித்தவாற்றாற்
றேக்கரும்புகழ்ச்சியெம்மாற் றெளிதற்கூடாமையென்று
சேக்கிழாருரைத்தாரென்றாற் செய்தவஞ்சிறிதிலாத
தாக்கரும்நாட்டின்வண்ணஞ் சாற்றவும்நம்மாலாமோ. (௧௧)

### மழைவளம்.

இன்னரும்நாட்டின்கண்ணேயெழிலிகளொன்றாய்க்கூடி
மன்னுநந்தலைவன்வென்றமலையினைவெல்வோமென்று
தன்னுளச்செருக்கினோடுசார்ந்துவெண்ணிறத்தவாகிப்
பொன்னுலகதிபரென்னக்குணகடற்பொருந்திற்றன்றே. (௧௨)

கனைகுரலோதையோடுங்கரியநல்வண்ணமோடுஞ்
சினமுறுபகட்டிவர்ந்துசெல்லுறுகூற்றமென்ன
வனமுறு†கார்கோளூற்றுவருபுனலுறிஞ்சிவிண்ணிற்
றனதுபேருருவத்தோடுசார்ந்தவிண்ணிடங்களெல்லாம். (௧௩)

அடுத்தவக்கொண்மூவெல்லாமாதவனொளியைமுற்றுந்
தடுத்துவிண்ணிடங்களெல்லாஞ்சார்கரும்படம்போர்த்தென்ன
விடுத்தவத்தோற்றமாதுவிழியினைக்கர்ந்தபோதுத்
தொடுத்தவவ்விருளேபோலத்தோன்றினவையமெல்லாம். (௧௪)

காரெனும்நிறத்தோடுற்றகார்காலமெனுங்கனிக்குக்
காரினுக்கிறைவன்வெய்யகனத்தநல்லிழையணிந்தாங்
காரிமையாதசோதிமின்னலுங்கதுவவார்த்துக்
காரெனுங்காலந்தன்னைக்காட்டியங்குற்றதன்றே. (௧௫)

விண்ணவரெழுந்துநோக்கிவெவ்வியசினத்தோடுற்று
மண்ணவர்தன்மேற்பாணமருவிடச்செலுத்தற்போலக்
கண்ணிடமனைத்தும்வெள்ளங்கலங்கியேவிரிந்துபூமித்
தண்ணெனவிடைவிடாதுசார்ந்த்வண்சொரிந்தவம்மா. (௧௬)

திரைக்கரத்தெரியுந்தெண்ணீரருந்தியசெழியமேகம்
வரைக்கருசிமயமுற்றிவல்விடிமுழக்கத்தோடு
நிரைக்கெழுமின்னற்றோன்றிநிறைந்தெழுதோற்றம்வெய்ய
வரக்கர்வாள்வீசியார்த்துவாகாயமுறுதற்போலும். (௧௭)

நீற்றணியடியார்கட்குநின்றவீரட்டநாத
ரூற்றுநல்லருளேயென்னவோதமுன்னீரையெல்லாஞ்
சாற்றுதன்கையான்மொண்டுசாடுதற்போலவெங்கும்
மாற்றுறுவூழிவெள்ளம்போன்மழைபொழிந்ததம்மா. (௧௮)

மழைமிகப்பொழிதலோடுவருந்தியவெப்பமென்னும்
பிழைதபுகாலம்நீங்கிப்பெயர்ந்துபார்க்குளிர்ந்தவம்மா
வழுவுறுகொடுங்கோலாட்சியாண்டிடுமன்னர்மாள
விழைதருதருமநீதிவிளைமனர்விரவற்போல. (௧௯)

குஞ்சரத்துதிக்கைபோலக்கொட்டியமாரிப்பூமி
விஞ்சுறக்குழிகளுண்டாய்விரவிடநிற்றன்முன்னர்த்

† கார்கோள் - கடல்.

தூஞ்சுறுவேனில்வெந்துசெய்துயர்தனக்கிரங்கி
வஞ்சுநல்லரசற்கையாலெடுத்தெடுத்தாற்றற்போலும். (௨௦)

அடுக்கலின்மீதுமோதிவஃதொரீஇயவற்றினுள்ள
மடுக்கவிழ்ச்சுனையிற்பூத்தமலரினைக்கொடுவேள்மைந்தன்
றடுக்கருங்குழற்குச்சூடுந்தாயினையொற்றகங்கைப
படுக்குமாற்றவளின்மைந்தனாயினும்பரிவுபோமோ. (௨௧)

புன்கணைப்புதர்கட்சூழுங்குறிஞ்சியிற்புரண்டுவெள்ளம்
நன்குறுமுல்லைவாழுநவைப்புலிக்குருளைதன்னைத்
தன்கரந்தன்னாற்கொண்டுசார்ந்தனதிரைகளோடு
வன்கணர்தமக்குமைந்தர்ப்பிறக்கினும்வாழுங்கொல்லோ. (௨௨)

மற்றுமவ்வனத்திலுள்ளமறவரும்பறித்துண்பாரும்
வெற்றுப்பொய்யாளர்த்தம்மைவெள்ளங்கொண்டேகிப்பின்னு
ணைற்றவர்வருந்தித்தத்தம்வாழ்க்கையுமனையுநீத்தார்க்
குற்றமாங்கொலைஞருக்குக்கொடும்பசிநீங்குங்கொல்லோ. (௨௩)

பற்பலசமயத்துள்ளும்பத்திபூண்டியற்றுகின்ற
பற்பலர்வணக்கமெல்லாம்பரசிவத்தடைதற்போல
பற்பலவடுக்கற்கானம்பரந்தவவ்வெள்ளமெல்லாம்
பற்பலவளைவோடேகிக்கெடிலத்திற்படர்ந்தவன்றே. (௨௪)

இன்னபஃறலத்திற்பெய்தவினியநன்னீரதெல்லா
மன்னுமங்கொருங்கேயோடிமருவுமிச்சிறப்பென்சொல்கேன்
றன்னுமிந்நாட்டிற்பெய்ததாநீரதெங்குமேவிப்
பன்னருஞ்சிறப்பினோடும்பல்வளந்தருமென்றும். (௨௫)

## குறிஞ்சி.

திருமுனைப்பாடியென்னுஞ்சிறந்தவிந்நாட்டின்கண்ணே
வருமுயர்மதிகடோறும்பெயுமழைவழங்கப்போமோ
பெருமுயர்தினையைந்துள்ளும்பெருகிவிண்ணுயர்ந்ததாயத்
தருமுளைத்துறுகுறிஞ்சிவளஞ்சிலசாற்றலுற்றும். (௨௬)

## வேறு.

தந்தைநின்றிடுகுலமெனத்தன்னுளங்குறித்தோ
யெந்தைமாதுலனிக்குலமென்பதுநினைத்தோ
சிந்தையின்மிகக்களிப்பொடுசேவலங்கொடியோன்
புந்திவைத்திடவோங்குவபற்பலபொருப்பு. (௨௭)

தலைவன்வாழ்வதுமிக்குலமவனதுதந்தைச்
சிலையும்வாழ்ந்திடமிக்குலமென்பதுதேர்ந்துக்
குலைவற்கூழையங்கேகயம்பெடையொடுகூடிக்
கலைவலாரெனமயிற்குலமுறைவகற்சிலம்பு. (௨௮)

குன்றி†லைவனமிறுங்குநற்றோரையுங்குலவி
நின்றிடுபுனங்காத்திடுகொடிச்சியர்நீலம்
முன்றிற்றங்கியசெம்மணிமுதலியகொண்டு
வென்றியோடவர்க்கிள்ளையைக்கடிவர்கள்விரைந்தே (௨௯)

வன்னியாகியவருணையென்றுரைத்திடுவரையும்
நன்னர்வாழ்திருக்கோவலூரறையணிநல்லூ
ரின்னமாதலஞ்சூழ்ந்தயிக்குறிஞ்சியினிடங்க
ளன்னமாதவஞ்செய்ததோயித்திருநாட்டில். (௩௦)

வெங்களிறுகள்வீறிடுமிடிக்குரல்விண்ணிற்
றங்குமிந்திரனூர்திதன்செவியினிற்சார
பொங்கியன்னதுபயமொரீஇதிகைத்துறப்பொருந்து
மங்குகாரியுங்கேட்டிறும்பூதடைந்தனனால். (௩௧)

தெரியுருப்புனையிருவினையிறவுளர்த்தேடி
விரியமுற்றுமவ்வீக்களைச்சாடிபின்விருப்பா
லரியமாமதுக்கொண்டவரருந்துவரந்தோ
புரியுலோபியர்பொருட்கவர் ‡ கரவடர்ப்போல. (௩௨)

திண்ணனென்றிடுவிறவுளன்சிவபிரான்றனக்கு
வுண்ணப்பன்றியினிறைச்சியையுதவிடற்போல
நண்ணுங்கானவரூன்முதற்புழுக்கலும்நயந்து
வண்ணமோடவர்வுண்டிடவோங்குவவரைகள். (௩௩)

வேயின்முத்தமும்வென்றிபன்றியினதுகோட்டிற்
றோயுமுத்தமும்மதவலித்தோலிஞெண்முத்தும்
பாயும்புற்பலும்முன்றிலிற்கொடிச்சியர்பரப்பிக்
காயுந்தோற்றம்விண்மீனவண்மேய்வதுகடுக்கும். (௩௪)

கரிமருப்புறுவேர்கொடுகானகத்தலைவ
ரரிமரத்துறுகோற்கொடுபகட்டினையடித்துக்
கரியகாரினிலிடியுறக்கார்மழைப்பொழிய
விரியுமைவனந்தோரையும்வரையினில்விதைப்பார். (௩௫)

முன்னமெங்குலத்தோகையைவிரும்பினைமுருக
யின்னுந்தோகையையளிக்குதுமென்றவரிசைத்து
வன்னமன்னவர்ப்பற்பலதோகையையணைத்துப்
பன்னும்வேளிடக்கோயிலில்விட்டவர்ப்பணிவார். (௩௬)

---

† ஐவனம் மலைநெல். இறுங்கு-சோளம். தோரை-மூங்கிலரிசி.

‡ கரவடர்-திருடர்.

அங்கியென்னவம்மலையினிலரியசெம்மணிகட்
டங்கிநிற்றலிற்†றரக்குகளிரவினிற்சாரா
திங்களென்னவக்கொடிச்சியர்முகத்தினைத்தேர்ந்துத்
தங்குங்கோகம்பன்மதியெனக்களித்தவண்சாரும். (௩௭)

இந்தனங்கொடுவெட்டின்வாய்மூட்டியேயெரிக்கச்
சந்தனத்தருகுங்குமம்பற்பலசாய்ப்பார்
மந்தமாயநல்வச்சிரப்புயமுறுமள்ளர்ச்
சந்தமாயவெங்கூற்றுவன்சாய்க்கினுஞ்சாயார். (௩௮)

முடத்தருசுனைச்சாய்ந்திடமுசுக்கலைநோக்கித்
திடத்ததாயுறுகவியெனத்திண்ணெனத்துள்ளத்
தடத்துளாழ்ந்ததுதன்னுயிர்நீத்ததுசற்றும்
மடத்தர்முன்பினோக்காதுமேகுதித்திடின்மாள்வர். (௩௯)

முக்கணெம்பிரான்கண்களின்மூளைத்தபுண்மாற்ற
வக்கமப்பியதிண்ணனுமண்ணலுமவன்சார்ப்
பக்கமேவியசத்தியும்பசுமயிற்பதியு
மொக்கநின்றவிக்குறிஞ்சியின்வளமதுவொன்றோ. (௪0)

## முல்லை.

வள்ளியோடுவென்குருவுறுவரையினதழகார்ந்
தெள்ளுதீம்புகழென்னிவண்டெரித்தனஞ்சிறந்த
யெள்ளலற்றவான்கன்றொடுமேதிகளினிதாய்
யுள்ளிறைந்திடுமுல்லையின்வளஞ்சிலவுரைப்பாம். (௪௧)

வெண்ணெயுண்டதுவ்வேலையிற்றுயின்றதும்விரும்பித்
தண்ணந்தாமரைநாபியிற்கொண்டதுஞ்சனித்த
வண்ணவாலினிற்பள்ளியுந்துளவிணைவணைந்தக்
கண்ணன்கானகம்பழகமுற்பழகியகடுக்கும். (௪௨)

வானநாட்டினர்த்தடத்தில்வந்தியற்றுவதானம்
கோனனாட்டியசிரத்தையிற்செய்வர்க்கோதானம்
கானநாட்டினர்நன்னெறிகற்பினிதானம்
தானநாட்டினர்வசித்திடத்தனித்தகூதானம். (௪௩)

நாகமீதினிற்றுயிற்கொளும்நாரணனென்போன்
நாகமீதினில்நாரிகளணிந்திடும்நல்ல
நாகமுற்றிலுமெடுத்தவனாட்டியசெயற்போல்
நாகமீதினிலாடையையுணக்குவர்நலமாய். (௪௪)

காட்டிற்பற்பலகாலமுமொழித்தவக்கண்ண
னாட்டினிற்பதில்வெம்மையென்றுன்னுபுநலத்தச்

† தரக்கு-பாம்பு. கோகம்-சகோரம் ‡ இந்தனம் விறகு ‡ கூதானம்-இருப்பிடம்.

சேட்டருந்துளபத்தவன்செய்யநல்லிழுதை
யேட்டருந்தினன்கானகவிருப்புடையவனே. (சரு)

ஆடகம்பலசாமையும்பயறுடனவரைத்
தேடுகோத்திரவம்முதற்பற்பலசெலுத்திக்
காடுமுற்றிலுமாயர்கட்கவின்பெறவிந்தப்பார்ப்
பீடுதங்கியயுழுநரின்செல்வமும்பெரிதே. (சசு)

ஆயரான்களைமேய்க்குறுமோதையுமளவிற்
றுயராய்ச்சியர்க்கடைதயிர்த்தன்பெருவொலியுங்
காயுநன்னவநீதமுமொலிகடலெனமாற்
றேயநிற்றலின்வைகுந்தமென்னவுந்தோன்றும். (சஎ)

கோதிலாதவக்கான்வயிற்றோன்றியகோங்கும்
மீதுபற்பலதருக்களுமீமிசைமுட்டி
வாதமுற்றிடவிண்ணிடத்தசைந்துறும்வழக்காற்
போதமுற்றகான்ககனமென்றொருபெயர்ப்பூண்ட. (சஅ)

தாமமொன்றவண்மலருடனின்றிடச்சார்பில்
வாமபிண்டியும்நின்றிடச்செருந்தியுமலர்தல்
நாமவெண்பிறையணிந்திடுநாயகனோடுக்
காமவல்லியுங்கந்தனும்நின்றிடற்கவினும். (சக)

வனம்வழங்கியகுளத்தியர்த்தோன்றுவவல்லி
வனம்வழங்கியகுளத்தியற்றோன்றுவவல்லி
தனம்வழங்கியவிருக்கையிறங்குவநகமே
தனம்வழங்கியவிருக்கையிறங்குவநகமே. (ருo)

ஊதும்வேய்க்குழற்றொண்டருமிவ்வனமுற்றத்
தீதிலாதநன்மங்கலத்திருநகர்தன்னின்
நாதனைநெதெழுத்தோதியேநற்கதியடைந்தாற்
சீதமுற்றகான்வளத்தினைத்தெரித்தலுமெளிதோ. (ருக)

## மருதம்.

விண்டுதங்கியமுல்லையின்வளத்தினைவிரித்தாம்
வண்டுதங்கியமாமலர்நந்தனவனத்தைக்
கொண்டமாமருதத்தினிற்குலவியவளங்கண்
மண்டுபல்வளந்தனிலிவண்சிலவளமறைவாம். (ருஉ)

## வேறு.

வணங்காக்குமாற்றூயமலரடியைத்தொழுதிறைஞ்சிக்
கனங்காக்கும்வச்சிரவேற்காரிதனதூர்தியொடு
மனங்காக்கும்பத்தியொடுமெருவிவருதோற்றமெனப்
புனங்காக்குங்கெடிலநதிப்புடைபாந்துபொங்கிற்றே. (ருங)

பொய்யுறுவார்மனமெனவும்பொலிவுபெறுபிறையணிந்த
வையர்தமைவணங்காமற்றீதாற்றுமறிவினைச்
செய்யமனமெனத்ததும்பிமேற்றிரையார்க்கெடிலநதி
மையலறுந்துறவோர்போன்மாசிலாதோடியதே. (௫௪)

மதகுதொறும்புகுந்துநுழைந்துறுகெடிலமாநதியி
னுதகவளமோங்குபுனமுற்றுநிறைந்தோங்கியதாற்
சதகருமத்தோன்வணங்குஞ்சந்தமுறுவதிகையினிற்
பதகருறவவர்பாவம்பரந்துகுளிர்ந்திட்டதென. (௫௫)

மன்னுபுனற்பழனமெலாம்பரந்துவழிந்திடமருத
நன்னிலத்தகளமர்களுங்கடைசியரும்நன்குகுழீஇ
பன்னுமதவாய்புகுத்திப்பள்ளரெலாம்புறம்போந்து
கன்னலுறுமருதவயற்கரையணையவந்தணைந்தார். (௫௬)

ஓடுவர்கட்சில்லோர்களுழுந்தெழுவர்சில்லோர்கட்
பாடுவர்கட்சில்லோர்கட்பணிந்தெழுவர்ச்சில்லோர்கள்
நாடுவர்கட்சில்லோர்கணைவைமதுவின்றன்செயலால்
வாடுவர்கட்சில்லோர்கள்வருந்துவர்கட்சில்லோர்கள். (௫௭)

இவ்வண்ணமகங்களித்துவிருங்களமரேர்செலுத்திச்
செவ்வியுறுபகடீர்த்துச்செறிமுட்கோலாற்றெழித்துக்
கவ்வைபெறுநிலம்பெயரக்கமர்முழுதும்நிரவலுற
நவ்விபெறுமேழிநுனிநன்கிடக்கையாற்பிடித்து. (௫௮)

படைச்சால்கள்நெருங்கியுறப்பதமளவுதனையறிந்து
மிடைச்சாருமலமுகங்கள்மிகத்தேய்ந்துபழந்தாள்க
ளிடைச்சாயப்புன்மூலமிழிந்துநசுக்குறமுயன்று
கடைச்சாருமதுக்களமர்க்கவின்பெறவங்குழுதனரால். (௫௯)

உழுதபினர்ச்சேராக்கியுயர்வெண்ணெற்செந்நெல்லின்
வழுவறுபுன்முளைகொண்டுவலாரிபதந்தனைத்தொழுதுப்
பழுதறவக்கழனியெலாம்வித்தினார்பற்களமர்
விழுதருமக்கெடிலநதிபுனற்பாய்ந்துவிரவியதால். (௬௦)

எல்லிடையுமல்லிடையுமினியநீர்தனைப்பாய்ச்ச
நல்லபுனலுண்டுபசும்நிறத்தோடுநன்மைபெற
வல்லகொழுமுளையனைத்தும்வருபச்சைநிறமாய
கல்லளித்தவம்மையதுகரியநிறந்தனையொற்ற. (௬௧)

நாறுதனைப்பறித்துமிகக்குணில்மோதிநலிதரவே
கூறுமுடிசெய்தடித்துக்கொண்டுபழனங்களெலாம்
வேறுமிகக்கடைசியர்கள்நடவுசெயவிடுத்துபினர்
மாறிலாத்தானமெலாம்மலிந்துறவேநட்டனரால். (௬௨)

உதித்தவிளமகவுகவிழ்ந்தொல்கிபினவெழுந்தெனப்
பதித்தபழனங்களமர்ப்பசியநாற்றங்கால்கட்
டிதித்துமிகப்பசந்தேறிவேறான்றித்திண்மைபெறக்
கதித்தவிளம்பயிரனைத்துங்களமர்மனங்களிப்புறவே. (௬௩)

இலம்பாடுபிணிக்கல்விதனைப்பொருந்திவிளைத்தெனப
புலமடக்கிச்செயுந்தவத்தைப்புன்காமஞ்சூழ்ந்தெனப்
பொலமுறுநன்மனந்தன்னைப்பொய்மாயைப்பொருந்தியபோற்
சலமுறுநற்பயிரதனைக்களைச்சார்ந்துநெருங்கியதால். (௬௪)

பிகமொழியுங்கருங்கூந்தற்பிறைநுதலராங்கடைசியர்க
ளகமுறச்சார்ந்தேபல்லுமாடவரினழகுபெருவள
முகமெனுஞ்செந்தாமரையைமுறுகாதுபிறகளைந்தார்ச்
சுகமளிக்குங்கொழுநனிடைச்சூழ்பரிவுதாம்போமோ. (௬௫)

மரைமலர்கடனைக்கொய்துமலைபோலக்குவித்திடுவார்
விரைதருநீலங்கொய்துவிமயமெனவிண்ணோங்கும்
புரையல்லிதனைக்கொய்துபொற்பிடுவரிவ்வண்ணம்
வரையுறுமக்கழனியெலாங்குறிஞ்சியெனவயங்கிற்றால். (௬௬)

அறியாமைதனைக்கடிந்தவறிவெனவுமத்துவித
நெறியாலேயறமுணர்ந்தநெறியாளர்த்தவமதுதான்
பொறியாரப்பொலிவதுபோற்பொருந்தியவக்களைகளையச்
செறியாரச்செந்நெல்லின்பயிர்ககருத்துசெறிந்தனவால். (௬௭)

பசந்தகருநெற்பயிர்கட்பண்ணைதொறும்பொம்மன்மிகு
வசந்தமுறச்சாய்ந்தொல்கிவருமோசையுடனிற்றல்
லொசிந்தவிடைநாரியையோர்விடலையுறத்தரைநோக்குங்
கசந்தபினர்த்தானோக்கிக்களித்திடுகன்னியையொற்ற. (௬௮)

விஞ்சாரும்பண்ணைதொறும்விரவிகருத்துறநின்றச்
செஞ்சாலிப்பயிரனைத்துஞ்செம்மைமிகசூற்கொண்டுப்
பிஞ்சாருமிளங்கதிர்கட்டலைத்தோன்றிப்பிறங்கியுறு
மஞ்சாருங்குழலிபலமைந்தர்களையீன்றதென. (௬௯)

தலைச்சாய்ந்தகதிரனைத்துஞ்சார்குலத்துவனிதையெனக்
குலைச்சாய்ந்துகதிரனைத்துங்கோகனகந்தொடநிற்றற்
கொலைச்சாரப்புரியுமழலிதுவென்றுகொண்டதனை
வுலைச்சார்ந்துவருத்தாமலுறுவென்றுவோதுவபோல். (௭0)

இவ்வண்ணஞ்சாலியெலாம்வளைந்துபடிந்ததுவினியச்
செவ்வண்ணத்திருவதிகைத்தேவர்பிரானருளொழுகுங்
கவ்வைபெறுகஞ்சமலர்ச்சேவடியிற்களிப்புறவே
யெவ்வமிலாவடியார்களினிதாகப்பணிந்ததென. (௭௧)

காலாட்டிமார்பலருங்களமர்களுங்குயமேந்திச்
சேலாட்டுவயல்நிறைந்துசெந்நெல்லின்கதிர்க்கொய்து
மாலாட்டுவளமருதத்தெய்வத்தைவழிபட்டு
வாலாட்டுக்கதிரனைத்துமரியாகவகுத்தனரால் (எஉ)

சும்மையெனவரியனைத்துஞ்சுமந்துகளந்தனிலாக்கச்
செம்மைமலைவங்கமலையெனச்செந்நெற்றனைக்குவித்து
விம்மலுறவொருத்தறனைவைக்கோலில்விடுத்தோட்டிப்
பொம்மலுறவையுதறிபோரடுநெற்றனைக்குவித்து (எங)

பல்விதநெற்றனைத்தூற்றிப்பதடியுறவளந்தாற்றிக்
கல்வியுணர்ந்தோர்ப்பனவர்முதற்களத்திற்செலவுபுரீஇ
வில்விரவுமரசர்க்காறொன்றளித்துமிகுதியெலா
மில்விரவக்கொடுசேர்ப்பரிந்நாட்டின்பரப்பெல்லாம். (எச)

நாவலூர்திருத்துறையூர்நவில்வெண்ணைநல்லூருங்
கோவலூர்த்தினைநகருங்குலவுதிருமாணிகுழி
மேவுதிருமுதுகுன்றம்விளங்குமுண்டீச்சுரமுந்
தாவுதலம்பலகொண்டமருதநிலத்தவஞ்சிறிதோ. (எரு)

## நெய்தல்.

அக்கமாயிரங்கொண்டவண்ணற்புரந்திடுதூய
மிக்கதூய்மருதத்தின்வளஞ்சிறிதுவிரித்தனமேற்
பக்கமுறுகழிநெய்தற்பலவளங்களுளதெனினுந்
தக்கவளஞ்சிலசொல்வாம்மிக்கசொலத்தகாமையினல். (எசா)

## வேறு.

திரையொதுக்கியமுத்தமுங்கவடியுந்தேர்த்துத்
தரையுணக்குவர்நுளைச்சியர்முன்றிலிற்சார
யிரையுணக்கியமீனினைக்கண்டவணிரிந்துக்
கரையனைத்தினும்நிரையொடுநிற்பனகாகம். (எள)

வலைச்சிமாதர்கண்மீனினைப்பறியினின்மலியத்
தலைச்சுமந்துகொண்டேகுவர்க்கழிக்கரைசாா
விலைச்சொலியவர்மீனினையெடுக்கவுங்கண்மீன்
கொலைச்செய்லுறத்தோற்றதையொற்றனகுணிக்கில். எஅ)

கழிக்கரையினும்வேலையினிடத்தினுங்கலந்துப்
பழிச்செயலுறவீசுவர்வலையினைப்பரதர்
வழிச்சிறிதுறுகுடிசையில்வலைச்சியர்நின்று
விழிச்செயல்வலைவீசுவர்விடையவர்ச்சார. (எகூ)

செப்புவெள்ளியங்கிரியெனக்குவித்திடுசெய்ய
வுப்பளப்பர்கட்பரத்தையர்க்களத்தினிலுற்று

வொப்பருங்கொடுமதுவினையுவப்புடன்கொண்டு
சிப்பிமுத்தினையளப்பர்கட்சிலைநுதன்மடவார். (அ௦)

அலையடித்திடுகழியினின்மூழ்கியவரிய
குலையதாயுறுகைதையின்நிலையிவண்குணிக்கின்
மலைமகட்கிறைமுனஞ்சொலுங்கிறிவடுமொற்ற
நிலையுறுசலத்தவம்புரிநிலையினையொற்ற. (அக)

குண்டுறுங்கழிக்கரையுறுகைதையிற்குலவி
வண்டெழுந்துபுன்னைகநன்மலரினில்வதிதன்
மிண்டர்பொய்படவீட்டியமிகுபொருள்வெறுத்து
மண்டறத்தரினேற்றநற்பனவனைமானும் (அஉ)

இடங்களெங்கணுஞ்சலதியின்புனன்மிகவெதிர்ந்துத்
தடமுறவிரிந்தற்றுபினிம்முறைச்சாருந்
திடமுறமிகச்செல்வம்வந்துற்றபின்சிறிது
மடமுறுமிடிவந்ததைமானுமக்கழியே. (அ௩)

நாவினுக்கரசாகியதேவரைநயந்து
தாவிகற்றலைத்தாங்கியபுண்ணியச்சார்பாற்
பூவிலிந்நிலந்தருமெனவருணனும்புகழ்தன்
மேவுமக்கடன்விரிதிரையோதைகண்மிளிரல். (அச)

வருணனும்மிகப்புண்ணியம்புரிந்தனம்வாக்கி
னரசினல்லடியுற்றனமென்றவனடி
முரசடித்தவனெழுந்தெனத்திரைமுனர்த்தோன்றும்
பரசன்மார்க்கரையடைந்தவர்க்கென்பயம்பகரில். (அ௫)

நாதனைந்தெழுத்தோதியேநற்கதியடைந்தச்
சீதமுற்றவிந்நிலத்தினிற்றோன்றியசிறந்தப்
பாதிரிப்புலியூர்முதற்பதிபலபொருந்து
மோதமுற்றவிந்நிலத்தியல்வளமதுவொன்றே. (அ௬)

## பாலை.

இருணமோங்கியகழிக்கரைநெய்தலிலிருந்து
வருணன்காத்துறுநிலத்தியல்வளத்தினைவிரித்தாம்
வருணனிந்நிலம்வருகையில்விரைவினிலகன்று
வெருவியோடுறும்பாலையின்வளத்தினைவிரிப்பாம். (அ௭)

மங்குலில்நடுக்கதிருறுங்காலையின்மறவர்த்
தங்களக்கம்வெங்கொடுமையிலிமைப்பிலசார்ந்த
பொங்குமன்னவர்மீமிசைப்போம்படியுளரே
லங்கவர்சுரரிடத்தவரென்றலுமாகும். (அ௮)

மாலருந்தியகாலையிற்பாலையுண்மன்னி
மேலருங்கரிநிறமுறத்தகித்ததுமெய்யைக்
கோலமுண்டவக்காரணங்கொண்டவன்பெயரைக்
காலநின்றிடுகெரியனென்றுரைப்பர்கட்கற்றோர். (௮௯)

கொடிதுபாலையென்றுரைப்பர்கண்மற்றதைக்குணிக்கிற்
கொடிதுயென்றதையெடுத்திவண்கூறவும்படுமோ
படிதுவைச்சுறுமிடமெலாம்வேம்புகட்பழுத்து
வடிதரும்பலசிவக்குறிகாட்டியவழகால். (௯௦)

## திணைமயக்கம்.

வெற்றிதங்கிய†வுவலைகட்செறிந்திடவிரவுங்
கொற்றியாகியவனைவிருப்புற்றவண்குலவும்
மற்றுபாலையின்றித்திணையென்னிவண்வகுத்தாம்
வுற்றநானிலத்திணைமயக்கமுஞ்சிலவுரைப்பாம். (௯௧)

வரையுறுங்கறிக்கொடியதுமுல்லையில்வளர்ந்து
விரையுறுந்திமில்மீதினிற்படர்வனவிரைந்து
நிரைகளோங்கியமுல்லையினீக்கணநிவகம்
வுரையுறும்பெருப்பொற்பினிலோங்குவவுலவி. (௯௨)

முல்லைதங்கியபொதுவியர்வட்டகைமுகையி
லொல்லையான்கிழான்மாறுவர்க்குறிஞ்சியிலுறைவோர்க்
கல்லையேற்றதைமதுவினைக்கமழ்தரப்பெய்வர்த்
தொல்லையோங்குவபரிவருத்தனையெனுந்தொழிலே. (௯௩)

வனத்திற்றங்கியவண்டுகெண்மருதத்துண்மருவிப்
புனத்திற்றங்கியதாமரைச்சுரும்பொடுபுணர்ந்துக்
கனத்தமுல்லைசாதாரியைக்களிப்பொடுபழக்கும்
மனத்தோர்கல்வியின்வல்லவரெவையினும்வலரே. (௯௪)

நன்மைசால்வளத்திருமுனைப்பாடியிந்நாட்டு
வன்மையுற்றநற்குடிகளும்வயங்கியமரபிற்
றன்மையோடுநல்லொழுக்கஞ்சன்மார்க்கமுந்தயங்கிப்
புன்மையற்றுபன்னாட்களுந்திருவொடுபொலிவ. (௯௫)

புலவர்பற்பலர்ச்செந்தமிழ்த்தொடையினாற்புகழும்
நலஞ்சிறந்தநீர்நாட்டுநெல்வளஞ்சொலிநயத்தாற்
புலஞ்சிறந்தவெண்வேட்கையுந்தணிதரப்புகன்றும்
பலஞ்சிறந்தநல்லதிகைமாநகர்வளம்பகர்வாம். (௯௬)

முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௧௨௩

---

† உவலை ஓட்டகம்.

# திருநகரப்படலம்.

உலகிலெவ்வகைப்பிறவியுந்தகாவெனவொருங்கே
புலவர்க்கூறுவரன்னதுநிற்கவிப்புவியில்
நலஞ்சிறந்தநாவரசினைப்போற்றிடநயந்தப்
பலஞ்சிறந்தவிப்பிறப்பினைப்பன்முறைப்பணிவாம். (க)

அகரமென்பதுநெடுங்கணக்கினைத்தினுமணைந்துப்
பகரநல்லுருவோங்கிடற்போலவிப்பதியும்
நிகரின்றொட்டினின்றதிலோங்கினநிலவும்
நகரின்மேலதுதிருவதிகைத்திருநகரம். (உ)

தலஞ்சிறந்ததுதற்பரன்வாழ்ந்திடத்தயங்கும்
பலஞ்சிறந்ததுபற்பலகுடிகளின்பகுதிக்
குலஞ்சிறந்ததுபல்வளமோங்கிடக்குலவும்
நலஞ்சிறந்ததுதிருவதிகைத்திருநகரம் (ங)

தேம்வணங்கியவின்சொலுஞ்செய்யநற்றுவரன்
பாம்வணைப்பெறுநாயகிக்கடுக்கைகீழமர்ந்துத்
தாம்வணங்கவுமுடையதுதற்பரன்றங்கும்
நாம்வணங்கிடுந்திருவதிகைத்திருநகரம். (ச)

பெருமைமிக்குறப்பல்வளமோங்கிடப்பெருகி
யிருமையின்பமுமளித்திடுமிருளினையறுத்து
வொருமையாகியவீட்டினையுதவுறுமிந்தத்
திருமருவியதிருவதிகைத்திருநகரம். (ரு)

முண்டகத்திருமலருறுமூர்த்தியாமுதலோர்
விண்டகத்தினிற்றுதித்திடவியன்வடிவாகி
வண்டார்நாயகர்முதலியவளப்பிலதேவர்த்
திண்டரப்பெறுந்திருவதிகைத்திருநகரம். (சு)

காட்டவல்லதுபரமனைக்களிப்புறுபோக
மூட்டவல்லதுயுண்மையில்லோர்களையுறுத்தி
வாட்டவல்லதுபரத்துவநிலைவகையுலகில்
நாட்டவல்லதுதிருவதிகைத்திருநகரம். (எ)

வன்மைசெய்திடுவோர்களையில்லதுவருந்தும்
புன்மைசெய்திடுவாரறநிற்பதுபொருந்தும்
துன்மைசெய்திடுவோர்களைத்துடைப்பதுதூய
நன்மைசான்றவத்திருவதிகைத்திருநகரம். (அ)

கறைமுதற்பெறுகண்டனைக்களிப்புடன்வணங்கும்
மறைமுதலுணர்ப்பெரியரையுடையதுமருவு
மிறைமுதன்மறையொழுக்கமும்விளங்குவவினிய
நறையிலாதவத்திருவதிகைத்திருநகரம். (௯)

கற்றமேலவருறைவதுகற்பகநாட்டி
லுற்றமேலவருறைவதுயுறுபுலனைந்துஞ்
செற்றமேலவருறைவதுசெல்வியுமோங்கும்
நற்றவருறைத்திருவதிகைத்திருநகரம். (௰)

அலகிலாச்சுடர்ச்சிகரியின்மீமிசையணுகி
யிலகுவிண்ணுறுமீனினந்தன்னொடுமிலகும்
வுலகிற்சோதிடப்புலவர்களுற்றிதுநோக்கிக்
கலகமுற்றிறும்பூதடைந்திடுவர்கட்கணிப்பார். (௧௧)

திட்டமாகியபஃறலந்தன்னினுஞ்சிறந்த
வட்டவீரட்டந்தன்னிலுஞ்சிறந்ததிவ்வதிகை
மட்டிலாதவிப்பொருட்கொடுமாநகர்தனக்கு
யிட்டனரிதுவதிகமென்றிப்பெயரினிதாய். (௧௨)

மன்னுமிந்திரன்சூழ்ந்திடுமற்றவித்தலத்திற்
றுன்னுநந்தனவனங்களும்பொழிற்களுஞ்சூழும்
பன்னரும்பொழிற்றூயநல்வளங்களும்பல்ல
யன்னதிற்சிலவளங்களையன்புடனறைவாம். (௧௩)

வன்னிகூவிளஞ்செருந்திசெவ்வலரிமந்தாரை
கன்னிகோங்குநற்பாடலங்கமழ்மணமௌவற்
புன்னைபாதிரிப்பூநிறைக்கொன்றையும்புனிதத்
துன்னுநந்தனவனங்களும்பற்பலதுலங்கும். (௧௪)

வயல்கள்வென்றனக்கரும்பையுங்கரும்பதுவளர்த்தப்
புயலரம்பையைவென்றனவரம்பையும்பூத்த
வியற்கமுகதைவென்றனக்கமுகதுவிண்ணி
லுயரவுற்றிடுதாழையைவென்றவணுற்ற. (௧௫)

## வேறு.

சுரும்புகாலூதப்பெருக்கெடுத்தோடுந்தேனினமதனைவாய்மடுத்துப்
பருகியதூயகிள்ளையும்பூவைப்பிழமறையோதவுங்கேட்டு
வருகுறுகொன்றைப்பொன்சொரிதோற்றமருட்கொடைநிலவுதற்கடுப்பப்
பெருகியமந்தமாருதமுலவப்பெருஞ்சினைச்சூழ்தருப்பொதும்பர். (௧௬)

## வேறு.

வண்ணவண்டினக்கீதமும்பூவைவழங்குகீதமும்வானகத்தூடு
வுண்ணுறுதலையரம்பையர்க்கேளாவுருகிமற்றதைநோக்குதலொப்ப

கண்ணகன்றமாபொழிறனிற்றுஞ்சுங்கார்நிறத்தவிண்மேகத்தின்மின்னற்
பெண்ணுறுவதைநோக்குதற்கடெப்பப்பிறங்குகின்றதக்கார்நிறப்பொதும்பர். ()

தேனுலாவியமலர்தனிற்கிரஞ்செழுந்தமிழ்ப்பதிகத்தினைப்பயில.
வானுலாவியதென்றலுமோங்கிவயங்குதோற்றம்வல்லமணர்களரசைத்
தானுலாவியநீற்றரையிடுங்காற்றண்ணளியொடுயோங்கியதன்மைக்
கானுலாவியவேனிலைநீக்கிக்கலங்குறுதரசிருக்கையைக்கவினும். (கஅ)

## வேறு.

மருவுமேன்மைசாலதிகைமாநகர்பெருவளத்துட்
பொருவறச்சிலபொதுமையின்மொழிந்தனம்பொற்பாய்த்
திருவரும்பெருமூவகைநகருளுந்திரண்ட
யிருவளம்பெருபுறநகர்வளஞ்சிலவிசைப்பாம். (கக)

புறநகர் (யானைக்கூட்டம்.)

†தகரெனுமொருவிலங்கினமொருகரந்தன்னுள்
மிகவிளங்கினுமிப்பெயரடைந்திலமிகவும்
நகமுருவுறுநம்மொருகரத்தினைமக்குப்
பகரவத்தியென்றுற்றனமெனும்பலகரிமா. (உ0)

நல்லரோர்கருமந்தனைத்தொடங்குமுன்நயந்து
வல்லநம்முகவிறைமநுவறிதலில்வாய்ந்தச்
சொல்லுநம்மவர்ப்பெயரினும்போதகமெனுஞ்சொற்
புல்லவந்ததென்றுரைப்பபோன்முழங்குவபுழைக்கை. (உக)

மன்னுநங்குலத்தொருகரிகாளத்திமருவித்
துன்னுநாதரைப்பூசனையாற்றிபின்றுயப்
பன்னுவீட்டினையுற்றனநாமுமப்படியே
முன்னுவாமெனப்புகல்வபோன்முழங்குவமுனிமா. (உஉ)

## வேறு.

செவ்வியகண்ணும்வன்னிமூட்டிடச்சிவிறிகொண்டு
சவ்வியவிடமுஞ்சாடுதலையொற்றுத்தனதுகாதால்
வவ்வியசினத்திற்பொங்கிவண்டமுமதிர்ச்சிகொள்ளத்
தெவ்வரைவீழ்த்தும்யானைத்திரட்களுமெண்ணிலாத. (உங)

ஒருகையின்வலிமைநோக்குவோமெனவுலகஞ்சொல்லும்
பெருமொழிநடக்கேவாய்த்தபெற்றிமையுடையோமென்று

† தகர்-யாளி.

வருகையின்றிண்மைவீசிக்காட்டுதற்போலவாரி
மருவுறுதுதிக்கைவீசிமுழங்குவமதமால்யானை. (உச)

## குதிரைப்பந்தி.

ஆழியிலுறைவோன்குந்தமென்னும்நம்முருவமாகி
வாழியவோங்கலாலேமைகுந்தனென்னும்பேரைத்
தாழிலாதடைந்தானென்றுதம்முளேவியந்துகொண்டு
பாழியஃதுரைத்தற்போலமுழங்குவபரிகளாங்கே. (உரு)

பத்திரியென்னுப்பேரைப்படைத்தனம்பறவையேபோ
லொத்துஜசிறகரில்லாதொழியினுமோடலாலே
வத்தகவிரைவுகாற்போலிருத்தலிலரியென்றோர்பேர்ச்
சுத்தமாய்ப்பெற்றுமென்றுசொல்வபோன்முழங்குந்துரக. (உசு)

செழியநற்பரிகள்வேட்டுத்திருவாதவூரர்தம்மை
யெழிலுறக்கொணர்கவென்றுயேவினகாலைநாத
ஞெழிதரநகரம்மாற்றியவ்விடம்பகரமோங்க
வழிவரக்கொணர்ந்தஞான்றுமருள்வபோன்மருளும்வாசி. (உஎ)

எழுவரும்பரிகட்கூடியிரதமொன்றனையீர்த்தேகும்
வழுவகையஃதுயேழமைதரல்வழுவேயன்றே
பழுதிதுவென்னற்போலபரிகடந்தத்தைக்காட்டி
முழுவதும்நகைத்தற்போலமுடுகுநற்றுரகம்பல்ல. (உஅ)

நான்மறைமுற்றும்நான்குநம்மினமாகப்போந்துத்
தான்மறைப்பொருளாய்நின்றதற்பரன்றனதுதூய
கான்மறந்திட்டமூவர்மேற்கணைசெலுத்திவெல்ல
வான்மலித்துணைவர்நாமென்றுரைப்பபோன்முழங்கும்வாசி. (உகூ)

## தேர்நிலை.

கூம்பினிற்றொடுத்ததாயவட்டிகைக்குலவுந்தூயக்
காம்பினிற்கால்வந்தெய்தக்கற்பகநாட்டிற்பொங்கி
வீம்புநம்முலகம்போந்தவாற்றலில்விமானமென்னும்
நாம்புகழ்ப்பெயருற்றுமென்றுறைப்பபோன்முழங்கும்நற்றேர். (௩0)

சக்கரமூருமோதைத்தகுதியினெழுந்தவோதை
மிக்கநாற்பக்கம்நாலும்மணியினுன்மிகுந்தவோதை
தக்கநற்சிலைகாற்றுற்றுழ்ந்தெழுமிகுந்தவோதை
வக்கடலொலியினூர்க்குந்தேர்களும்பல்லவாங்கே. (௩க)

இவ்வுலகதனையோர்காலீசனுமூர்ந்துசெல்லச்
செவ்விநம்முருவமாகச்செய்தனர்த்தேவரன்று

வவ்வியற்றேரினின்றுவரக்கரையெரித்தாரன்றோ
திவ்வியபுகழைக்கூறுதலையொற்றுமுழங்குந்தேர்கள். (௫௨)

நால்வகையங்கத்துள்ளுநம்மவர்முதலேயாகி
மேல்வகைப்பெற்றுமென்னும்மெய்ப்புகழ்விருதுவாயக்
கால்வகைமணிகளார்த்துக்கன்மலையென்னவோங்கி
மால்வகைத்தேர்களோங்குநிலைகளுமருவுமாங்கே. (௫௩)

## வீரரிருக்கை.

கடலுலகதனைவென்றுபயமறக்களித்தலாலே
வடறருவீரர்நம்போபயனென்றிடப்பெற்றுமென்
றுடன்முனம்வடுச்கண்மேன்மேலுற்றுபின்வடுக்களோங்கா
திடமுறுவீரரார்க்குமுழக்கமுந்திகழுமாங்கே. (௫௪)

கதையுறுவீமன்போன்றகற்புயமள்ளர்தங்கள்
வதையுறுபோர்க்குவெய்யகருவியைவழக்கம்போல
சுதையுறுநீறுபூசிச்சுடர்க்கதையெடுக்குந்தோறும்
புதையரியதிகைமேவும்புலவனைத்துதிப்பரன்றே. (௫௫)

வெற்றியிற்பாண்டுமைந்தர்மேலவனுயினின்று
சுற்றியகான்றுவாதசாண்டுறவிருத்தலென்சொன்
மற்றிரளுடைநாமேல்வாரணப்புரியையன்றே
பெற்றரசாள்வமென்றுபேசிடும்வீரர்பல்ல. (௫௬)

கற்றிரண்டனையகையிற்கப்பணவில்லுங்கொண்டுப்
பற்றலரிலரேயென்றுபன்முறைவருந்திநிற்பார்
விற்றனையெடுக்கிற்சோரார்மேல்வருங்கணையும்பாரார்
வுற்றநற்கனவிலேனுமுதுகுறவோடலுன்ஞர். (௫௭)

இன்னபன்மறவர்வாழுமிருக்கையும்யானையாதித்
துன்னுநல்லிருக்கையோடுந்துரகமுமிரதமாதிப்
பன்னரும்வளங்களோங்குயதிகையிற்பரந்துநிற்கும்
மன்னருமிடத்தின்மேன்மைவழங்கவுமுடியுங்கொல்லோ. (௫௮)

## இடைநகர்.

அம்பொனூர்சிகரிமேவுமதிகைமாநகரந்தன்னிற்
பம்புசீர்நகரிமாயபுறநகர்வளம்பகர்ந்தாம்
வம்பிடைநகரமேன்மைவழங்குவஞ்சிறிதுநம்மா
லிம்பரினதன்பன்மேன்மையியம்பிடத்தகாமையாலே. (௫௯)

அல்லெனுங்கூந்தலார்த்துவணங்கெரிருமாடனிற்றல்
நல்லகொண்மூவின்மாடுநவின்றிடுமின்னற்போலும்

வல்லெனுங்கொங்கையோடுவனிதையருலவுந்தோற்றம்
வில்லருஞ்செய்பொற்பாவையுலாவல்போன்விளங்குமாடம். (௪௦)

ஏந்தியகொங்கைமாதரெழின்முகந்தன்னோடுற்றுக்
காந்திகொண்மதிநிற்குங்காற்கடுவெயிறுடையகோளாம்
பாந்தளுமையமாகிப்பருகிடக்களங்கம்பார்த்து
நீந்துறுமிஃதேதாமத்தொழில்நிகழ்வதாங்கே. (௪௧)

மதங்கியேழ்மாடமோங்குவானரமகளிர்நோக்கி
யிதமுறுமிவர்க்குநம்மோரரமகளென்னவேண்டுஞ்
சதங்கருமஞ்செய்தன்றோநம்மிறையிங்கண்சார்ந்தான்
வதமுறவின்னோர்வேட்டோனளவறுதவத்தனென்பார். (௪௨)

ஏழ்நிலைமாடமோங்குமெழினகையன்னமென்னத்
தாழ்விலாதுலாவனோக்கிச்சதமகன்வெருட்சிகொண்டு
வாழ்விலாதுருகியோரோரிடத்தினும்வதியானனு
னூழிதுநோக்கிடில்லமராவதியானென்றுற்றான். (௪௩)

விரியருமாடமீதுநிலவெயின்மீதுதோன்றப்
பரியங்கமீதுமைந்தர்மாதருமுறங்கப்பார்த்து
வரியநற்புகர்வியப்பாலசைந்திடற்பனித்தன்மானு
முரியநற்களத்திரத்தின்காரகனோர்ந்திடானே. (௪௪)

உயர்நிலைமாடமீதுமைந்தர்மாதருமுறங்க
வயர்வுறுவக்கமீனமவ்வுழியரசன்போல
வியனுறவிருத்தனோக்கிவிண்ணுறுமரசன்பொங்கிச்
சயமுறு†வில்லிலேனுஞ்சார்வமென்றோடற்போலும். (௪௫)

மதிகவின்முகத்தைநோக்கிமதியெனவிந்துகாந்த
மதிகநற்புனற்பெருக்கவவிழ்குழலோடுவாடும்
நிதிகலனவிழவன்னோர்க்கொழுகநரும்நீரிலாடும்
பதிகண்ணனென்னவங்குப்பயிலுவமாடவீதி. (௪௬)

ஆர்த்தநன்முழவினாலுமார்த்தநல்யாழினாலு
மார்த்தநற்றாளத்தாலுமார்த்தநற்சதியினாலு
மார்த்தநூபுரத்தினாலுமார்த்தநல்லிசையினாலு
மார்த்தெழுகடற்குமேலாயார்த்தனநடனச்சாலை. (௪௭)

வனிந்தயோர்கரத்திற்கற்பகக்கனிவாங்கியீது
யினிதலச்சுவையிரண்டாந்தரமெனவியம்பிவாழைக்
கனிதனையுதவியீதுமுதற்றரக்கனியென்றோதும்
மனிதர்விண்ணேகுந்தூயசோபானமருவுமாடம். (௪௮)

---

† வில்-தனுசு.

சோமன்வந்துலவானின்றத்தூயமாடங்களெங்கும்
பூழுனாதரமன்னூர்த்துயிற்கொளும்புதுமைநோக்கித்
தீமனக்கிலேசமாகித்திகைத்தெனப்பனிப்பத்திண்சேய்க்
காமனுமிரதியுமென்னக்கலந்துறவிளங்குமாடம். (௪௯)

உலகிற்பெண்ணுசையொன்றேயுயர்வெனப்புகழ்க்துநின்று
யிலகுறுமைந்தரெல்லாமிம்மாடமகலாராகி
வலகுறாச்சேர்க்கையோடுவவரவர்விருப்பின்வைகுங்
கலகமற்றினையவீதியதிகையிற்கலந்துமல்கும். (௫0)

காவணமுற்றும்வீக்கிக்கனலவன்றெரியாவண்ணந்
தூவணவரம்பைப்பூகங்காலினில்யாத்துத்தூக்கி
மாவணப்புனற்கொழித்துமகரிகையுயரத்தூங்கு
மாவணமிடமொன்றிற்குவளகையும்கிராங்கொல்லோ. (௫௧)

காடகமெதிரவீக்கிக்கனத்தபொற்சரிகையாதித்
தோடகக்கையாற்காட்டும்வாணிபத்தொழிலாலோங்கும்
வாடகக்குவியன்மற்றுமரதனக்குவியலோங்குங்
கோடகநகரையோர்பொன்னகரெனக்கோடலாகும். (௫௨)

முடக்கிடுசரக்குமுப்பானிரண்டொடுமுதன்மையான
வடக்கமிலாடுந்தூயசரக்கறுபத்துநான்கு
மடுக்குமிச்சரக்குதேரும்வாணிபக்கடையைநோக்கின்
றடுக்குமுட்கருவிநூல்விசாரணைப்புரிதற்போலும். (௫௩)

## உண்ணகர் (அகழி.)

மலிதருமைந்தர்மாதர்விழவருமாடவீதிப்
பொலிதருவனப்புவாய்ந்தவிடைநகர்வளம்புகன்றும்
மெலிதலிற்சிறப்புவாய்ந்துமேன்மைதங்கியசீர்சான்ற
வலிதருவனப்புவாய்ந்தயுண்ணகர்வளமுஞ்சொல்வாம். (௫௪)

## வேறு.

நித்திலங்களுஞ்சங்கினம்வாளையுந்நீண்ட
தத்திடங்கருஞ்சேர்ந்துறுபாம்புரிதயங்கற்
சத்தமோடுறுமருணவஞ்சார்ந்ததிங்கென்ன
வித்தகத்திருவகழியுமின்னனம்விளங்கும். (௫௫)

இஞ்சினின்றுவளைந்தெழுதாழையினேரும்
விஞ்சுசான்றரின்வடிவமங்கீரிடைவிளங்க
வஞ்சுராக்கரைதூங்கியவிடநுகருமகன்று
மஞ்சுறுத்தியேபாய்தலும்நாணினுன்மருண்ட. (௫௬)

சுண்ணவெண்பொடிபூசியமதிற்சுதைசாயை
வண்ணநற்கயம்நீரிடைத்தோன்றவுமகிழ்ந்து
யெண்ணியோதிமம்பாலெனயுறிஞ்சவுமிலதாய்
நண்ணிநீர்வரநாணியக்கரையினில்நடந்த. (௫௭)

நீண்டுறுகிடங்கின்கரைமண்டுகம்நெருங்கித்
தாண்டியோடவும்பழுதையங்கெய்தவத்தருணஞ்
சேண்டுலங்கியவுவணமுஞ்சேர்ந்ததைத்தூக்கி
மீண்டுவேகுறுமகழியுமின்னனம்விளங்கும். (௫௮)

## மதில்.

பதணமுச்சியின்மீமிசைத்தத்தைகட்பரவி
யிதமதாய்த்தொடர்ந்துறுவதுநோக்கிடலிஞ்சிக்
குதவுதோரணம்பிணித்தலையொற்றுறுமினிய
மதகுதங்கியமதிற்களுமின்னனமல்கும். (௫௯)

இஞ்சியுங்கயமிரண்டுமோர்முரண்கொடுவிலகி
மஞ்சுதோயகல்வான்முகடோங்கியமதிலும்
விஞ்சுகேணியுமிரங்கியேபாதலம்வீழ்ந்துத்
தஞ்சமோடவணிலகியதன்மையதாக. (௬௦)

எயின்முகட்டினிலிலகியவோவியமுச்சிப்
பயின்மதியுறுதோற்றமப்பாவைகட்டமக்கு
யியன்மதிக்கவிகையெனப்பாவைகளினியக்
கயமதன்புடைமதிற்களுங்கனத்தவணுற்ற. (௬௧)

அம்பரந்தனிலோங்கியமதிலருஞ்சுருங்கைப்
பம்புதீங்கதிர்மதிதினம்நுழைதலிற்பரந்த
வெம்பலோடுடற்றேய்தலின்மதிமிகவிம்மி
நம்பன்மீதுறுகுறையுடனன்றெனநடந்த. (௬௨)

## பரத்தையர்வீதி.

வதனஞ்சோடசக்கலைநிறைமதியெனவயங்குஞ்
சதனமுற்றிடுபரத்தையர்வாயிலிற்றங்கிக்
கதனமுற்றவைங்கணையுறுகருப்புவில்லேந்து
மதனன்மாநகர்நிகர்த்தனபரத்தையர்மறுகு. (௬௩)

கயன்மருட்டியவிழியினர்க்காளையர்மனத்தை
வியனுறக்கொடுமருட்டிதன்விழிவலைவீசி
மயலினாற்பொருட்பறித்துபின்பயனுறுமாண்பாற்
பயனிலாரெனும்பெயரினைப்பரத்தையர்படைத்தார். (௬௪)

அன்னமன்னவர்மனைவயிஞேவியமனைத்தும்
பன்னுமாரவேளாகமலீலையின்பரப்புத்
துன்னுமப்பதனைத்தினைத்துணைவர்கணேக்கி
முன்னிகாமுறுவார்வர்த்தொழிற்கிதுமுறையே. (சுரு)

விற்குறியெனும்விழியவர்விடையவர்ப்புரிந்த
பற்குறியொடுநகக்குறிப்பார்த்தவர்ச்சினந்து
நற்குறிபுனைந்தனையெனநாண்கொடுநோக்குஞ்
சொற்குறிப்பறிந்திடுவதுங்கணிகையர்த்தொழிலே. (சுசு)

ஆகமீதினிலரிசனம்பொன்னெனவணிந்து
மாகநாட்டினிலுருத்திரகணிகையின்வடிவ
மேகநாட்டியவுருத்திரமேனியரினியப்
போகநாட்டுருப்பொன்னிறக்கணிகையைப்போன்ருர். (சுஎ)

இறையினுற்கடைக்கணித்தநல்லன்பர்களினிய
துறையினின்மலன்றுணையடிப்பொருந்துவர்க்குளந்தூய்
பிறையினுர்க்கடைக்கணித்திடப்பெற்றவர்ப்பித்தாய்த்
துறையிலாதவரடியினிற்கிடப்பர்கட்சுருண்டு. (சுஅ)

## வேளாளர் வீதி.

சீரெழுபதுமத்தனைக்குட்டியசிறிய
நீரெழுபதும்மத்தனையுற்றவேணிகர்த்து
யாரெழுபதுபெயரொருவுயிர்க்குயிரளித்தா
ரேரெழுபதிலிவர்புகழ்முற்றிலுமிலங்கும். (சுகூ)

விண்ணைக்காப்பவைந்தருமுதற்றேனுவும்விரும்புங்
கண்ணைக்காப்பநல்விமையினையமைத்தெனக்கலங்கும்
பண்ணைக்காப்பநல்பல்பயிர்க்காப்பவும்பகரும்
மண்ணைக்காப்பவேளாளரையமைதனர்வள்ளல். (எ0)

மன்னுந்தூயகங்காகுலத்தாரெனமருவுந்
துன்னுமின்னவர்ப்பசிபெறுதுன்புளாழ்வாரைப்
டன்னுமாமுகமன்சொலிவோதனம்படைத்து
முன்னுவார்ப்பசிநீக்கல்வேளான்றெழின்முறையே. (எக)

இரக்கமென்பதுதோன்றியவிடமிவர்பாலே
யிரக்கமாயவேளாளரின்புனிதமுமினிய
யிரக்கமென்பதைக்கொள்வர்களெவ்வமயத்து
மிரக்கமற்றவரிமையவராயினுமிழிஞர். (எஉ)

பழுதிலாதுறுபண்ணையின்வளந்தனைப்பகட்டா
லுழுதுறப்பெறுந்தவத்தரின்றெருவளமுரைத்தா

முழுதும்நீற்றினைமெய்முழுதணிந்துமுன்மருவுந்
தொழுதுறும்பெருவணிகரின்றெருவளஞ்சொல்வாம். (௭௩)

## வைசியர் வீதி.

எப்பொருட்களைவேண்டியார்க்கேட்கினுமினிதா
யப்பொருட்களையில்லையென்றுதவரளிப்பார்ச்
செப்புவெங்கிறிகனவினும்புகலொணாச்செல்வ
ரொப்பரும்பெறுவணிகரின்வீதியுமோங்கும். (௭௪)

பெருமைமிக்குறும்பொருளினைப்பேணியொவ்வொன்று
யொருமையாகவீட்டுதற்குநல்லொப்பரும்வணிக
ரருமையாகுமிப்புண்ணியரொருவரேயமைந்தா
ரிருமையின்பமுமிப்பொருளளித்திடினெளிதோ. (௭௫)

நகமதென்னநற்பொருளினைப்படைப்பினும்நயந்து
வகமகன்றிவரடக்கமும்வாய்மையுமணைந்து
யிகமுறுவிவர்வடதிசையோனெனவினியத்
திகழுமாயிரங்கோத்திரத்தோடவர்ச்செறிவார். (௭௬)

அளவிலாப்பொருட்படைப்பினுமளகையம்பதியோ
னளவிலாதிரப்போன்றனக்குதவுறுனதிகை
யளவிலாதநல்வணிகர்களறத்தினீந்திடுவா
ரளவிலாதிரப்போரிலாக்குறையிவணடையும். (௭௭)

இன்னவைசியரதிகையம்பதியினிலிருந்து
மன்னுநாதனைப்பத்தியின்வணங்கிடுமொண்பான்
முன்னமின்னவர்ப்பெயரினிற்றேசிகன்முதலாஞ்
சொன்னநற்பெயரடைந்தனர்வீதியுந்துலங்கும். (௭௮)

## அரசர்வீதி.

சென்னிமன்னர்கட்சிறந்துளமாடமாளிகையும்
மன்னியுற்றிடுகத்திகைமீச்செலமருவுந்
துன்னுபாம்பெனக்கதிர்வெரீஇதுன்புறும்பெரிய
யிஞ்சிலத்துறுவரசரின்வீதியுமிலகும். (௭௯)

மதத்தவெங்களிறோடவும்பாகர்கண்மன்னி
வதட்டிபின்செலநாகமுமாவணமகன்று
சிதட்டுடன்செலுமத்தியைச்செய்மலைதன்னிற்
பதத்தொடர்க்கலின்கொண்டதைப்பிடித்தனர்ப்பாகர். (௮0)

தேருறுசிறுவரசர்களூர்ந்துமேசெல்லக்
காருறுகுழற்கன்னியர்மயங்கியேகளித்து
வாருறுதனம்விம்மவும்வீதியில்வருந்திச்
சீருறுசிறுதேருளததிகையந்தெருவில். (௮௧)

நடையறாத்திருமன்னரின்வீதியினலிக்து
வுடைந்துவேகவுமரசரைத்தாங்கிடவூரும்
நடையழகுறும்புரவியின்காற்றுகணுகி
வுடைதவிர்கற்பகத்தருபுழுதியிலாழ்ந்த. (அ௨)

## மறையவர்வீதி.

மற்றிரட்புயங்கொண்டுகைவலியவில்லேந்தும்
வெற்றிதங்கியமன்னரின்வீதியைவியந்தாஞ்
சொற்றவாகமமறைமுதற்றுகளறவறிந்துக்
கற்றநன்மறையவருறைவீதியுங்கரைவாம். (அ௩)

தக்கணாக்கினி†மூன்றையும்விதிமுறைதயங்கப்
பக்கமேலுறுவோமகுண்டங்களிற்படிந்தத்
தக்கதூய்புகைவிண்ணின்மேற்படுவதுதழைத்து
யெக்கலிட்டகார்காலமதென்னவுமிலகும். (அ௪)

பங்கயப்பொகுட்டுறைபவன்பங்கயக்கண்ணன்
றங்குமின்னவர்நாணுறவணிமறைதன்னைப்
பொங்குகற்றசீர்மறையவர்வீதியிற்பொலிவ
ரெங்குமில்லெனுமருள்வடிவத்தொடுமிலகி. அ௫)

மறைபயிற்சிறுமைந்தர்கட்பண்முறைமாழ்கி
வறைந்துபள்ளியிலுற்றிடவாசிரியவருங்
குறையிற்பீடத்திலுறுவதுநோக்கிடிற்கும்ப
மறையவனுறமாணவர்த்தங்களைமாணும். அ௬)

காலைநித்தியக்கடனதைமுடித்துபின்களித்து
சீலமார்தருநந்தனவனத்தினுட்சென்றுக்
கோலமுல்லையுங்கூவிளங்கோங்கதுமுதலா
யேலவேயெடுப்பவருமிவ்வீதியிலேகும். (அ௭)

## ஆதிசைவர் வீதி.

சைவமுட்படுசைவமும்பற்பலசயங்குக்
† தெய்வதீக்கையுஞ்சிவதருமணிமுதற்செப்புஞ்

---

†எரி. மூன்றில் ஆகவனீயம். நாற்சதுரமாய் வடக்கின்கண் வைக்கப்பட்டு தேவர்கட்கவிகொடுத்தற்குரியது. காருகபத்தியம் முச்சதுரமாய் அக்கினி யுண்டாக்குவதற்காக அதன் தெற்கில்வைக்கப்படுவது. தக்கணாக்கினி அதன்தெற்கில் பிதிரர்களுக்குப்பலி ஓமமம் முதலிய கன்மங்கள் செய்தற்குரியதாய் அமைப்பது காருகபத்தியமென்னுமக்கினியே யேனைய விரண்டக்கினிக்கும் காரணமாய் நடுவில் வைக்கப்படும். இவை-சிரௌதாக்கினிகள்.

†உலோகதர்மணி-சிவதர்மணி யெனத் தீக்கையிரண்டு, இவையிரண்டும் சபீசதீக்கையின்பிரிவு. உலோகதர்மணி யோககாமிகளுக்குச் செய்யப்படுவது,

சைவநன்மறையோதவும்பூசனைதயங்கக்
கைவந்துற்றநன்மறையவர்வீதியிற்களிப்பார். (அஅ)

## வைதிகசந்நிகாசிசண்மடம்.

அந்திவண்ணனற்சிவபெருமானருட்டே
மந்திரங்களைக்காரணமுறையொடுமருவி
யந்திசந்தியுஞ்செபதபஞ்செய்மறையடியார்
புந்திவைத்திட்விளங்குவவதிகையம்புரியே. (அகூ)

## வேதாந்திகண்மடம்.

காண்டற்சத்தமபாவமுமுவமையுங்கருதல்
வேண்டுநல்லனுமானமைநீகமும்விரும்புந்
தூண்டுசம்பவமாதியவளவினைத்தூக்கி
மாண்டருக்கவேதாந்திவாழ்மடங்களும்பலவால். (கூ0)

## + வீரசைவர்கண்மடம்.

பூசைசெய்திடுவீரசைவத்தர்கட்டொலிந்து
வாசையாமிட்டலிங்கமதளவொடுமணிந்து
மாசிலாதுறுவாகமமாரணமண்ணில்
வீசுநற்புகழ்வீரசைவக்கணம்விளங்கும். (கூக)

## கல்விச்சாலை.

விதியிலக்கியவிலக்கணச்சூத்திரம்விளம்பிப்
பதியகத்தியமகப்பொருண்முதலியபயின்று
வதியும்யாப்பியன்முதலியவகைநலமோர்ந்து
மதிவலாருறைக்கழகமும்பற்பலமன்னும். (கூஉ)

## சத்திரங்களுந் தண்ணீர்ப்பந்தரும்.

கனியும்பாற்சுவையோதனம்பருப்பொடுகலந்து
யினியதாயுதவுறுபெருசத்திரமெங்கும்
நனிகுசத்தினின்மோரளாவியநலஞ்சிறந்தப்
பனியவாக்குநீர்ப்பந்தருமோங்குவபல்ல. (கூஙு)

## விட்டுணுகோயில்.

காலினுலொருகன்னியையெழுப்பிதன்கையின்
வேலினுலொருகன்னியைக்கொன்றநல்வீரன்
சாலினேடுதண்டுளவினைத்தயங்கிடவணிந்த
மாலினெண்டிருவோடுறுமந்திரம்பல்ல. (கூச)

---

சிவதர்மணி முத்திகாமிசட்குச்செய்யப்படுவது. இவை முறையே அபர முத்தியையும் பரமுத்தியையும்பயக்கும் இவற்றின்விரிவை ஆகமங்களாற்றெளிக.

## வடகேக்கடவுண் முதலியோர்கட்கோயில்.

விதிசிரந்தனைக்கொய்தநல்வீரனும்வடகேன்
வதியுமுப்படைச்சூலியும்விநாயகவள்ளற்
றதியுறுகுமரன்பெருசாத்தனுந்துலங்கும்
பதியின்ஞோர்கள்வாழ்க்கோயிலும்விளங்குவபல்ல. (கசு)

## திலதவதியம்மையார்த் திருமடம்.

தும்பிதீவிடங் கடற்பெருநீற்றரைச்சூலை
வெம்புயின்னவுற்பாதமுமகன்றிடவியனூர்த்
தம்பிதன்றனக்கருட்செயுமம்மையார்த்தயங்கு
மும்பராதிபாவணங்குந்நற்றிருமடமோங்கும். (கரு)

## திருநாவுக்கரசுசுவாமிகட் டிருமடம்.

மறைவனத்திற்கவாடமுந்திறந்துபின்மதலை
யறவனோடுநல்வீழியிற்காசினையடைந்துத்
துறவறத்தநல்லாச்சிரமத்தினிற்றுலங்கு
மிறைவனுயசொல்லரசினற்றிருமடமியங்கும். (கஎ)

## திருக்கோயில்.

அதிகைமாநகரேனுமொருமதாணியினழுத்திப்
பதியவங்கதினடுச்சிரோரத்தினம்பதித்து
விதியின்வைத்தெனவிண்முகடுறிஞ்சியவிமலன்
குதிகொளுமருள்விளங்கியவரதனக்கோயில். (கஅ)

## கோபுரமுமண்டபமும்.

†வானமுட்டியவரையெனவிளங்கியபெரிய
ஏானகோபுரந்தன்றனைநோக்கியதகவா
லானவிப்பெருங்கோபுரமலைப்பெயரடைந்த
வூனமற்றநன்மண்டபமோங்குவவுயர்ந்து. (கக)

## + திருமதில்.

ஓங்குமும்மதிலழித்தநல்வள்ளலையுற்றுத்
தாங்கிகட்படைந்திடுவமென்றுரைப்பபோற்றங்கும்
வாங்குநந்தியம்பொருப்பெனவிடைக்குலம்வயங்கும்
பாங்குறப்பெருமதிற்களுமோங்கியபருத்து. (க00)

---

†இக்கோபுரங்கட்டிய வரசன்பெயர் கிடைக்கவில்லை. ஆனால் கோபுர உட்புரகம் தெக்ஷணபாகத்தில் அரசன்றிருவுருவமாத்திர மமைக்கப்பட்டிருக்கிறது. செங்கட்சோழனெனவழங்கிவருகிறது. கோபுரத்தையடுத்த மண்டபம் பண்ணுருட்டி ப வெ-பரசுராமசெட்டியாரால் கட்டிமுடிந்தது.

### பதினறுகான் மண்டபம்.

‡மேயநற்றிருவதிகையின்வீற்றிருந்தருளுந்
தாயவன்விடையோடிதன்கீழ்நின்றுதங்கும்
வாயரும்பதினறுகான்மண்டபம்வளத்தத்
தூயதீஞ்சுவைநீர்நிறைத்தடமுனாத்தோன்றும். (௧0௧)

### நூற்றுக்கான் மண்டபம்.

*உம்பராதியர்முதலெனவுண்மையிற்றேரு
மெம்பிராற்கபிடேகமாதியநலமியற்றித்
தம்பிரானடனஞ்செயுந்தானமாய்த்தயங்கு
மிம்பர்நூற்றுதூண்டாங்கியவினியமண்டபமே. (௧0௨)

### சபை.

அளவுதாங்கியவண்ணல்வாழாமன்வர்க்கத்தின்
விளவுதாங்கியவிண்டுவும்பிரமனும்விரும்பும்
வளவுதாங்கியகொடுங்கையாற்சூழ்ந்ததுவருஞ்சீர்க்
களவுறுங்கனகச்சபைவீசுவகதிரை. (௧0௩)

### கொன்றை விருட்சம்.

அம்மையாகியவுமையவணிறமொருவமயஞ்
செம்மையாகியவண்ணலினிறஞ்சிலசமயம்
வெம்மையற்றுக்கால்வீசியேவிரைமலர்த்தூவுந்
தம்மையோடுயெந்தந்தையைநிகர்த்தவத்தாமம். (௧0௪)

### +(மணி.)

உயங்குநற்சபாமண்டபமீமிசையுற்று
யியங்குமோர்மணியெந்தையின்புகழெலாமினிய
வயங்குமாமறைப்பொருளெலாமிதன்வயின்மன்னித்
தயங்குமென்றவணசைந்துறும்பிரணவச்சார்பாய். (௧0௫)

---

‡பதினறுகான்மண்டபம் இலிங்காரெட்டிப்பாளையம் இரத்தின செட்டியாரால் ஆரம்பிக்கப்பட்டு அவர்சந்ததியாராகிய குப்புசாமிசெட்டியார் முத்துசாமிசெட்டியாரால் முடிவுற்றது.

*நூற்றுக்கான்மண்டபம் சிவஞானசுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்டு இரத்தினசெட்டியாரால் முடிந்தது.

+இம்மணி யிந்நூலாசிரியர் பிதாவாகிய மணிஐயராற் செயதமைததது. இவர் யித்தலத்தின் முதலிற்றிருப்பணிமுதலிய சிவகைங்கரியஞ் செய்தாருளொருவர். இதனல் இவர்க்குச் சாதாரணச் சிறப்புப்பெயர் ஆகிய குழந்தைவேல் என்பதுமாறி மணிஐயரென்னும் அசாதாரணச் சிறப்புப்பெயர் வந்தது. ௧00-வது செய்யுளில் குறிப்பிக்கப்பட்ட திருமதிலில் தெண்பாரிசமுற்று மிவ

## அறுபத்துமூவர் மண்டபம்.

+ உலகெலாமெனுமொழிகொடுமொக்கதையுரைத்த
யிலகுசேக்கிழார்முதலியயடியவரிழையார்த்
திலகமொற்றநல்லம்மையாரொருபுறஞ்சேர்ந்த
நலகனத்தமாமண்டபமோங்குவநாப்பண். (௧௦௬)

## கற்பக்கிரகம்முதலியன.

தொழில்வலாரிறும்பூதடைந்திடப்பெருந்தூபி
யெழின்மிகுந்திடுமந்தராளங்களுமினிய
வழிவருமர்த்தமண்டபமுதலியவமைந்தப்
பொழில்வளைந்துறச்சிறப்புறவோங்குவபொற்பாய். (௧௦௭)

பூதலத்தர்கள்வணங்கிடுமோதையும்புவியின்
பாதலத்தர்கள்வணங்கிடுமோதையும்பரவு
மீதலத்தர்கள்வணங்கிடுமோதையுமேவி
மாதலந்தனைக்கடலெனவாக்கியமன்னி. (௧௦௮)

அலர்தொடுப்பவுமரியசந்தனமரைத்திடவும்
பலர்திருவலகாதியபணிசெயப்பரப்பார்
மலரெடுப்பவுந்திருவிளக்கேற்றவுமருவுஞ்
சிலர்நுழைதலில்நெருங்கியச்சந்நிதிதிகழும். (௧௦௯)

பார்விளங்கிடுபசுக்களைக்காத்திடுபரமன்
சீர்விளங்கியசெம்பொனாற்செய்திடுகோயிற்
கார்விளங்கியகுழலுறுகன்னிகையோடு
மேர்விளங்கதிகைத்தலந்தனிலினிதமரும். (௧௧௦)

நன்னர்வாழ்திருவதிகைமாநகர்வளந்தன்னை
யென்னளவினிலிசைத்திடமுற்றுமோவியலா
மன்னுந்தூயநற்றவஞ்செய்துமாதவர்மருவும்
பன்னுநைமிசவனவளஞ்சிலதிவண்பகர்வாம். (௧௧௧)

திருநகரப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௨௯௬.

---

ரால்கட்டப்பட்டு பின் ஏனையவற்றை சுப்பிரமணிய சுவாமிகள் சிவஞானசுவாமிகள் முடித்தனர். இன்னும்இவர் ஆதியில் இத்தலத்தில் பலதிருப்பணிசெய்தனர். அவற்றையெல்லாம்மீண்டுவிரிக்கிற்பெருகும். ௯௧ - வது செய்யுளில் குறிப்பிடப்பட்ட வீரசைவர்மடமும், இம்மணிஐயரே இங்குஸ்தாபித்தனர். அது விரைவில் முடிவுபெறும்.

† ௧௦௬-வது செய்யுளிற்கூறிய சேக்கிழார்த்திருவுருவம் செய்யப்பட்டிருக்கிறது. இத்திருவுருவம் இத்தலத்தில்மாத்திரந்தானிருக்கிறது ஏனைய தலங்களில் இந்நாயனார் உருவமில்லை.

# நைமிசவனப் படலம்.

## வேறு.

மருளார்ந்தபுறச்சமயக்குறும்பகற்றிச்சைவமெனவழங்காநிற்கும்
பொருளார்ந்தவரசோங்கயிப்புவியில்வேதமெனப்புகழச்செய்தோ
னிருளார்ந்தபொழிலதிகைவீரட்டநாதனடியிறைஞ்சிமூழ்கு
மருளார்ந்தநாவரசினடித்துணையான்மும்மலமுமகற்றுவோமே. (௧)

## வேறு.

மதியினின்றிடுமொனிளங்கன்றினைப்பசிய
முதியவேய்த்தலைக்கால்வழிவிசைகொடுமுன்னிப்
பதியமேனியின்மோதலின்பயமொரீஇமருளும்
நதியடுத்தநல்வளத்ததுநைமிசாரணியம். (௨)

வானளாவியமரத்துறுமலர்வழிவடிந்தத்
தேனளாவியதொருவழிசெரிந்துபின்றேங்கித்
தானளாவியநதியெனத்தகைத்துபின்றோடுங்
கானளாவியமாத்ததுநைமிசக்கானம். (௩)

வழிநடத்தலினிளைத்துறும்வழிவருமாக்கட்
கிழிவிலாதவர்ப்பசிக்கிடுமவரெனவினிய
பொழியுந்தேங்கனிபுறம்பலகுவித்துப்பொற்பாக
வழிவிற்கொக்கிணையுடையதுநைமிசவடவி. (௪)

மஞ்சுசேர்தருவயின்மிகவளத்தொடுதொடுத்தப்
பஞ்சரத்துறுகிள்ளையும்பூவையும்பழைய
விஞ்சுநான்மறைமுறைவழிவிளம்புவகேட்டுக்
கஞ்சம்நற்சுரும்பினம்பயில்நைமிசக்கானம். (௫)

கொடுக்கவல்லதுநற்றவங்கொடியவாதனையைத்
தடுக்கவல்லதுசம்புவினடிமலர்தன்னில்
விடுக்கவல்லதுவேண்டினர்த்தனக்குவிண்போக
மடுக்கவல்லதுவழகியநைமிசவடவி. (௬)

இந்தமாநிலத்திருப்பினுமிமையவர்த்திரண்டு
வந்துநல்லவியுணவினைக்கொள்ளவும்வயங்கிச்
சந்தமாகநற்கொடையினிற்றகைத்துசற்சனர்கட்
புந்தியின்மிகமகிழ்வதுநைமிசப்புறவம். (௭)

இடம்பெறுதருவனமெலாந்தழைத்திடவினியத்
தடம்பெறுகிளையோங்கியேதழைத்துபச்சென்று

மடமறுத்தநல்லறிவெனவிர்ந்துமேமன்னிக்
கடம்விளங்கவுமுடையதுணைமிசக்கடறு. (அ)

விண்ணமர்ந்துறுபிண்டியின்மிசைவிரைந்தேரி
வண்ணமார்தருமுசுக்கலைப்பிணவொடுவானின்
கண்ணமர்ந்துமேலிமையவர்நாட்டினைக்கலந்துப்
பண்ணமரரினவைநடங்குரங்கினம்பார்க்கும். (௯)

வேதவோசையும்வண்டினவோசையும்வீணை
நாதவோசையும்பறவையினோசையும்நான்குக்
காதமார்தலின்னைமிசக்காட்டுகரையி
லோதமென்னவுஞ்சிறப்புறவோதவும்படுமால். (௧௦)

மாலெனச்சொலநிற்குமந்தாரையின்மருங்கே
வேலெனவிழித்திருவெனக்கொன்றையுமேவிக்
காலெனப்புறம்பந்தரேபொற்குடங்காஞ்சிச்
சீலமுற்றமான்மணவினைதன்னையேசிவணும். (௧௧)

மங்குல்கண்படுவழைப்புறம்நான்கினும்வளத்தத்
தங்குகொன்றைமந்தாரையுஞ்செருந்தியுஞ்சார்ந்துப்
பொங்கிநின்றிடுதோற்றமதாயரின்பொற்றா
சங்குகொண்டவக்கண்ணனைப்போன்றதவ்வடவி. (௧௨)

கன்னிசண்பகம்வஞ்சியுங்கற்புமந்தாரை
வன்னிசந்தனம்வழையொடுகூவிளமத்திப்
பன்னுசூதமும்வகுளமும்பாடலஞ்சரளந்
துன்னுவெட்சியும்நரந்தமுஞ்சூழ்ந்ததக்கடறு. (௧௩)

அடுகரிப்பெருமுடங்குளைமடங்கலுமாவுங்
கொடுவரிகளும்நீரருந்துவதடங்கூடி
நெடுமன்றன்குருளைக்குறுவெயிற்றுயர்நீங்க
யிடுசிறைவிரித்துவணமீமிசைநிழலியற்றும். (௧௪)

விரிக்குமாயிரங்கண்ணுமக்கிருப்பினும்வேளை
யெரித்தகண்ணொடுமூன்றுகொளெந்தையைப்போலப்
ப்ருத்தமுக்கணெற்கிணைகொலோவலாரியைப்பழியா
தருக்கிநிற்பனபோலவிண்ணோக்கினதாழை. (௧௫)

பனசமாமரப்பொதும்பரிற்பழுத்ததுவெடித்து
கனமொழுகுறுதேறலைநோக்கிடிற்கங்கைப்
புனற்கொடுசெடையிறையவன்பாற்புறப்பட்டு
வனம்வழங்குறுவிண்ணினின்றிழிவனமானும். (௧௬)

பேணுருதமாதழையினும்பூவினும்பெரிதாய்க்
காணலாற்பெறநீயடர்க்கானல்வெங்காலந்
தாணுவாற்பொழிகாரெனத்தண்ணிழலளித்து
மாணலத்துடன்வயங்குறும்நைமிசவனமே. (௧௭)

கணத்திற்கொலையுறவேங்கருக்காணிடிலெனது
வணத்திலென்றனக்கொத்திலதாயினும்வளத்தக்
குணத்திலென்றனக்கொத்ததுகழையெனக்கொண்டு
மணத்தநற்கதலித்தருய்கிழ்ந்தெனத்தழைத்த (௧௮)

வானநாட்டினர்மலர்மழைப்பொழிதவிலந்தக்
கானகத்தினிற்பரந்ததுகற்பகமலரே
தேனவற்றினிற்கலத்தலிற்சேறெனப்பட்டு
வூனமற்றநன்மணத்தொடுமெழுகொடுமோங்கும். (௧௯)

அளவிறந்தநற்றருக்களைத்தன்வயினமைத்து
வளவிறந்தமாதவர்க்குழீஇயருந்தவஞ்செய்ய
வளவிறந்தநற்புகழொடுபெறந்துளவந்த
வளவிறந்தவர்வாழ்வனம்புகழ்வதுமருமை. (௨௦)

## வேறு.

ஒப்பருமருமைத்தாயயுயவர்வனமுற்றநல்ல
செப்பரும்வளஞ்சாற்கொன்றைச்செஞ்சடையுற்றமுக்க
ணப்பருக்கன்புபூண்டுவக்கமாமணியும்பூண்டு
முப்புரமெரியச்செய்தமூர்த்தியார்மேனிமூடும். (௨௧)

பெருந்திருநீறுபூண்டுபேசருமாட்சியுற்ற
வருந்தவநெறியும்பூண்டுவஞ்செழுத்ததனைப்பூண்டு
தருந்தவமனமும்பூண்டுதண்ணருட்கொடையும்பூண்டு
யிருந்தநன்னிலையேபூண்டுயிருக்கையரருளார்மாண்பார். (௨௨)

இந்திரப்பதவிதன்னிலிருந்தனுபவிக்குமாண்பு
மந்தரந்தாங்கப்பட்டமண்ணரசாளுமாண்பும்
புந்தியிலற்பமாகக்கொண்டதுபுகழாத்தூய
யந்திவெண்பிறைமிலைச்சுமண்ணலைப்புகழும்நீரார். (௨௩)

அவநெறியனைத்துய்நீக்கியறிவெனுமரத்திற்செய்ய
தவநெறியாகுஞ்சாந்தத்தண்மலர்ப்பூப்பச்செய்துப்
பவநெறியகன்றஞானப்பழம்பறித்துண்டுதூயச்
சிவநெறிதன்னின்வாழுஞ்செய்கையரெவர்க்குமேலோர். (௫௪)

அருளுறுகல்விகேள்வியடக்கம்வஞ்சனையடக்கற்
றெருளறுமருளுவீகைத்தெள்ளியவின்சொலாதி

யிருளறுத்துற்றதெய்வவினியநல்வணக்கங்கொண்டு
மருளறுத்துற்றதூயமனத்தினையுடையமாண்பார். (உ௫)

உயர்படத்திரக்கமென்னுமொள்ளியநெறிகொண்டுள்ளூர்ப்
பயில்சிவபுராணந்தன்னைப்பரசிவமெனவேகொண்டு
மயலறப்பயிலுந்தூயமனத்தினைக்கொண்டுமேவு
மியலுறுபணியேமுத்தியென்றவர்க்கருதுமாண்பார். (உ௬)

அழிவுறுவிகழும்பின்புவன்புடன்புகழுமாண்பும்
வழியதையொன்றாய்க்கொண்டுவாழ்பவர்வருந்திச்செய்ய
யெழிலுறுமடவார்வந்துயின்சொலிவலிந்தணைந்தாற்
பழியறத்தாயேயென்னுங்கொள்கையர்ப்பண்பின்மிக்கார். (உ௭)

நாட்டினிலிருந்துவாழ்ந்துநலம்பெறுபோகங்கொள்ளற்
காட்டினிலிருத்தலிந்தவிரண்டினையொன்றாய்க்கொள்வ
ரோட்டினையுயர்ந்தபொன்னையொன்றெனக்கருதுமோரார்ப்
பாட்டினிலடங்காவிந்தப்பண்ணவர்ப்புகழ்ச்சியம்மா. (உ௮)

அன்னவன்வசிட்டன்பின்னரரிதகன்கார்த்திகேயன்
நன்னலத்துற்றபிருங்கிநற்சுகன்மாதேவன்றான்
பன்னரும்புகழ்மார்க்கண்டன்புலத்தியன்பரத்துவாச
னுன்னருமகத்தியன்றானுத்தமத்ததீசிமேலோன். (உ௯)

சந்தியன்சனற்குமாரன்சாண்டில்யன்சந்திரசூட
னத்திரிநாரதன்சீராங்கீரசன்சாபாலிச்
சத்தகூடன்முனிபிருகுமாமுனிசனகன்பின்னும்
பத்திமாண்டவியன்றூயபராசரன்சிருங்கமேலோன். (௩0)

வருகாசிபன்னேரண்டன்வான்மீகனுபத்தம்பன்
றுருவாசமுனிவன்விசுவாமித்திரன்சுனகன்பின்னும்
பெருபாணினீயன்கௌதமன்பெருபெற்றியான
வொருபற்பமாமுனித்தூயுபமன்னியனிரணியன்பின். (௩௧)

கோதறுமுற்கலன்பின்கபிலனுங்காணன்கோலத்
தீதறுகூசுமாண்டன்மாதேசன்றிரணநாமன்
வாதறுபார்க்கவன்பின்சமதக்கினிவரும்பிரசண்டன்
நாதனூந்தூமபாதன்நவின்றிடுமுனிவரெல்லாம். (௩௨)

ஒருங்குடன்முனிவரெல்லாமொன்றதாய்த்திரண்டுசூழ்ந்து
யிருங்குரைக்கடற்சூழ்வையத்திறத்தனும்பிறத்தலான
கருங்கருத்துடைக்கும்நீலகண்டனைக்காணும்வண்ண
மொருமையாற்றவேண்டியுசாவினர்முனிவரெல்லாம். (௩௩)

ஆயகாலையினிற்சூதமாமுனியக்கம்பூண்டு
மேயவெண்டிருநீற்றைத்தன்மெயமுழுதணிந்துபோற்றித்
தூயபஞ்சாக்கரத்தைசொன்னெறியாகக்கொண்டுச்
சேயமாணாக்கர்பல்லோர்ச்சூழ்ந்திடச்சேர்ந்தாரங்கண். (௩௪)

கண்டனர்முனிவரெல்லாங்கரசரணாதியெங்கும்
விண்டிடப்புளகங்கொண்டுமெய்வியர்த்திறும்பூதெய்தி
வண்டர்நாயகரையொற்றயருந்தவர்நினைந்தபோதே
கொண்டருளாற்றாரென்றுக்கோல்விழுந்தெனப்பணிந்து. (௩௫)

ஆதிமாதவனேதூயவருந்தவப்பயனேசெய்ய
நீதிமாதவனேகோலநின்மலநிபிடஞானச்
சோதிமாதவனேசுத்ததுரியவாழ்வதனைப்பெற்று
பாதிமாதவனேயொற்றபண்பனேயென்றுபோற்றி. (௩௬)

குசைபெருவிருக்கைதன்னைக்கொணர்ந்திட்டுக்குரவன்றன்னை
நசையுறவிருத்திப்பின்னருக்கியமாதிநல்கி
வசையுறப்பூசையாற்றிவாழ்த்துபுவணங்கிச்சூழ்ந்துத்
தசைமிகவிளைக்கமுன்புநின்றனர்ச்சான்றோரெல்லாம். (௩௭)

அப்பெருங்குழாத்தைநோக்கியன்புடன்சூதமேலோன்
ஒப்பருமாசிகூறிவிருமெனச்செப்பவந்தத்
தப்பருமுனிவரெல்லாந்தங்கிபினிருந்துதங்கட்
கொப்பருமுனியைநோக்கியோதுவாரானார்மன்றோ. (௩௮)

திருவருட்சத்திசேர்ந்தசெம்மலின்பாதங்காண்பா
னொருமகமிங்கணாற்றயுபக்கிரமித்தேமந்தப்
பெருசிவமதனைக்கொண்டுபிறப்பினைமாற்றிமுத்தி
வரும்வழிக்கொருவுபாயமடியேற்குவழங்குகென்ன. (௩௯)

பின்னரும்புகல்வார்நாங்கட்பேதுற்றுவாடிச்சொன்ன
வன்னதுபெறுமுபாயமாராய்ந்துமடைந்திலம்பின்
மன்னருமனத்துளாய்ந்துமருவியிங்கிருக்குங்காலை
நின்னரும்வரவுகண்டோம்நின்மலச்சூதமேலோய். (௪௰)

சான்றவர்வரவுவீண்போகாததுசத்தாய்நின்று
வான்றநற்பயனீந்தன்றிவகிலமுமுறைக்குமாற்றா
லென்றுநீவறியச்சொற்றியெம்பெருமானேயென்னத்
தேவன்றுநற்றுணையேயென்றுதுன்னினரிரந்தார்மன்றோ. (௪௧)

அவ்வுரைமுனிவரோதவருந்தவச்சூதனோதுஞ்
செவ்வியபெருமானுற்றசிவம்பெறுதலத்தின்மேயத்
திவ்வியமாயதூயமுச்சிறப்புதனைத்தீரக்
கவ்வையின்மான்மியத்தைக்காதுறக்கேட்டற்பின்னும். (௪௨)

தானோதலோதுவித்தற்றற்பரன்றலத்துட்சென்று
வானாறுவிழிந்தநன்னீராடுதன்மலர்ச்சியோடு
தேனூறுமலரைக்கொண்டுதெள்ளியவன்பினோடு
மானூருங்கரத்தர்பொற்றாளருச்சனைமாணச்செய்தல்; (௪௩)

இனையதுவாற்றின்றீயபிறவியுமகன்றுவீசன்
நனைமலர்ப்பாதப்போதையடைநெறிநலத்தையோத
யனையதைக்கேட்டத்தூயவருந்தவர்வணங்கியந்த
வினையறுதலத்துண்மிக்கச்சிறந்ததுவிளம்புகென்றார். (௪௪)

மீட்டுமெம்முனிவர்ச்சூதமேலவமெய்மையாகும்
வீட்டுநன்னெறிபயக்கும்மெய்த்தலமோர்ந்துவேண்டித்
தேட்டதைநோக்கின்சென்றார்றிசைநோக்கிப்பரவின்முத்திக்
காட்டுமிதென்றுநன்குகருத்தினுள்ளாராய்ந்தைய. (௪௫)

அழிதருபாபகன்மமளவிலாதாற்றினாலுங்
கழிதரவேண்டும்பேரைக்கழறிடிலொருக்கான்முற்று
மொழிதலிலென்னையந்தமொய்யொளிவிளங்குந்தானந்
தொழுதனரடியேற்கின்றுசொன்மினென்றொருங்குசூழ்ந்தார். (௪௬)

இவ்வணமுனிவரோதவிருந்தவன்கருத்தினோர்ந்துச்
செவ்வணப்பெருமான்வாழுந்திவ்வியதலமொன்றுண்டா
லவ்வியற்றலத்தின்பேரையறைந்திடிலொருக்கான்முத்தித்
திவ்வியவீடளிக்குஞ்சிறந்ததுவெதற்குமேலாய். (௪௭)

அத்தலமருமையாயவறுமூன்றுபுராணந்தன்னுள்
வித்தகக்காந்தமென்னும்புராணத்தின்மேலாய்ச்சொல்லு
முத்தமசனற்குமாரசங்கிதையுபரிபாகஞ்
சுத்தமாய்ப்புகலுமாறுபுகல்வமென்றுரைத்துத்தூய. (௪௮)

அதுதனைநினைந்தபோதேயழலிழுதென்னநெஞ்சங்
கதுமெனக்கரைந்ததெற்குக்கரைந்திடுமுமக்குமந்தி
யிதுதனையணிந்தபெம்மானெவ்வுயிர்த்தனினுமுள்ளான்
பதியதுபலவற்றுள்ளுஞ்சிறந்ததுவெனப்பகர்ந்து (௪௯)

முச்சிறப்பதனைவாய்ந்துமுத்தர்கட்போற்றுந்தூய
யச்சிவதலமதென்றாலதிகையென்றுரைக்கலாகும்
நச்சணிகண்டன்றானைநங்குருக்குமரன்றானைப்
பொச்சமில்வியாசன்றானைப்போற்றுபுமொழிவான்சூதன். (௫௰)

முனிவரர்கேட்டியந்தமுதுதலமுதன்மையான
பனிமலைவல்லிபங்கனருளினாற்பகர்வனிந்தக்

கனிவுறுகாதைதன்னைப்பகர்ந்திலனெவர்க்குங்கற்ற
யினிவறிவுடனேகேட்கயெனநவின்றிடுவான்சூதன். (௫௧)

நைமிசவனப்படலம் முற்றும்.
ஆகதிருவிருத்தம் ௨௮௭.

# வீரட்டலிங்கோற்பவப் படலம்.

பல்லரும்விண்ணோர்போற்றும்பண்ணவன்செல்வம்வேண்டேம்
புல்லியகலைமாதோடுப்பொருந்தியபிரமன்வாழும்
நல்லருஞ்செல்வம்வேண்டேம்நாரணன்செல்வம்வேண்டேஞ்
சொல்லரசாயவெம்மானடித்துணைச்செல்வத்தோமே. (௧)

ஓங்கியவொருகிரேதாயுகத்தினிலுண்மையான
தீங்கறுதேவராதியசுரருந்திரண்டுதூயப்
பாங்குறுபரவைதன்னைக்கடைந்துபல்தேவருய்யத்
தேங்கருமமுதமாக்கத்தேவமாதவர்களாகும். (௨)

திருமாலின்கொப்பூழ்தன்னிற்றோன்றியசிருட்டிமேலோன்
வருமொருவலாரியேனைவானவரொருபான்மற்றப்
பருவுறுதிரண்டதோளும்படையெனத்திரண்டதந்தப்
பெருபலமவுணர்க்கூட்டம்பிரிதொருபக்கமுற்று. (௩)

மந்திரவடுக்கறன்னைமத்ததாய்க்கொண்டுமென்னும்
நந்தலில்நாகந்தன்னைநாரியாக்கொண்டுநாட்டி
பந்தமுற்றிட்டமத்தைப்பாலிருவரும்பிடித்துப்
புந்தியின்மகிழ்ச்சியோடுபுரிந்தவர்க்கடைந்தாரம்மா. (௪)

அதிர்ந்தனகடற்களெல்லாமார்த்தனசங்கமெங்கு
மெதிர்ந்தனதோட்களெல்லாமெழுந்தனநுரைகளெங்கு
முதிர்ந்தனதுமிதமெங்குமுடுவிழுந்தெனக்கடுப்ப
முதிர்ந்தவவ்வொலியின்மாட்டுமுளைத்ததோர்மிகுந்தவோதை. (௫)

அண்மையிற்றோன்றுமோதையவர்செவிப்புகுதலோடும்
விண்மணித்தேவரெல்லாம்வெருவினரிதென்னென்றுத்
தண்மணிவருவிவீசிச்சார்ந்திடுசயிலமோரெட்
டெண்மலையிடிந்ததேயோவென்றுளம்வெரீஇனார்கள். (௬)

விண்ணவர்நடுங்கியெங்கமிளிர்நிரையாழிசூழும்
மண்ணவர்நடுங்கியோடமந்தரந்தாங்கப்பெற்ற
தண்ணருங்கடலினுள்ளேசார்ந்துறுமாலகாலந்
துண்ணெனத்தோன்றிற்றையோசுரர்களுநடுங்கினரால். (௭)

விடமெழுந்திட்டகாலைவிதிபுரந்தரனுமேனை
மடம்பெறுமாகர்தாமும்மனக்கலக்குற்றுவிந்தத்
திடமுறுவாலங்கொல்லற்றிண்ணமேயென்றுணைந்துத்
தடம்பெறுகார்கோணீங்கித்தம்முளேயுசாவினாரால். (௮)

இவ்வமயத்துநம்மைக்காப்பவனிந்துசூடிச்
செவ்வியமழுயானேந்துஞ்சேலரிபரந்தவுண்கண்
டிவ்வியவுமைபுணர்ந்தசெம்மலேயெனத்துணிந்துப்
பவ்வமார்க்கடலைநீத்துப்பரந்தனரோடினார்கள். (௯)

துள்ளியவிடத்திற்கஞ்சித்துண்ணெனவமரர்முற்றும்
வெள்ளியங்கிரிக்குச்சென்றுவெய்யதீயேந்துஞ்செய்ய
வள்ளலார்மாட்டுமேவாலமெனவவர்வருந்திவீழத்
தெள்ளியசிவமுமந்தக்கடுவினையருந்திச்செப்பும். (௧௦)

எகுமின்மீட்டும்வாரிகடைந்திடிலமுதமெய்ந்து
வாகும்நீர்செல்கவென்னவறைதலுமதுமேற்கொண்டு
மாகநாட்டிறைவன்மன்னுமயனுடன்மஞ்சுசூழ்ந்தச்
சாகரக்கரையின்பாங்கர்ச்சார்ந்தனர்ப்பலருமீண்டி. (௧௧)

†பின்போதிக்கவ்வம்பற்றித்துருவலும்பெருநீர்வைப்பி
லின்புறுசுதைபயந்ததன்மையையிமையாநாட்டத்
தன்புறுமேலோர்முற்றுமளப்பருமகிழ்ச்சியெய்தி
முன்புறுபெரியோன்றாயமுகமதுநோக்கலுற்றார். (௧௨)

மாயையும்வனப்புவாய்ந்தவனிதையாய்த்தோன்றிவெய்ய
வாயுறுவரக்கர்பாற்குப்பட்டிமையாற்றவேண்டி
சேயுறுநாரியாகநிற்பவுஞ்செற்றமிக்கு
வாயறுமயலிலாழ்ந்துசுழன்றனர்மயக்கமெய்தி. (௧௩)

நோக்கினளமயந்தன்னைநொடிக்குளேசுதைபகிர்ந்து
வாக்கினட்பாகமாகவமரர்கண்முற்றுமுண்டுத்
தேக்கினரசுரரெல்லாந்தியங்கினர்த்தெய்வமாதுத்
தூக்கியசினைக்கடுக்கைவனத்திடைத்துன்னினாளால். (௧௪)

ஆயசீலையிலெங்கைலையண்ணலுமெதேச்சையாக
மேயவவ்வனத்தையுற்றகாலையின்மின்னலென்னத்
தீயவெங்கொடுவாட்கண்ணுஞ்செந்துவர்வாயுந்தோட்கண்
வேயெனத்தோன்றிநின்றமெல்லியலாளைக்கண்டார். (௧௫)

---

†பின்பு-ஓதி. கவ்வம் எனப்பிரித்துப்பொருள்கொள்க. ஓதி-மலை. கவ்வம்-மத்து.

கண்டனர்க்கண்களாரக்களித்துபெண்மயக்கந்தன்னைக்
கொண்டனர்க்காமமென்றுங்கோதறுநரவந்தன்னை
யுண்டனர்மெய்வியர்த்தாரொள்ளியமாயைதன்னை
விண்டனரென்றுநூல்கட்கூறிடும்விகிர்தரம்மா. (௧௬)

மோகமாய்நின்றநாரிபான்மிகமோசதாகம்
வேகமாய்ச்சிரத்திலேறவெய்துயிர்த்திட்டுகாம
தாகமேயுற்றேன்மாதேதருகநிற்போகமென்று
வாகமேற்புல்லவேண்டியண்மையிற்செல்லலோடும். (௧௭)

செல்லெனச்சிவனுங்கூந்தற்றளர்நகைச்செய்யவாயுங்
கல்லெனக்களபந்தாங்குங்கொங்கைகொட்கன்னிப்பாங்கர்ப்
புல்லெனச்செல்லலோடும்புதுமலர்க்கொம்பையொற்ற
வில்லெனப்புருவமன்னாள்மின்னெனவொதுங்கினாள். (௧௮)

கூம்பியமாதுகூறுங்கோதறுபரமவிந்தப்
பாம்புறுமல்குலாளைவேட்டலும்பழியேயென்றன்
வீம்புறுசட்டகந்தான்மின்னெனவறிவாயென்னை
வேம்பெனப்படர்தற்செய்துவிடுகவென்றுரைத்தாண்மாது. (௧௯)

அன்னசொற்கேட்டவையரன்னமேயுன்றன்மாற்றம்
முன்னமேயறிந்துளேன்நான்மொய்யளிமுரலுந்தாரு
வின்னரும்புறவம்வாழுமிருடிகடம்பால்நீயு
மன்னுமிம்மேனிகொண்டுவடைந்தனைமுன்னைமற்றும். (௨௰)

அத்தருணத்தேயானுமவர்மனையாட்டியார்வாழ்ச்
சுத்தமாமில்லந்தன்னுட்டோய்ந்தமிவ்வுருவமேற்று
வித்தகமடவார்கற்புக்குலைத்துபின்மீண்டகாலை
வொத்தவிவ்வடிவம்நோக்கியுற்றனையார்வம்பொங்க. (௨௧)

அப்பிணைநீங்கயீண்டுவணைந்தனமணைந்தநம்மே
லெப்பிழைதானுமில்லையென்றிறைக்கூடவாங்கே
வொப்பருஞ்சாத்தன்றோன்றவுவப்புடனிறைவர்நோக்கி
யிப்பெரும்பூமிகாக்கப்பணித்துபின்னிறைகரந்தார். (௨௨)

அரணவணிருவர்க்கூடிப்பயந்தவத்தனையனார்க்கு
தெரியரற்புதல்வனென்றேசிறந்தனவபிதானந்தா
னுரிய விவ்வுலகங்காக்குமுரிமைபூண்டுற்றான்பின்னர்ப்
பெரியவனாருங்கன்னிக்கலங்கினட்பெம்மான்காண. (௨௩)

அருவமேனியனீங்கலுமக்கனி, வுருவமாற்றிடவுன்னிமுயலலு
மருவியவ்வுருநீங்காவகையினாற், கருவிமுற்றுங்கலங்கிடநின்றனள். (௨௪)

நின்றுகன்றையிழந்தநிரையென, யின்றுவந்தவிடாறுவிரிவதென்
னென்றுசூழலிலுற்றுபின்னேங்கியே,நன்றுமாற்றும்வகைநலமோர்ந்துமே.௨௫

அந்திவான்மதிசூடியவன்னவன், வந்துநீக்கிடினன்றிநல்வானவ
ரெந்தமாதவராலுமியலொணு, தந்தவண்ணலைக்கொண்டுநோருக்குவேன். (௨௬)

இனையகூற்றுமொழிந்துவினியபெண்,வினையிறுறுவிளைந்தபசுக்களுக்
கினியபோகமளிக்குமிருளறு, வனையையொற்றவவ்வண்ணலைப்போற்றுவாள்.

போற்றிபின்னர்ப்பொருந்ததவமுயன், ருற்றவேண்டிவடார்ந்தகடுக்கையா
மேற்றநற்கடற்றின்கணியலுறுஞ், சாற்றுதாமத்தருவடிசார்ந்துமே. (௨௮)

மனமுதற்கரணங்களைமாறிலாத், துனிவிற்சிந்தையிலாக்கித்துயருறுந்
தனிதவைந்துந்தணந்துதவமுறக், † கனவியாட்டிடைச்சென்றுனக்காலமே.

கடலுடுத்தியபாரெனுங்கன்னிமேற், படலமென்னப்படர்ந்தப்பனியதை
வடலமுற்றுந்தெரியவொண்மூடியை, விடவெடுத்தவன்போன்றனவேனிலே.

நாயகன்வரநாடியிளநகை, மேயமெல்லிழைப்போலமென்முல்லைகட்
டேயமென்மலர்த்தோன்றவும்நின்றன, வேயெரிந்திடவந்ததுவேனிலே. (௩௧)

காயாவென்றுகழறும்விருக்கமா, காயமோடுங்கதிரின்கிரணமீ
காயவாடியுங்காயாமரமெனற், காயசெங்கெலைக்காரெனற்போலுமே. (௩௨)

ஆறிரட்டியவரிகளனுகியே, கூறித்தத்தமதாற்றற்குறித்துமே
வீறுகொண்டவண்வெய்யில்விளைத்துமா, வேறுதீயவுமுற்றதுவேனிலே. (௩௩)

ஒருத்தல்வாய்னின்றொழுகியநீரினை, வருத்தமுற்றவயங்குதித்தோடியே
வுருத்தமுற்றவுழைவவாய்நக்கிடும், பருத்ததாகந்தணிப்பகையற்றதே. (௩௪)

விரிந்தகானின்விருக்கம்வெயிலினுன், முரிந்துவெந்தீமூடுகியனுகிடப்
யரிந்துநோக்குமிடத்தின்பரப்பெலாங், கரிந்தபாலையையொற்றதக்கானமே.

இன்னவேனிலங்காலமதெய்திட, வன்னகாலத்துணவருந்தாமலும்
மன்னுவைந்தீமருங்குறமத்தியி, லுன்னிநற்றவந்தன்னையுஞற்றினள். (௩௬)

## வேறு.

மங்குல்வெண்படம்போர்த்தென்னவானிமிர்ந்தெழுந்துகொண்மூ
பங்கமிற்றரங்கஞ்சென்றுப்பருகிபச்சென்றொளித்துப்
புங்கமார்மயமென்னும்பொருகரிமுடியின்மீதுக்
கங்கையைச்சொரிந்தாலென்னச்சொரிந்தனகார்கண்மாதோ. (௩௭)
இருட்பட்ப்படர்ந்தகானின்றெழுந்தவத்துமிதந்தும்பிப்
பெருகையையொற்றுக்கார்கண்கரியெனப்பெறுதலாலே
பொருகரிவான்கைநீட்டிப்பொன்னுலகதனைவிட்டு
யிருநிலத்திழிந்தயானைக்குலமெனவிருந்ததம்மா. (௩௮)

† கதிரவன், மேடத்திற் சென்றுனென்பது சித்திரைமாதம்.

வேலெனமின்னற்றேன்றிவெய்யவெஞ்சமரிற்குத்துங்
கோலெனத்துமிதங்கொண்டுவப்புதுவிடியுங்கொண்டு
மாலெனமயங்கிநிற்குமிமயமாவடக்கும்பாகன்
போலெழிலிகண்மிக்கங்குவிழிந்தனபொலன்குவட்டில். (௩௯)

மிகுமழைசொரிந்தவாற்றன்மேதினியடுக்கன்முற்று
மிகைபடப்புனல்கட்சூழ்ந்துமேலிவர்ந்தோடுமாற்றின்
புகுதலும்பெருகிமிக்கப்புண்ணியத்தீர்த்தமாய
தகவுடையவர்கூட்டஞ்சார்க்கயவருஞ்சான்றோராவர். (௪0)

வளந்தருசிலையும்பாருமழையினிற்குளித்தவாற்ற
னுளந்தனில்வெரீஇனூர்களுறுவலித்தடந்தோளார்கம்
பளந்தனைப்போர்த்துமிக்கக்குளிரினிற்பயந்தாரிந்தக்
களந்தருமுலகமன்றிக்கற்பகநாடர்முற்றும். (௪௧)

கஞ்சுகம்பூண்டார்சில்லோர்க்கவசமும்பூண்டார்ச்சில்லோ
ரஞ்சுதீகொண்டார்சில்லோரறையினின்றகலார்சில்லோர்க்
கொஞ்சுபெண்ணணையார்சில்லோர்க்குளிர்க்கொடிதென்பார்ச்சில்லோர்த்
துஞ்சுகண்ணன்றியேனையிடங்களைக்கலையாற்சூழ்ந்து. (௪௨)

இவ்வணமாரிகாலமெய்திடவினியமாதுக்
கவ்வையிற்றடத்துமூழ்கிக்கனிந்திடுமுளத்தளாகித்
துவ்வெனுமுணர்ச்சிமுற்றுந்தூயமாமறைகட்டேடுஞ்
செவ்வணரடியின்பாங்கர்ச்செலுத்திமாதவம்புரிந்தாள். (௪௩)

அத்தவமகிலமுற்றுங்கொளுத்திபின்னகன்றுநீங்கி
முத்தர்கள்வதியும்மேனாடுறுதலுமுயன்றுதேவ
ரித்தவமகிலமாற்றுமியல்புறுமெவரோவென்று
சத்துவகுணத்தன்றாயகைலையைச்சார்ந்தாரன்றே. (௪௪)

நந்தியைப்பழிச்சிப்போற்றிநவில்விடைகொண்டுவப்பால்
வந்தநற்றடையகன்றுவண்ணலைக்குறுகிமிக்கப்
புந்தியிலச்சத்தோடுபுனிற்றிளங்கன்றுபோல
வெந்தையைக்கண்டுபோற்றியெதிருறவீழ்ந்துசொல்வார். (௪௫)

பிறவியைக்கெடுக்குந்தூயபிஞ்ஞகயுலகோர்மாதுத்
திறல்கொடுவாற்றுந்தூயதவமதுசேர்ந்துவெய்ய
மறம்பெறுமெம்மனோரின்றேகத்தைவாட்டாநிற்கு
மிறைவனேயதனைக்காத்தற்கடனெனவிறைஞ்சினால். (௪௬)

அண்ணலுங்கேட்டுநக்குவமரரைநோக்கிக்கூறும்
விண்ணுறுவீர்காளன்னேன்வலவனென்றுண்மின்மிக்கக்
கண்ணடுவுலகிலில்லாக்காட்சியேயனையான்பத்தி
யெண்ணிடப்போகாவீதுதெரிதரவிருந்தோமென்று. (௪௭

விடையினிலுமையினோடுவிண்ணவரோடுமீண்டு
படைகுறட்பூதத்தோடுபசியநற்கொன்றைசூழ்ந்தக்
கட்குறுவிண்ணினின்றுகாட்சியிற்பொலிந்ததூய
நடமுறுபெருமான்றன்னைநயனங்கட்களிப்பக்கண்டாள். (௪௮)

கண்டனட்கோல்வீழ்ந்தென்னக்கதுமெனவீழ்ந்துசென்னிக்
கொண்டனட்பதத்தைப்பின்னர்க்கொள்கையின்வணங்கித்தூய
வண்டர்நாயகனேயுன்றனருளினாலுயந்தேனென்று
பண்டையவடிவினோடுபகவனைப்போற்றலுற்றாள். (௪௯)

## வேறு.

ஆதியேபெரியவகத்தியன்றனக்குவருட்கொடையீந்தவாபோற்றி
சோதியேபெரியவாழ்வதையளித்தத்துணைவனேபோற்றிபெண்ணோங்கும்
பாதியேபரமசிற்சுகப்பொலிவேபண்ணவர்போற்றுநற்றூய
நீதியேதுரியநிற்குணசகுணநின்மலமானவபோற்றி. (௫௦)

பரமனேபோற்றிப்பசுக்களைப்படைத்தபண்ணவபோற்றிநின்மலத்த
பிரமமேபோற்றிபெரியருக்குள்ளேபேசரும்பொருண்மயபோற்றி
பிரமனாதியருக்கெட்டருந்தூயபிஞ்ஞகப்போற்றியந்நால்வர்க்
குரமளித்திட்டவுழுவைதோலுடுத்தவுத்தமப்பண்ணவபோற்றி. (௫௧)

கடையனேன்பொருட்டுவந்தவபோற்றிகருணைநன்னிதியனேபோற்றி
விடையினிற்றோன்றும்விமலனேபோற்றிவிராட்டுருவானவபோற்றி
படையனேபோற்றிபதிபசுபாசமுணர்ந்திடுபெதிதரானவர்க்குத்
தடையறத்தோன்றியருட்செயும்பெரியதகவுறுதாணுவேபோற்றி. (௫௨)

பிறையுறுசடையிற்கடுக்கைவேய்ந்திலங்கும்பிஞ்ஞகப்பெரியனேபோற்றி
கறையிலாப்பெரியமதியெனமதிக்குங்கருணைமாமுகத்தனேபோற்றி
முறையறுகருப்புவில்லிமன்மதனைமுறுக்கியமுக்கணபோற்றி
நறையுறுபுரத்தைநகைத்தெரித்திட்டநற்றவப்பரமனேபோற்றி. (௫௩)

சற்குணமோடுநினையடைந்தவர்க்குத்தாளிணைத்தருபவபோற்றி
சிற்குணப்பொருளாய்வீடளித்தருளுஞ்சின்மயதேசிகபோற்றி
நற்குணநம்பிதிரட்டியநஞ்சையுண்டநற்கண்டனேபோற்றி
சொற்பொருளறியவுரைத்திடும்பெரியதூயநற்சோதியேபோற்றி. (௫௪)

கற்பெறுசிலையென்மனத்தினையுருக்குங்கருணைமாமேனியேபோற்றி
நற்பெறுவெண்புவணிந்திடுமுரங்கொணகமுறுபுலவனேபோற்றி
பற்பெறுபன்றிக்கோட்டினையணிந்தபருத்தநன்மார்பனேபோற்றி
சொற்பொருளறியவுரைத்திடுபெரியதூயநற்சோதியேபோற்றி. (௫௫)

மானொருகரத்துமுடுக்கையோர்கரத்துமழுவொருகரத்தவபோற்றி
தானொருகைசின்முத்திரையாகத்தனித்தகைவீசுவபோற்றி

தேனுறுமலர்களணிந் திடுகுழலித்தெய்வமோர்பாகனேபோற்றி
ஊனமுதருந் துமிழிஞரினுள்ளமுற்றிடாவுத்தமபோற்றி. (ருசு)

கரியுரித்தணிந்தமெய்யனேபோற்றிக்கருணைவெள்ளத்தனேபோற்றி
விரிந்திடுமுலகேமோங்குபுவோர்காற்றாக்கியவிமலனேபோற்றிப்
பரிந்திடுவானோரிருடிகட் சான்றோர்ப்பரவியபதத்தனேபோற்றிப்
புரிந்துறுமுயலகன்றனைமிதித்தப்புண்ணியக்கடவுளேபோற்றி. (ருஎ)

## வேறு.

இன்னவாறுவினியவக், கன்னிபோற்றிக்கரையவும்
மன்னுவருசடைமன்னவன், புன்னகையாற்புகல்வனே (ருஅ)

வேல்விழித்திருமேனியாய், சேல்விழிப்பெருசெல்வியாய்க்
கால்வந்துற்றநற்கன்னியுன், பால்நிறைந்ததுபத்தியே. (ருக)

அரியநற்றவமாற்றினைப், பரிவுபத்திபடைத்தனை
விரிவுளத்தினில்வேண்டிய, வுரியமாற்றமுரையென. (சு0)

கேட்டமாதுகிளர்த்துவா, ஞட்டமுற்றவிந்நங்கையாம்
வாட்டமுற்றவடிவதை, மீட்டுகென்றனண்மின்னனாள். (சுக)

அச்சொற்கேட்டவரனுமே, நச்சுமீச்செலநங்கையாங்
கச்சுவெம்முலைக்கன்னியை, யிச்சைபோலுறுமென்னலும். (சுஉ)

பழையநற்படிவத்தொடு, விழைவுகொண்டுவிளங்கவு
வழுவிலாதவலவனுந், தொழுதுபோற்றியேதுள்ளினான். (சுங)

பின்னுமோதும்பிரமனே, மன்னுமாறுவயங்கிய
யிந்நிலத்துவிலிங்கமாய், யுன்னிநின்றுவுவப்புடன். (சுச)

நீற்றின்மேனியாய்நின்றுமே, போற்றிநின்னடிப்போதினை
சாற்றுஞ்சர்ச்சனர்த்தங்களுக், கேற்றநல்வரமீயென. (சுரு)

ஆதியின்னவறைதலும், நீதியாகியநின்மலன்
சோதிவிலிங்கசொரூபியாய், மீதிற்றோன்றிவிளங்கினன். (சுசு)

கண்டுளங்களிகூரவே, தொண்டுசெய்துதுலங்கின
னண்டர்நாதனதிகையிற், கொண்டதிப்பெருகோலமே. (சுஎ)

## வேறு.

ஈதுநற்றிருவதிகைலிங்கோற்பவமென்று
வாதிநான்மறைத்தந்திரமிருதியுமறிந்தச்
சூதமாமுனியோதவும்நைமிசஞ்சூழ்ந்த
நீதிமாதவர்மகிழ்ந்திதுநிகழ்த்துவரானார். (சுஅ)

அதிகையுற்பவமறிந்தனமண்ணல்நின்னருளால்
நதியினுற்பவங்கேட்டிடநசையுளேமதனைப்
பதியுமென்றனக்குரைத்தியென்றுண்மையாம்பண்புத்
துதிபெறுமுனிகேட்டிடச்சொல்லுவன்சூதன். (௬௬)

வீரட்டலிங்கோற்பவப்படலம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம். ௩௫௬,

# கெடிலோற்பவப்படலம்.

மந்திரம்நமச்சிவாயமொன்றென்றேவழுத்தும்பாரி
லெந்தைநாவரசின்பேரோடிரண்டுமந்திரமாய்ச்செய்த
சந்தமாரப்பூதிப்பேர்த்தாங்கியபெரியர்க்கன்பு
சிந்தியவரசைப்போற்றிமும்மலஞ்சிந்துவோமே, (௧)

மொய்குழற்கருங்கட்செவ்வாய்மேனிமேல்மோகமாகத்
தெய்வவெம்பெருமான்கூடத்திரண்டெழும்வியர்வைநீரே
யுய்தருகெடிலமென்னவோசைபெற்றெழுந்துவெள்ளம்
பொய்தருமுள்ளமென்னப்புரண்டதுபோயதன்றே. (௨)

அடித்தனதிரைக[illegible]யகிற்றருமுதலாமாவை
யொடித்தனவோடிச்சென்றுயோங்கியவடுக்கறன்னை
யிடித்தனவினியசான்றோரிருதயம்போலப்பள்ளங்
குடித்தனசமமேயாக்கிக்குணகடல்நாடிச்சென்ற. (௩)

இருகரைநுரைகட்டள்ளியெழின்மரக்கொம்பையூன்றி
வருமொருவவலின்வீழ்ந்துவளைந்துபின்னடுக்கிச்சென்று
பெருகியமேட்டின்மெள்ளப்பெயர்ந்தடிபெயர்த்துவேகி
பொருவரும்விருத்தையென்னக்கெடிலமும்போயதன்றே. (௪)

வேகமாய்நதியிலோடும்வெண்ணுரைக்கட்டியெல்லா
மேகுதல்நோக்கத்தூயவெழின்மிகுகுருகையொத்த
நாகநீள்வெற்பினின்றுநளிர்நதிவளைந்துசென்று
போகுதற்பசவைப்பைசேர்ப்பாந்தளைப்பொருந்திற்றன்றே. (௫)

கரையிருமருங்குந்தெண்ணீர்க்கம்பலையோடுவந்து
திரையினிலொதுங்குந்தூயச்செம்மணிப்பச்சையாதித்
தரையுறுமாந்தர்க்கீந்துதண்ணதியோட்டலாலே
வுரைசெய்பன்மணிகண்மாறுமொருவனைநிகர்த்தமாதோ. (௬)

பாசடைமுற்றும்போர்த்துப்பருமணிதன்பாற்கண்டுத்
தூசெனத்திரைகளோங்கத்தூங்குபொன்மாலையென்ன
வீசியகொன்றைசூழவீழ்ந்திடாக்கொங்கைமொட்டு
வாசமாமரைகளோடல்வரைமகளொற்றதம்மா. (எ)

சூழ்ந்திடுசங்கங்கொண்டுச்சுழியெனும்நேமிகொண்டுத்
தாழ்ந்திடுநளபந்தன்னைத்தன்வயினடித்துக்கொண்டு
வாழ்ந்திடுபொன்னையங்குவாரியேயோடும்நன்னீர்
வீழ்ந்திடவரக்கர்செற்றவிண்டுவையொற்றதன்றே. (அ)

ஒழுகுமிந்நதியின்மூழ்குமொருவர்மாபாதகத்தான்
முழுவதும்மூழ்கியுள்ளாராயினுமுதன்மையானப்
பழுதிலாவிந்நீர்மூழ்கிற்பரசிவமிருந்துமல்கு
மழிவிலாக்கைலைகண்டுவாழ்வதுமெளிதாமன்றே. (௯)

இந்தநன்னதியின்மல்கவிருந்திடுமீன்களாதிச்
சந்துவுமெந்தையானசங்கரன்கங்கைசூடு
மந்திவெண்பிறைமிலைச்சுமண்ணலின்சொருபமென்றுப்
புந்தியுள்ளறிவுமிக்கப்புலவரும்புகல்வார்மன்னோ. (௧௦)

கங்கையென்றுரைக்குந்தெண்ணீர்க்கடவுளின்சடையினின்றுப்
பொங்கியவிந்தநீரும்பொற்புறுமாதினாகஞ்
சங்கையிற்புணரத்தோன்றும்வியர்வெனச்சாற்றலாலே
யிங்கிதுகங்கையேபோலிருப்பதுந்தெளிவாமன்னோ. (௧௧)

இத்திருநதியேகங்கையிதிற்படிந்தவர்கணையச்
சுத்தமாயுறவரென்றுசொல்லரசறைதலோடு
முத்தராங்காழிவேந்துமொழிந்தனராதலாலே
பத்தியிற்சிறிதிலாயான்பகர்வதுந்துணிபேயாமால். (௧௨)

அந்தணர்தமைக்கொன்றோருமருந்தவர்தமைக்கொன்றோரு
மைந்தரைக்கொன்றபாபமவனிதையைக்கொன்றபாபஞ்
சுந்தரப்பசுக்கட்கொன்றபாபமுந்தூயதான
யிந்தநன்னதியின்மூழ்கயிரிவதுந்திண்ணமாமே. (௧௩)

இன்னணம்நதியினுற்பவந்தனையியம்பலோடும்
மன்னியமுனிவரெல்லாஞ்சூதனைவணங்கிப்போற்றி
நன்னர்வாழதிகையிந்தநகரினுற்பவமுஞ்சொற்றி
யென்னலுங்கருத்தினோர்ந்துயியம்புவன்சூதமேலோன். (௧௪)

கெடிலோற்பவப்படலம் முற்றிற்று,

ஆகத் திருவிருத்தம். ௯௭௦.

# நகரேற்றுபடலம்.

ஓங்குநல்லவாமூரினிற்றோன்றியவொருவன்
பாங்குறவெமதிருதயம்பதிந்துறநின்று
வாங்குநிற்றலிலவ்வரசருளினால்நம்முன்
றீங்குசெய்திடுகூற்றுவன்வருதினமுளவோ. (க)

சடையுடுத்தியசங்கரனிலிங்கமாய்த்தயங்கி
யடைவுடனவண்டோன்றியகாலையிலஞ்சு
படைபொருந்தியவலவனும்பயத்தொடுமெழுந்து
நடைதளர்ந்திடவடிமிசைநயப்புடன்வீழ்ந்து. (உ)

என்புநைந்திடப்பத்தியாற்கரைந்தவணிருந்து
வன்புவாய்ந்திடுவலவனுமற்புதமெய்தி
முன்புசென்றுவட்டாங்கபஞ்சாங்கமமுறையா
லின்பமார்ந்திடவணங்கினனின்னருட்பெறவே. (ஙு)

வணங்கிநின்றுவெம்மிறைவனுக்கிங்ஙனம்வளத்தக்
கணங்களோடவர்நிற்கவோர்கோயிலைக்காணக்
குணங்கொடு†பிரமன்றனைக்கூவியோர்கோயின்
மணம்பெறுநகராக்கெனவிளம்பினன்மகிழ்ந்து. (ச)

அன்னசொற்செவிகேட்டலுமாக்குவான்வணங்கிச்
சொன்னவண்ணமேசெய்குவலென்றவன்றோன்றி
மன்னிநின்றிடுகெடுக்கையங்காடதைமாற்றி
நன்னர்சூழ்திருக்கோயிலைநலம்பெறப்படைப்பான். (ரு)

## வேறு.

எழிலுறுமதிலுங்கோபுரத்தோடுவிலங்கியமண்டபம்நிருத்த
விழவுறுமணஞ்செய்மண்டபமருத்தமண்டபம்மேற்கொடியாடும்
பொழிலுறுவசந்தமண்டபம்பொய்கைமண்டபம்பொற்புறவோங்கும்
வழுவறுகற்பக்கிரகமுமந்தராளமும்வகுத்தனன்பிரமன். (சு)

பின்னெடும்யாகசாலையுங்கோயிற்பிஞ்ஞுகன்மருங்கினிற்றொழிற்செய்
நன்னெடும்பாகசாலையுந்துவசம்நாட்டியபீடமுமமைத்து
வின்னெடுஞ்சுற்றிவருபிரகாரம்வியன்பெறுநற்சபைமுதலாம்
மன்னெடுங்கோயிற்கியற்றுவவெல்லாமாண்பெறவியற்றியபின்னர். (எ)

மறையவர்வீதிமறைபயிற்பள்ளிமைந்தரினுறையுளுந்தூய
யிறையவன்புகலுந்தந்திரம்வழங்குமிருபிறப்பாளரினுறையுட்

† பிரமன்-விசுவப்பிரமன்.

பிறையுறுமிறையினடிதொழும்பிரமசாரியர்பிறங்குதெற்றிகளுந்
துறவினர்முதலாம்யோகிகளிருக்கைத்துன்னிடவாக்கியபின்னர். (அ)

வேந்தரின்வீதியவர்படையிடங்கள்மேலுமாத்தானமண்டபமும்
சாந்தணிவரசமண்டபம்நியாயமண்டபஞ்சித்திரஞ்சார்ந்த
தீந்தமிழ்க்கல்விமண்டபம்நிருத்தமண்டபம்சித்திரத்தெற்றிக்
காந்தியாசிரியமண்டபம்சிலம்பமண்டபம்கணக்கர்மண்டபமும். (கூ)

ஆயுதச்சாலையறமுறுசாலையுமதநற்சாலையுமுள்ள
தீயமாமணிப்பீடிகைகளுங்கனகமாளிகைத்திருவுறும்பெரிய
தாயமாபளிங்குமேனிலைமாடந்தண்மணிப்பந்தருஞ்செய்ய
வேயுறுதோட்கைக்கன்னியர்மாடம்வேந்தரின்வீதியுமியற்றி. (க0)

கத்திகைத்தொடுத்தமங்கலமுற்றகணக்கறுமாந்தர்களோங்கும்
பித்திகைமணியாலியற்றியபெரியபேசரும்புகழ்படைத்துற்றப்
பத்தியாற்கடைகளோங்கியபெரியபண்புறுவாவணவீதி
சுத்தநற்சைவமுனிவரின்மடமுஞ்சூழுமுட்சமயரினுறையுள். (கக)

சைவரின்வீதியந்தணர்வீதிசார்ந்திடும்வைதிகராதி
சைவரின்வீதிசற்சனர்ச்சூழுந்தவத்தினர்வீதியும்வீர
சைவரின்வீதிவேந்தரின்வீதிசார்ந்திடும்வைசியராஞ்சற்
சைவரின்வீதிக்கணிகையர்வீதிகனத்தசற்சூத்திரர்வீதி. (கஉ)

சூத்திரர்வீதியுயர்குலத்திழிந்தோர்சூழ்ந்திடுவீதியுந்துன்னிப்
பாத்தியமாடமுறுபெருவீதிபரிதொடுத்திடுரதமோட
வாத்தியமோங்கும்வீதியுஞ்சந்தும்வளமுறுசதுக்கமுஞ்சூழ்ந்தச்
சாத்தியமனிதர்ச்சூழ்திடுதருமச்சாலையுஞ்சத்திரமுதலாம். (கங)

கன்னிசண்பகமும்பாதிரிப்புன்னைகற்புமந்தாரையுந்தூய
பொன்னிறக்கொன்றைகூவிளம்நந்திபொருந்தியபற்பலகாவும்
முன்னியவாழைப்பூகமுமாவும்முட்புறக்கனிமரந்தாழைக்
கன்னலின்சோலையணியணியாகக்கலந்துறுவளமுறுபொழிலும். (கச)

குவளைகண்மலருங்கேணியுமோடைக்குளங்களுங்குண்டகழாழ்ந்து
நவமணிப்பம்பைநாட்டியவகழிநன்மதிற்கோட்டையுமியற்றித்
தவமுறுவிசுவப்பிரமனுவிரைந்துசார்ந்துமுற்படிந்திதைபோதப்
பவமறுபெரியோன்மனக்களிப்போடும்பார்த்திறும்பூதடைந்தானல். (கரு)

## வேறு.

அமலமாநகராகுமதிகையி, லமருநாதனருங்குடிநான்கையு
மமருமாறுபுரிந்துவருளூற, மமலையோடுறமெந்தையருட்பதம். (கசு)

போற்றிமூன்றுறுப்பதனைப்பொருந்திய, சாற்றுநித்தியமாதித்தயங்குற
நீற்றணிந்துறுநின்மலமூர்த்திகட், காற்றவுஞ்சிவபூசையமைத்தனன். (கஎ)

என்றுகூதனியம்பியினியநற், குன்றைவில்லாய்க்குணித்தசிவனுறை
மன்றுகோயிலியற்றியமாண்பதை, வன்றுவம்முனிவர்க்கறைந்தானரோ. (௧௮)

திருவிழாவையியற்றுந்திறமதை, மருவிக்கூறுவங்கேளெனமற்றவ
ரிருவடிக்கணிறைஞ்சியியம்பெனத், தருவையொற்றநற்கூதனுஞ்சாற்றுவான்.

நகரேற்றுப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௫௮௧.

# திருவிழாப்படலம்.

வெய்யமாபிணிவந்தெய்தார்மேற்பவப்பிணியிற்சேரார்க்
கையர்த்தீயோர்கணட்புகலப்புறார்க்கடுங்கூற்றம்வந்
துய்வறவருத்துந்தீயதுன்பமுமடையாருற்ற
தெய்வமாய்த்திகழும்நாவுக்கரசடிசேர்ந்தோரெல்லாம். (௧)

## வேறு.

மற்றுநற்பணியாற்றிபின்மாண்புறு, நற்றலத்துறுநாயன்களிக்கவே
சொற்காமிகத்தந்திரச்சொற்கொடு, வுற்றநல்விழவாற்றவுஞற்றினன். (௨)

விண்ணமர்ந்தார்விரிதிரையாழிசூழ், மண்ணமர்ந்தார்மருவுமகன்றகீழ்க்
கண்ணமர்ந்தார்க்குழுவாய்க்கலந்துமே,தண்ணமர்ந்தபொழிற்றலஞ்சார்ந்தனர்.

முழுதுணர்ந்தமுனிவர்முனிவிலாப், பழுதுறுதபரசிவபூசைசெய்
திழுதுபோலுமுருகுமினியவர்த், தொழுதுபோற்றிடத்துன்னிநெருங்கினர்.

ஆயகாலையமலனருஞ்சிவத், தூயனுக்குஞ்சுடர்மணிப்பூண்புனை
வேயுறுந்தோள்விமலைத்தனையர்கட், பாயும்வெம்புகழ்த்தண்டிப்படையொடு.

தத்தம்வையந்தனிலிவரச்செயா, பத்தர்போற்றிப்படருமருகினிற்
சுத்தமாதருஞ்சூழ்ந்துமயங்கிடச், சத்திபாகன்வருவிதஞ்சாற்றுவாம். (௬)

## வேறு.

பூதவினப்படைசூழும்புனிதக்கோவும்புத்தனிச்சம்படிற்றுங்காப்புனிதச்
செய்யப், பாதவிருபோதுடையபனாயுமேனைப்பரிவாரத்தேவருலாவருதலா
லே, சீதமலர்ப்பொழிலதிகைநகரைமிக்கச்சிறப்புமிகவலங்காரிமினெனவேயங்
குக், காதமுறப்பறையறையவித்தரனந்தக்கனத்தநகர்வாசியெலாங்களித்தார்
மன்னோ. (௭)

விடங்கமவர்வீதியினிற்றூக்கிப்பின்னர் வெயிலுமிழுமகரிகையும்விண்
ணிற்றூக்கி,நுடங்குமணிப்பித்திகையைப்புதுக்கிப்பின்னர்நுவலுமவர்மனைவா
யிற்பந்தரிட்டுத், தடங்கமழும்வீதியினிற்பனிநீர்த்தூவிசாற்றுநறுமலர்த்தூவிச்

சார்ந்தருய, விடமருவும்வீதியெலாங்குங்குமத்தாலினிய திருக்கோலமதையிய
ற்றினரால். (அ)

மணிவாயிற்றெரு † நிறைந்தகும்பந்தன்னை மருவவைத்துமாந்தரெலா
மகிழ்ச்சிகொண்டு,பணிபூண்டுவவரவர்கண்மனைகடோறும்பண்ணார்ந்தவாத்திய
முழுழங்கச்செய்து, யணியோங்குமதிகைநகர் மாந்தரெல்லாமரியசிவனோலக்
கங்காணவேண்டித், தணிவாகுமுளத்தோடுசூழ் இத்திரண்டுசெங்கரன்றன்றிருக்
கோயிற்சார்ந்தாரன்றே. (௯)

இவ்வணமக்கூட்டமெலாஞ்சென்றுசூழ்ந்து வினிய திருவீரட்டவிறையு
ந்தெய்வத், தவ்வையெனுமிறைவியவட்டனையர்சூழச்சார்ந்து திருவீதியுலா
தகைத்துச்செல்லச், செவ்வண்ணப்பெருமான்றன்பெருமையெல்லாஞ்சேர்ந்
துதரிசித்தேகித்திரண்டுசென்று, ரவ்வண்ணப்பெருவியலையறிந்தமட்டுவளவு
படவுரைப்பனெனவறைவான்சூதன். (௰)

## வேறு.

நடமார்பதமுறமுயல்வார்களியுறநகமாதினையொருபுடையாகத்
தடமார்குமரனுமிபமார்முகமொடுதகுவீரனுமிருபுடையாயுற்
றுடனார்தந்தையினிருதாட்சிதையுறவொருவாளதையிடுவொருமைந்தன்
படையாரிவரொடுபரிவாரத்துடன்பதியானவன்வெளிவந்துற்றான். (௧௧)

அகல்வானதிலுறுகதிர்மீதணைவுறவணுகும்விடதரமெனவாடி
நிகமார்கொடியிருபுடையும்மிளிர்தரநிலையாகியகுறட்பெருபூதம்
பகலாமொளியெனவணிபூணணியிடைபலமார்குழலியரணியாய்நின்
றிகலாரிகுளையரிடுசீகரமதையினிதாய்வீசினரிருபாலும். (௧௨)

கலையான்முகபடமுறுமாகளிறதைக்களிவாதுவர்மிககடிதாகக்
கலைமாகளிறதைநடையாய்க்கொடுசெலபயிலாரொழுகியகடைநீடு
தலையாய்மறுகுறுதுகளின்றிரளதைத்தணிவித்திடுமிதுபெருகிப்போய்
தலைவேல்விழியவர்நடையாய்சிலகரியேகிற்றம்மறுகியல்சார. (௧௩)

வெயில்வீசிடுகலனழியுங்குழலியர்விழவின்பொலிவுறுநசையால்வந்
தயிலாமழகியகணைகண்கொடுவுறவதனான்மிடைகனிக்குழுவாலே
பயினீண்மருகினிலொளிசேர்க்கலனதுபலவீழ்ந்திடுமதைப்பல்லோர்கட்
செயலார்பதமுறபொடியாய்மணலொடுசேரும்பலகலன்விழவாலே. (௧௪)

அருமாதவர்புகழ்ப்புரியுந்துதியொடுவவர்பான்மிடைகுழன்மடவாரப்
பெருமாகுழலுறுமரியும்புகலுவபெரிதாங்கீதமுமினிதாக
மருமாகதரொடுமறையோர்பற்பலர்வந்தித்தொடுமொலிமருவிப்போய்
யிருமாகடலொலிதன்னின்மிக்கொலியென்னச்சென்றனயிவ்வோசை. (௧௫)

கண்ணுயிரமுறுமகவானிறையவன்கண்சூழ்மாகருங்களிகொண்டு
தண்ணுமலரிருகையிற்கொடுசொரிதருவின்மலர்நிறைமறுகூடே

பெண்ணாயிரவருமிதியாசெல்லுழிபெருவீதியிலதுசேறாகப்
பண்ணார்மொழியிழைப்பதமுந்துகளொடுபரவிப்பொலிவனபலனோடு. (௧௬)

துதியிற்பாடிகொடுபுகல்வார்சிற்சிலர்ச்சொல்லாற்போற்றுவர்சிலரங்கண்
மதியிற்பொலிவிசைமொழியிற்புகலுவர்மன்னும்மறைகொடுபயில்வாராற்
கதியிற்பொலிபரிதிரளிற்பொலிவுறுகணமாவீரருமினிதாகப்
பதியின்விழவொலிமறையப்பறைகொடுபயில்வார்பற்பலமறவீரர். (௧௭)

## வேறு.

இன்னணம்விழவின்மிக்கவெந்தையுங்கோலங்கொண்டு
மன்னியமாந்தர்ப்பல்லோர்சூழ்ந்திடமறுகிற்செல்ல
துன்னியமடவார்பல்லோர்த்தூயவெண்ணிறைவற்கண்டு
யுன்னியகாமவேட்கையுற்றதையுரைப்பாமன்றே. (௧௮)

தேங்கமழ்மலர்சூழ்கூந்தற்செய்யவாய்ச்சாந்தமப்பி
வீங்கியகொங்கையோர்பெண்விமலனதியலைக்கண்டு
வாங்கியகருப்புவில்லன்வலிநிலையறநீவாட்டற்
றீங்கதுசெய்ததென்னயுரையெனச்செப்பிநின்றாள். (௧௯)

விதிதனதாற்றலோடுவிளங்கியவடிவோர்கன்னி
நதியணிந்திறையைநோக்கிநகைத்திதுவிசைப்பணியும்
மதிதனையணிந்துமெம்மைமதித்திலைமனதிற்சற்றுங்
கதியதன்சத்தார்த்தத்தைக்காண்கெனவுரைத்துநின்றாள். (௨௦)

தேன்மொழிகருங்கட்செவ்வாய்ச்செப்பெனுமுலையாளேனை
வான்மொழிக்கனியைநோக்கிவழங்குவள்வள்ளலெம்மைப்
பான்மொழியான்விளித்துப்பரிந்தணைந்திடுவானென்று
நான்மொழிந்திடுவேன்நாரிபாகனென்றுரைக்குமாற்றால். (௨௧)

ஒருத்தியின்முலையைநோக்கியொல்லெனமீண்டாரென்பா
ளொருத்தியின்கனிவாய்க்கண்டியுன்னியவேட்கையாலே
பருத்ததன்வடிவுமாடப்பரந்தனனென்பாளிந்தத்
திருத்தியவிழையார்பேசச்சென்றனர்மறுகினூடே. (௨௨)

இன்னணமடவார்கூறவெந்தையும்விழவுபொங்கித்
துன்னியகாலைமாலைத்தோன்றிடுவிழவுசெய்து
யுன்னியவழியேயிந்தவகையுடனேரேழ்நாளும்
பன்னியவிழவுதன்னைப்பத்தியாற்புரிந்தான்மன்னோ. (௨௩)

பெற்றியாய்ச்சோதித்தேரின்பேரினிலேற்றிமிக்க
நற்றவக்குழாங்கட்சூழநலமிகுமிரதமீர்த்து
வற்றைநாட்செல்லப்பின்னரடுத்தநாட்டீர்த்தந்தன்னுட்
கற்றவர்சூழத்தீர்த்தவாரியுங்களித்துச்செய்து. (௨௪)

அன்றிரவதனிற்றூபதீபமுமபிடேகத்திற்
கொன்றியகருவிகொண்டுவுயர் திருவதிகைவாழு
மன்றவர்க்காட்டிப்பின்னர்மகிழ்ந்துடல்வணங்கிநின்று
கன்றினைநீத்ததாய்போற்கதறினன்பெரியோனம்மா. (உரு)

அரியவன்பழிச்சும்வார்த்தையண்ணலின்செவியிற்சார
யுரியவவ்விலிங்கந்தன்னுளூற்றெழுந்தருளினூராற்
பெரியமால்வரையயந்தபெண்ணொடுமழுமான்கொண்டு
விரியுமநற்சடையுந்தூயவிடையதின்மீதிற்றோன்றி. (உசு)

விடையினிற்றோன்றிநின்றவிமலனைவிண்ணிற்கண்டு
படிமிசைவீழ்ந்துபோற்றிநின்றிடப்பரமனோக்கி
துடியிடைப்பெண்ணோடுற்றத்துணைவனுன்வேட்கைதன்னை
யடைவுடனோதுகென்னவன்னவனறைவானங்கண். (உஎ)

ஐயனேபோற்றியெந்தனறிவிலேநின்றோய்போற்றி
செய்யனேபோற்றியென்றன்சேல்விழியுருவைமாற்றும்
மெய்யனேபோற்றியோங்கிமேலெழுவெரிதீக்கொண்ட
கையனேபோற்றிபோற்றியென்றிதுகழறுவானால். (உஅ)

அடியனேன்செய்புன்பூசைக்கையனீயுவந்ததுண்டேன்
முடிவிலாவதிகையென்னுமுதன்மையித்தலத்துள்வந்து
கெடிலமென்றுரைக்குந்தூயகேழ்நதித்தன்னின்மூழ்கிப்
பொடிதிருநீறுபூண்டுபொற்சினகரத்துள்வந்து. (உகூ)

மனமொழிமெய்கண்மூன்றும்வருந்தவோர்தவமியற்றி
முனம்நினைவழுத்தும்தொண்டர்முச்சுடர்த்திரண்டதென்ன
வனமுறுகைலைவெற்பின்வாழ்வினையளித்துத்தீய
வினையினையறுத்துன்பாதவீட்டினையருளல்வேண்டும். (௩0)

கங்கையென்றுரைக்குந்தூயகடிலநன்னதியுண்மூழ்கும்
மங்கையர்ப்புருடர்மைந்தர்மறம்பயில்யாந்தர்வஞ்சப்
புங்கமில்மூங்கைநோயர்பொற்புருப்பில்லாரேனை
யிங்கெவர்மூழ்கினாலுமின்கதியுறுதல்வேண்டும். (௩க)

செல்லுழிசிகரிகண்டோர்ச்சிறந்திடுநற்சாலோகம்
நல்லொருதினத்தில்வந்துகண்டவர்நற்சாமீபம்
பல்லருந்தினத்தில்வந்துபரவினரொருசாரூப
மில்லுறவசிப்போரிங்கணிணையடிகலத்தல்வேண்டும். (௩உ)

புண்ணியமனுவேயிந்தப்பூதலத்தாற்றிலந்தப்
புண்ணியமலையேயாகிப்பொற்புறவாறுடெய்திப்

புண்ணியவரசராகிப்போகமுமுண்டுபின்னர்ப்
புண்ணியங்கமழும்நின்றன்பொன்னடியுறுதல்வேண்டும். (௩௩)

தனையரைக்கொன்றபாபந்தம்பியைக்கொன்றபாப
மனையரைக்கொன்றபாபமப்பரைக்கொன்றபாப
மனையவட்கொன்றபாபமாதுலர்க்கொன்றபாப
மினையவெங்கொலைகணின்னைகண்டிடிவிரிதல்வேண்டும். (௩௪)

இத்திருவதிகையுற்றயினியபுற்பூண்டுவானை
வத்திமாகதலியானதருக்களுமரியநட்பத்
துத்தியாஞ்செடிகளேனைக்கொடிகளும்நினதுதூய
சுத்தமாய்நினதுபோசாந்துணையடியுறுதல்வேண்டும். (௩௫)

கொலைபயில்நெறியில்நின்றமறவருங்கொடியதான
கொலைபயிற்பூசைகீறிகொடியவெவ்விலங்குமுற்றுங்
கொலைபயில்நெடுமனாதியூர்வனவெல்லாந்தூயக்
கொலையறுதுறவோர்போற்றும்நின்னடிக்குறுகல்வேண்டும். (௩௬)

மண்ணினைவிரும்பினாலுமக்களைவிரும்பினாலும்
விண்ணினைவிரும்பினாலுவிரும்புபொன்விரும்பினாலும்
பெண்ணினைவிரும்பினாலும்பெரும்புகழ்விரும்பினாலுந்
திண்ணமாய்நினைநினைக்கிற்றிரளுடனளித்தல்வேண்டும். (௩௭)

பேசருஞ்செவிகளில்லார்ப்பித்துறுங்கொள்கையாளர்
வாசகமில்லாநோயர்வருந்திடுகுட்டநோயர்க்
காசுறுவிழிகளில்லார்க்கையிருகாலுமில்லார்
மாசுறுமனத்தர்க்காணில்நின்னடிமருவல்வேண்டும். (௩௮)

பலவிரித்துரைப்பதென்னேபண்ணவவுறையுஞ்செய்ய
விலையறுமணிப்பொற்கோயில்விளங்கியபொருட்கவர்ந்தும்
நலமுறுநினைப்பழித்தும்நனிசெயுந்தீங்குமேனை
வலமுறுதீங்குங்காணில்நீக்கெனவீழ்ந்தானங்கண். (௩௯)

அங்கவன்வீழ்தலோடுமண்ணலுமருளினோக்கிப்
பங்கமிலனைத்தும்நல்கிப்பரசிவலிங்கபூசை
யிங்குநீபூசியென்னயியம்பிபின்னிலிங்கத்துற்றான்
றங்கியவிலிங்கம்வேறுவக்கணந்தாபித்தானால். (௪0)

அச்சிவலிங்கந்தன்னையன்புடன்வணங்கிப்போற்றி
அச்சிவலிங்கத்தின்பான்மாதவனருட்பெற்றானும்
அச்சிவலிங்கந்தன்னையன்புடன்வணங்கிற்றூய
அச்சிவலிங்கந்தன்னாலருங்கதிபெறலாமன்றே. (௪௧)

முனிவிலாமுனிவரெல்லாஞ்சூதமாமுனியைப்போற்றி
யினிவுறுகாதையின்னுமியம்புகவெனவியம்பப்
பனிமலைவல்லிபங்கனருளினைப்பணிந்துபோற்றிக்
கனிவுடன்கேட்கவென்றுகழறுவன்சூதமேலோன். (௪௨)

திருவிழாப்படலம் முற்றும்.

ஆக திருவிருத்தம் ௪௯௧.

---

# பிரமன் பூசித்த படலம்.

மருணீக்கியெனும்பெயர்முன்னைசுத்தமாயாகாரியமதாய்மன்னு
மொருநீக்கியென்பதனுண்மாயாதீதமதாகியுறுதலாலே
பொருணாடியருள்மணக்குமடியாரின்குழுவதனிற்புறம்பாய்நின்று
வெருவுமிந்தத்தியனுக்கும்வீடளிப்பார்வியனையபெயர்வகித்தார். (௧)

## வேறு.

முன்னமோருகம்முனிவரர்வானவர்முதலாம்
மன்னியுற்றிடுவவையினின்மாலயனிருவர்த்
தன்னிலாக்குறுந்தொழிறனக்குளதெனத்தருக்கி
யுன்னிமிக்கவனானெனப்பிரமனுமுரைத்தான். (௨)

மாற்றமன்னதுசெவிபுகமழுபுகுந்தென்னச்
சீற்றமோடரிகண்சிவந்துரைத்திடுஞ்செய்ய
நாற்றமுற்றிடுமரைமலர்நாயகன்றன்னை
வாற்றலோடுவெம்மாயவனோக்கினனறைவான். (௩)

ஆக்குறுந்தொழிலொன்றினுக்குடையநீவாக்கிக்
காக்குறுந்தொழிலிரண்டினைப்படைத்தவென்கண்முன்
னோக்கமற்றுநீபுகன்றனைநுவலரும்பெரிய
வோக்கமுற்றிடு†தாழையுமுன்னைவிடப்பெரிய. (௪)

நாற்றலைநமக்குளதெனநவின்றனைபோலு
மூற்றுறுமசுராதியருனைவிடப்பெரிய
ரேற்றநல்வழக்குரைத்தனையிருக்கினும்நால்வாய்
யாற்றலோடதைநிச்சயித்துறிதலுமரிதே. (௫)

பகருமச்சொலைக்கேட்டலும்பாரதிக்கொழுந
னகமுருக்கியசினந்தொடுமறைகுவனந்தோ

---

†தாழை-தென்னை.

யிகம்விண்பாதலமுதலியவண்டமுமியற்றித்
திகழும்நான்மிகப்பெரியனென்றுரைத்திடத்திருமால். (௬)

நாட்டம்பற்பலவிருந்தும்நீநம்பெயர்நெடியோன்
காட்டுகின்றதுநூலினுங்காணெனக்கமல
வீட்டிலுற்றிடுவிதிமனங்கலங்கவும்விளம்பி
வீட்டுறும்விதிகலங்கவுமுரைத்தனன்விண்டு. (௭)

மற்றுமவ்விதிப்பெரியவனானெனமதித்துச்
சொற்றசொல்லையேபெரிதெனப்புகன்றுபின்றுன்னி
கற்றசொல்லெலாமிருவருமிங்ஙனங்கழறி
முற்றுமன்னவர்வாதமிட்டுற்றனர்முடுகி. (௮)

ஆயகாலையினீலகண்டப்பெருவண்ணலு
மேயசோதியந்தாணுவாய்மேலுறநோக்கி
மாயவன்விதியிருவரினுப்பணில்வந்துத்
தூயவண்டமும்பாதலமுருவிடத்துன்னி. (௯)

வாதமெற்றிவணிவ்வருஞ்சோதியின்வயங்கும்
பாதமீமிசைமுடியிதைப்பார்ப்பவரெவரோ
நாதனாய்மிகப்பெரியவரவரெனநவின்ற
சீதவாக்கசரீரியாய்க்கேட்டனர்த்திறமாய். (௧௦)

அந்தசோதியின்முடியதைக்கண்டிடவனமாய்
யந்தணனுருத்தாங்கினனண்டமுமப்பாற்
சந்தமண்டலம்பற்பலபரந்தவன்சார்ந்து
மெந்தைமாமுடிகிடைத்திலவதிசயமெய்தி. (௧௧)

பின்னுமீமிசைப்பரப்பவும்பிஞ்ஞகன்றனது
மன்னுமாமுடியிருந்தொருதாழையின்மலர்வந்
திந்நிலத்திழிதரவதைக்கண்டவனினிதாய்
யுன்னிதன்வயப்படுத்தினனோதிமமுயர்த்தோன். (௧௨)

தாணுவின்முடிக்கண்டதற்கிதையொருசாட்சி
மாணநிற்கவுமுரைத்துபின்றாழையின்மலரைப்
பூணுறுதனதுடன்கொடுபோந்தனன்பொய்யன்
நீணிலத்தினில்வாழ்வதுநிசமெனப்படுமோ. (௧௩)

சாட்சியம்மலர்க்கூறவுமெம்மிறையிதுபொய்ச்
சாட்சியென்றதன்றீங்கையுந்தன்னுளத்தெண்ணிச்
சாட்சிபொய்படக்கூறியதாழையைநோக்கி
வாட்சியற்றனைநீங்குகவென்றனரன்றே. (௧௪)

பின்புபொய்புகற்பிரமனைநோக்கினன்பெரியோன்
வன்புபொய்சொலத்துணிந்தனைவயங்குமிவ்வுலகி
லன்புசெய் திருக்கோயிலுமுனக்கிலையாக
வென்பணிந்திடுமிறையவன்சபித்தனனெளிதில். (கரு)

சபித்தசொற்றனைக்கேட்டலும்பிரமனுந்தயங்கி
வபத்தமிங்ஙனஞ்சொற்றனமையவோவென்று
விபத்துவந்ததென்செய்குவம்நாமெனவீழ்ந்து
வுபத்தமுற்றிடுபெண்ணெனக்கதறினனுரைப்பான். (கசா)

பொய்யுரைப்பதுபாதகத்துண்மிகப்பொலிந்தப்
பொய்யுரைத்திடில்புலவனும்புல்லனையொப்பான்
பொய்யுரைத்திடிற்புல்லியருமலியைப்போல்வான்
பொய்யுரைப்பவன்பனவனேயாயினும்புலையன். (கஎ)

பொய்சொலத்துணியாதொருபூவரசனும்யான்
பொய்புகன்றனம்புண்ணியமனைத்தையுந்துடைத்தோம்
பொய்புகன்றனன்பிரமனுமெம்மனோர்புகன்றற்
பொய்யுறாதெனுந்துணிபையுமாக்கினன்புலையன். (கஅ)

உலகிற்சந்திரற்கதிரவனுள்ளநாள்வரைக்கு
மிலகிநீங்கரும்பழியுறுமென்செய்வோமென்று
வலகிலாப்பழிபாவமேயையகோவந்தோ
கலகமுற்றனங்கயவரிற்கயவராய்க்கலந்தோம். (ககூ)

என்றுபற்பலவாறவனிரங்கிபின்வருந்த
மன்றுளோனருட்கொண்டுபின்மன்னியேயுரைப்பான்
யின்றுநீபுகற்பொய்ப்பழியிரிந்திடுமதற்கு
நன்றுநல்லதிகைத்தலம்நயப்புடன்சார்ந்து. (உ௦)

கெடிலமானதிவிதியுடன்மூழ்கிபிற்கேடிற்
படியிலத்தலமோங்கியபரசிவபூசை
முடியவாற்றுதிவகன்றிடும்பாதகமுழுதுங்
கடிதுசென்மெனப்புகன்றனன்கறைமிடற்றண்ணல். (உக)

இறையின்றீஞ்சொலைக்கேட்டலுமினியவப்பிரமன்
மறையுணர்ந்ததன்வாக்கினால்மலர்முடித்தூயக்
கறைநற்கண்டனைப்போற்றுபுகறையரும்பெரியோ
ருறையுநல்லதிகைத்தலமுற்றனனுவந்தே. (உஉ)

## வேறு.

ஆடகங்கொழித்தோங்குமலைதரு, நீடுதண்புனலோடுநிலைபெறும்
பீடுதங்கியபெட்புறுதெள்ளிய, வீடளிக்குங்கெடிலவியநதி. (உங)

அந்தநன்னதிமூழ்கியயனுமே, புந்திதன்னிற்புனிதசிவமதைச்
சந்தமாய்நிரீஇசார்திருநீற்றினை, சிந்தையிற்றுதிசெய்திடக்கையினால். (௨௪)

வைத்துமூடியயங்குமனுவெனுஞ், சுந்தமந்திரமானதமாய்ச்சொலி
வித்தகத்திருநீற்றினைமெய்யினில், பத்தியாகப்பரவிடப்பூசினன். (௨௫)

வேதவாகமஞ்சொல்லும்விதிப்படி, நீதிலாச்சிவபூசைபுரிந்துமே
வேதியன்களித்தாற்றிவிதியுடன், சோதிவானவன்கோயிலைத்துன்னினான். ()

அங்கட்சென்றுவரியசிகரியிற், றுங்கமாகவிழுந்துதுயருற
வங்கமைந்துவட்டாங்கமூவாங்கமும், புங்கயன்பணிந்தானெழுந்தானரோ. ()

தலையிற்கூப்பியநற்கரந்தன்னொடு, மலைமருகராமன்னரையுட்கொடு
கலையறிந்தநற்கன்னிமணாளனுந், தலையகன்றதலனுழைந்தானரோ. (௨௮)

முன்னமானைமுகத்தனைப்போற்றியே, வன்னவன்கழல்வீழ்ந்துவலறுபு
விண்ணிலவுவிமலனடியதைச்,சென்னிவைத்துத்துதித்தனன்செம்மலும்.(௨௧)

திட்டமாயுட்புகுந்துதிறமதாய், யட்டவீரட்டமாயவமலனை
சிட்டர்போற்றிடுஞ்சின்மயதேவனை, நட்டமிட்டுத்தொழுதனன்நன்மையாய்.

பெரியமூர்த்தியாம்பிஞ்ஞகநாதனை, யுரியதோத்திரமாதியுரைத்துமே
துரியவீரட்டநாதரின்றாய்பத, மரியதன்முடிசூட்டினனந்தணன். (௩௧)

பின்புவங்கண்விடைபெறுபிஞ்ஞகன், வன்புகொண்டுவதன்குணபாவினி
லென்புபூண்டவிறையையமைத்துமே, துன்பமிற்சிவபூசைதுலக்கவும். (௩௨)

## வேறு.

மருவாருமலர்நிறைந்தசக்கரமாந்தீர்த்தத்தின்மருவியாடி
பொருவாருந்திருநீற்றையுடன்முழுதுமணிந்துபொலிவடமும்பூண்டு
திருவாருமைந்தெழுத்தைமானதமாயுட்கொண்டுதிகழுந்தூய
தருவாருமலர்நிறைந்தநந்தவனத்துட்புகுந்தான்சயம்புநாதன். (௩௩)

பழையமலர்முகையவிழாப்பனிமலரும்நேற்றலர்ந்தபருத்தபூவும்
முழுதுதிர்ந்ததனிப்பூக்கண்முதலியனநீக்கிபினர்முறையதாக
யிழுதெனநெக்குருகியநல்லுளத்தோடுசிவபெருமானியலைப்போற்றி
பழுதகன்றபூக்குடலைக்கைக்கொண்டுபலபூக்கட்பறிப்பானானன். (௩௪)

மந்தாரைஞாழலொடுவொமலகம்வகுளமொடுவில்வந்தூய
சந்தாரம்பாடலமாம்நந்தியாவட்டமொடுநயங்குங்கொன்றைக்
கொந்தாரும்பழக்கொன்றைநீர்மிட்டான்செவ்வகத்திகுலவுங்காஞ்சி
பொந்தாரும்வழைப்பூவுங்கூதாளம்நீர்முள்ளிபொலிபுந்நாகம். (௩௫)

வன்னிபொன்னூமத்தைகுசைவருபொன்றுவிரைகூத்தன்குதம்பைவேங்
விண்ணிலவுகுருந்துகொக்குமந்தாரைசெவ்வலரிசெருந்திவீசும் [கை

பன்னுபலாசொடுபெட்டிசெவ்வரத்தம்பன்னீர்வெட்பாலைதான்றி
மன்னும்வெள்ளிலோத்தம்விளர்நாயுருவிபூளையொடுமாவிலிங்கம். (௩௬)

சீர்விளங்குபருத்தியசோகம்பெரியதாமரையுஞ்சேர்த்துரோண
மேர்கருவிளங்குவளைமாமருவுமருக்கொழுந்துயிலங்கருக்கம்
வார்மருவுவெண்காக்கணந்துழாய்வரிகாந்திவளத்தவெட்சிப்
பார்மருவுவெட்டிவேர்சதகுப்பிசெங்கீரைபருத்தவாம்பல். (௩எ)

ஒருதளிர்நற்றாமரைமல்லிகைகிளுவைகுச்சுப்புல்லோங்குதூய
வருவிலாமிச்சைவேர்சிறுகண்டங்கத்தரியும்வயங்கும்வாகை
பெருவழிஞ்சில்கதிர்காந்தியெனுமிச்சைவழுதுணையும்பெருகுநாவற்
கருஞ்செம்பைநறுந்தாளிவதரிகருங்காலிசிவகரந்தைசாலி. (௩அ)

அறுகலரிவெற்றிலையுங்குளவியொடுபுலிதொடக்கியானவெல்லாந்
துறையகன்றபூக்குடலைதனிற்பெய்துதூயவிடந்தன்னின்மேவி
கறைகலந்தகண்டனுக்குவிணர்தொங்கலிண்டைமுதற்கவினச்செய்து
நறையகன்றவபிடேகத்திரவியமுமுழுதுணர்ந்துநன்குதேர்ந்து (௩௯)

தயிலவாமலகமொடுமாப்பொடியுமரிசனச்செஞ்சாந்தந்தூய
வியலாவினையமுதமினியதேன்பசும்பாலுமினித்தநெய்யும்
வயலாருங்கழைச்சாறும்பசுந்தயிருமெலுமிச்சைதமர்த்தைமன்னும்
வியனுருபஞ்சாமிர்தமிளநீருங்கதலிமாங்கனிவிளங்கும். (௪0)

வளமருவுமிவையமைத்துநற்கலசம்படலிகைவட்டகைதூபக்காற்
றளமுறுகொப்பரிகும்பமடுக்கியதீபக்காலுங்கிளைகட்சார்ந்த
நளமுறுகற்பூரமுறுநற்றட்டுமுதலாயநவிலுஞ்செய்ய
வுளமருவுமாராதனைக்குரியகருவியெலாமொருங்கேதேர்ந்து. (௪௧)

கொடிசிகரம்பெரியகுடையாடிசிவிறியொடுகோதற்றோங்கும்
மிடைகாந்திவெட்டெறிக்குமணிப்பூண்கள்குண்டலங்கள்மிளிருஞ்செ
வடமாதிகேயூரமாலையொடுபெரிவட்டம்வயங்குந்தூசு [ய்ய
திடமானவியமுழங்கச்சிவபூசைசெயத்துணிந்தான்றிருத்தமாக. (௪௨)

முன்படிந்தசக்கரதீர்த்தக்குளத்தின்முழுகிதிருநீறுகொண்டு
தன்பெரியமெய்முழுதுமணிந்துவிதிவழியாலேதயங்கும்பூசை
யென்பணியுமிறைக்குமுதற்புண்ணியாவாசனமுமியற்றிமேலோன்
பின்பிலிறைக்குப்பூசைசெயத்துடங்கினான்பிரமனுமிப்புவனம்வாழ. (௪௩)

எம்மிறைக்குமம்மைக்குமிலங்குமிருகும்பத்தையிலங்கவைத்து
விம்மியநற்பத்தியொடுமர்ச்சனையும்பலபுகன்றுவிளங்கச்செய்து
செம்மைமிகுவக்கினிகாரியஞ்செய்துதிருவெழுத்தைத்திகழவாங்கே
யம்மலிடுங்காலத்துமானதமாயக்காலம்பரிந்துபோற்றி. (௪௪)

சுத்ததிருநதிபூசைபூதசுத்தியான்மசுத்தியிலிங்கசுத்தி
சத்துமிகுதானசுத்திசுத்திதிரவியமைந்துஞ்சாரச்செய்து
பத்தியொடுபாத்தியமுமருக்கியமுமாசமனம்பண்ணிப்பின்னர்
முத்தசிவசத்திமுதன்மிகுபூசைதன்னையவண்முறையோடாற்றி. (௪௫)

பின்னராவாகனமுமருக்கியமுந்தாபனமும்பெட்போடாற்றி
நன்னராதனமியமந்தாரணைதியானமொடுநவிற்சமாதி
மன்னுபிரத்தியாகாரம்பிராணுயாமம்நியமம்மருவுநியாச
மென்னுமிவையியற்றிபினபிடேகமாட்டுவானெழுந்தானம்மா. (௪௬)

மிக்குநீர்நெய்மாவின்பொடிமஞ்சட்பொடிமுள்ளிப்பொடியுமேவுந்
தக்கவானைந்துதேன்பாற்றயிருருக்குநெய்சாருமைந்து
புக்கமிர்தமாதுளைதமர்த்தையெனுமிச்சையின்புனிதச்சாறு
முக்கனியுங்கன்னலிளநீரோடுபோனகமுமுயங்குபன்னீர். (௪௭)

சந்தமிகுவில்வநீர்கலத்தசகத்திரதாரைதருவெண்ணீறு
வந்தமிகுகங்கைதனையிடையிடையேவபிடேகமாற்றிப்பின்னர்
நந்தவிலாத்தபனநீராட்டிநிவேதனமாதிநயப்பவாற்றி
பந்தமுறத்தூசுடுத்திப்பரிவட்டமாதிகளைப்பரிவாய்க்கட்டி. (௪௮)

அணிகிளருமாலைமதாணிப்பதக்கங்கேயூரமரியதான
மணிகிளருமாபரணமணிந்துதிருநீறணிந்துமலர்த்தொடுத்த
பிணையல்களுந்தொங்கல்களும்முதலாயமாலைகளைப்பிறங்கச்சாத்தி
வணந்திக்கலந்தவனம்புளியன்னஞ்சித்திரமும்வடைகளாதி. (௪௯)

முப்புடைநற்காயுடைத்துமுக்கனியின்பலருவியல்முன்னம்வைத்து
செப்பரியவினிமைமிகுமோதகமுந்ததிமோருந்தெளிந்தநன்னீ
ரொப்பகன்றவிளநீருமொவ்வொன்றுய்ப்பபற்பலவுமொளிரவைத்து
வப்பிரமனெம்மிறையின்முன்னின்றுதாம்பூலமாதிநல்கி. (௫௦)

அரியநறுந்தூபமுதல்மேலடுக்குத்தீபமுதலடுக்காலத்தி
விரிவுதருகிளைசூழ்ந்தகற்பூரத்தட்டுபினர்விளக்குத்தீபம்
பரவுதிருவாராதனம்புரிந்துபனிமலர்க்கைகொண்டுதூவி
விரவுநீராஞ்சனமும்விதியாற்றிவிருப்புற்றவுள்ளத்தோடு. (௫௧)

பின்னர்பளிதங்கொளுத்திக்கண்ணேறுகழித்தவுடன்பிறங்குநீற்றை
மன்னியுறவணிந்தாடிகவரிகுடையாலவட்டஞ்சிவிறிமாண
வின்னிலவமுன்வயக்கிநித்திலவக்கதைசாற்றிவிருப்பினோடு
தன்னரியவிறைக்குமலர்சகத்திரவர்ச்சனையாதிதயங்கச்செய்து. (௫௨)

சிலமலரைக்கையிலெடுத்தெம்பெருமானைந்தெழுத்தைசிந்தையுன்னி
லவியநன்மனத்தோடுமோனமாயுச்சரித்துயுமைமணாளன்
நலமுறுநற்றிருவடியிற்சாத்திபினர்வெளிவந்துநன்மையாக
தலமதனிலமர்ந்துமனந்தனிநின்றுவசைவற்றுத்துதிப்பான்றூதா. (௫௩)

## வேறு.

பாரோங்குமுயிரனைத்தும்பாந்தளினாலிறவாது
தாரோங்குந்திருமிடற்றிற்கடுவைத்ததற்பரனை
சீரோங்குந்திருவதிகைமேயசிவபெருமானை
வாரோங்கவுண்ணினையாமனமென்னமனமே
வள்ளலடிநினையாதமனமென்னமனமே. (௫௪)

வல்லானைப்பூவுலகமாரதமாய்மேரு
வில்லானைத்தென்மதுரைமீனவனுமகிழக்
கல்லானைக்கரும்பருந்தகடைக்கணித்தபதியை
வல்லானைத்துதியாதவாயென்னவாயே
மாதேவன்றனைத்துதியாவாயென்னவாயே. (௫௫)

கரியானைக்கணைசெய்துகனத்தபுரமூன்றை
யெரியாலேநகைத்தெரித்தவெந்தாயைமுற்றும்
பெரியானைப்பிஞ்ஞகனைப்பித்துறுவார்மனதிற்
றரியானைவணங்காததலையென்னதலையே
தற்பரனைவணங்காதத்தலையென்னதலையே. (௫௬)

செய்யவன்றீமழுப்படையுங்கலைமானுஞ்சேர்ந்த
கையவன்மாமுப்புரத்தவரக்கர்கருவருத்தத்
துய்யவன்சத்தாயசிவதுரியநிலையவனை
நொய்யவன்றன்னீறணியாநுதலென்னநுதலே
நோயிலியின்னீறணியாநுதலென்னநுதலே. (௫௭)

தத்துவனாய்த்தத்துவத்தின்முடிவதனிற்றயங்கு
மத்துவிதமாயகத்தும்புறத்துமகலாத
சுத்தனுமாய்த்துரியனுமாய்த்தூயவுபநிடதக்
கர்த்தனுருநோக்காதகண்ணென்னகண்ணே
கடவுளுருநோக்காதகண்ணென்னகண்ணே. (௫௮)

பொம்மல்மிகுவானாடர்மண்ணாடர்ப்பொலிந்த
விம்முபாதலநாடர்முதலியவர்விரவி
தம்முளன்பொடுவணங்குந்தனித்ததிருவதிகை
செம்மற்சீர்க்கேளாதசெவியென்னசெவியே
தேவன்சீர்கேளாதசெவியென்னசெவியே. (௫௯)

கதியளிக்குமுக்கணனைக்கம்பகனுமற்றோர்த்
துதிபுரியும்படிநின்றதூயவனைமறைகட்
பதியென்னத்தொழுதோங்கும்பசுபதியைக்கங்கை
நதியணிவான்றனைநவிலாநாவென்னநாவே
நமச்சிவாயாவென்னாநாவென்னநாவே. (௬௦)

கடவுமால்விடையுடையநம்பனைநன்னீறு
தடவுமேனியையுடையசங்கரனைநினைந்து
விடவரியபெருமானைமேவுதிருவதிகை
கடவுடனைப்பணியாதகையென்னகையே
காலகாலனைப்பணியாக்கையென்னகையே. (௬௧)

மூமலமறுத்தோங்குமொருமுதற்பொருளாமூவா
விமலமதிகைத்தலத்தின்வீற்றிருக்கும்பதியை
கமலவடிதனையுடையகடவுளருபோர்ந்த
வமலசினகரஞ்சூழாவடியென்னவடியே
அதிகையானைச்சூழாவடியென்னவடியே. (௬௨)

கன்றிசைவகொடுதாயைநினைத்துகதறுவபோன்
மன்றிசையிற்பாடுதிருமாதவருந்துதித்து
தென்றிசையிற்கங்கையெனுமநதியென்றுசிறந்த
யொன்றுயவிந்நதிசூழ்காவுடப்பென்னவுடம்பே
உத்தமனன்மணிபுனையாவுடம்பென்னவுடம்பே. (௬௩)

அரியவினைதனையறுத்துவடிமைகொடுகாப்பா
ளுரியவுலகந்தழைக்கவுயிருணர்வுதழைக்க
விரியநல்லருளோடுமெய்தழைத்தகூந்தற்
பெரியநாயகியையுறாப்பிறப்பென்னபிறப்பே
பெற்றியவட்சீர்பேசாப்பிறப்பென்னபிறப்பே. (௬௪)

## வேறு.

அவ்வண்ணந்துதிக்கசிவமவ்விலிங்கமதிற்றேன்றியயனேவேண்டுந்
திவ்வியநல்வரம்யாதுசெப்பெனவேதிசைமுகனுஞ்செப்புவானு
லெவ்வமிகுநான்புகன்றபொய்க்குற்றமிரிதரவுமென்றுமிந்தச்
செவ்வியலிங்கம்வணங்குமவர்க்கருளும்வீட்டினையுஞ்சேரத்தந்து. (௬௫)

ஆட்கொள்ளவேண்டுமெனக்கேட்டிடவுமவ்வாறேயளித்தொளித்தான்
வாட்கொண்டபிரமனுந்தைப்பூசத்தில்விழவாற்றிவணங்கிப்போனுன்
நீட்கொண்டதேவருமவ்விழவாற்றிநீளுலகமடைந்தார்ப்பின்னர்த்
தோட்கொண்டபூவுலகத்தவர்செய்துகதியடைந்தார்த்தொகையதாக. (௬௬)

என்றுமாமுனிசூதனியம்பிடவும்நேமிவனத்திறைவரெல்லாம்
நன்றுநன்றுவெனக்களித்துவகங்குளிர்ந்துமெய்ப்புளகம்நலமாய்க்கொள்ள
நின்றுதுதித்தினுமியலேயியம்பெனவாய்புதைத்தவர்கணெகிழ்ந்துகேட்ப
மன்றுடையானருட்போற்றிசூதமுனிமற்றதையும்வழங்குவானுல். (௬௭)

பிரமன் பூசித்தபடலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௪௬௮,

# திரிபுராதிகளுற்பத்திப் படலம்

தருமசேனரென்றொருபெயர்ச்சமணராற்பூண்டக்
குருவைநம்பிடிற்கூற்றுவந்தெய்துமோகுறுகி
யொருகுகையுழவாரநற்படைக்கவனுறுதீ
வெருவுகைப்படையென்செயும்வென்றிடுங்கொல்லோ. (௧)

உலகிலுற்றிடுதைத்தியர்க்கொருமுதலான
யிலகுகாசிபவிருடியின்மனைவியரிருவர்த்
திலகமுற்றிடுமவர்பெயரதிதியுந்திதியாங்
கலகமுற்றிடக்காசிபரிருவரைக்கலந்து. (௨)

வாழுநாளிடையதிதியின்வயிற்றினில்விபுதர்ச்
சூழவுற்பவமாயினர்த்திதிவயின்றுன்னிக்
காழரும்பெருநிசரர்த்தோன்றினர்க்களித்து
வேழமன்னவத்தானவர்க்குடியினில்விளங்கி. (௩)

தயங்குநல்வலாசுரன்சுதன்மூவரத்தகுவர்
வயங்குநற்பெயர்த்தாரகாக்கன்மகராக்கன்
யியங்குவித்துன்மாலியனெனுமூவருமிலேகர்
வியன்குடியினிற்பகைகொடுபோரினைவிளைத்தார். (௪)

தானவர்களுந்தகுமவர்ச்சேனையுஞ்சார்ந்து
வானவருடன்போரினைவிளைக்கவும்வளைத்த
ஊனமுற்றிடுவசுரரையும்பர்களொடிக்க
மானவரவரோடினர்மயங்கினர்பதைத்து. (௫)

என்செய்வோமினியெவ்விதமாயினுமிந்தப்
புன்செய்காரியமக்களைப்புல்லெனப்பிடித்து
வன்செய்கைகொடுவோட்டிடும்வழிநமக்கெதுவோ
கொன்செய்கையுறுதானவருசாவினர்க்குழுமி. (௬)

ஆயகாலையிற்றந்தையுமுரைத்திடுமரிய
தூயநங்குலக்குருவெனுஞ்சுக்கிரனிடத்திற்
போயியம்பிடிற்றகும்வகைபுகன்றிடுமென்ன
மேயவன்னவர்விரைவினின்வெள்ளியினிடத்தில். (௭)

சென்றிருகையுஞ்சென்னியின்வைத்துமுன்வீழ்ந்து
கன்றுபோலவுமுருகிடக்கையினைக்கட்டி
யென்றுமெங்களைக்காத்திடுமிறைவனேயெந்தம்
வென்றதூயனேயென்றவர்ப்போற்றவும்வெள்ளி (௮)

நோக்கியாசிகட்சொலியிவண்வந்ததுநலவு
மாக்கமுற்றிடுமென்னலுமசுரர்கள்வணங்கி
யூக்கமுற்றிடுமெங்களையும்பர்கள்வென்று
ரேக்கமுற்றனமுயும்வழியியம்பெனநின்றார். (௯)

அன்னசொற்செவிபுகுதலும்வெள்ளியுமறைவான்
நன்னலத்தவிண்ணாட்டவர்நாணவும்வென்று
யிந்நிலத்தைநீராளவுந்தந்திரமியம்பின்
மன்னும்நற்சிவபூசையேயென்றுபின்வகுப்பார். (௧௦)

உரியநற்சிவபூசையாலும்பர்கண்முழுதும்
பெரியவாழ்வதையடைந்தனர்ப்பெருவயன்மானங்
கரியகண்டனைப்பூசனைக்களிப்புடனாற்றி
விரியும்பாரினில்மிக்கவும்மேலவரானார். (௧௧)

இலிங்கபூசையேயறங்களுமளித்திடுமினிய
இலிங்கபூசையேயாக்கமுமளித்திடுமிருளை
இலிங்கபூசையேநீக்கிநல்லின்பமுமீகும்
இலிங்கபூசையேமுத்தியையீந்திடுமென்னும். (௧௨)

எதுவேண்டினும்மெய்ச்சிவபூசைசெய்திட்டாற்
கோதறுதுநல்வினைவினிலளித்திடுங்குன்ற
மாதுகேள்வனுமென்பதுசத்தியமலர்ந்தத்
தீதிலாச்சிவபூசையின்றிறமதைச்செப்பில். (௧௩)

பத்திபூசையாற்கிடைக்கொணாப்பொருளதுபகரிற்
சத்தியாற்பகையனைத்தையும்வெல்லுவீர்த்தனித்தச்
சுத்தியாய்ச்சிவபூசைசெய்வீரெனிற்றுணிந்த
சித்தியுற்றிடுமென்றனன்வெள்ளியுஞ்செப்ப. (௧௪)

தாரகாக்கனுதியரிதைக்கேட்டுபின்றமது
வாரமுற்றிடுதேசிகனடிமலர்வணங்கி
பாரகத்தினிற்றகுசிவபூசையைப்பண்ணி
சீரமைந்துறுதலமியம்பென்னவுஞ்சிதனும். (௧௫)

அதிகையென்றொருதலமுளதத்தலமகிலந்
துதிபெறுதலமனைத்தினுந்தூயதுதுளப
நிதிபடைத்தநன்வான்முதற்றேவர்கணீடி
நதிபடிந்துநற்பூசையுமாற்றினர்நலமாய். (௧௬)

அட்டவீரட்டந்தன்னுளொன்றாகியவதிகை
அட்டவீரட்டநாதனையன்புடன்றொழுது
இட்டவர்ச்சனைப்பூசனைமுதலியவியற்றி
இட்டகாமியமடையெனவெள்ளியுமியம்ப. (௧௭)

புகன்றவாசகங்கேட்டெவ்மூவரும்புனித
நகம்வளைத்துறுநல்லவன்களித்துறுநகராய்
யுகமுடிவினுமழிவுறாதுயர்ந்திடுமினிய
வசன்றநற்றிருவதிகையையடைந்தனரன்றே. (௧௯)

என்றுசூதனும்நைமிசவாசிகட்கியம்ப
துன்றுவம்முனிசூதனைப்பலமுறைதொழுது
யன்றுபூசனையாற்றியவிதமதையருள்க
வென்றுகேட்பவமகிழ்வொடுமியம்புவன்சூதன். (௨௦)

திரிபுராதிகளுற்பத்திப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம். ௫௧௮.

---

# திரிபுராதிகட்டிருவதிகையடைந்து பூசித்தபடலம்.

புகழனொனும்புண்ணியர்நன்மனம், மகிழவந்தவாகீசர்மலரடி
புகழுந்தூயவர்ப்புந்திமகிழ்வபோன், மகிழுண்டாகாமனமுமுண்டாங்கொலோ.

பின்னர்மூவரும்பிஞ்ஞகனோங்கிய, நன்னலத்தவதிகைநகரினை
யுன்னிகற்றுவுருகியவாறுபோன், மன்னியுற்றனர்மற்றவர்மூவரும். (௨)

பீடுதங்கியகெடிலப்பெருக்கினி, லோடுநற்புனறன்னிலொழுக்கமார்
நீடுமூன்றுநிசிசரர்நின்மலத், தேடருஞ்சிவந்தன்னைத்தெளிந்துமே. (௩)

மறையின்மத்தியினின்றுவயங்கிய, யிறையின்மந்திரந்தன்னைநல்லின்புட
னறைந்துபோற்றியரியகடிலமாந், துறையினன்னதிப்பூசைதுவக்கியே. (௪)

போற்றிமூழ்கிப்புனிதமுடையநன், னீற்றைமெய்யில்நிரவவணிந்துமே
யேற்றுவாகனன்றூயவிணையடி, தூற்றநெஞ்சொடுவொற்றினில்நூல்வழி. (௫)

கூறுமாறுகுடைந்துவிதிவழி, யேறுநாயகன்பூசையியற்றநல்
லாறுகொண்டவுணர்வொடுவெண்ணலின், னாறுநற்றலந்தன்னில்நணுகியே. (௬)

சிகரிமுன்னர்வணங்குபுசென்னியிற், புகவமைத்தகரத்தொடுபுண்ணிய
ரகமுருக்கியவதிகையடைந்துநற், பகரும்வீரட்டநாதர்பதத்தினில். (௭)

வீழ்ந்துவீழ்ந்துவிருப்புறுபத்தியாற், சூழ்ந்துதாழ்ந்துநற்சங்கரன்பங்கினிற்
சூழ்ந்துநின்றுதுரியசிவமதை, வாழ்ந்தநெஞ்சொடும்போற்றியதன்பினர். (அ)

ஆட்டுமஞ்சனமாதியமைத்துமே, வாட்டுமாயையென்வள்ளலின்முன்புகா
நாட்டும்பத்தியாற்பூசைநடாத்தியே, பாட்டுசொற்றமிழ்க்கொண்டுபரவியே. (௯)

அவமனைத்துமகற்றுபுவண்ணலாற், சிவமதனைத்தன்சிந்தையிருத்தியே
பவமறுக்கும்பெரியனைப்பற்றியே, தவமுஞற்றினர்மூவருஞ்சார்ந்துமே. (கo)

ஐந்துவெந்தீயமைத்ததன்மத்தியிற், சந்தமாகவிருந்துசயம்புவாங்
கந்தமுற்றகருணையுருவனைப், புந்திவைத்தவஞற்றினர்புன்மையோர். (கக)

அன்னநற்றவம்விண்ணுடடைந்துமே, மன்னியங்கதின்மாகனைவாட்டவும்
வின்னிலவும்வடிவர்விரைந்தெழா, வென்னவென்றுவுசாவினரிவ்வணம். (கஉ)

நின்றகாலையினின்மலநாரதர்த், துன்றுமங்கணந்தோன்றவுங்கண்டுழி
நின்றவண்ணம்நிலவுபதத்தினிற், பொன்றவீழ்ந்துவணங்கிபின்போற்றினர். ()

பீடந்தன்னிலிருத்திப்பெரியனைத், தேடருந்துணைத்தெய்வமுனிவனை
நாடிபோற்றியருச்சனைநன்மையாய், யாடுமர்க்கியமாதியளித்தனன். (கச)

ஆயகாலையின்முனிவனறைகுவான், காயம்வாடிக்கலக்கமுடையர்போற[வான்.
றேயுநும்முகந்தோன்றுவதென்னெனத், தாயவன்சொலிப்பின்னருஞ்சாற்று

உலகில்வாழவுமுங்களைவெல்லவு. மிலகித்தியமாகவிருக்கவும்
பலமிருந்துபகைவரிலாமலே, நலமிருந்துநயப்புடன்வாழ்கவே. (கசு)

எண்ணிமூன்றுவரக்கரினியவாம், புண்ணியத்தலவதிகைப்புனிதனை
மண்ணினின்றுமருவுதவத்தினை, வண்ணற்பாங்கரிலாற்றுமருந்தவம். (கஎ)

எங்குஞ்சென்றுவெரித்திடுகின்றது, யிங்குவாளாயிருக்கிலிறைவனு
மங்குவந்தவர்விழைவையருளுவ, னுங்களுக்கிதுயோதவுமுற்றனன். (கஅ)

இந்தமாற்றமிமையவர்க்கேட்டுமே, நொந்துவீழ்ந்துவணங்கிநுவலுவர்
சந்தமாகவதற்குத்தகும்வகை, யெந்தையேமொழிமின்னெனவேத்தலும். (ககூ)

விரைவினீவிர்விதிவயினேகியே, வரைபுயத்தர்வழங்குந்தவமதைக்
கரையிலன்னவனேகிறகருத்துறு, முறைசெய்சூட்சியதாகயுஞற்றுவன். (உo)

எனவியம்பியிருடியகன்றன, னனையர்பின்னரரம்பையராதிய
வினையிழைன்றநடனம்விளைத்துறு, யனையர்தம்மைவிளித்துவறைவனுல். (உக)

### வேறு.

தேவமாதன்னலாரைத்தேவர்கள்விளித்தபோது
யாவரும்வந்துகூடியாங்கள்செய்வதியாதென்ன
நீவிர்பூவதிகையுற்றுநிறுதர்கட்செயுந்தவத்தை
யேவினர்நொடிக்குட்போக்கிவண்வருவீர்களென்ன. (உஉ)

கதுமெனமனைக்குட்சென்றுகளபமாதியவணிந்து
யிதுவெனுமுகத்தாரெல்லாமிழைபுலவணிந்துபின்னர்ச்
சதுருறுமுலகந்தன்னில்ஞரேலெனச்சார்ந்துவெய்ய
கதிரெனமூவர்ச்செய்யுங்கடுந்தவந்தன்னைக்கண்டார். (உங)

# ௯௯ திரிபுராதிகட்டிருவதிகையடைந்துபூசித்த படலம்

கண்டனரெதிரிற்சென்றுவேனெடுங்கண்ணானோக்கி
மண்டலிழையொலிக்கமருவியதூசொலிக்கத்
தண்டைகிண்கிணியொலிக்கச்சார்ந்திடும்யாழேயென்னக்,
கண்டமுமொலிக்கநின்றார்க்கன்னியரனையரெல்லாம். (௨௪)

பின்னருஞ்சதிகளோடுபெயர்ந்தடிநடித்துத்தன்கை
மன்னியமலர்கள்வாரியிரைத்துபின்மதனைக்கூவி
வுன்னியவண்ணமெல்லாமுஞற்றியுமசுரர்மூவர்
யென்னிதுவென்றும்பராரிணையடிதன்னினின்றார். (௨௫)

இவ்வணந்தம்மாலானசூட்சியையியுற்றிப்பின்னர்ச்
செவ்வியமடவார்மிக்கபயமொரீஇசென்னிதாழ்ந்து
வவ்வியமனத்துட்கொண்டுவசுரர்கள்மயங்காரென்று
நவ்வியமேனாடேற்றுவலாரியினற்றாள்வீழ்ந்து. (௨௬)

வணங்கிபின்புகல்வாரையமாதவந்தனைக்கெடுக்க
கணமதிலதிகைசேர்ந்தோங்காரியமுடியாதுற்ற
வுணங்கியமூவர்ச்சுத்தநற்றவமுஞற்றானின்றா
ரிணங்குறவருகிற்சென்றாலெரியெனவிருந்ததென்றே. (௨௭)

என்றவரியம்பலோடுமிமையவர்நடுங்கியின்னும்
நின்றிடில்விபத்தேயென்றுநெரேலெனத்தேவரெல்லா
மொன்றியபிரமன்வாழுஞ்சத்தியவுலகமுற்று
கன்றெனவவன்றாள்வீழ்ந்துக்கதறினர்த்தேவரெல்லாம். (௨௮)

பிரமனும்போந்ததென்னவென்றலும்பிரமத்திய
தரமுறுவசுரரெம்மாற்றோல்வியாற்றரணிசார்ந்து
பரசிவமதிகைமேவிப்பருத்தநற்றவமியற்றி
வரமதுகொண்டுவெம்மைவருத்தவுமனத்துட்கொண்டு. (௨௯)

அந்தநல்லதிகைமேவியருந்தவமாற்றுகின்றார்
நந்தவிற்றவத்தால்வானநாடதுகருகிற்றன்றே
வந்திவெண்பிறைமிலைச்சுமண்ணல்முற்றோன்றுமுன்ன
ரெந்தைநீயேகிச்சூட்சியாகநல்வரமுமீவாய். (௩௦)

விடையுறுபரமன்றோன்றில்விருப்புறுவரமளிக்கு
மடைவுறுமெம்மனோர்க்குவாபத்துநேருமென்று
படையெனுங்குலிசந்தாங்கும்பண்ணவனுரைத்துப்பின்னும்
நடையுறத்தாங்கட்சென்றால்நலமுறுமெம்மனோர்க்கு. (௩௧)

அவ்வுரைகேட்டலோடுமயன்களித்துரைப்பான்நான்போய்த்
திவ்வியவதிகைநோற்குந்திறலுடையவுணர்க்கேட்குஞ்
செவ்வியவரத்தைத்தக்கவாறினிற்செழிப்பவீழ்ந்து
யிவ்விடம்வருவலென்றுவெழுந்தனனெகினமூர்ந்து. (௩௨)

பரியெனுமஞ்சமூர்ந்துபரமநல்லதிகைமேவி
வுரியநற்றவமியற்றுந்தைத்தியருழைமுன்சென்று
பரிவுடனிழியவன்னோர்க்கண்டெஞ்சாங்கமாதி
விரைவினிற்படிந்துநின்றுவிருப்புறத்துதிப்பாரானார் (௫௩)

ஐயனேபோற்றித்தூயவஞ்சவாகனத்தபோற்றி
மெய்யனேபோற்றித்தூயமேலவபோற்றிக்கல்வித்
தெய்வநன்மாதைநாவிற்சேர்த்திடுபுலவபோற்றிச்
செய்யனேபோற்றிபோற்றியென்றுமுன்சேர்ந்துநின்றார். (௫௪)

நின்றிடுகாலைவேதமுணர்ந்தவன்நீவிரிங்கு
நன்றுறவாற்றுஞ்செய்யதவத்தினுக்குவந்தேன்நாடி
நின்றதைவிளம்பீரென்னநிசிசரர்வணங்கிப்பின்னர்க்
குன்றியவுள்ளத்தோடுகுடந்தம்பட்டமூங்கிக்கூறும். (௫௫)

பூவுலகதிலேநாங்கட்புண்ணியத்தேகமுற்று
மேவவுமென்றும்நின்றுவாழவும்மேவும்வீடாய்த்
தாவருங்கோட்டைமூன்றுதந்துசக்கிரியைவெல்லு
மாவரும்வரமளித்தியெனமலர்ப்பதத்தின்வீழ்ந்தார். (௫௬)

விதியவனதும்முன்னைவேண்டியவாத்தையந்தப்
பதிசிவமளிப்பானன்றிப்பகுத்திடவெம்மாலாகா
மதியுறுகோட்டையேனைவரத்தினையளித்தோம்வண்கை
யதிபலமுறுவீரென்றுவயனும்பின்னறைவானன்றே. (௫௭)

ஆடகந்தூயவெள்ளியயமெனுங்கோட்டைமூன்றுந்
தேடருங்கோட்டைச்சுவர்க்கவந்தரம்பூமிச்சேர்ந்து
வீடெனநீங்கள்வேண்டுமிடந்தொறுமீளுமிந்த
வாடருங்கோட்டைநூற்றுப்பத்தொருவாண்டிற்கொன்றாய். (௫௮)

சேர்ந்திடுமுகூர்த்தமோரைச்செல்லுமக்காலம்நோக்கி
நேர்ந்தவோரம்பாலன்றிச்செயித்திடநோராதென்று
சீர்ந்திடுமமரர்முற்றும்பயமொரீஇசாரநல்கித்
தேர்ந்தநல்லாற்றற்கூறித்திசைமுகனகன்றானன்றே. (௫௯)

சூதனிவ்வாறுகூறத்தொகையறுமுனிவரெல்லாம்
வேதமுமிருதியேனைச்சாத்திரம்விதியாக்கற்ற
மாதவன்றன்னைத்தாழ்ந்துமற்றதுமுரைமினென்னத்
தீதுறுவரக்கராண்டசெய்தியைத்தெரிப்பான்சூதன். (௬0)

திரிபுராதிகட்டிருவதிகையடைந்து பூசித்தபடலம்
முற்றுப்பெற்றது.
ஆக திருவிருத்தம் ௫௫௮.

# திரிபுராதிகளரசாட்சிப் படலம்.

புண்ணியப்புகழனார்க்குப்புனிதநன்மகவாய்வந்தக்
கண்ணியமுடையநாவுக்கரையரையடைந்தோரெல்லா
மெண்ணுமெச்சமயத்தோரேயாயினுமெமக்கன்னோர்க
ணண்ணுநம்மவரேயென்றுநாம்வணங்கிடுவாமன்றே. (௧)

திசைமுகனகரமேகச்செவ்வியூகோட்டைமூன்று
வசையுறவாசைவங்கமிகியிதின்வயங்குங்கோட்டை
வசைவுறவிண்ணினின்றுவிறங்கினவவற்றைமிக்க
நசையுறவசுரர்மூன்றுநயனுமுங்களிப்பக்கண்டார். (௨)

ஆடகந்தன்னைத்தாரகாக்கனுமதன்பின்வந்தத்
தேடரும்வங்கக்கோட்டைக்கமலனுந்திறந்தவெற்றி
நாடியவித்துன்மாலிநல்லிரும்பாயகோட்டை
வீடெனவதனுட்புக்குவீற்றினிதிருந்தாரம்மா. (௩)

அங்கதிலிருந்துதங்களாரியன்றன்னைக்கொண்டுப்
பொங்கியசேனைக்கெல்லாம்பொருசிவதீக்கைசெய்து
கங்கையந்தலையான்பூசைக்களித்தவரியற்றச்செய்து
தங்களும்பத்தியோடுதற்பரன்பூசையாற்றி. (௪)

கரிபடைக்காலாள்வெய்யகாந்தியந்தேர்களோடுப்
பரிபடையென்னும்நான்குபடையதைக்கொண்டுதூய
தருமுதற்சிகரம்போன்றவிமானமுந்தங்கட்சுத்த
விரிவுறுசோலைக்காவும்வேண்டியபோகமூழ்கி. (௫)

பற்பலவசுரமாதர்த்தம்முடற்படிந்துபுல்லி
விற்பெறுகோட்டைதன்னின்மேவியேயிருந்துதேவ
நற்பெறுமுனிவராதிநற்றவர்த்தம்மையெல்லாம்
பொற்புறயேவற்செய்யபொன்னருங்கோட்டைமேவி. (௬)

ஆசைநற்புரியைவிண்ணிலாயசபுரியைப்பாரிற்
பேசரும்வங்கந்தன்னைநடுவிலும்பெருகிநிற்ப
வீசியசதநற்றூரயோசனைவிரிந்தகோட்டை
மாசுறுமன்றேரெண்ணுமிடமெலாமருவிச்செல்லும். (௭)

மனமுறுமிடங்களெல்லாமற்றதிற்பரந்துசென்று
வனமுறுநாடுதன்னையழித்துபின்வன்மைசெய்து
பனவர்கண்முனிவராதிதேவரைப்பகைத்துகொன்று
சினமுறத்தெய்வமாதைச்சிறைபிடித்தினிதிருந்தார். (௮)

இவ்வணமரக்கர்செய்தவிடுக்கணையிமையாநாட்டத்
திவ்வியதேவரெல்லாஞ்சகிக்கொணாத்தீதுண்மாழ்கி
செவ்வியசீர்வைகுந்தஞ்சேர்ந்ததில்வைகுஞ்செய்ய
பவ்வமார்கடற்றுயின்றபரமனைவணங்கிநின்று. (௯)

அருந்தவவடிவேபோற்றியாழியங்கரத்தபோற்றி
கருந்திருமேனிபோற்றிகமலநற்கண்ணாபோற்றி
பொருந்தியசங்கமேந்தும்புண்ணியபுரணபோற்றி
திருந்தியபொன்னைமார்பிற்சேர்த்தவபோற்றிபோற்றி. (௧௦)

பாரினைக்காக்குஞ்செய்யபண்ணவசுகுணபோற்றி
வேரியந்துளபமாலையணிந்திடும்விமலபோற்றி
காருறுவாழிமேவுங்கருணைமாமூர்த்திபோற்றி
சீருருபத்துக்கொண்டதீரனேபோற்றிபோற்றி. (௧௧)

படையொருவைந்துதாங்கும்பருத்தநற்கையாபோற்றி
வடவெனுமாலில்வைகும்வளமுறுவள்ளற்போற்றி
குடையெனக்குன்றையன்றுபிடித்திடுங்கோவேபோற்றி
நடையுறவருட்பயக்குநாதனேபோற்றிபோற்றி. (௧௨)

என்றுமுன்வீழ்ந்தாரந்தவிமையவர்வதனம்நோக்கி
நன்றிவணடைந்தமாற்றநவிலெனத்தகுவர்நின்று
கன்றெனப்புகல்வரையகற்பகநாடுபாழாய்
நின்றதுவென்றுகூறிநிருதரின்செயலைச்சொல்வார். (௧௩)

எம்முழிதோற்றுப்போனவிறவுளரரக்கர்சென்று
மைம்மலிகண்டத்தானைப்பூசனைமாணச்செய்து
கம்மியர்புரிந்தகோட்டைக்கலந்ததின்மூவர்நின்று
விம்மிடவெம்மனோர்க்குத்துன்பமுமிகவுமாற்றி. (௧௪)

காலையுமாலைமூன்றுபோதினுங்கயவரெம்மை
வேலைகட்புரியச்செய்துமேவலால்வேதமாதி
நூலினுட்கூறுமாறுநோன்புறுகன்மமெல்லா
மேலவேகெடுதலோடியிடுக்கணுஞ்சகியேமென்று. (௧௫)

புகன்றதுமாலோன்நோக்கிப்புகலுவனசுரர்மூவர்
மிகுந்தவமாற்றிலிங்கபூசையுமினிரச்செய்து
வகந்தணிற்சிவத்தோடுற்றுராதலிலவரைவெல்லப்
பகரவுமுடன்பாடன்றுவென்றுபின்பகர்வார்மாதோ. (௧௬)

சிவபெருமானேயந்தவரக்கரைசெயிக்கவல்லன்
றவமுறுவுரக்கராற்றும்பூசயைத்தவிர்த்தாலன்றி
நவமுறுமூன்றுகோட்டைநசைப்படாதென்றுகூறி
யெவருமங்கணுகவொண்ணாதென்றுபின்னிலையோன்சொல்லும்.

பரசிவலிங்கபூசைமூவரும்பரிந்துசெய்து
வரமுதலடைந்தாரந்தவள்ளலின்பூசைதன்னை
யிரவிலும்பகலுமாற்றியிருத்தலினவரைவென்றுப்
பொருசெயவொண்ணாதன்னோர்ப்பூசையைத்தவிர்த்தாலன்றி. (௧௮)

அரக்கர்கட்செய்யும்பூசையகற்றிபின்னரனைக்கொண்டு
அரக்கரைவெல்லவேண்டுமாதலினரனையடைந்த
அரக்கரின்பூசைதன்னையகற்றுவன்சூட்சியாலே
இரக்கமொன்றில்லாதாரைவெல்வனென்றெழுந்தான்மாயோன். ()

புத்தநற்குருவாய்நாம்போய்புரிசிவபூசைதன்னைச்
சுத்தமாய்நீக்கவேண்டுமென்றொருசூட்சிகொண்டு
வத்திருமாலுஞ்செல்லவவைதனைக்கேட்டவிண்ணோர்த்
தத்தமதிருக்கைதன்னைச்சார்ந்தனரங்கண்மாதோ. (௨௦)

நேமியம்வனத்தார்கேட்டுநெகிழ்ந்துடற்புளகங்கொண்டு
பூமியிற்படிந்துபோற்றிப்புகலுவர்ச்சூதமேலோய்த்
தாமமார்த்திருமால்வெய்யசாக்கியரானகாதைக்
காமுறவிளக்கமாகக்கழறுகவென்னச்சூதன். (௨௧)

குருவெனும்வாதநாராயணன்றனைக்குலவிப்போற்றி
யிருக்கையிலிருந்துமூலமந்திரமிதயத்தெண்ணி
திருக்கிளர்த்துளபமாலைச்செம்மலும்பௌத்தரானப்
பருத்தநற்காதைகேட்கவென்றிதுபகர்வான்சூதன். (௨௨)

திரிபுராதிகளரசாட்சிப்படலம் முற்றிற்று.
ஆக திருவிருத்தம் ௫௮௦.

# திருமால்
# பௌத்தாவதாரப் படலம்.

திருவையாறெனுந்தலத்தேதிருக்கைலாயங்கண்டு
கருவரும்பிறவிநீத்துக்கவின்பெறுநல்லூர்த்தன்னி
லிருவருந்தேடிக்காணாவெழில்சிவபெருமான்றன்பாற்
றிருவடிதீக்கைபெற்றோணிருவடிசென்னிசேர்ப்பாம். (௧)

அறிதுயிலமர்ந்தநீலவச்சுதக்கடவுட்பின்னர்ப்
பிறிதொருவிடத்திலேகிப்பெட்புறுவுருவமாற்றி
வறிதுறுமவுணர்த்தம்மைவாட்டவுமனத்துளெண்ணிக்
குறிபலபோக்கிப்பின்னர்ச்சாக்கியவடிவங்கொண்டார். (௨)

சங்கமுந்திகிரிநீக்கிச்சார்ந்திடுபீலிதாங்கி
மங்கியவபனஞ்செய்தசிரங்கொடுமலினமானப்
பொங்கியவுடையும்பூண்டுபொற்புறவுடைகணீக்கித்
தங்கையின்மரத்தாற்செய்தகுண்டிகைசாரக்கொண்டு. (௩)

கந்தையோர்கையிற்கொண்டுகளித்திடுதர்மாவென்று
சிந்தையிலுரைத்துக்கொண்டுசினவரனென்னும்பேரை
முந்துறத்தாங்கிப்பின்னர்முதற்பெருஞ்சமயத்திற்குப்
பந்தமுற்றிடவேசின்னூற்பகருவன்மாலுமாங்கே. (௪)

சாத்திரமயுதமாறுசகத்திரஞ்சாரச்செய்து
பாத்தியபிடகநாலும்பகர்ந்துபன்மாயையான
சூத்திரமியற்றிப்பின்னர்ச்சொல்லருஞ்சீர்த்தியோடு
நாத்திறம்பலவுங்கற்கநல்லநூலியற்றினானால். (௫)

தானொருபௌத்தனாகித்தன்வயின்விஞ்சைகற்று
மானலமுற்றானென்னமாணவனுக்கினானால்
கானுறுவிருக்கைமேவிக்காய்கனியாதியுண்டு
யீனமில்ஞானமுற்றநாரதவிருடிதன்னை. (௬)

மற்றவனோடுபுத்தவிண்டுவும்மண்ணில்வந்து
விற்றிறக்கோட்டைமாடுவீற்றினிதிருந்தான்வந்து
கற்றதன்விஞ்சையெல்லாங்காட்டினரக்கர்தன்னை
முற்றிலுமிறும்பூதெய்தமயக்கினன்முனிவனோடு. (௭)

மருவியபெண்ணையாணுவாக்கியுமருவுபெண்ணை
வுருவுறுமாணுயாக்கியொல்லெனயிடமொளித்து
பருகுறுகனிகளெல்லாமரத்தினைபழுக்கச்செய்து
கருகியமரங்களெல்லாங்கனியுடன்றழைக்கச்செய்து. (௮)

உயிரிலாசடத்தினுள்ளேவுயிர்தனைமேவச்செய்து
பயிலுறுபெருநோயாதிப்பரந்திடக்கடைக்கணித்து
துயிலுறும்பலநோய்தன்னைத்தொலைத்திடவருட்புரிந்தும்
யியலுறுதெய்வத்தன்மையாகியவியலைச்செய்து. (௯)

கழமொடுகோல்களாதியற்றவர்க்களித்துப்பெற்று
விரவிடவருட்புரிந்துவினைமுதற்போகச்செய்து
வுரவுறுகுழவியாசையுற்றவர்தமக்குநல்ல
பரவியமதலைதன்னைப்பயந்திடவருளிச்செய்து. (௧௦)

பொன்மணித்துகிற்களாதிப்போகமும்விரும்பினோர்க்குப்
பன்மணிவிமைப்பிலாக்கிப்பற்பலர்த்தமக்குவீந்துங்
கன்மணியாக்கிப்பொன்னைக்கரியநல்லிரும்பாச்செய்து
சொன்மகழ்யோகியாகிச்சூழிடமெல்லாம்நின்று (௧௧)

கிரியைதய னுவதாக்கிய னுவதைக்கிரியதாக்கி
யுரியநல்லாவணத்துமுயர்ந்திடுவேதகத்தும்
விரிவுறுகூடம்வீதிச்சதுக்கமுஞ்சந்துமேலாய்
பரிவுறுமாடமிந்தயிடங்களிற்பாடிநின்றும். (கஉ)

தெக்கணமிருந்துபின்னர்த்தெரிந்தவரிறும்பூதெய்த
வக்கணங்குடபான்மேவியந்தரத்திருந்துபேசி
யக்கினிப்புனமேலையென்னவமைவுடனெடுத்துநின்றுந்
தக்கநன்மலடிமைந்தர்தான்பெறவினிதுசெய்து. (கச)

நற்கலன்பொருட்கட்செல்வம்நயப்புறப்படைத்தயாவும்
வற்கடமடைந்தோர்மாட்டிவந்துறப்புரிந்துவாறு
கற்கயமோடையாதிச்சுவின்பெறப்புதிதாய்ச்செய்து
நிற்கவும்நில்லாராகிநின்றுபின்னித்திசெய்தும். (கரு)

ஒருமரந்தன்னிலோர்காய்ப்பழுத்திடவாக்கியூற்று
தருமிளநீரையுப்புச்சார்ந்திடப்புரிந்துதண்ணீர்
பருகொணாநீரைத்தூயபருகுறும்நீரதாக்கி
கருமுகிற்றன்பாற்சென்றுகடிதுடன்பாரில்வந்து. (கசு)

பேசருமூங்கைதன்னைப்பெரியநன்மறைகளாதி
வாசகமுணச்செய்துவருபகற்பொருட்களெல்லா
மாசறவல்லிற்காணமல்கிருட்பொருட்களெல்லாந்
தேசுறப்பகலில்வந்துநிற்கவுந்திறமாய்ச்செய்து. (கசு)

பனையதைத்தெங்கதாக்கித்தெங்கதைப்பனையதாக்கி
வனமுறுமுதுமைமாதைவனிதையராகச்செய்து
யினமுறுகிழவன்றன்னையிளையவனாகச்செய்து
யனையவர்தமக்குமக்களக்கணமுற்பவித்தும். (கஎ)

அண்டமுமவற்றினுள்ளசரமுதலசாரங்காக்குந்
கண்டநீலத்தன்பூசைக்களிப்புடன்செய்துபெற்றூற்
பண்டுமில்வுலகில்வாராதெதுவவன்பணித்தவாறே
கண்டனர்த்திருமாலந்தவற்புதங்களிப்பச்செய்து. (கஅ)

வேறு.

கண்டுதாரகனுதியர்நற்களி, கொண்டுசூழ்ந்துசூழீஇதிரண்டுமே
பண்டுநாமிவ்வதிசயம்பார்த்திலந், தண்டமென்றவன்றாள்பணிந்தாரரோ. (கக)

வந்துசாருமரக்கர்வழிப்படி, புந்திவேண்டும்பொருளையளித்துமே
தந்தசாத்திரந்தன்னையவர்க்குமே, சந்தமாகவுமோதினர்ச்சாக்கியர். (உ0)

பின்னர்வேதம்பிழையெனச்சொல்லியே, கன்னிசாத்திரங்கற்பிதமென்றுமே
யுன்னுபுத்தரிநூலேயுயர்வென, மன்னிசொற்றனன்மாயையில்வல்லவன். (உக)

புத்தமாகியபுனிதமதமதே, யித்தரையிலெவற்றினுமிக்கது
யத்தகையமதத்தையடக்கிய, சுத்தசாத்திரமேமிகத்தூயது. (உஉ)

பிடகநூலேபெரியமறையதாம், பிடகமென்றொருசொல்லிவண்பேசினும்
விடவுரியதுமுத்தியம்வீட்டினின், மடமகன்றுவிளங்கியமாண்பது. (உங)

இலங்குநற்சிவபூசையாலென்பய, னலங்கலுற்றநற்புத்தவழகனை
புலன்களோடுபுகழ்ந்துவணங்கிடின், மலங்கழன்றுமேமன்னுவர்வீட்டினில். ()

இன்னவாறுவிசைவுறச்செய்தன, ரன்னதிலொருமூவரவர்பெயர்த்
துன்னுசீலன்சுதன்மன்சுபத்தியா, மன்னர்ப்பூசைவிடாதிருந்தாரரோ. (உரு)

உலகமுற்றுமொருங்கேயளித்துமே, யிலகுவிண்ணுட்டிறைவனாய்ச்செய்யினு
மலகில்நற்சிவபூசையமைத்தவர்க், கலகமுற்றதைநீக்கிக்களிப்பரோ. (உசு)

மூவர்நீங்கமுதற்சிவபூசையை, யாவருங்கழன்றாரெனயாதவன்
மேவருங்களிகொண்டபின்மேன்மையா,யாவதென்னெனயவ்விடம்நீங்கினான்.

பின்புமாணவகன்முனம்பித்துறு, வன்புபுத்தமதத்தைவழங்கினந்
துன்புகொண்டுறந்தூயநற்றேவரை,யின்புகொண்டுகொணர்தியென்றேவினார்.

புத்தமாயமதத்தைப்புலவனு, மித்தரையில்விளக்கியவாறிது
சுத்ததேவர்க்குழுவாய்த்துதைந்துமே, யத்தன்கைலையடைந்ததறைகுவாம். ()

திருமால் பௌத்தாவதாரப்படலம் முற்றிற்று.

ஆகதிருவிருத்தம் சுoக.

# தேவர்கட் கைலையடைந்த படலம்.

அரவினாலிறந்தவனுயிரழைத்தவரெவரோ
யிரவுநஞ்சினையுண்டபின்னுய்ந்தவரெவரோ
கரவுபூண்டவெஞ்சமணரைக்கலக்கியதேவரோ
பரவுமன்னவர்ப்பதந்தினைப்பன்முறைபணிவாம். (க)

உரைத்தகாலையில்நாரதனும்பர்களிடத்து
குரைத்ததோத்திரத்தோடவர்க்குழுமினர்வந்து
விரைத்தசங்குறும்விட்டுணுவிணையடிப்பதத்தை
நிரைத்தபத்தியாற்பிடித்தனர்ப்பதத்தினைநின்று. (உ)

சங்குசக்கரமேந்தியசாரங்கபோற்றி
மங்கையிலக்குமிக்குற்றிடுமெணுளனேபோற்றி
பொங்குநன்மணத்துளபநற்புயத்தனேபோற்றி
விங்குவெங்களைக்காத்திடுமிறைவனேபோற்றி. (ங)

கமலக்கண்ணநற்கரிவணக்கடவுளேபோற்றி
வமலமாகியவறிதுயிலமர்ந்தவபோற்றி
விமலமாகியதிருவுறுமேலவபோற்றி
நிமலனேயெனப்போற்றினர்ப்புங்கவர்நின்று. (ச)

நோக்கிவிண்டுவுறுவலுவஞெய்யவல்லவுணர்ப்
போக்கிவீழ்த்துவம்புண்ணியத்தேவர்காணல்ல
பாக்கியம்பெறுவீர்கணும்பகைவர்கண்மனமெய்
வாக்கிறந்தமெய்ப்பூசையைவாங்கினமயக்கி. (ரு)

புத்தமாகியகற்பிதப்புறமதம்புகுந்தா
ரித்தகைத்தநல்லதிசயமியம்புறிலிந்து
வைத்தசெஞ்சடைமன்னனும்வாட்டிடும்நாம்போய்
முத்தவங்கநற்பொருப்பின்றைக்கோதுவமுயன்று. (சு)

என்னமாற்றமங்குறைத்துபின்நாரணனெழவே
யன்னதேவருமுனிவரும்வலாரியுமகன்று
மன்னியுற்றிடுமோதவர்மருவிடுங்கைலைத்
தன்னில்வந்துநன்னந்தியினிணையடித்தாழ்ந்து. (எ)

வணங்கிநின்றுபின்னோதுவர்வள்ளலேயடியே
முணங்குகின்றனந்தைத்தியருஞற்றிடுகொடுமை
யிணங்குறச்சொலநாவதுவெழுந்திலவிதனை
வணங்குசேர்தருமெம்மிறைக்கறையெனவறைந்தார். (அ)

நந்திநோக்கினனுவலுவன்நவிலுமம்மூவர்
புந்தியிற்சிவபூசையையொழித்தனர்ப்புரமும்
வெந்தொழிந்திடும்பொறுத்திருவென்றவன்விளம்பி
யெந்தைபாலவனேகினனியம்பினனினிதாய். (க)

பிறையணிந்திடுபிஞ்ஞகன்கேட்டனன்பெரிய
கறைபெருகியவரக்கரும்பூசையிற்கழன்று
துறையகன்றனரினியவர்த்துன்புறக்கொன்று
குறையகற்றுவமிமையவர்க்கூட்டமுமோங்க. (க0)

போர்புரிந்திடவிரதமும்புரவியும்யானைத்
தார்புனைந்திடுசேனையுந்தழைத்திடக்கொண்டு
சீர்பெறவிவண்வருகெனச்செப்பியத்தேவ
ரார்பெறவிடையளித்தியென்றுரைத்தனனண்ணல். (கக)

அன்னசொற்றனைக்கேட்டுபின்நந்தியுமகன்று
சொன்னசொற்றனைவிண்ணவரிடத்தவன்சொல்ல
நன்னலத்துடன்றேவருங்களிப்புடநடந்து
புன்னகையொடுவிரதமுமற்றதும்புரிவார். (கஉ)

முனிவனோதவும்நைமிசமுற்றவர்முயன்று
யினிபுகல்கவவ்விரதமுமியற்றியவியலை
கனிவுடனவர்க்கேட்டிடக்கருணையனுனத்
தனியனுகியசூதனுஞ்சாற்றுவன்றயவாய். (கரு)

தேவர்கள்கைலையடைந்தபடலம்
முற்றிற்று.
ஆக திருவிருத்தம் ௬௨உ.

# திரிபுரதகனப்படலம்.

சரியையுங்கிரியையுஞ்சாற்றும்யோகமும், பெரியநல்ஞானமும்பிறவி யொன்றிலே, வுரியதாய்ப்பெற்றநாவரசினுத்தமத், துரியநற்றிருவடிமுடியிற் சூட்டுவாம். (க)

கண்ணனும்பிரமனுங்கருணையாகவே, விண்ணவருடன்மலைவிட்டுநீங்கியே யெண்ணினரனைவருமிருந்துவோரிடங்கண்ணியநுதற்கணன்கழறிவிட்டதை

விற்றொழிற்றேர்ந்துறும்வித்துன்மாலியாம், புற்றொழிலவுணரைப் போக்குறுதெனில், நற்றொழிலெத்தொழில்நடக்குமெம்மனோர்க், குற்றிடு துன்பமுமொழித்தல்வேண்டுமே. (௩)

அதுதனைநீக்கிடவமலனுகிய, விதுதனையணிந்திடுமிறைவனேயுறும் கதுவியவரக்கருங்கலங்கிமாண்டிடிற், பொதுநலமுறுமெனப்புனிதர்பேசினர்,

அறிவினுமடங்குருவமலனுகியுங், குறிகுணம்பற்பலகொண்டுமோங்கியே மறிகரங்கொண்டிறுமன்னனூர்ந்திடச்,சிறியரேஞ்செய்சிறுதேருமொக்குமோ.

ஆயினன்சிறியதற்கரியசிற்றுரு, வாயினன்பெரியதற்கரியபேருரு வாயினனுதலால்வனைகுவாமென, வாயகற்றேரினைவகுத்தன்மேயினர். (௬)

ஆழிசூழ்பூமியேயரியதேரதா, யாழியேதுவாதசாதித்தர்சந்திரர் பாழிமேற்றம்பமாய்ப்பருவதங்களும், பாழியைவென்றிடப்படிமருத்துகள்.(எ)

பனிமலைக்கொடுஞ்சிபின்பரிநிதோன்றிபின்,னினிதரவொடுங்குபுவிரண்டுமெமா நனிவுறுகூம்பெனநான்குவேதமும், தனியுறுமுதற்பரியாகசார்ந்துமே. [லை

பங்கமிற்சாத்திரம்பருபுராணமா, றங்கமுமணிகளாயசையவந்தணன் றங்கியசாரதியாக்சார்ந்துறப், பொங்கியவருடமும்போகுவேகமாய். (௯)

உத்தரதக்கணமயனமோடூஊ, வித்தகத்தேர்வழியாகவீசிடுஞ் சத்தசமுத்திரஞ்சாரலங்காரமாய்ச், சுத்தமந்தரமலைச்சூழும்நீடமாய். (க0)

மேருவென்றுரைத்திடுமலையும்வில்லதாய்ச், சாருமத்தனுவதிற்சரபம்நாரியாய் கூருமத்தனுமணிக்குலவும்பாரதி, வீரியத்தனுகணைவிண்டுவாகவும். (கக)

தயங்கியபிரணவந்தாற்றுகோலதாய், வயங்கியகங்கையாம்வனிதைமாரெலா
மியங்கியசாமரையேந்துங்கையராய், வயங்கியதேரினைவகுத்திட்டாரரோ. (கஉ)

## வேறு.

மற்றுமின்னணமாதமாற்றியே, சுற்றநற்படைசூழவியற்றியே,
கற்றமாதவர்சூழ்திருக்கைலையை, வுற்றன்மேயினரும்பர்முதல்வரும். (கங)

வங்கமாமலைசேர்ந்துமுன்வள்ளலை, யங்கண்போற்றியறைந்திடக்கேட்டவன்
மங்கைபாகனுக்கோதமலர்ந்தெழா, யங்கியேந்துமவனைவணங்கினான். (கச)

என்பணிந்தவிறைவவிமையவ, ரன்புபூண்டவயன்முதலானவ
ரின்புறத்திருத்தேருமியற்றியே, முன்புகைலையின்வாயிலைமுன்னினார். (கரு)

என்றுநந்தியியம்பவிறைவனுஞ், சென்றுவான்முதற்றேவர்விளித்துமே
வென்றியோடிவண்மீளெனமேலவ, னன்றுவந்துநவின்றனன்மாற்குமே. (கசு)

அன்னார்முன்றிருவாயிலகன்றுமே, நன்னர்சூழ்திருநாயகியோடுறும்
வின்னிலவுவிடையுறுமூர்த்தியை, பொன்னுலகரும்யாவரும்போற்றுவார். ()

பார்விளங்கவும்பல்லோர்விளங்கவுஞ், சீர்விளங்கியசின்மயத்தேவனே
பேர்விளங்கியபிஞ்ஞகமூர்த்தியே, சார்விளங்குறுஞ்சங்கரத்தேவனே. (கஅ)

என்றுபோற்றியியம்புமெம்மனோர்க், குன்றுமாறுவவுணர்க்குறுகியே
யொன்றிதுன்பமுறுற்றியுறுத்தலால்,வென்றிக்காக்கைக்கடனெனவீழ்ந்தனர்.

## வேறு.

வெள்ளிமால்விடையிருந்திடும்விடையவன்கேட்டு
துள்ளிநின்றிடுவரக்கருந்தூயநற்பூசைத்
தள்ளிநின்றனராதலிற்றருவரைச்சார்ந்து
கள்ளராதியர்க்கோட்டையுங்காவலுங்கலக்கி. (உ௦)

வெற்றியோடுமைக்காத்திடுவாமெனவிளம்பி
கற்றையஞ்சடைக்கண்ணுதற்பிராட்டியுங்களித்துப்
பற்றிதேவநன்மாதர்கட்சூழ்ந்திடப்பளிங்கு
விற்றிரட்டியகோயிலைவிட்டுபின்போந்து. (உக)

நாரியாற்றொடுத்திலகியநன்மைசால்வளத்த
மேருவில்லதைத்தாங்கிபின்மேன்மையத்தேரின்
பேரிலேறினன்பெரியநற்றேவர்கட்பிரமன்
வாரியோடுமுன்னூதித்தனர்மலர்மழைவயக்கி. (உஉ)

பூதத்தினிற்புண்ணியனேறவும்போற்றி
வீரகண்டையையணிந்திடுபூதமும்விரைந்து
சாருந்துவாதசருத்திரர்சதவுருத்திரர்நல்
வீரபத்திரராடகர்நான்முகர்விளங்கும். (உங)

திருவனந்தனுங்காலச்செந்தீயுருத்திரனு
மரியும்பத்தொருவுருத்திரர்ப்புத்தியட்டகரும்
பரிவாரோகணரெண்விதமூர்த்திகட்பருத்த
மருவுமெண்பயிரவர்கட்கூர்மாண்டருமன்னும். (௨௪)

தணிந்தநீலலோகிதர்களுஞ்சக்கிரதரரும்
வணிகங்காளகபாலருமாகியவேனைப்
பணிபொருந்தியநற்பதமூர்த்திகட்பருத்த
மணிவிளங்கவுமறைவழிப்போற்றினர்மலிந்து. (௨௫)

அசனொடுபுகன்வச்சிரதேகனுமரிய
விசயருத்திரன்பிங்கலன்சாந்தனும்விளங்கும்
பசுகபாலிகன்பிநாகிபாசாத்தனும்பலவான்
புசபலமுறும்புத்திரன்மாபலப்புனிதன். (௨௬)

அதிபெலவனுஞ்சுவேதனுமக்ஷயாந்தகனுங்
கதிரிருகிருதசாதிபன்கணாதியக்கனுமே
பதிபுவிகிரியக்கனும்சடாதரப்பரனும்
துதிபெறுவிலக்குமீதரன்சலாந்தகன்றாய. (௨௭)

வித்தியாதிபன்சம்புவும்மேகவாகனனுஞ்
சித்திசௌமியகேசனுஞ்சீதரவீசன்
பத்திநற்பிரசாதனும்விலக்கனும்பலத்த
சுத்தநற்றிரிலோசனன்றாய்பதத்தலைவர். (௨௮)

## வேறு.

கண்ணுவர்க்கார்த்திகேயர்க்கருக்கருமகத்தியன்றான்
பண்ணுறுவசிட்டர்மேலாம்புலத்தியன்பராசரன்றான்
கண்ணியமார்க்கண்டேயன்சுதீக்கணன்சனற்குமாரன்
புண்ணியபரத்துவாசன்புலகனுஞ்சந்திரசூடன். (௨௯)

இலகியகூசுமாண்டன்சிருங்கனுமியற்சாபாலிக்
கலகநாரதனும்பிருங்கிகேசகன்கற்கியான
வலகுறுமாபத்தம்பன்கிருதரனரிதகன்றான்
நலமிருகாணனோடுமுற்கலன்முனிவர்நல்லோர். (௩௦)

கருடர்காந்தருவர்சித்தரியக்கருங்கவின்செய்பூதர்
வுரகர்பைசாசர்ப்போசபூமியருயர்ந்தநல்லோர்
நிருதர்கின்னரரும்வித்தியாதரர்நின்மலக்கிம்
புருடர்விஞ்சையருமாதிகணங்களுமொருபாற்போக. (௩௧)

நந்திபிருங்கிருடிசண்டன்வாணனும்நன்மையான
வந்தகன்சங்குகன்னனணிகும்போதரனுமாய

சுந்தரமுரண்விழிப்பேர்த்தோன்றலுங்கூடியேகுஞ்
சந்தமாய்த்துதித்துச்சென்றபிரமதகணங்கட்சார்ந்து. (௬௨)

மத்தளந்தாரைசின்னம்மல்லரிச்சங்கமோடு
வித்தகத்தாளந்தக்கையுடுக்கைதம்பட்டைமேளம்
கைத்தலங்கோற்கொண்டோய்ச்சும்பேரிகைகவினெக்காளஞ்
சத்தமார்க்குழலுமாயகின்னரிமுழங்கிச்சார. (௬௩)

மங்கலகீதம்பாடமாதவர்துதிக்கவந்து
பொங்கியமேளமைந்தும்பொற்புடன்முழங்கியோங்க
மங்கையர்ச்சிலம்பினோடுதேர்மணியொலித்துமேவ
யங்குறுபரியுங்காலாளார்த்திடுமொலியுமோங்க. (௬௪)

வீரபட்டங்கட்கட்டிவிளங்குறுமிடையிற்சேர
வீரசங்கிலியுங்கட்டிமென்மலர்க்காலிவீர்த்த
வீரகண்டாமணித்தன்விருதெனவார்த்துமேவும்
வீரரின்வாயினார்ப்பும்விளங்கிடுமற்றுமோர்பால். (௬௫)

வந்தியர்பாடப்பின்புமாதவர்மகிழ்ந்துபாடச்
சுந்தரமடவார்ச்சுத்தநாட்டியஞ்சூழ்ந்துபாடப்
பந்தியாய்ப்பல்லோர்நின்றுபட்டாங்குபடிக்கமேலுந்
தந்திரமங்கலங்கட்கட்டியஞ்சார்ந்துபாட. (௬௬)

சந்திரக்குடையும்வெண்சாமரைகளுஞ்சார்ந்துமேவ
யெந்திரக்கொடிகளெல்லாமியங்கிடவாலவட்டம்
மந்திரமுன்னர்த்தோரணங்களுமருவிநிற்க
யிந்திரர்பிரமரேனோரெந்தையின்புகழைப்போற்ற. (௬௭)

ஆர்த்தநற்படைகளாலுமார்த்தநற்றுடிகளாலு
மார்த்தநல்வளைகளாலுமார்ந்தநற்பரிகளாலு
மார்த்தநற்கலன்களாலுமார்த்தநற்குரல்களாலு
மார்த்தெழுமளக்கர்தன்னையொற்றதுவண்ணற்சேனை. (௬௮)

இவ்விதகோலத்தோடிறைவனுங்கைலைநீங்கிச்
செவ்வியசேனைசூழத்தேயமும்பலகடந்து
திவ்வியவுதிசைநோக்கிச்செல்கையிற்றேவராதி
யவ்விடமிறைவன்வெற்றியடைவதும்நம்மாலென்று. (௬௯)

நினைத்தனர்நினைத்தபோதேநிமலன்புன்னகையினோடு
சினைத்துறுவில்லையூன்றத்தேர்வொடிந்திடவக்காலை
மனத்துறுவிடபமாகிமாதவன்றாங்கினானை
லனைத்தையுந்தாங்குவோனையவனருளாலேதாங்கி. (௭௰)

நின்றநல்விடையுமாங்கேநின்மலனதிகைமாடு
சென்றுவவ்வதிகைத்தென்பாற்சென்றுறுமவுணர்நோக்கி
யின்றிவர்வாழ்வுநோக்கியிரங்கியேநின்றாரங்கோ
புன்றொழிலுற்றப்பூசைநீக்கியபுன்மையோரை. (௪௧)

இறைவருமாற்றங்கேட்டுயிறவுளரரக்கரெல்லாம்
நிறைந்தனரொன்றாய்க்கூடிநின்றவத்தருணந்தன்னிற்
கறையுறுகண்டத்தானைகற்பகநாடர்நோக்கி
நறையுறுமரக்கர்கோட்டைநயந்தன்வொன்றாய்க்கூடி. (௪௨)

ஈதுநற்றருணம்வெல்லவிறைவனேயருட்செய்யென்ன
மாதொருபாகநோக்கிமறுவுதண்ணகையினோடு
தீதுடனழலில்வெந்துத்தீயவெந்நகைபுரிந்தான்
கோதுறுவரக்கர்தன்னைக்கொளுத்தியநகையுமாங்கே. (௪௩)

வெந்தனக்கோட்டையெல்லாம்வெந்தனரரக்கரெல்லாம்
வெந்தனரரக்கர்மாதுவெந்தனவரக்கர்சேனை
வெந்தனக்கரிகளெல்லாம்வெந்தனப்பரிகளெல்லாம்
வெந்தனர்மூவர்நீங்கவேலுறுமரக்கரெல்லாம். (௪௪)

அவன்கைத்திட்டபோதேயங்கியுமுடன்றுபொங்கிப்
பவமுறுவரக்கர்சேனைக்கோட்டையும்பற்றவந்த
தவமுறுசிலருதிமூவராந்தகுவர்ச்சார்ந்து
சிவபெருமானேயுன்றன்றிருவடித்தஞ்சமென்று. (௪௫)

வீழ்ந்தனர்ப்பதத்தின்மீதுவெய்துயிர்த்திட்டுப்பின்பு
சூழ்ந்தனரடியேஞ்செய்ததுகடனைப்பொருக்கவென்று
தாழ்ந்தனர்மீட்டும்நின்றுதண்ணருட்சுரந்துநோக்கில்
வாழ்ந்தனமடியோமென்றுவள்ளலைப்புகழ்ந்துநின்று. (௪௬)

அண்ணலுமருளிநோக்கியருளுவர்வேட்கையோடு
திண்ணமாயுமதுவேட்கைச்செப்பெனவரக்கர்சொல்வார்ப்
புண்ணியகணங்களாகியென்றும்நின்றன்னைப்போற்ற
திண்ணியவிப்போர்க்கோலந்திகழுடன்வணங்குவோர்க்கு. (௪௭)

வீட்டினையருள்வதோடுதிரிபுரம்வென்றாரென்று
சூட்டியபெயர்நினக்குந்திரிபுரச்சுந்தரிப்பேர்
நாட்டியவன்னையார்க்கும்நயப்புடன்வருதல்வேண்டும்
பாட்டியற்பரமவீகவென்றவர்ப்பணிந்தார்மன்றே. (௪௮)

அவ்வணமளித்தோமென்றுவருட்கணவடிவமாக்கி
செவ்வியவிருபாணிறகப்பணித்தொருவருக்குச்செய்ய
கவ்வையிற்குடமுழக்கக்கட்டளையிட்டுப்பின்னர்த்
திவ்வியநிலையைநல்கித்திருவுருக்காந்தார்மன்றே (௪௯)

தேவரின்மமதைநீக்கத்திகழுபுன்னகையும்பின்பு
மூவரைத்தப்புவிக்கமுயன்றதண்ணகையுமற்றப்
பாவராமாக்கர்த்தீயபகைத்துவெங்நகையுமூன்று
மாவருண்ணகையினீதுமன்றினுஞ்சிறந்தவன்றே. (௫௰)

அன்றவர்வேகாதுற்றவருந்தலம்வேகாக்கொல்லை
யென்றுமச்சரமாய்நின்றமாற்பெயரினியதாக
நின்றநுசரநாராயணப்பெயர்நிமலனூர்க்கு
யின்றிவண்வழங்குகின்றயிவ்வதிகையினின்மாதோ, (௫௧)

சூதனிவ்வாறுகூறச்சூழ்ந்துறுமுனிவரெல்லாம்
பாதநற்போதில்வீழ்ந்துபகர்கமற்றொன்றுவென்ன
நாதனுங்கெருடன்பூசையாற்றியநலத்தையிங்கு
கோதறப்புகல்வனென்றுறுத்திதுபுகல்வான்சூதன். (௫௨)

திரிபுரதகனப்படலம் முற்றிற்று.
ஆக திருவிருத்தம். ௬௭௪.

# கெருடன் பூசித்த படலம்.

பொய்யுறுமயணச்சார்பைநீக்கியபுலவபோற்றி
செய்யமாதாண்டகப்பாசெப்பியதேவேபோற்றி
கையுழவாரங்கொண்டகருணைமாமூர்த்திபோற்றி
பையவேயெமையாட்கொள்ளும்பரமனேபோற்றிபோற்றி. (௧)

காசிபமுனிவர்க்குற்றகத்துருவினதையென்னும்
பேசிடுமனைவிமார்கட்பெரியநற்கடலிலாட
யாசையதாகச்சென்றுயக்கடலாடுங்காலைத்
தூசுறுவினதைதன்னைக்கத்துருநோக்கிச்சொல்வாள். (௨)

வினதைநீவிண்ணுறெய்திமீண்டனைவிண்ணுடுற்ற
வனிதையின்போகமூழ்கும்வலாரியுமூர்ந்துசெல்லும்
புனிதநற்புரவிவெள்ளைநிறத்ததோபுள்ளிசேர்ந்த
யினிதுறுகரியபுள்ளிநிறத்ததோயியம்புகென்ன. (௩)

கத்துறுசொற்றமாற்றங்களித்துருவினதைகேட்டு
வத்துரகம்நான்கண்டேனரியநல்வெள்ளையென்றாட்
கத்துருக்கேட்டுப்புள்ளிக்கருநிறமுடையதென்றாள்
வித்தகமெற்றுவெண்மையேயெனவினதைசொன்னாள். (௪)

இலையிலைகருப்பேயென்றுகத்துருவியம்பக்கேட்டு
நிலையுடைவினதைநின்சொற்கிறியெனநின்றுகூறக்

கலையுடனிழையணிந்தகத்துருவெகுண்டுமீட்டும்
விலையறுபுரவிவெள்ளைநிறமெனவெகுண்டுசொன்னாள். (௫)

இகழுறத்தன்சொற்பொய்யாயிரிவதுவினதைகண்டு
வகமுறக்கண்ணாற்கண்டுமெபத்தமென்சொற்றியென்றாய்
நகையொடுநாயகன்றான்சமரசநடைநின்றாலுஞ்
சககளத்தியர்கடன்மைச்சஞ்சலம்வாளாய்ச்சாரும். (௬)

இன்னணம்வாதுகூறித்தோற்றவரெவரானாலு
மன்னவர்க்கடிமையாதல்றமெனவறைந்துபின்னர்
மன்னியவடிமைதேவமருந்தினைக்கொணர்ந்தாரானாற்
றுன்னுமவ்வடிமைப்பின்புநிவர்த்தியென்றுரைத்துத்தோய்ந்தார்(.௭)

கத்துருமைந்தனானகார்க்கோடன்றனைவிளித்து
சுத்தவத்தூரகந்தன்மேற்றன்புறவிடத்தாற்புள்ளி
வைத்திவண்மீளாயென்னமற்றவனவ்வாறாற்ற
யத்திறங்காண்பமென்றுவவடனையழைக்கலுற்றாள். (௮)

இருவரும்வானாடெய்தியிந்திரனூர்ந்துசெல்லும்
பொருவரும்பரியைநோக்கப்புள்ளியும்பொருந்திநின்ற
கருவரும்புள்ளிநோக்கிக்கலங்கினள்வினதைமாது
வெருவிடவடிமைகொண்டாள்வினதையைக்குய்யந்தன்னால். (௯)

அடிமையையகற்றவேண்டிவினதையுமரிதுபெற்ற
வடிவுறுமுவணன்றன்னைமற்றவள்விளித்துச்சொல்வாள்
கடிதுநீவிண்ணைவென்றுக்களித்திடுசுதைகைக்கொண்டு
மிடிமையென்னடிமைதன்னைமீட்டுகமைந்தாயென்றாள். (௧௦)

அவனும்விண்ணாட்டிற்சேரவாற்றலெற்கில்லையென்று
பவமறுதாதைதன்னைப்பணிந்தவன்விளம்பலோடுந்
தவமுறுதாதைகேட்டுத்தலமெனுமதிகைமேவிச்
சிவந்தனைவணங்கிபோற்கிற்றிறமுனக்குறுமென்றோத. (௧௧)

அத்தலமவனுஞ்சென்றுவரியநற்கெடிலமோடுஞ்
சுத்தநீர்க்குடைந்துமெய்யிற்றூயநீறணிந்துவக்கப்
பத்திநன்மணியும்பூண்டுப்பரசிவந்தன்னையெண்ணிக்
கத்திகைதொடுத்தவாயிற்களிப்புடனரிநிநீங்கி. (௧௨)

கருணைமாமூர்த்திதன்னைக்கண்களுங்களிப்பக்கண்டு
வுருகிடமனமுமெய்யிலுற்றிடுபுளகங்கொள்ள
வருகிலெட்டுருப்புந்தோயவண்ணலைப்பணிந்துவன்புப்
பெருகியவுள்ளத்தோடுபெயர்ந்தவணீங்கிப்பின்பு. (௧௩)

சக்கரதீர்த்தந்தன்னிற்குடைந்துபின்றகுவெண்ணீறு
வக்கரமைந்தும்போற்றிவமைவுறவமர்ந்துமேல்பால்
நக்கனுமிலிங்கந்தன்னைநற்பிரதிட்டையாற்றி
தக்கவவ்விலிங்கபூசையாற்றதன்னுள்ளத்தெண்ணி. (கரு)

புதுமலர்க்காவுட்சென்றுபுன்னையுமறுகுவில்வம்
பதுமமுங்கன்னிவெட்சிப்பாடலங்கிளுவைதும்பைப்
பொதுளியசெருந்திகாஞ்சிபொற்புறுமலர்கைக்கொண்டுக்
கதுமெனவாற்றிப்பூசைக்களிப்புடன்றோத்தரிப்பான். (கசு)

## வேறு.

புண்ணியர்சூழ்ந்துமுப்போதும்வணங்கிடுபுனிதநல்லதிகைதனி
லெண்ணுறவெற்கொருவைப்பெனநின்றவிசைந்ததயாநிதியே
தண்ணருணிற்குணசகுணமதாயுறுசமரசநன்னிலையே
பண்ணருட்சைவசிகாமணியேநீபல்லாண்டுபல்லாண்டே. (கசு)

புரமுறுமவுணரைவாட்டியவீரபுராந்தகபூரணனே
தரமுறுசத்தினிபாதரையாண்டிடுதற்பரநின்மலனே
சரமசரங்களினுன்மசமூகந்தாங்கியமேலவனே
பரமவிவேகபகாலமேநீபல்லாண்டுபல்லாண்டே. (கஎ)

நிராமயகாரணநிபிடவானந்தநிகேதனமுற்றவனே
விராவுபதத்தவிராட்டுருவாயவிவாதமுறாதவனே
தராதரமுற்றதவாநிலையன்பரைத்தாங்கியமேலவனே
பராபரமாயுறுபண்ணவனேநீபல்லாண்டுபல்லாண்டே. (கஅ)

விண்ணவர்க்களித்திடவீரரைவென்றவீரபுராதிபனே
மண்ணவர்க்களித்திடவதிகையமர்ந்துறுமன்னுசுகோதயமே
கண்ணவர்முதலியவான்றவர்போற்றுங்கருணைதயாநிதியே
பண்ணவரிசைக்கினிதானவனேநீபல்லாண்டுபல்லாண்டே. (சகூ)

வாரணத்தீருரிபோர்த்தணிந்திட்டவாதமுறாதவனே
காரணகாரியமாகவமர்ந்தகலாநிலையுற்றவனே
பூரணபுண்ணியனுகவமர்ந்துறுபுனிதசிகாமணியே
பாரணங்கோடுகலந்தபரமநீபல்லாண்டுபல்லாண்டே. (உ0)

## வேறு.

இவ்விதந்தோத்தரித்துயிறைவன்றன்பதத்தைப்போற்றி
யவ்விடந்தவமியற்றயண்ணலுந்தோன்றிவேண்டுந்
திவ்வியவரங்கேளென்னசெப்புவன்பரவைவேந்தத்
தவ்வையினடிமைநீக்கச்சார்ந்துவிண்ணுட்டைவென்று. (உக)

அருமருந்ததனைக்கொள்ளவாற்றலும்வேண்டுமென்னத்
திருவருட்சத்திசேர்ந்தசெம்மலுமளித்துப்பின்னை
யொருவருமொழிளித்தான்பின்னருவணனும்விண்ணுறெய்திப்,
பொருவருமருந்துகொண்டுபோக்கினனடிமைதன்னை. (உஉ)

இப்பெருவிலிங்கந்தன்னையின்புறவணங்கினோர்கட்
செப்பருஞானங்கல்விச்செல்வமுஞ்சிறப்பப்பெற்றுத்
தப்பருமுத்திசார்வரென்றவண்சூதன்சாற்ற
வொப்பருமுனிவர்வேறுவுரையெனவுரைப்பான்சூதன். (உங)

கெருடன் பூசித்தபடலம்.
முற்றிற்று.
ஆக திருவிருத்தம். சுகஎ.

# தருமன் முதலிய ஐவர் பூசித்த படலம்.

முப்படைச்சூலத்தோடுமோதுவெங்கதையுந்தாங்கி
யிப்புவிவருங்கூற்றத்தினிரும்பாசக்கட்டுள்ளாகார்ச்
செப்புநற்றிருவாமூரர்த்திருவடித்துணையேநங்கட்
கொப்பருந்துணையென்றுன்னியுறுபாசங்கட்டினோரே. (க)

மதிகுலமதனிற்றோன்றிவாரணப்புரியையாண்ட
புதன்மரபதனில்வந்தபுதல்வர்களிருவரன்னோர்க்
கதியுறுபாண்டுவென்றுங்கண்ணிலியென்றுமுற்றுப்
பதியதிற்செங்கோலோய்ச்சிவாழுநாட்பாண்டுதன்பால். (உ)

கனத்திடுபுதல்வரைவர்க்கண்ணிலிதன்பால்நூறு
சினத்திடுபுதல்வர்தோன்றிச்சிலைபயில்விஞ்சையாதி
மனத்துறுகலைபயின்றுவாரணப்புரியையாள
வனத்தநற்பருவமுற்றுவருமரசதனைப்பெற்று. (ங)

ஆளுநாளரவகேதனத்தனுதியர்கட்சூழ்ந்து
வாளுறுமைவர்தம்மைவஞ்சித்துவரசைக்கொள்ள
கோளுறுசூட்சியாதுயென்றவர்க்குழுமிநோக்கத்
தோளுறுமணியார்நின்றுவுசாவினர்த்தொகையதாக. (ச)

வில்லுறுமைவர்தம்மைப்போரினில்வெல்லகம்மா
லொல்லெனக்கூடாவென்றுவொன்றுசெய்வோமென்றுற்று
வல்லெனுங்கருவிகொண்டுவருமவரைவர்தம்மை
வெல்லுவமென்றுகொண்டுவேந்தரைவரைவிளித்தார். (ரு)

விளித்தலுந்தருமனாதிவேந்தரும்விரைவிற்செல்ல
களித்தவர்விருப்பிற்பேசிகவினுறுபோதுபோக்காய்ப்
புளித்தவல்லாட்டமொன்றுபோடுவமென்றுசாற்றி
யளித்தற்பந்தயம்நன்னாட்டைத்தோற்றவரெவரானாலும். (௬)

என்றுயிவ்வொட்டங்கூறியிகலாட்டமாடிமன்னன்
வென்றனரைவர்நாட்டைவென்றனனவரைவஞ்சங்
கன்றியவுள்ளத்தோடுகானகமுறையமேவி
யொன்றுபத்திரண்டுவாண்டுசென்றுறினுமதுநாட்டை. (௭)

ஈதலுஞ்செய்வோமென்றுயியம்பியங்கவரையோட்டி
காதலனவரைக்கொல்லகனத்தவஞ்சூட்சிசெய்தான்
மாதவர்மாலினாலேபிழைத்தாண்டுசெல்லவந்தார்ப்
பாதகவஞ்சரெண்ணமுற்றிலும்பலிக்குங்கொல்லோ. (௮)

வந்தவர்நாடுகேட்பமற்றவனளிக்கானாகிப்
புந்தியில்வஞ்சத்தோடுபொருசெய்துபெறுமினென்ன
யந்தவாறியற்றுவாமென்றைவருங்கருத்திசைந்து
சந்தமாய்ப்போரினுக்குச்சார்ந்தனர்ப்படைகட்சார. (௯)

இருதிறப்படையும்போர்செய்கின்றவக்காலமிந்த
வருதிறவின்னாலாளன்வில்லெடாவகையைச்செய்யக்
கருதிறமேனியோன்கதாயுதன்றனைவிளித்து
பொருசெயுந்துரோணன்முன்னும்புதல்வனும்பட்டானென்று. (௧௦)

ஓதிபின்மீளாயென்னமாருதியுரைத்துமீண்டான்
சோதிநல்லறிவோன்கேட்டுசொற்றமொறியன்னோ
னோதியதுண்மைதானோவென்றுண்மைவேந்தைக்கேட்க
வாதியுமசுவத்தாமாவதாகுஞ்சரமதென்றோத. (௧௧)

அவ்விடமசுவத்தாமன்கரியிறந்தளவுநோக்கி
யவ்வணமுறைத்தலோடுவச்சொலினீற்றின்மேவு
மவ்வரும்யானையென்னுமரும்பதமறியாவண்ண
மவ்விடமரியுஞ்சங்கமமைவுறக்குறித்தான்மன்னோ. (௧௨)

மற்றவில்லறிஞன்கேட்டுமென்னுதம்புதல்வன்மாண்ட
சொற்றனைவருத்தலோடுஞ்சோர்ந்தினியென்னவென்று
விற்றனையெறிந்துநிட்டைமேவிடத்தனித்துநின்றா
னற்றவரேனுமக்களாசையுமகலுங்கொல்லோ. (௧௩)

அத்தருணத்தேதுட்டத்தூய்மனுமழன்றுபொங்கிக்
கைத்தலம்வாளாற்கொன்றுநிறுவினன்கனத்தபாபஞ்
சுத்தமெய்யோனிடத்துத்தோய்ந்தனதுன்னுபோரில்
வித்தகவைவர்வென்றார்வியனுறத்தோற்றார்மற்றோர். (௧௪)

பின்னரைவருமந்நாட்டைப்பெற்றரசாளவெண்ணித்
துன்னியமெய்யோன்செல்லக்குருகத்தித்துடர்ந்துபற்ற
வென்னிதுவையசோவிங்கிதற்கென்னசெய்வோமென்று
யன்னவன்வருந்திநிற்பவியாசனுமங்கணுற்றான். (கரு)

வந்தநல்வியாசன்றூயமலர்ப்பதந்தன்னில்வீழ்ந்து
சந்தவாசனமுந்தந்துவருக்கியமாதிதந்து
யெந்தையேகுருவைக்கொன்றதோடமுமென்னைப்பற்றி
முந்தியதிதற்கென்செய்வேன்மொழிமினென்றுரைத்துவீழ்ந்தார். (கசு)

அவ்வுரைகேட்டபோதுவண்ணலுமருளிநோக்கிச்
செவ்வியகெங்கையென்னுந்திருக்கெடிலத்தின்பாங்கர்த்
திவ்வியவதிகையென்னுந்திருத்தலமொன்றுண்டாங்குக்
கவ்வையிலாதுசென்றுவணங்கிடிற்கருணைவள்ளல். (கஎ)

திருவருளாலேபாபமுற்றிலுந்தீருமென்று
பொருவருமுனிவர்க்கூறிபின்னரும்பொருந்தக்கூறும்
வருமொருபிரமன்முன்னர்பொய்வழங்கியமாகுற்ற
மிருமிந்தத்தலத்திலுற்றுவணங்கிடவிரிந்ததன்றே. (கஅ)

ஆதலாற்செல்கவென்றுபணித்தலுமவன்றாட்போற்றி
காதலாற்குந்திமைந்தன்கதுமெனவிடைபெற்றாங்கே
சூதனைவிளித்துத்தேரைக்கொணர்கெனப்பணித்துச்சூழ்ந்தப்
பாதலஞ்சைலங்கானம்படையொடுபரந்தான்மன்னே. (கக)

## வேறு.

பாண்டுமொபுதல்வன்பலகானமுந்
தீண்டுவெங்கதிர்ச்சோலையுஞ்செவ்விய
பூண்டரும்பற்கிலையிற்புகுந்துமே
காண்டமாட்சிவளத்தைக்கழறுவாம். (உ0)

## கலிவிருத்தம்.

புன்னாகத்தருகீழிற்புழையினிற்
புன்னாகம்வரவுவணம்புகழுமாற்
பன்னாகத்துறுபற்சுனைபூத்தவாம்
பன்னாகஞ்சுடரெனப்பயந்தேகுமால்.

(இ-ள்.) புன்னாகத்தரு=புன்னாகவிருக்ஷத்தினது, கீழில்=கீழாகவுள்ள, புழையினில்=புற்றினிடத்து,புல்=சிறிய, நாகம்=பாம்புகள், வர=வருவதைப்பார்த்து, உவணம்=கெருடன் (பகைமையொழித்து) புகழும்=அதனைப்புகழும். பல்=பலவாகிய, நாகத்துறு=மலையிலுள்ள, பல்சுனை=பலசுனைகளிடத்து, பூத்த=மலர்ந்த, ஆம்பல்=ஆம்பல் புஷ்பத்தைப்பார்த்து, நாகம்=யானைக

ளானது, சுடரென=அக்கினியென்று, பயந்து=பயப்பட்டு, யேகும்=வழியே செல்லும், ஆல்.என்பதசைகள். இஃது யாப்பியல் கலிவிருத்தவியலுட்கூறிய நாற்சீரோரடியான் முடிந்தசந்தவிருத்தம். அக்கானகத்துள்ள விலங்கு மூர்வனவும் பகைமை நீத்துள்ள வென்புதைச் சுட்டிநின்ற துபசாரவழக்கென்க. ()

## யமகம்.

குந்தந்தங்கட்பறவைக்குலவிவை
குந்தந்தங்கட்குழுவோடிறைதல்வை
குந்தந்தங்கட்சம்பூவான்குறுகுதற்
குந்தந்தங்கட்கவிஞர்போற்கூவுமால்.

(இ-ள், )குந்தம்தம்கண்=குருந்தமரத்தினிடத்து, பறவை=பட்சிகள், வைகும்=வசிக்கும், தம்தம்கண்=தங்கள்தங்களிடத்தில், குழுவோடு=அப் பக்ஷிகட் (கூட்டத்தோடு) இறைதல்=சத்தித்தலை (நோக்கினல்) வைகுந்தம்=வைகுந்தத்தில், தங்கு=தங்குபவனும், அட்சம்பூவான்=தாமரைக்கண்ணனுமாகிய (விஷ்ணுவை) குறுகுதற்கு=(தாங்கள் வசிக்குங் குருந்த மரத்திற்கு)வரும்படிக்கு, தந்து=கல்விநூலாகிய, அம்=அழகிய, கண்=கண்ணை யுடைய, கவிஞர்போல்=நாவலர்களைப்போல், கூவும்=(பட்சிகள் கூப்பிடும் முல்லை நிலத்தில் வசிக்கு மதிகாரமுடையார் விட்டுணுமூர்த்தியாகலின் பக்ஷிகளாகிய புலவர்கள்தோத்தரித்து விளித்தலை யொற்றுளதெனவு வமித்தவாறு. கல்வியில்வல்லார்க்கு நூலறிவாகிய கண்ணென்று, இதனை. கண்ணிரண்டே யாவர்க்குங் கற்றோர்க்கு மூன்றுவிழி யென்னு முறைப் பிரமாணத் துணர்க ஆல் அசை. உம்மை விகாரத்தாற் றொக்கது. பால் என்பது பசும் பாலையே சுட்டி நின்றமை போல பூ வென்பது தாமரையையே சுட்டிநின்றன. இதனை பூவினுக்கருங்கலம் பொங்கு தாமரையென்னும் ஆளுடைய வரசினருள்வாக் கானுணர்க.

## இரண்டடிப்பாடக மடக்கு.

ஆரணந்திருமாதவரார்ப்புதல்
ஆரணந்திருமாதவரார்ப்புதல்
வாரணங்கங்குசம்புகவல்லியார்
வாரணங்கங்குசம்புகவல்லியார்.

(இ-ள்.) திரு=இலக்குமியை யுடைய, மாதவர்=விட்டுணு, ஆர்=தங்கிய, புதல்=புல்நிரைந்த காட்டினிடத்து, ஆர்=பொருந்திய, திருமாதவர்=பெரிய தவசிகளது, அணம்=உண்ணாவினிடத்து, ஆர்ப்புதல்=சத்தித்தலை '(நோக்கினல்) ஆரணம்=வேதமே (முழங்கி நின்றன) வாரணம்=சங்குகளாகிய, கம்=கமண்டலத்தில், குசம்புக=சலமானது செல்லும் படிமொண்ட, வல்லியார்=வல்லிக்கொடிகளையொற்றவர்களாகிய, வார்=கச்

சணிந்த, அணங்கு=(இருடிபத்தினிகளாகிய)பெண்கள் (நிறைந்த) அங்கு= அக்காட்டினிடத்து, சம்பு=நாவல்விருக்ஷமும், உகவல்லி=நாகமல்லிகைக ளும், ஆர்=நிறைந்துள்ளன. (உரு)

## முற்றுமடக்கு.

### வஞ்சித்துறை.

காளகமோங்கல், காளகமோங்கல்
காளகமோங்கல், காளகமோங்கல்.

(இ-ள்.) காளகம் ஓங்கு அல் = அக்காட்டினிடத்து பொருந்திய யிருளானது, கால் நகம் ஓங்கல்=காலில்நகத்தையுடைய யானையையும், காளகம் =கருஞ்சீரகம், ஓங்கல்=உயர்ந்துள்ள கா நகம் ஓங்கல்=பூங்காவும் மரமும் உள்ள மலையையும் (ஒற்றன) ஆகவே அக்காட்டினிடத்துத் திரண்டுள்ள யிருளானது யானையையும் மலையையும் ஒற்றுளனவென்க. உச)

## முரசபந்தம்.

ஒவ்வோரடியொவ்வொருவரியாக நான்கடியுமெழுதி மேலிரண்டு வரியுந் தம்முட்கோமூத்திரியாகவும், கீழிரண்டுவரியுந் தம்முட்கோமூத்திரியாகவுஞ் சிறுவார்போக்கப்பட்டு, மேல்வரியிரண்டாம்வரியினு மூன்றாம்வரியினும் நான் காம்வரியினுங், கீழுற்று, மீண்டுமேனோக்கவும், கீழ்வரியினுமவ்வாறே. மே லுற்று மீண்டு கீழ்நோக்கவும் பெருவார் போக்கப்பட்டும் இந்தவார்நான்கும் நான்கு வரியாகவருவது.

### வஞ்சி விருத்தம்.

பூங்கை மா பணை வாங்குவ
பூங்கை மா பணை வாங்குவ
வேங்கைமா பணை வாங்குவ
வேங்கைமா பணை வாங்குவ.

(இ-ள்.) பூம்=அழகிய, கைமா=யானையானது, பணை=மூங்கிலை, வாங் குவ=வளைப்பன, வேங்கை=வேங்கைமரங்களும், மா=மாமரங்களும், பணை =அரசமரங்களும், வாங்குவ=வளைந்துநெருங்கி நிற்பன, பூங்கை=பூவாகிய யிடத்தையுடைய, மா=வண்டு, பண் ஐ=கீதத்தை, வாங்குவ=பாடுவன, வே ங்கைமா=புலியானது,பணை=துயிலிடத்தில்,வாங்குவ=(அக்காட்டினிடத்து) பாய்வன. (எ-று.) (உரு)

## திரிபங்கி.

ஒருசெய்யுளாயுருப்பமைந்து வொருபொருட்பயப்பதனை மூன்றாகப்பிரி த்து எழுதவெவ்வேறுசெய்யுளாய்த் தனித்தனியே பொருட்பயந்துதொடை யுங் கிரியையுந் தனித்தனியே காணவருவது.

## நேரிசைக் கட்டளைக்கலித்துறை.

சாலையதாம்நரைசேர்கதிர்மாதழைவாகியசார்
சோலையின்மீதரைசேர்ந்துறுமேவழைசோர்கிளைவார்
மாலைமதிக்கரையின்மிகுதீபழம்வானகவுங்
கோலையுறும்வரைபோலுறுமேவுழைக்கொக்கினமே.

(இ-ள்) சாலையதாம்=வரிசையாக, நரை=வாசனையும், கதிர்சேர்=சூரியனையுந் தன்னிடத்தே சேரவுள்ள, மா-மரங்கள், தழைவாகிய=தழைத்து, சார்=பொருந்திய, சோலை=தோப்புகளானது, மீ=மேலும், தரை=கீழும், சேர்ந்துறும்=சேர்ந்து(படர்ந்து) நிற்கும், வழை=சுரபுன்னைமரத்தில், சோர்-சோர்ந்தசையும், கிளை=கிளைகளில், ஆர்=வந்துபொருந்திய, மாலைமதி = மாலைப்போதின் இளஞ்சந்திரன், கரையில்=எல்லையற்ற, மிகு=மிகுந்த, தீ=பிரகாசமாக, பழம்=கனிகளானது, வானகவும்=ஆகாயத்திலாடும், கோலையுறும்=கொம்புகளையுடைய,வரைபோலுறும்=மலையைப்போல நிற்கும்,வுழை=சமீபித்துள்ள, கொக்கினம்=மாமரங்கள். (உஅ)

இக்கவியுட்பிரிந்தசெய்யுள்கள்.

## வஞ்சித்துறை.

| | | |
|---|---|---|
| சாலையதாம் | நரைசேர் † கதிர்மா | தழைவாகியசார் |
| சோலையின்மீ | தரைசேர்ந்துறுமே | வழைசோர்கிளைவார், |
| மாலைமதிக் | கரையின்மிகுதீ* | பழம்வானகவும் |
| கோலையுறும். (உஎ) | வரைபோலுறுமே. (உஅ) | வுழைகொக்கின்மே. () |

# மாத்திரைச்சுருக்கம்.

ஒருபொருட்பயக்குமொருசொல் ஒருமாத்திரையைக்குறைப்ப
வேறு பொருட்பயக்குஞ்சொல்லாய் வருவது.

## கலிவிருத்தம்.

விறகுதன்னிலோர்மாத்திரைவீந்தது
நிறைமதஞ்சனிமாத்திரைநீக்கிட
வறையும்பக்கத்திற்கூட்டமருந்திடற்
பொறையுறும்பொன்னுறிஞ்சதற்போலுமே.

(இ-ள்) விறகுதன்னில் ஓர்மாத்திரைவீந்தது=ஓர்மாத்திரைக்குறைதலுடைய-விறகு-காட்டம். ஓர் மாத்திரைக்குறைதலுடைய காட்டம் என்றமையால்-கட்டம்என்றாயிற்று, கட்டம்=காட்டில், மாத்திரைநீக்கிட நிறைமதஞ்சனி=ஓர் மாத்திரைக்குறைதலுடைய நிறைந்தமதம்பொருந்திய காரி, ஒரு மாத்திரைகுறைதலுடைய காரியென்றமையால்-கரி யென்றாயிற்று, கரி=

---

† கதிர்மா=சோதிவிருக்ஷம், *தீவரை=அக்கினிமலை.

யானையானது, அறையும்பக்கம்=சொல்லும்படியான மாடு-ஓர் மாத்திரைக்குறைதலுடைய மாடுயென்றமையால், மடு என்றாயிற்று. மடு = (நீர் நிறைந்த ஆற்றினுட் பள்ளங்களில், கூட்டம்=யானைக் கூட்டங்கள், அருந்திடல்=நீர் (உண்பது) பொறையுறும்பொன், பாரம்பொருந்திய மாழை, ஒருமாத்திரைக்குறைதலுடைய மாழை யென்றமையால், மழையென்றாயிற்று. மழை=மேகமானது, உறிஞ்சுதற்போலும்=நீருண்பதை யொற்றுள்ளன. (௫௰)

## மாத்திரைவருத்தவனி.

ஒருபொருட்பயக்கு மொருசொல் ஒருமாத்திரைப்பெற்று வேறுசொல்லாய்ப்பொருள் பயந்து நிற்பது.

மாத்திரைப்பெறுமூடியின்மன்னிய
மாத்திரைப்பெறுயுகிர்கண்மருவியே
மாத்திரைப்பெறுமன்னைக்கனியென
மாத்திரைப்பெறுகாட்டிடைவாவுமால்.

(இ-ள்.) மாத்திரைப்பெறுமூடி=ஒருமாத்திரைக்கூடியபடலம், ஒருமாத்திரைக்கூடியபடலம் என்றமையால் பாடலம் யென்றாயிற்று. பாடலம்=பாதிரிமரத்தில், மன்னிய=தங்கிய, மாத்திரைப்பெறுயுகிர்கள். ஒருமாத்திரைக்கூடிய நகங்கள். ஒருமாத்திரைக்கூடிய நகங்கள் என்றமையால், நாகங்கள் நாகங்கள்=குரங்குகள், மருவி=சேர்ந்து, மாத்திரைப்பெருமன் =ஒருமாத்திரைக்கூடிய தராபதியென்றமையால், தாராபதியென்றாயிற்று. தாராபதி சந்திரனை, கனியென=பழமென்று, மாத்திரைப்பெறுகாடு=ஒருமாத்திரைக்கூடிய வனம்யென்றமையால், வானம்யென்றாயிற்று. வானம்=ஆகாயத்தினிடத்து, வாவும்=தாவிப்பாயும். ஏ. ஆல். அசை. (௫௧)

### வேறு.

ஏனமுமெண்குபுல்வாய்க்கடைமையுமிருந்துலாவுங்
கானமும்பலகடந்துகரிமதமருவியென்னத்
தானமதொழுகும்வெய்யசைலமும்பலகடந்து
வானநீரோடுங்கோதாவரிக்கரையணைந்தான்மன்னன். (௫௨)

மாதருமைந்தாரும்வருநதியிழிந்துபோகி
காதலரோடுசாரல்நண்ணியோர்கல்வினுற்ற
சீ‌நற்சுனைநீர்மூழ்கிநீர்விளையாட்டிற்சேர்ந்து
கோதுறுவன்னோர்நீரிற்குடைந்தவணுடுவாரால். (௫௩)

மூழ்குவர்ச்சில்லர்ப்பின்னர்முலைத்தலமசையநின்று
வீழ்குவர்ச்சில்லர்சூழ்ந்துவிரவிடசுனைநீர்த்தன்னி
லாழ்குவர்ச்சில்லர்த்தங்களன்புறுகொழுநர்ப்பற்றி
மாழ்குவர்ச்சில்லர்மேலேமயங்குவர்சில்லோரங்கண். (௫௪)

ஒருத்தியின்வதனம்நோக்கிமரையெனவொருவன்கொண்டு
திருத்தமார்கரத்திற்பற்றத்திருந்திழைசினந்துநோக்கக்
கருத்தினிற்கஞ்சமென்னக்கருகியதென்றுட்கொண்டு
வருத்தியவுள்ளத்தோடுவெருடுவன்மலர்க்கைதன்னால். (௩௫)

முலைத்துகில்விலகிநின்றவொருத்தியின்முன்னர்ச்சென்று
நிலைத்தபொற்குடமென்றுன்னிநீட்டினன்கையாற்பற்ற
சிலைத்தவொண்ணுதலார்மூழ்கமறைதலும்நீர்க்குட்சென்று
உலைத்தலிற்குடமூழ்கிற்றென்றவனும்பின்மூழ்குவானால். (௩௬)

புனல்விளையாட்டின்மேவிப்பூக்கொய்வான்காவிற்சென்று
தனமகிழ்ந்தாடிச்சோலைமருவியதருவிலேறிக்
கனலெனவலரிகோங்குகடுக்கைமந்தாரைஞாழற்
சினையுறுதருவிலேறித்தெய்வமந்தரையொற்றுரால். (௩௭)

இவ்வணம்பூக்கட்கொய்துவாடிபின்னிருக்கைமேவி
வவ்விடமகன்றுமன்னனநீகமும்பலநாட்சென்று
பௌவமாரகிலமெல்லாம்பருகிடுகெடிலப்பாங்கர்த்
திவ்வியநகரமாயதிருவதிகையினிற்சார்ந்தார். (௩௮)

திருக்கெடிலத்தின்மூழ்கித்திருநீறுபூசியைய
னுருத்திரவக்கம்பூண்டுவோங்குமந்திரத்தின்முன்னர்ப்
பெருகியசிகரிகண்டுபெட்புறப்படிந்துபோற்றி
மருக்கிளர்த்தும்பைமாலைவள்ளலையுட்சென்றேத்தி. (௩௯)

சக்கரதீர்த்தம்புக்குக்குடைந்துபின்றகுவெண்ணீறு
மிக்கமேனியிலணிந்துமெய்யினிலக்கம்பூண்டு
பக்கமப்பொய்கையின்கண்பசுபதிதனையமைத்து
தக்கமாபூசையாற்றத்தம்பிமாருடனேசென்று. (௪௦)

காவினிற்குடலைகொண்டுகடிமலர்க்கொய்துநீரும்
மாவதுமுதலாயுள்ளபொருட்களைமாணக்கொண்டுத்
தேவினைவிதியிற்பூசைசெய்துபின்னெதிரிநின்றுப்
பாவினந்தன்னாற்றேத்தரிப்பனாற்பாண்டுமைந்தன். (௪௧)

## வேறு.

ஆதியந்தமில்லாதவமுதேபோற்றி யதிகையெனுந்தலைத்துறையுமரசே போற்றி, பாதியுருப்பெண்கொண்டபரனேபோற்றி பந்தமறநால்வர்க்குப்பதியாய்நின்று, சோதியுருவிளங்கவைத்தசுடரேபோற்றி சொன்மனமெய்தனக்கெட்டாசோதிபோற்றி, வாதிதனக்கெட்டாதவடிவேபோற்றி மலர்வீரட்டானத்தபோற்றிபோற்றி. (௪௨)

புத்தனிச்சமலரடியாட்பங்கபோற்றி பொல்லாதவசுரர்புரம்பொடித்தாய போற்றி, தத்துவமாய்நிறைந்ததிருவடிவேபோற்றி சகசமலமொழித்தருளுந் தாயேபோற்றி, சுத்ததிருவதிகையுறுஞ்சுடரேபோற்றி தூயதூரியப்பதியின்சுக மேபோற்றி, வித்தகரின்மனக்கோயிற்கொண்டாய்போற்றிவீரட்டானத்துறை வபோற்றிபோற்றி.

ஒன்றிரண்டுமூன்ருகிநின்ருய்போற்றி யுறுவமுருநாலகியுவந்தாய்போற்றி மன்றினிடைநடமாடும்வள்ளால்போற்றிவாரணத்தினுரிபோர்த்தவழகாபோற்றி குன்றென்னுங்கைலைதனில்நின்ருய்போற்றிக்கோதிலாக்குணத்தரிடங்கொண் டாய்போற்றி, வென்றியொடுவேளெரித்தவிமலாபோற்றிவீரட்டானத்துறைவ போற்றிபோற்றி, (௫௪)

## வேறு.

என்றுமெய்யோன்றுதிக்கயீறையும்விண், ணின்றுகாட்சியளித்துநீவேண்டிய
நன்றியென்னவிளம்பெனநற்றவன், மன்றுடையானடியைவணங்கியே. (௫௫)

ஐயநான்சொற்கிறிவடகலவுந்,துய்யவிந்தவிலிங்கந்தொழுபவர்
வெய்யவிந்தப்பிறவிவெறுத்துமே, மெய்யுறுநின்னுலகினைமேவவும். (௫௬)

அடியனேனின்னடியகலாமலே. கடிகமழுங்கருணைமாமேனியை
நெடிதுபோற்றிடநீயருட்செய்யென, படியில்வீழ்தனன்பாண்டுபுதல்வனும். ()

அண்ணல்நோக்கியளித்தனனப்பநின், கண்ணமர்ந்தபொய்க்குற்றங்கடந்தது
மண்ணிற்றண்ணரசாண்டுமெதியுட,னெண்ணுநம்மடிசாரெனவேகினன். (௫௮)

பின்னர்பாண்டுபுதல்வனும்பெற்றியாய், மன்னுதம்பிமார்தன்னெடுமாண்பெறு
துன்னுநற்படைதன்னெடுதொல்பதி, தன்னைமேவித்தனியரசாண்டனன். ()

இந்தவைவரமைத்தவிலிங்கமாஞ், சந்தநாயகன்றன்னடிபோற்றிடின்
பந்தமுற்றுமகன்றுபசுபதித், தந்திருவடிச்சார்த்திடலாமரோ. ((௬௦)

இந்தவாறுவியம்பிபின்சூதனுஞ், சந்தமாயதலத்தின்மகிமையை
முந்தக்கூறுவங்கேளெனமெய்ம்முனி, நந்தலத்தின்மகிமைநவில்வனுல் (௬௧)

தருமன்முதலியஐவர்பூசித்தபடலம்.

முற்றிற்று.

ஆகதிருவிருத்தம். எ௪அ

திருச்சிற்றம்பலம்.

# தலவிசேடப் படலம்.

எத்தொழிற்கும்வைராக்கியமிருத்தல்நன்றென்று
வொத்தறுசிவசாத்திரமுரைத்திடுமுணர்ந்தாம்
பத்தியோடுநான்கைலைகாணுதுபின்பாரேன்
சத்தியற்றெதுகுறையினுமென்றிடுஞ்சார்பால். (௧)

உலகமோங்கிடவைஃதொழின்முறைமையினுஞற்றிக்
கலகமற்றுசத்தாஞ்சிவபோகமாய்க்களிப்புற்
றிலகுதொண்டருக்குள்ளொளியாயிருத்தலினால்
வலகுசூழ்திருவதிகையுமண்ணலையொக்கும். (௨)

விண்ணுறைந்திடுதேவரும்விண்ணவரிறையுங்
கண்ணனாகியமாலெனப்புகழ்பெறுகடவுட்
டண்ணந்தாமரைக்கிழவனுஞ்சார்ந்துநிற்றலினான்
மண்ணில்வானகர்மூன்றும்வந்துற்றெனமானும். (௩)

சரியைவேண்டினர்த்தங்களுக்களித்திடுஞ்சார்ந்து
கிரியைவேண்டினர்க்களித்திடுங்கிளர்த்திடுயோகப்
பிரியமுற்றவர்க்களித்திடுமொபெறுஞான
முரியதேசிகன்போலுளதுத்தமவதிகை. (௪)

வெங்குருவினுக்கிறையவனாகியவிமல
னங்குருவிவணணுகிடநாடகம்நடித்துப்
பொங்கிநிற்றலிற்பெரியர்கட்பொதுவெனப்புகழும்
மங்குன்மாதலமன்றெனப்படுவதுமரபே. (௫)

நாவினுக்கரசாகியநவிலரும்பெரியர்
மேவிச்சூலையைநீங்கிடப்பெறுதலில்மெய்யிற்
றுவுநோயகற்பரவைவேளூரெனச்சார்ந்து
பூவிலித்திருவதிகையும்புகழுறப்படுமால். (௬)

இத்தலத்துறுவிருவிதவான்மவர்க்கங்கட்
சுத்தமாயிவண்பிறத்தலிற்றூயநற்கைலை
முத்தியாதலின்முதற்றலமாகியவாரூ
ருத்தமப்பதியென்னவுமோங்குமிப்பதியே. (௭)

இந்தநற்றலந்தன்னின்மிக்குயர்தலமில்லை
சந்தமாயிதன்றன்மையிற்குறைவதுமில்லை
பந்தமுற்றமாபாதகர்ப்பரப்பதுமில்லை
யந்தமாதியினளவிலறைவதுமில்லை. (௮)

பொருவருமிந்தத்தலத்தினிற்புண்ணியமியற்ற
வருமவர்களுந்திருவிழாச்செயவருபவருங்
கருமஞ்செய்பவர்த்திருமடஞ்சமைப்பவர்களித்து
யருமையாகியகைலையையணுகுவரன்றே. (௯)

சிகரிகட்டுவோர்மண்டபஞ்செய்பவர்ச்சிறந்த
பகரும்நந்தனமாக்குவோர்மலரிணைப்பரித்து
நிகரின்மாலைசெய்தணிபவர் † நிலத்தினைவிடுப்போர்
நகரடைந்தவர்முத்திநன்னடைகுவரே. (௧௦)

மூன்றுபோதினும்பணிபவர்மூதற்பதிகோயிற்
றோன்றுமாசினைத்துடைப்பவர்த்தூயகோதனத்தி
னூன்றகோமயத்திருமெழுக்கிடுபவரனைவர்
தான்றனித்திருக்கைலையெம்மிறைப்பதஞ்சார்வார். (௧௧)

பன்னுமித்தலம்பெற்றுளபலபெயர்க்கேண்மோ
மன்னுமாதலமனைத்தினுஞ்சிறந்தநல்வழக்கால்
வன்னமாவயற்சூழுமித்தலத்தினையதிகை
யென்னமாமறையாதியநூற்சொலுமின்னும். (௧௨)

சோதிநாதனைத்தொன்மையிற்றோன்றியமாண்பா
லாதிமாபுரியென்னுமோர்பெயரினையடைந்தப்
பாதிமாலிவணகரினையாக்கியபண்பால்
நீதியாமரிநகரெனச்சிறந்தது நின்று. (௧௩)

திருந்துகொன்றையங்காடெனுந்தீத்தருதன்னாற்
பொருந்துகொன்றைமாவனப்பதியெனும்புகழ்ப்படைத்த
வருந்திமாதவர்வந்துவந்திறைஞ்சிவண்வாழ்த்தி
யிருந்துவாழுமிப்பதிவளமியம்பவுந்தகவோ. (௧௪)

நாவலூரருமரசின்கைப்பணியையநங்காலான்
மேவற்பாதகமென்றவரேமெலிவுற்றூற்
காவற்பூண்டவிந்நகரினைக்கடையனேன்விரித்து
வாவலோவிச்சிறப்பிதென்சொல்லளவாமோ. (௧௫)

தலத்தின்மேன்மையைத்தெரிந்தளவறைந்தனஞ்சற்று
குலத்தின்மேன்மைசான்முனிவர்காட்கோயிலின்புகழும்
நலத்தின்மூர்த்திமாமேன்மையைப்புகலுவம்நன்கு
நிலைத்துகேளெனச்சூதனும்நிகழ்த்துவதானன். (௧௬)

தலவிசேடப்படலம்

முற்றிற்று.

ஆக திருவிருத்தம் எ௬௪.

---

† இந்நூலாசிரியர்பிதாமணியையரே. அளவு. கந்தசாமிப்பிள்ளையவர்களைக்கொண்டு உச்சிகாலத்தினுபயோகத்திற்கு நிலம்வாங்கிவிடுத்தனர்.

# அட்ட வீரட்ட மூர்த்தி நாம விசேடப் படலம்.

## வேறு.

†பொன்னியின்கிளையினொன்றாப்பொருந்தியகலையின்மாதின்
பன்னிபேரினொன்றுபதிமுதற்பொருளொண்மூன்றாம்
மன்னிபேரினொன்றுவயங்குரமெனும்பேர்நான்கு
தன்னினாப்பணில்விளங்குஞ்சரணுயிர்க்கரணமாமால். (க)

## வேறு.

சிருட்டிசங்கரித்தற்காத்தற்றிரோபவமுதலாமைந்து
பொருட்டிறத்தலைவனாகிப்பொங்கியவருளேமேனி
வுருத்திரண்டென்னநின்றவுத்தமவீரட்டான
மருட்டிரண்டென்னவட்டமத்தினுமதிகைமேலாம். (உ)

என்றலுஞ்சௌனகாதிமுனிவரரெழுந்துபோற்றிக்
கன்றெனவுருகிநின்றுகழறுவரையவெட்டு
நன்றுறுதலத்துள்ளமூன்றுவவுணரைநகைத்தெரித்த
தொன்றிதுநீங்கவேனைத்தலமெவனுரைத்தியென்றார். (ங)

சூதனுமகிழ்ந்துவெந்தைத்துணையடிநினைந்துசொல்லு
மாதியின்சிரமரிந்தகண்டியூர்க்கோவலாடும்
நாதனாரதிகைத்தக்கன்றலையறுபறியல்நாட்டுஞ்
சோதிவிற்குடிவழுப்பின்குறுக்கைசீர்க்கடவூர்ச்சொல்லும். (ச)

இத்தலமெட்டின்கண்ணுமெம்பிரானினிதுநின்றுச்
சுத்தவீரத்தனானென்றவண்சூதன்சாற்ற
வத்தலமெட்டின்கண்ணுமண்ணல்வந்தினிதுசெய்த
முத்தநற்செய்கையேதென்றிறைஞ்சிடமுனிவனோதும். (ரு)

## வேறு.

வண்டுளருமுண்டகத்தான்முன்னொருநாட்டிரைமோதும்வாரிசூழ்ந்த
மண்டிலங்கச்சிருட்டிசெயுமுதற்றொழிலின்மனச்செருக்கான்முதல்வநானே
யெண்டிசைக்குமெனப்புகன்றுசெருக்கடையவிறைமாலுமினிதுகாக்கும்
விண்டுநான்முதல்வனெனப்புகன்றவர்கள்வீண்வாதுவிளைத்துநின்றார். (சு)

---

† பொன்னியின்கிளைநதி-பவானி, கலைமாதின்பெயர்=வாகீசை, மூன்றாம் பொருள்=பாசம், வயங்குரம்=மார்பு, இவற்றின்மத்தியில் உள்ள எழுத்துகள்=வாகீசர்.

ஈதுணர்ந்துகுடிலையும்நான்மறையோடியிறைவர்நீரல்லீரென்று
வோதுதலுமவ்விருவர்மாறுபட்டுநின்றவழியுணர்ந்துநாதன்
சோதியுருவாய்த்தோன்றத்தண்ணெனமான்மறைந்திடவத்தூயபூவின்
வேதியனுமிறுமாந்துயிகந்துமுனந்தருக்கிநின்றான்வெருவிடாது. (எ)

அன்னதுணர்ந்தெம்பெருமான்றன்கூற்றில்வைரவனையழைத்துவன்னோன்
றன்னரியசிரமைந்தினிகழந்தநடுச்சிரமரியப்பணித்துத்தானே
யுன்னரியபலிக்கலமாய்க்கொண்டிந்தக்கண்டியெனுந்தலத்திலுற்றான்
மன்னுமிதுவேமுதலாம்வீரட்டமெனக்காந்தம்வயங்கக்கூறும். (அ)

இரணியாக்கன்சுதனுமந்தகனென்றொருவரக்கனிமையோர்தம்மை
முரணுறவேசிறைசெய்துபணியியற்றப்பணித்துவருங்காலைமூத்தோ
ரரணமருங்கைலையுடைந்துமைமேயவற்பணியியற்றியமர்ந்தகாலை
மருணயந்தவந்தகனும்படையோடுவளைக்கவெள்ளிமலையைச்சார்ந்தான். (கூ)

அம்மாற்றமறிந்துமையுமரியளித்தசதமாதர்தமையழைத்து
யிம்மாலந்தகனையழித்திவண்மீள்கவெனப்பணிக்கவிழையார்சென்று
வெம்மார்ந்தவந்தகனைவென்றுபுரங்கொளப்புரிந்துவிமலைதன்பாற்
செம்மார்ந்துவரவவுணன்மீளமிகுபடையோடுபோர்க்குச்சேர்ந்தான். (க0)

கோவலூரெனுந்தலத்தினருகணையவெந்தைமிகுகோபங்கொண்டு
மேவுவடுகனைவிடுக்கவவனெய்தித்திரிசூலங்கொண்டுவெய்யத்
தாவரியவரக்கனுடற்றனைதூக்கிவிண்டலத்திற்சாரவாட்டக்
கேவலனும்மெய்நடுங்கித்துதித்திடவும்புவியிறக்கிக்கேடிலாதோய். (கக)

நந்திகணநாதர்க்குட்டலைவனெனப்பணித்துநாரிபாக
னிந்தநற்றலத்தடைந்தானீதிரண்டாம்வீரட்டமென்பர்மேலோர்
பந்தமுறுதாரகனாதியமூவர்புரமெரித்தபதியாமீது
வந்தமுறுமூன்றாகும்வீரட்டமெனவிலிங்கமறையுமன்றே. (கஉ)

தக்கனியற்றியவேள்விதனையெரிக்கவீரனெனுந்தலைமையானை
நக்கனனுப்பியகாலைமுற்றுமழித்திடவீரனன்குசென்று
பக்கமுறுதக்கனதுசிரமரிந்துமீளபசுபதியான்சென்று
வக்கடவுள்வடுபறித்துவசந்தலையைக்கொடுவயனையெழுப்பியாங்கு. (கங)

அவர்செய்தவவினைத்தும்பறித்திந்தத்தலத்தமர்ந்தானாதலாலே
பவமகற்றும்பறியலூரெனநான்காம்வீரட்டம்பகருமீது
தவமிகுஞ்சீர்க்கூர்மபுராணம்புகலுஞ்சலந்தரனாமரக்கன்சார்ந்துப்
புவனத்திற்றிதிபுரிவோனாதியரைவென்றுசிறைபுகசெய்தானால். (கச)

இம்முறையேதேவர்களைச்சிறைசெய்துவெம்மிறையைவெல்லவெண்ணிப்
பம்மல்மிகுவருங்காலைச்சிவபெருமான்பனவனெனச்சார்ந்துபாரில்
விம்முதிகிரியைத்தனதுகால்விரலால்வரைந்திதனைவிரைந்துதூக்கி
நம்முடையசிரமேற்றுமெனப்பணிக்கச்சலந்தரனும்நுவலுமாழி. (கரு)

## ௩௫ அட்ட வீரட்ட மூர்த்தி நாம விசேடப் படலம்.

தனைப்பறித்துவெடுக்குமமயத்தவன்றன்கழுத்தரிந்துகரத்திற்சார்ந்த
வினைப்பறிக்கும்விற்குடியித்தலத்தமர்ந்தானைந்தாம்வீரட்டமீது
வனைப்பழகுமெந்தைபுகலிலிங்கத்தும்காந்தத்துமறையாநிற்கும்
வனப்புடையவித்திகிரிவீழியினில்மாதவற்குவழங்கினானல். (௧௬)

தாருவனமுனிவர்கடாஞ்செயுங்கருமச்சார்பேசார்கடவுளென்று
பாருவப்புடன்றருக்கிச்சிவபெருமான்றனைப்பழித்துப்பகருமன்னோர்க்
காருவமைக்கூந்தலராமனைவியருங்கற்பினின்மேன்பட்டோமென்று
சீருவப்புகொடுசிந்தைச்செருக்கினின்றசெய்திதனைத்திருமாற்கேளா. (௧௭)

மாதினியமோகினியாமோர்வடிவுதானெடுத்துமுனிவர்வாழும்
மேதினியில்வந்தவரைமயல்மூட்டியெந்தைமுனிமாதர்மேவுந்
தீதிலாமனையகத்துப்பிட்சாடனெனச்சென்றுதிகைத்துகாமச்
சோதியின்மூழ்கப்புரிந்தசெய்திதனைமுனியறிந்தார்தொகையதாக. (௧௮)

முனிவர்சினமீக்கொண்டுவபிசாரவேள்விதனைமுயற்றிச்செய்யப்
பனிவரையெனப்பெரியமாவேழமொன்றதனிற்பருத்துத்தோன்ற
நனிவனப்புகொளுமெம்மைமேற்கொல்லவேவவதுாணுகலோடுந்
தனிவண்ணச்சிவபெருமானுரித்தணிந்துயித்தலத்திற்சாரநின்றார். (௧௯)

அம்முனிவர்மனைவியர்கட்கற்பிநெறிவழுவிநின்றதாதலாலே
செம்மைமிகுமாவழுவூரெனப்பெயராய்ச்செவ்வியவீரட்டமாறாய்ப்
பொம்மன்மிகத்தோன்றியதீதொருகாந்தபுராணத்துட்பொலிவாய்க்கூறும்
மைம்மலியுங்கண்டத்தான்யோகியாய்க்கைலையெனும்மலையின்மாதோ. (௨௦)

ஒருநான்குமுனிவருக்குமுப்பொருளினியலைவலியுறுத்தியாங்கே
வருநான்குபரமுதலாம்நன்னான்கின்நிலையனைத்தும்வயங்கக்கூறி
தருநான்குமறைநான்கு† தந்திரத்துட்பூதிபெயர்த்தன்னுட்போதம்
பெருநான்குதவர்க்குணர்த்திச்சிவயோகநித்திரையிற்பெரிதுநின்றார். (௨௧)

அத்தருணமிறைநின்றதளவாகவிருவிதவான்மாக்கள்நின்ற
யித்தருணமிறைநிற்கிலுலகியலுஞ்சிருட்டியிலாதொடுங்குமென்று
வித்தகநல்லிமையோர்கள்மதன்விளித்துப்பூக்கணையாலெழுப்பமேவுஞ்
சுத்தவீரத்தனெனப்புகழ்ந்தவனைவிடுத்தாரத்தூயோன்சென்று. (௨௨)

புக்கவனுமெம்பிரான்மீதுகணைதனைச்செலுத்தப்புரவலன்றா
னக்கனுதற்றனைத்திறந்துவனங்கனுடற்றனைநசித்துவன்றேயிந்தப்
பக்கமுறுவிற்குடியித்தலத்தமர்ந்தானேழாகும்பதியேயீது
தக்கவகையாயிதனையொருகாந்தபுராணத்துட்டயங்கக்கூறும். (௨௩)

முனிமைந்தன்றன்னாயுட்பதினாறென்றறிந்துபரமுதல்வன்றாளை
யினிமையுடனர்ச்சித்துவழிபாடுசெய்துவரவியமன்வந்துத்

---

† தந்திரம்=ரௌரவாகமம்.

தனிமையவன்மேற்பாசம்வீசிடவத்தருணமதிற்றனதுகாலால்
நனிமைமறலியையுதைத்துவீழ்த்துபுநற்றவமைந்தைநன்குநோக்கி. (உச)

என்றுமுனக்கிவ்வளவேதந்தனமென்றறைந்துநீயெம்பால்நீங்கா
தொன்றிசிவபூசைபுரியெனமறைந்தான்கடவூரிலெட்டாயோங்குந்
துன்றுமிவ்வெண்டலத்தினதிகையேசிறந்ததொருதூயதான
மென்றிதனையதிகமெனவறிந்ததிகையெனவறைந்தாரறிந்தோர்முன்னர். (உரு)

அதிகைசிவபெருமான்றனபிதானமினிப்புகல்வமகிலந்தன்னிற்
றிதிபுரியுமரியமைத்ததானத்தாலரிநகரநாதன்றீதிற்
கதியளிக்குங்கொன்றைவனம்நிற்றலினற்கடிக்கைவனநாதனென்றும்
பதியரக்கரெரித்ததனாற்றிரிபுரசம்மாரரெனப்பகரநின்றார். (உசு)

வருகெருடனிவர்வள்ளல்வணங்கியதாலரிலிங்கமெனவும்மன்னு
மொருகருடன்பூசித்தகாரணத்தாற்கெருடலிங்கமெனவுமோது
முருகவிழுந்தாமரையான்பூசனையாற்பிரமலிங்கமெனமுயன்று
தருகரத்தமெய்யோனுதியர்வணங்கத்தருமலிங்கமெனவுஞ்சார்ந்து. (உஎ)

முப்புராதியர்வணங்குந்தன்மையினாலவுணலிங்கமெனவும்மூல
செப்பரியவநாதியாய்நிற்றலினாலாதிலிங்கமெனவுஞ்சேர்ந்து
வொப்பெரியவரக்கர்வென்றவீரத்தால்வீரட்டலிங்கமோது
மிப்பெரியபெயர்பலவாலெனவியம்பித்தீர்த்தவளமியம்புவானால். (உஅ)

அட்டவீரட்டமூர்த்தி நாமவிசேடப்படலம்
முற்றிற்று.
ஆக திருவிருத்தம் எகூஉ.

---

தந்திரத்துள்=ஆகமத்துட்பூதிபெயர்க்கொண்டதென்பது. ரௌரவம்.

## தீர்த்தவிசேடப்படலம்.

‡ ஒருசாதாரணச்சிறப்புயோங்கசாதாரணத்தின்
வருசிறப்பிரண்டுமுற்றவாகீசப்பரமநிற்கு
யிருமுலகதனில்வேங்தென்றிசைத்திடுபேரினோடு
பெருமைதாண்டகவேந்தென்றேவுரைத்திடுபெற்றியாலே. (க)

---

‡ சாதாரண. அசாதாரணச்சிறப்பை. சிவஞானசித்தியார். சுபக்கம். அளவை. ரு-வதுசெய்யுள். அந்நியசாதியுந்தன்சாதியுமகன்றுநிற்ற,றன்னியல்பந்நியத்தைத்தவிர்ந்துதன்சாதிக்கொத்த, துன்னியபொதுவியற்கைசொன்னவிவ்விரண்டினுள்ளே, மன்னியபொருளியாவு மடங்கிடுமொனமுற்றால், என்னுந் திருவிருத்தத்திற்றெளிக.

நாடியவேதநாதன்மோகினிநங்கைதன்னைக்
கூடியகாலையாங்குருலவியவியர்வைநீரே
நீடியதீர்த்தமாகிநின்மலக்கெடிலமென்ன
வோடியநதியனைச்சிவநதியெனவுரைப்பர்கற்றோர். (உ)

இக்கடிலத்தின்மூழ்குமிமையவரினியபாரின்
மக்களுமண்கீழ்நாகர்முனிவரும்பிறவிமன்னுந்
துக்கமுங்கழன்றுதூயசுஞ்ஞானமுடையாராகி
முக்கணரின்பப்போதின்நிழலினின்மூழ்குவாரே. (௩)

இதின்மதிவருடத்தோற்றமயனமூமுவாவியம்பும்
விதிபாதயோகமேகாதசிசட்டிகிரகணம்மேல்
மதிபிரதோடமர்த்தோதயமகோதயமெட்டான
திதிசதுர்த்தசியின்மூழ்கச்சிவனுறுகைலைசார்வார். (௪)

மதியிடபத்திற்றோன்றும்பூரணைமன்னிமூழ்கிற்
கதியுறுந்துலாத்திற்றோன்றுங்கந்தர்சட்டியினின்மூழ்கிற்
பதியுறுகைலைவெற்பிற்பரமனோடினிதிருந்து
முதிருஞ்சிவபோகத்திலாழ்ந்தவர்மூழ்குவாரே. (௫)

சுத்தநன்னீராலோங்குந்தூயதுகுணபாலின்க
ணித்தலந்தன்னின்மாலோனெடுத்ததோர்தீர்த்தமுண்டால்
வித்தகத்தீர்த்தத்தின்பேர்சக்கரதீர்த்தம்வேண்டி
யத்திருமாலுமாழிகொண்டிதுவாக்கினானால். (௬)

இப்பெரும்பொய்கைமூழ்குமிமையவரேனோரெல்லாஞ்
செப்பருஞ்சிவத்தின்மேனியுறுவதுதிண்ணமாமே
தப்பருமிதிற்சங்கற்பமாதியதயங்கக்கூறி
யொப்பறவிதிற்குடைந்தோருயர்சிவக்கலப்பால்வாழ்வார். (௭)

இச்சலந்தன்னைக்கண்ணுற்கண்டவரின்பப்பேறாய்
முச்சகப்பதியாய்ப்பின்னர்முதல்வன்றன்சார்பில்வாழ்வார்
யெச்சவிலாதவிந்நீரின்புறவருந்திற்றீண்டில்
நச்சணிகண்டன்வாழும்நல்லுலகடைவாரன்றே. (அ)

பிரமனித்தலத்தில்வந்துமூழ்கியபெற்றியாலே
பிரமதீர்த்தமதாயோர்பேர்ப்பெற்றதுகருடன்வந்து
பரமனைநினைந்துமூழ்கப்பண்பொடுகருடதீர்த்தந்
தருமனுமூழ்கிப்போனதாலிதுதருமதீர்த்தம். (௯)

சுத்தநீரிதனால்மன்னர்ச்சூலைநீங்கியதாற்சூலை
உத்தமதீர்த்தமாயவொருவாமபாகத்தீசன்
முத்தலைச்சூலத்தாலேயெடுத்ததோர்கூபமூழ்கிற்
சித்தவெம்பெருமானேங்குஞ்சிவவுலகுறுவரன்றே. (௰)

இப்பெருங்கூபநீரைப்புரோக்கணமிட்டுப்பின்னர்
செப்பருமிந்நீர்சேந்தியருந்திடின்மூழ்கிற்சேர்ந்த
வெப்பெனுஞ்சூலைபாண்டுமேகங்களோடுகுன்மம்
துப்புறுசுவாசகாசமாதியதொலையுமன்றே. (௧௧)

இவ்வுலகதனிலுள்ளவினியதீர்த்தங்களெல்லாஞ்
செவ்விதிற்றிரட்டியீதிற்சேர்த்தனரிறையுமிந்தக்
கவ்வையிற்கூபநோக்கிவணங்கிடிற்கலக்கும்நோயும்
பவ்வமார்ப்பிறவிநோயும்பாழ்படுமென்னற்றிண்ணம். (௧௨)

தீர்த்தநல்வளத்தையிங்குசெப்பினம்முனிவர்கேண்மின்
கார்த்திகழ்ச்சோலைசூழுங்காழியினிறையின்காதை
சீர்த்திகழுறப்புகல்வமென்றந்தச்சூதன்செய்ய
பார்த்திகழ்ச்சம்பந்தன்றன்காதையைப்பகருவானால். (௧௫)

தீர்த்தவிசேடப்படலம்.

முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௮௰௫.

# திருஞானசம்பந்தர் திருநடங்கண்டபடலம்.

திரிபுடிஞேயஞானஞாதுருத்திறங்களெல்லாந்
திரிபறக்கழன்றுநீங்கித்திகழ்பூதம்பொறியுமாதி
கருவியுங்கழன்றுநீங்கிப்பரவெளியதன்கண்ணோங்கும்
பெருவெளிதரிசித்தோங்கும்பெரியரைவணக்கஞ்செய்வாம் (௧)

பார்காவிக்கண்ணுட்பங்கன்பஃறலந்தன்னிலோங்குஞ்
சீர்காழிக்கௌணியர்ச்சீர்ச்சிவபாதவிதயரென்னும்
பேர்காதற்பனவர்மைந்தற்பேறின்றிவருந்தும்நாளி
லோர்காதன்மைந்தனங்குவுதித்தனனுலகமோங்க. (௨)

அன்னவர்தமக்குமூன்றுவாண்டதுசெல்லவோர்நாண்
மன்னியதந்தைபின்னேமறைக்குலப்பிள்ளைசென்று
துன்னியபிரமதீர்த்தக்குளக்கரையிருத்தித்தூய
முன்னியதடத்துநீரின்மூழ்கினர்முனிவராங்கண். (௩)

கரையினினின்றசேயுங்கண்பிசைந்தழுகநோக்கி
யுரைமனமிரந்துநின்றவொருவருந்தாங்காராகிப்

பரையைமாமுலையின்பாலைப்பருகிடவள்ளத்திட்டுத்
தரையுறுமைந்தர்க்கீயென்றுரைத்தனருமையுமீந்தாள். (௪)

சுத்தநீர்க்குடைந்துமீண்டதந்தையுஞ்சுதனைநோக்கி
வொத்தறவெச்சிலீந்தாராரெனக்கோற்கொண்டோய்ச்ச
வத்தனுந்தோணிநோக்கியருட்பெறுவிரலாற்சுட்டி
நித்தன்றோடுடையனென்றபதிகமும்நிகழ்த்தினரால் (௫)

பின்புகோலக்காவென்னும்பெருந்தலந்தன்பாற்சென்று
யின்புபொற்றாளங்கைக்கொண்டெல்லையிற்றலங்கட்சென்று
வன்பர்கள்வணங்குந்தூயவரத்துறையெனுந்தலத்தின்
முன்புறமுத்தாலயயானமும்பெற்றுமுன்னி. (௬)

சிவதலமனைத்தினுள்ளுஞ்சென்றுசென்றேத்திப்பின்னர்ப்
பவமறுதுறவோர்சூழும்பாச்சிலாச்சிரமமென்னும்
நவமுறுதலத்துட்சென்றுநன்மழவன்பயந்தத்
தவமுறுகன்னிக்குற்றமுயலகநோய்தவிர்த்து. (௭)

அரியருங்கொங்கநாட்டையடைந்ததிலரனூர்கோயிற்
பரிவுடன்வணங்கிப்போற்றிப்பனிக்காலம்வருத்தவாங்கே
விரிவறுநீலகண்டம்பாடிப்பின்வெப்புநீக்கிப்
பெரியபட்டீச்சுரத்தில்நித்திலப்பந்தர்ப்பெற்று. (௮)

அறவராயைந்தும்வென்றுவரன்டிப்பூண்டுநின்றத்
துறவர்கள்வாழுந்தூயவாவடுதுறையைநண்ணிப்
பெறலருமருமையாயகிழியினைப்பெற்றுப்பின்புத்
திறலருந்தலங்களுள்ளுஞ்சென்றர்வணங்கிப்பின்பு. (௯)

திருநெறித்தமிழேவேதமென்றுமூவுலகுந்தேற
யிருநிலத்துற்றதூயதலமெலாமிறைஞ்சிப்போற்றி
வருமறையவர்கள்வாழுமழகியமருகற்சேர்ந்து
வொருவணிகன்றனாவிபெற்றிடவுவந்துநல்கி. (௧௦)

இலம்பாடுதன்னைநீக்கியெழில்வீழிமிழலையென்னுந்
தலமதிற்சென்றுபோற்றிச்சதுர்கொடுமிடறுதாழ
நலம்பெறுமறைக்காடெய்திநற்கவாடம்பிணித்துப்
பலமுறுவால்வாயாம்பாண்டிநாட்டடைந்தாரன்றே. (௧௧)

வழுதியர்பெருமாற்குற்றவெப்புநோய்முற்றுமாற்றித்
தொழுதிருவேடுதன்னைத்தீயினிற்றோயாதாற்றி
வொழுகுறுநதியிலிட்டவேடேர்ந்துவெதிரேசெல்ல
முழுவதுஞ்சமணர்தம்மைச்சழுவிடைமுடுகவேற்றி. (௧௨)

சிவமணங்கமழுஞ்சைவசமயமேசிறந்ததென்றுப்
பவமறுகன்னிநாடுமுற்றிலும்பரவச்செய்து
நவமுறுபாண்டிநாட்டுத்தலமெலாம்நண்ணிப்போற்றி
லவமுறுமெமையாட்கொள்ளுமண்ணலுமீண்டானன்றே. (௧௩)

அவ்விடமகன்றுநீங்கியழகியகொள்ளம்பூதூர்த்
திவ்வியதலத்தையாங்குதொழுதிடமனத்துட்டோர்ந்து
பவ்வமார்முள்ளிவாயின்பலத்தநாவாயியக்கிச்
செவ்வியபெருமானுற்றதெளிச்சேரிசெல்லுங்காலை. (௧௪)

வழிவருகாலைப்புத்தன்சென்னியில்வானேறொன்றுப்
பொழிவுறப்புரிந்துவேளைத்தலமெலாம்புகுந்துபோற்றி
யெழிலுறுகூட்டத்தோடுமெம்பெருமானும்போந்துப்
பொழிலுறுதலங்கடோறும்பதிகமும்மொழிந்துபோற்றி. (௧௫)

தாவிற்சீர்ப்புகழ்களோங்கும்நடுநாட்டுத்தலங்கடம்மின்
மேவவுமனத்துட்கொண்டுபொன்னியையகன்றுமேவித்
தாவரும்பந்தரிட்டுத்தண்பனிநீர்கடேவித்
தேவர்களந்திசந்திநீங்காதுதிகைத்துமல்கும். (௧௬)

வீதியின்மகரதோரணங்களுமிக்கநாற்றிக்
காதமுநாறச்சுண்ணச்சாந்தமுங்கலந்துதூவிச்
சீதமுற்றுலவிவீசுந்தென்றலாற்சிறந்தவீதி
மாதலமாகுமெங்களதிகைமாநகரம்வந்தார். (௧௭)

வருதலும்நகரிலுள்ளமைந்தருமாதராரும்
பெருந்தவமறையோர்முற்றுந்துறந்திடுபெரியர்சூழ்ந்து
வொருதலமதிரப்பல்லியங்களுமுழங்கியோங்கக்
கருதருகிரணகும்பப்பொற்குடங்கையிலேந்தி. (௧௮)

எதிருறீஇவணங்கிப்போற்றியெந்தையின்பதத்தில்வீழ்ந்து
சதிருறுநகரின்மேவிச்சம்பந்தன்சிகரிநோக்கி
முதிரரும்பத்தியோடுவெட்டாங்கமாகமுன்வீழ்ந்
ததிர்முரசங்களோங்குமண்ணலின்கோயிலெய்தி. (௧௯)

உற்பலக்கண்ணியோடுவதிகையிலுற்றுமேவுந்
தற்பரனாயவேணித்தம்பிரான்றன்முன்வீழ்ந்து
நற்பரசிவத்தைநோக்கிநவநீதமெனக்கரைந்துப்
பற்பலதரமுன்வீழ்ந்துபணிந்துபின்னெழுந்துநின்று. (௨௦)

உளந்தனிற்பத்தியாங்குமேலிடவுருகிநின்று
வுளந்தருவுரோமமெல்லாமெய்யினிற்சிலிர்ப்பவாடி
குளமயற்கண்ணீர்த்தாரைதாரையாய்க்குமிழிட்டோட
விளம்பயிற்பிள்ளையாங்குவுருகிடவிருந்தகாலை. (௨௧)

ஆயகாலையினிலெங்களதிகையந்தலத்துமேவுந்
தூயவன்கணங்களோடுந்துணைவிதன்னோடுந்தோன்றிச்
சேயவனடனங்காட்டத்தெரிசித்துவன்பினோடு
மேயநற்பத்தியோடுமெய்ம்மறைப்பாடுவாரால். (௨௨)

குண்டையென்றெடுத்துவேதப்பதிகமுங்குலவிப்பாடி
மண்டுறுநீற்றுப்பெம்மான்மலையரசளித்தகன்னித்
தண்டிருவடியைப்போற்றிச்சார்தொண்டைநன்னாட்டின்கண்
திண்டிகழோத்தூரின்கணாண்பனைப்பெண்ணாய்ச்செய்து. (௨௩)

ஒருமயிலைக்கண்டேங்கியொளிமறைவயலிற்சூழ்ந்தத்
திருமயிலைக்கண்சென்றூயென்பினைத்திருவாய்ச்செய்து
வருமயிலேந்தும்வள்ளல்வயங்குபஃறலஞ்சென்றேத்திக்
கருமலமகற்றுந்தூயக்காழிவந்துற்றானன்றே. (௨௪)

ஆழிகட்பெருகிமூடுங்காலத்துமசையாதாகும்
காழியிற்பன்னாண்மேவிக்கருதுறுமணத்தினுக்கு
வாழியற்றாதைமற்றோர்வேண்டிடமனத்திற்கொண்டு
யேழிசையறிந்தவெந்தைமனத்தினுளிசைந்தானன்றே. (௨௫)

தருமணம்பொழிலிற்சூழ்ந்துசார்ந்துவிண்டடவுஞ்சோலைப்
பெருமணநல்லூர்தன்னிற்பெண்பேசியவரும்வேண்டத்
திருமணமுடிப்பவேகிச்செல்லுறழ்க்கூந்தலோடும்
வருமணக்குழாத்தினோடும்வள்ளலினடிசேர்ந்துற்றார். (௨௬)

## வேறு.

இன்னவிதஞ்சூதமுனிகூறிடவும்நேமிவனத்திறைவரெல்லாம்
மன்னியேவாய்புதைத்துவணங்கியேசூதமுனிவள்ளாலந்தப்
பன்னுமறைக்காழிவரும்பிள்ளைதரிசிக்கநடம்பண்ணும்வள்ளற்
றன்னரியநடனமதின்முறைமையதைச்சற்றுவிரித்தறைதியென்ன. (௨௭)

கேட்டிடலுஞ்சூதமுனிமிகமகிழ்ந்துகேடிலாமுனிவர்கேண்மின்
பாட்டியலுளடங்காதான்பஞ்சகிருத்தியத்தொழிலின்பண்பையிங்கு
நாட்டியுரைத்திடுவமெனநடனநாயகன்றன்னைநவின்றுபோற்றிக்
† காட்டுமுரோமகடனர்வேற்கந்தனடிபோற்றியேகளைவர்மாதோ. (௨௮)

திருஞானசம்பந்தர்த் திருநடங்கண்டபடலம்

முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௮௩௩.

† உரோமகடனர்—சூதர்.

# பஞ்சகிருத்திய
# நடனமகிமையுரைத்த படலம்.

இலைவருநன்மலர் மீதுந்தலைமீதும்புல்லுபவர்காளெங்கோமான்
நிலைவகுத்தமுக்கலருள்விஞ்ஞானகலரெனவேநின்றார்நீவிர்க்
கலைவகுத்தசகலரெனநிற்றலொடுமாயையினிற்கலந்துநின்றீர்த்
தலைமையுறுதிருநாவுக்கரசுபுகழ்ச்சரண்புகுந்துசார்ந்துவாழ்வீர். (௧)

முனிவர்காளெம்பெருமானடம்புரியுமைந்தொழிலின்முறைமைமூல
மினியபசுவனைத்தினுக்கும்பதியாகிவியற்பரமவிமலமாகித்
தனியுருவமருவமருவுருவமெனத்தானொன்றுமில்லாதாகிக்
கனிவுபரிபூரணமாயுயிர்க்குயிராய்ப்பராபரமாய்க்கலந்துமல்கும். (௨)

உரைக்குமனாதீதகோசரமாகியொருபொருடான்மலத்தைக்கொண்டு
புரப்பதுவாய்ப்போக்குவரவியற்றியபினெவ்வுயிர்க்கும்பொதுவாயின்பு
தரக்கருணையாற்சிருட்டிதிதிமுடிவுதிரோபவமுமருளுஞ்சாற்று
மிரக்கமொடுவிவைநடத்திவைந்தொழிலினிறைமைகொடுவினியதாக. (௩)

ஆன்மவர்க்கமனைத்தினையுமலத்தொடுக்கிமலபாகம்வருதற்காகத்
தான்மருவுசூக்குமசிட்டியையாக்கித்தூலசிட்டிவிதிக்கத்தக்கக்
கோன்மருவுமாலயனைப்படைத்தானோர்நொடிப்போதெங்கோமானெண்ணி
வான்மருவுமவ்வவரின்பக்குவந்தன்னுளத்தெண்ணித்தொழில்வகுத்தான். (௪)

அயன்மாலாலசுத்தமிகுமாயைதனைப்பிறப்பித்தேயளித்துப்பின்னர்
மயலகன்றவுருத்திரரைமகேச்சுரரைச்சதாசிவரைச்சுத்தமாயைக்
கியல்லாகவதிகாரராக்கியபின்றூலகிருத்தியங்களெல்லாம்
மயல்வளரக்கொடுவியற்றியனைத்தினுக்குங்காரணமாயமைத்துப்பின்னர். (௫)

இவ்வாறுவியற்றியபின்னிச்சாஞானக்கிரியையாகியின்பச்
செவ்வியதன்னிச்சையினாலுருவொன்றுதானெடுத்துச்சேர்ந்துதூய
திவ்வியநற்பரையாகுஞ்சத்தியையேசுயம்புருவாய்த்தியங்கத்தன்பாற்
பவ்வமறவமைத்துநீஇ பாரோர்களுய்யபலநூற்கட்பண்ணி. (௬)

உரியசிவஞ்சத்திசாதாக்கியமாமகேசமொடுசுத்தவித்தை
வரியவிதுவைந்தினையுந்தனக்குரியசுதந்திரமாயமையநின்றுப்
பிரியமுடனவ்வவரின்றொழிற்றானாய்நடந்திடத்தான்பேணிநின்று
பெரியநவந்தருபேதமொன்பதுக்கும்பெரியவனாய்நடனஞ்செய்வான். (௭)

ஒருசுத்தமாயையினுமசுத்தமாயையினுமொருகணத்திலண்டம்
பெருகுறவேபுரிந்தந்தவண்டத்தின்பகுதியெலாம்பெரிதாய்க்காத்து
வருதற்குத்தலைவரையுமவ்வவரினளவறிந்துவகையினாலே
யிருமனைத்தினுக்குமொருதலைவராய்ச்சிவலிங்கமிருந்துதோன்றி. (௮)

## ௧௦௪ பஞ்சகிருத்திய நடனமகிமையுரைத்த படலம்.

ஓங்குமொருசதாசிவராய்மகேசுரராயுருத்திரராயுற்றுமேவத்
தாங்கரியவெவ்வுருவம்வேண்டினுந்தன்னுளத்தெண்ணித்தாங்கிக்கைலைப்
பாங்கரதிகாரராய்மேவியபின்பஞ்சமுகப்பிரேரகத்தாற்
றீங்கருமவ்வைவரையும்படைத்தபின்னர்ப்பூதமுதற்சிருட்டிசெய்து. (௯)

மந்திரங்களோடுபதந்தத்துவங்கட்புவனங்கள்வன்னமிந்தத்
தந்திரமுமத்துவாவயன்மாலுமுதலியரைத்தானேயாக்கி
முந்துறுமவ்வவர்தமக்குவொவ்வொன்றேதொழிலளித்துமூலமாய
வந்திமதிபுனையுமணலயனாலேமற்றதையுமாக்கச்செய்து. (௧௦)

மற்றயனாற்றிசைப்புரப்போரிமையோர்களிராக்கதர்கள்மருவுந்தேவக்
கற்றவமாமுனிவித்தியாதரருங்கருடர்க்காந்தருவர்ச்சித்தர்ப்
பெற்றயாழ்க்கிம்புருடர்க்கின்னரர்மருத்துவர்கண்மனுக்கட்பேணு
முற்றவொருவிஞ்சையர்கணவக்கிரகர்வானமுறுவுடுக்கண்மன்னும். (௧௧)

வேலையினைவனம்நதியைவெற்பினைமாநாகர்களைபரவைவேறு
சாலையெனவூர்வனவும்விலங்கினமுமற்றவையுமியற்றிச்சாரும்
மாலையவற்றினைப்புரக்கப்பணித்துசக்கரப்படையுமருவத்தந்து
காலையிருதொழிலறமாய்நடந்திடநல்லுருத்திரரைக்களிப்பவாக்கி. (௧௨)

சூத்திரநற்பதுமைதனையாட்டுபவன்றொடர்க்கயிற்றாலியகற்போலக்
காத்திரவெம்பெருமானிச்சுத்தநடம்புரியானேற்கனத்தபூமி
மாத்திரமோவிண்முதலாமண்டவகையனைத்துமியங்காதேயென்றுச்
சாத்திரமறிந்தமுனிசாற்றிவாகீசர்கதைச்சாற்றுவானால். (௧௩)

பஞ்சகிர்த்திய நடனமகிமை யுரைத்தபடலம்

முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௮௪௯.

# திருநாவுக்கரசு சுவாமிகட்குச் சூலைநோய்நீங்கிய படலம்.

வேறு.

†இராவினையறுக்குஞ்செம்முகவிறையேவிபமுகத்தோற்கொருதுணையே
புராதனப்பொருளேமுசலியேகரும்பேபுரவமென்றுரைத்திடுநகரே
மராளமேவண்ணமொன்றின்மாபெயரேவயங்குமிவ்வெண்பதநாப்பண்
விராவுமிப்பெயரின்மரையடிப்போதேவீடெனநாம்புகலிடமால். (க)

வேறு.

அம்பரத்தின்முகடிறிஞ்சவளாவியமாபொழிற்கடொறுங்
கொம்பமருமிளமந்திகனியுண்டுகுதித்தெழுவ
வும்பர்மிடைமுனைப்பாடிநன்னாட்டிலோங்குவதா
மிம்பரிடைத்தவஞ்செய்ததினியசீர்த்திருவாமூர். (உ)

வயற்காட்டுமெரைமலரைவனிதையர்கண்முகமெனவே
வயற்காட்டுநெறுநீலமன்னோரினக்கமெனப்
புயற்காட்டுமென்னோரின்கூந்தலெனப்பொழிற்கடோறு
மியற்காட்டுமெயிற்குலங்களிழையணியரியற்காட்டும். (ங)

கழைச்சாறும்பலவின்வருங்கனிச்சாறுங்கருமுகிற்சூழ்த்
தழைச்சாருந்தருவிலுறுங்கொம்பரிடைச்சார்தேன்கூட்
டிழைச்சாறுமாங்கனியினுறுச்சாறுங்கால்வழியே
மழைச்சாரும்வெள்ளமெனமருதவயறனிற்சாரும். (ச)

பணையமருமரைமலரிற்சேக்கையுறுபருசங்கைத்
துணையதன்பேடெனக்கொண்டுதோயதனதுளத்தெண்ணி
வணையவதன்மருங்குசெலவச்சங்கமூர்தலைக்கண்
டிணையடியைமீதிறுத்திவெரீஇயெழுவவினியவனம். (டு)

காலாட்டிமார்பலருங்கஞ்சமுகவிளமகவைத்
தாலாட்டுமொலிகேட்டுவிஞ்சையருந்தயங்கிடுவார்
ஞாலாட்டும்பகட்டினத்தைச்செலுத்துமுழவர்வலித்தற்
கோலாட்டுமெடியொலியால்விண்கோவும்வெருவிடுமால். (சு)

---

† இராவினையறுக்குஞ் செம்முக யிறை=கதிர், இபமுகத்தோற்கொரு துணை=முருகு, புராதனப்பொருள்=அநாதி, முசலி=கவுளி, கரும்பு=இக்கு, புரவம்=புகலி, மராளம்=அரவு, வண்ணமொன்றின்மாபெயர்=பசுமை, இவற்றின்மத்தியிலுள்ள வெழுத்துகள்=திருநாவுக்கரசு.

## திருநாவுக்கரசு சுவாமி சூலைநோய் நீங்கியபடலம்.

நாகமதின்றனிமணியுங்களினமதின்றனிமணியும்
பூகமதின்றனிமணியும்புகழ்வளையின்றனிமணியும்
மேகமதின்றனிமணியுமென்கரும்பின்றனிமணியும்
மாகரையின்வயன்மிடைந்துயிரவுபகலெனமன்னும். (௭)

சந்தமறைமுழக்கொலியுந்தகுபுராணத்தொலியுந்
தந்திரத்தின்முழக்கொலியுந்தருக்கவாதத்தொலியுங்
கந்தமுறுமிலக்கணசூத்திரத்தொலியுங்கலைஞானம்
புந்தியினிற்பயிலொலியும்பொருந்துவனமணிவீதி. (௮)

வாமூரின்பரித்திரளுமன்னுகரித்திறள்களுமே
வாமூரினிடமோங்கிமன்னுமாவணமகத்தே
வாமூரின்சுதையெனுஞ்சொல்வனிதையருமைந்தருமே
வாமூர்ச்சிதங்கொண்டுமன்னுவசீர்த்திருவாமூர். (௯)

அப்பதியில்வேளாளவருமரபிலருள்விளங்குஞ்
செப்பரியகுறுக்கையரின்சீர்க்குடியில்நலஞ்சிறப்ப
வொப்பரியதவந்தானமொழுக்கமுடையவராகி
யிப்புவியிற்புறச்சமயவிருளனைத்துங்கெடவிருந்தார். (௰)

அன்னவரின்பெயர்ப்புகழனாரவரின்மனைவியராம்
வின்னிலவுமருந்ததியின்மேன்படுகற்பினையுடையார்
மன்னுநெறிதவறாதமாதினியாரெனும்பெயரார்
தன்னொடுவாழ்ந்தின்பநுகர்நாளையினிற்றகைசான்ற. (௧௧)

மனைவியார்மணிவயிற்றின்வளையீன்றமுத்தமென
வினையுடையேம்நெறிபிடித்துவீட்டுநெறியடைந்துய்ய
நனைசுருட்டித்திரைமோதுங்கடலீன்றநங்கையென
யனையராந்திலதவதியாரவதாரஞ்செய்தார். (௧௨)

சின்னாளிற்சிவசமயமேசிறந்தசமயமென
வெந்நாடுந்தழைத்தோங்கவிருட்டமணர்வாதமறப்
பன்னகமுடிதரித்தபார்விளங்கும்பரிதியென
மன்னாகும்மருணீக்கியாரும்வந்தவதரித்தார். (௧௩)

புகழனார்த்தமக்குவொருபுத்திரப்பேறுதித்ததெனத்
திகழுதிருவாமூரின்செழுமறையோராதியர்க்கண்
மகிழுமனத்தோடெய்திமைந்தையக்கமுறநோக்கி
யிகழிலாதுறக்காப்புச்சடங்குதனையியற்றினரால். (௧௪)

சமண்முதலாம்பரசமயக்களைகளைவதெனத்தன்மை
வமைவுறநன்னிலத்தூன்றிவழகுமுழர்தாளெடுத்து

விமலதிருமுகமெடுத்துவியர்வரும்புமுகமதனி
லமரும்பொற்குழையசையச்செங்கீரையாடினார். (கரு)

அழைத்திடுவார்தம்முகத்தையருட்கண்ணாலுறநோக்கி
விழைத்துறுநின்விழையெல்லாம்விருப்பமுறவேயளித்து
மழைத்தடங்கண்விடைப்பாகன்மலரடியிற்பதிப்பமென
யுழைத்தடத்தின்மடியிற்றாலியம்பியுறவாடுமால். (கசு)

தீயநெறிபட்டுழலுந்திறலமணர்வலியறவே
தூயநெறிசிவம்பெருகித்தூசுறுதீயமண்சார்பாம்
மாயநெறிநொடிப்போதின்மாழ்கவழித்திடுவமெனத்
தாயசீர்க்கரங்கொண்டுசெப்பாணிகொட்டினார். (கஎ)

இவ்வுலகிற்புறச்சமயமனைத்தினையுமிழிபாக்கிச்
செவ்வியநற்சிவசமயஞ்சிறந்ததெனத்தான்புரிந்து
வவ்வியமகற்றியவாரருளொழுகுந்திருவாயான்
மூவ்வுலகத்தவர்மகிழமுத்தமளித்தருளினார். (கஅ)

ஒருசமணச்சார்பனைத்துமோட்டெடுக்கயிவ்வுலகம்
பெருகுசிவமயமாகயிவ்வுலகந்தனிற்பிறந்தாய்
மருவகன்றகுறுக்கையரின்மரபின்சிந்தாமணியே
வருகநீயெனவழைக்கவந்துவந்துவப்பிப்பார். (கக)

குறையுடலில்முடிகண்டுவளர்ந்துகுறுகுறநின்றாய்க்
குறையுடலில்முடிகண்டுவளர்ந்துகுறுகாதுற்றேன்
குறையுடலையுடையநீயென்றோடுகூடவே
குறையறவேயாடவாவெனக்கூவுமம்புலியை. (உ0)

நீதியினால்டைந்தபெருநின்மலரின்சிற்றிலெலாம்
பூதியினையளித்தழித்தப்புதுமைவிளக்கியதென்ன
வாதியுமாபூதியினிலடிபடியநடந்தோடி
வீதியிற்பேதையர்சிற்றிலழித்துவிளையாடினார். (உக)

சித்தர்வணங்குறநின்றசின்மயதேசிகனாய
வித்தகனார்திருவடியின்விருப்பமுறச்சிவப்பறையின்
பத்தியினாலடிப்பலெனப்பல்லோர்க்குங்காட்டுவபோன்
முத்தசிறுபறையதனைக்கைக்கோலான்முழக்கினார். (உஉ)

ஓங்குசிவசமயமெனுமொருதேரையிவ்வுலகிற்
பாங்குபெறநடத்துமொருபண்பைவிளக்கியதென்னத்
தாங்குபுழுதியின்மருகிற்றளர்நடையஞ்சிறுமகவுந்
தீங்ககன்றமணியிழைத்தயெழிற்சிறுதேருருட்டினார். (உங)

நாத†முடிதனையறிந்துநன்னெறியாஞ்சரியையுநாற்
பாதமுடிதனையறிந்துபசுபதியார்நடம்விளங்க
நீதமுடிதனையுணர்ந்துதுரியமுடிதனைத்தெரிந்து
வேதமுடியறிவார்க்கோர்விளங்கு†முடியமைத்தார்கள். (உச)

இளமதிபோனுடோறுமின்புபெறவேவளர்ந்து
குளமருவுவிழிக்குருவின்மறைகுலவுகாமிகவா
துளமாயதந்திரமுந்தூயமதிதனிலறிந்து
வளமருவுமெமையாளும்வள்ளலார்வளர்நாளில். (உரு)

இவ்வாறுவளர்காளையிவர்தமக்கையாருக்குச்
செவ்வியநல்லகவையாறிரண்டுசெலச்செம்மையார்த்
திவ்வியவேளாண்குலத்துச்செல்வருஞ்சிறந்தகுண
வுவ்வுபெறுமருளுடையாரோங்குசிவநெறியுறுவார். (உசு)

அன்பென்னுங்கஞ்சுகத்தையமைவுபெறமெய்யணிவா
ரின்புபெறத்தகைமையினிவிராசகேசரியென்னத்
தன்பெரியகுணமெல்லாஞ்சற்பத்திபெறப்படுவார்த்
துன்புறுகொல்லாவிரதந்தனைக்கொண்டதூய்மனத்தார். (உஎ)

அன்னவருங்கலிப்பகையாரென்னுமபிதானத்தார்த்
தன்னரியமனைவியராய்த்திலதவதிதமைப்பெறவே
மன்னியமாமுதியோரைமற்றவரின்ருதையின்பாற்
பன்னிமணம்பேசிடவேபற்பலரைச்செலுத்தினர். (உஅ)

வந்தவருமம்மாற்றம்வந்தபடியறிவிக்க
யெந்தையரும்புகழனரின்புபெறமகிழ்வெய்தி
முந்தமுதற்குணமுதலாங்குலம்பேசிமணமுடிக்கச்
சிந்தையினிலிசையதிருமணமுடிக்கத்திர்வுற்றார். (உகூ)

மற்றவருமதுகேட்டுமனமகிழ்ந்துமணமுடிவைக்
கற்றசீர்க்கலிப்பகையார்தமக்குரைப்பக்களிப்பெய்தி
வுற்றமணமதைமுடிக்கவுறுகாலையுத்தரத்திற்
செற்றபகைதனையடவேமன்னவனுஞ்செலுத்தினனல். (கூ0)

அரசனேவிடப்போனகலிப்பகையாரப்போராங்
திரைசெய்கடற்றனைத்தாண்டதீவிரமாயப்போரில்
வுரைசெயசொனுப்பெரியவுறுபோரிலஞ்சாது
தரைசெயங்கொளப்பெரியபோர்த்துறையிற்ருனின்ருர். (கூக)

அத்தருணம்புகழனரகிலமதின்ருெடர்பறுத்துச்
சித்தருளஞ்சார்ந்துறையுஞ்சிவத்தினடிதனைச்சார்ந்தாரப்

† முடி=சிகை.

பத்தரகன்றிடவிருத்தற்பாதகமாமெனவுன்னிச்
சூத்தவவர்மனைவியருமுயிர்நீத்துப்பின்தொடர்ந்தார். (௩௨)

அன்னையத்தனிருவரும்போயகன்றபினரம்மைந்தர்த்
தன்னுளத்துட்டுயரமொரீஇதாதையர்க்குச்செய்கடன்கட்
பன்னுவவெலாமியற்றிப்பற்பலநாட்செலவாங்கு
மன்னரேவலிற்போனகலிப்பகையார்வன்போரில். (௩௩)

தம்முயிரைக்கொடுத்துபுகழ்கொண்டவிறந்தனைப்பலர்கள்
விம்மியுரைத்திடுசெய்திமெல்லியலாந்திலகவதி
யம்மையாருங்கேட்டுவொழியென்னுந்துயருந்தி
நம்முயிரைக்கொடுநிற்றல்நன்றென்றுவெனப்புகலும். (௩௪)

தந்தையாரும்பெரியதாயாருமென்றன்னை
வந்தகலிப்பகையார்க்கேமனமிசைந்துவளிப்பதென
முந்தவுரைத்திருத்தலினம்முறைமையாலவர்க்குரிய
ளிந்தவுயிரகற்றுவலென்றெழவிதனையுணர்ந்தவரின். (௩௫)

தம்பியார்த்துயரமொரீஇதமக்கைதிருவடிபிடித்து
யெம்பெரியதந்தையருந்தாயாருமிறந்தபின
ரும்பெரியதுணையாலேயுயிர்தாங்கியினிதிருந்தே
னிம்பர்நீயுயிர்துறக்கிலுனக்குமுனமியான்றுறப்பேன். (௩௬)

என்னமருணீக்கியாரியம்பிடவுமம்மையார்த்
தன்னுடையதம்பியாருயிர்தரிக்கவேண்டுமென
வுன்னிதனதுளத்தெண்ணியொருவாறுமனந்தெளிந்து
மன்னுமனைத்தவஞ்செய்துமற்றவருமினிதிருந்தார். (௩௭)

பின்புமருணீக்கியார்ப்பிறங்கறங்கட்செய்வாராய்
வன்புதிருநந்தவனமறஞ்செய்யுமநற்சாலை
யின்புபெறுநீர்ப்பந்தலினியகுளங்காவெடுத்துத்
துன்புறுநற்பசிதவிர்த்தலாதியநற்றொழில்நின்றார். (௩௮)

அறச்சமயமாஞ்சைவசமயமதிலழுந்திபினர்த்
திறச்சமயமறுவகையின்றிறமெல்லாந்தெளிந்துணர்ந்து
மறைச்சமயம்வளர்பெருமானருட்செய்யாமாண்பதனாற்
புறச்சமயப்பாடலிபுத்திரமென்னும்பதிபுகுந்தார். (௩௯)

அந்நிலையிற்சமணசமயம்புகுந்துவளவற்ற
மன்னுபெருசமணரெலாம்வழிபாடுசெயவதனிற்
பன்னுபெருநூலனைத்தும்பருகுமனமெனத்தெளிந்து
முன்னுவாரதிற்பெரியமூர்த்தியாரெனநின்றார். (௪௦)

 ## திருநாவுக்கரசு சுவாமி சூலைநோய் நீங்கிய படலம்.

தலைப்பறித்துப்பாயிடுக்கிநின்றுண்ணுஞ்சமணரிவர்
நிலையறிந்துநஞ்சமயம்நிலைநிறுத்துமரியபெருங்
கலையறிந்தவல்லவரென்றதிசயித்துக்கலந்திவர்க்குக்
கொலையகன்றவொருதருமசேனரெனும்பெயர்கொடுத்தார். (௪௧)

ஓருணர்விற்றலைசிறந்தவுத்தமர்மற்றெதிற்புகினுஞ்
சீருணர்வுகொடுநிற்பரென்னுமொழிதலைசிறக்கப்
பேருணர்வுகொளுந்தருமசேனரெனுபெரியரவர்ப்
பாருலகிற்சமணரெலாம்பரவிடநற்குருவானார். (௪௨)

இன்னவிதமிவர்நிற்கவிவர்தவ்வையிவ்வுலகம்
மன்னுபெருவாழ்க்கைநிலையாமையெனமனத்துணர்ந்து
தன்னுடையசுற்றமெலாந்தானொழித்துத்திருவதிகை
வின்னிலவுவீரட்டானஞ்சேர்ந்துவீற்றிருந்தார். (௪௩)

திருவதிகைதனிற்சென்றுதேவர்கள்வந்தினிதேத்தி
மருவுமெந்தைபின்தூயமலரடியில்விழுந்திறைஞ்சி
வுருவமுறுவீரட்டநாதரைக்கண்ணுறநோக்கி
கருவறுப்பான்றிருவருளின்கடன்மூழ்கியாங்கிருந்து, (௪௪)

வைகறையிற்றுயில்நீக்கிவருகெடிலந்தனின்மூழ்கி
மெய்கலந்தவுமைபாகன்றிருவடியின்வீழ்ந்திறைஞ்சி
மொய்க்கரியவண்டினஞ்சூழ்நந்தவனந்தனைமுன்னி
மைகலந்தவரவணியான்றனக்குபலமலர்கொய்து. (௪௫)

தொங்கல்களுமிண்டைகளும்பிணையல்களுமேதொடுத்துத்
தங்கியநற்றிருமெழுக்குச்சாணத்தைக்கொடுதடவிப்
பொங்கியநற்றிருவலகுகொடுதூசுபோக்கியே
மங்கலிலாத்திருவிளக்குப்பணியியற்றிமற்றவரும். (௪௬)

அவமனைத்துமறநீக்கிவக்கமணிமுதலாய
தவவடிவந்தனைத்தாங்கிசன்மார்க்கமுடையவராய்
சிவவடிவந்தனைத்துதித்துச்சிந்தித்துமப்போதும்
பவமகற்றுமெந்தையடிபணிந்துவருநாளின்கண். (௪௭)

மருட்பெருகுசமண்சமயப்படுகுழியின்மாழாந்து
யிருட்படவேநின்றுழன்றுதிரிகின்றயிளையவரா
மருட்பெருகுதம்பியார்தம்நிலையையவர்நினைந்து
தெருட்படவேதம்மனத்துத்தீராததுன்புற்றார். (௪௮)

தம்பிரான்சினகரத்துச்சாரந்துவணங்குந்தோறு
மெம்பிரானெனதனுசன்றனையிடுக்கணுறுதீய

வம்பாருஞ்சமண்சமயக்கடலேற்றியருள்வழங்கி
யிம்பர்சிவசமயத்துளிறுத்துவாயெனத்துதிப்பார். (சகூ)

அவ்வாறுதித்துவரவம்மையார்க்கனவின்கட்
செவ்வியநற்சிவந்தோன்றித்திருவுள்ளம்பற்றவார்க்
கவ்வைபெறுநின்னநுசன்முனங்கற்றமுனியாகி
யிவ்வுலகத்தெனைப்பூசித்துள்ளானிங்கவனையினி. (ரு)

சனத்தபெருஞ்சூலையினையளித்தாண்டுகெடுந்துயர
வினைத்திரளைப்போக்கியிவணுழைத்திடுவமெல்லியனின்
மனத்துயரமொழிந்திடுகவெனவியம்பிமறைந்திடலும்
நினைத்திதனையம்மையாருருகிபணிதனினின்றார். (ருக)

பின்னர்பெருசூலையினைப்பெருகவவர்வயிற்றினிடை
மன்னியுறப்புரிதலுமேமற்றதுவுங்குடர்குடைந்துக்
கொன்னவிலும்நோயெனவேகொடுந்துயரம்விளைத்திடலுந்
தன்னரியவகடுபிசிந்துறுதுயரிற்றனின்றார். (ருஉ)

மற்றதனைச்சமணறிந்துமருவிகுழுவாய்ச்சூழ்ந்து
வுற்றதனைநீக்கமயிற்பீலிகொடுதடவியொரு
நற்றடங்குண்டிகைநீரைக்குடிப்பித்தும்நவிற்சூலை
வற்றவொழியாமையினாலதிசயித்துக்கைவிட்டார். (ருஙு)

பின்னர்சமண்சார்தருமசேனரெனும்பெரியரவர்த்
தன்னுடையதவ்வைநிலைமுன்னுணர்வுதானெழுப்ப
மன்னுமவர்தமக்கறிவிப்பேனென்றுவன்சமண
ரின்னதறியாவகையாயியம்புகவென்றேவினார். (ருச)

சென்றந்தத்தூதுவர்கட்டிருவதிகைமருங்கணைந்துத்
துன்றுபெருநந்தவனந்தனிற்றிலதவதிதூய
மன்றுடையான்மிலைச்சுமலர்க்கொய்வுழியாங்கவர்மாடு
வொன்றியவுள்ளத்தோடுவணங்கிநின்றனரொற்றர். (ருரு)

அங்கவருமுகநோக்கியாவரெனவினவவவர்
மங்கியவுள்ளத்தோடுமற்றவருமியம்புவார்த்
தங்கியவெஞ்சமண்தருமசேனரெனுந்தம்பியா
ரிங்கனுப்பவுந்தடுதனவென்னவவற்குரைதியென. (ருசா)

பொல்லாதசூலையெனும்பிணிபோந்துகுடர்கலக்க
வெல்லாதசமணரதுநீக்காதுகைவிட்டார்க்
கொல்லாதநின்பின்னோன்னின்றனக்குக்குறிப்புணர்த்திச்
சொல்லாநீமீள்கவெனச்சொற்றனரென்றவர்ச்சொன்னார். (ருஎ)

## ௧௧௨ திருநாவுக்கரசு சுவாமி சூலைநோய் நீங்கிய படலம்.

அன்னதுணர்ந்தம்மையாரமண்கையர்த்தங்குமிடம்
மன்னியுறமிதியேநான்மற்றவர்க்கீதுரையென்ன
சொன்னவிலுமன்னோர்போய்ச்சொன்னபடியறிவிக்கத்
துன்னுகதிர்க்குடகடலிற்கதிரடக்கித்தோய்ந்ததால். (௫௮)

அவர்புகன்றவார்த்தையிதுகேட்டலுமேயந்தோவிப்
பவமாழ்கும்பிணிக்கியானென்செய்வேனெனப்படியிற்
றவமற்றசமண்சார்பைத்தாண்டியெனதுடன்பிறந்தச்
சிவமாகுந்திலதவதியாரடியைச்சேர்வனென. (௫௯)

மனத்துயரந்தானொழியமன்னுபெருஞ்சூலைநோய்க்
கனத்துயரந்தானொழியகரணமுதற்றத்துவத்தின்
சினத்துயரந்தானொழியக்குண்டிகைபாய்ச்சேர்ந்தொழிய
வினைத்துயரந்தானொழியப்போவதற்குவிரைந்தெழுந்தார். (௬௦)

கிறிவினைப்புலையர்கள்வாழ்க்கீழ்ச்சமயக்கடற்கடந்து
வறிவினர்நட்பொழித்துவழகியவெண்டூசுடுத்தி
செறிவினவிரவின்கண்ணொருவர்க்குந்தெரியாமே
நெறியாளர்ச்சூழ்திருவதிகைதனைநேரடைவார். (௬௧)

சூலையெனும்பிணிதன்னைத்தொடர்ந்துகுடர்தனைக்கலக்க
வேலையெனமுழவதிரும்மேன்மைதிருவதிகையினிற்
சாலையெனத்தொண்டர்குழாஞ்சார்ந்துநெருங்குறுமந்தக்
காலையினிற்றிலதவதியார்மடத்திற்கடிதணைந்தார். (௬௨)

மலமகன்றவாகீசமன்னவனுக்குற்றபெரும்
விலகலுருப்பெருஞ்சூலைத்திலதவதிமெல்லியலின்
நலகருணைத்திறத்தாலேநீங்குவதைநம்முடைய
பலகிரணத்தாற்பார்ப்பமெனப்பரிதியெழுந்ததால். (௬௩)

கடிதணைந்துதிலதவதியாரைக்கண்ணுற்கண்டு
முடியதனையவரடிக்கோரணியாகமுன்வீழ்ந்து
யடிவணங்கியடியேன்முற்றோன்றியவென்னம்மையே
படிவருந்துமிப்பிணிக்கேபாவியேனிரையானேன். (௬௪)

என்றுவவர்முன்வீழவென்னம்மைமுகநோக்கி
நின்றுசிவபெருமான்றன்நகரமுதன்மனுநினைந்து
குன்றுபுறச்சமயமெனுங்குண்டகழில்வீழ்ந்துமிக
பொன்றுபெருந்துயரடைந்தீரெழுகநீரெனப்புகன்றார். (௬௫)

அந்தவுரைகேட்டலுமேயருளுடையார்தாமுமிக
முந்துபிணியுடன்நிற்கமுன்னின்றவனைபுகலு
மெந்தைசிவபெருமான்றனருளேயீதென்றறிகப்
பந்தமறுத்தவர்கழற்கேபணிபுரிகவெனப்பணிந்தார். (௬௬)

பின்பவரினருள்நினைந்துபெரிதிறைஞ்சியெதிர்நிற்க
துன்பற்றவம்மையார்தூயசிவந்தாள்நினைந்து
வன்புசினகரஞ்செல்லவருளாளர்த்திருநீற்றை
யின்புடையவைந்தெழுத்தையோதியவர்க்கையீந்தார். (சுஎ)

அருளாளர்த்திருநீற்றையம்மையாரளித்திடலும்
பொருளாகுமீதென்றுப்புகழ்ந்தேற்றுப்பொற்புறவே
மருளாரநீக்கியார்மற்றுமுடன்முழுதணிந்துத்
தெருளார்ந்தமுன்பிறந்தார்பின்னேதான்சென்றனரால். (சுஅ)

பூதியணிவாரகத்தின்புரியிருளும்புறத்திருளும்
வேதியாய்மலக்களிம்புநீக்கும்வேதியனாய
சோதியாரில்விளக்குமலகுதிருத்தோண்டியுங்கொண்
டாதியார்கோயிலுடன்கொண்டவரையடைந்தனரால். (சுகூ)

வந்துதிருவதிகையில்வாழ்வரைமேருச்சிலையாரை
யந்திமதியணிந்தாரினருட்கோயிற்றொழுதிறைஞ்சி
யெந்தையினல்லடிவீழ்ந்துயெம்பிரானருளாலே
பந்தமறும்பாமாலையியம்புமுணர்வுறப்பகர்வார். (எ0)

## வேறு.

கூற்றாயினவாறெனும்பாட்டினிலேகொடிதாகியசூலையெனும்பிணிதான்
காற்றேயெனவந்துவகட்டினிலேகடுகிக்குடர்சுற்றிகடுந்துயரிற்
சாற்றும்பெருகூற்றுவனாய்முடுகிச்சார்ந்திட்டதுவிவ்வமயத்தினிடை
யாற்றேனதிகைக்கெடிலத்திறையேயம்மானிதுகாத்தருட்செய்கவென்றும். ()

நெஞ்சமுமக்கேயெனும்பாட்டினிலேநிலவும்மனந்தன்னையுனக்கடிமை
விஞ்சைப்பெறவைத்தனன்கொண்டனையேவிரும்பாதொருபோதுமிருந்திலனாற்
பஞ்சிற்சுடர்போலுறுசூலைவலிப்பற்றிக்குடர்ச்சுற்றிவருத்துவதை
வஞ்சாதிருவென்றனைசெய்திடுவாயதிகைப்பதிமேவுமிறையவென்றும். (எஉ)

பணிந்தாரெனவென்னுமோர்பாட்டினிலேபற்றுங்கொடும்பாவவினையனைத்துந்
தணிந்தேயவிவெண்டலைகொண்டுறுவீர்சாரும்பெருசூலையெனும்பிணியை
யணைந்தேயதைநீக்கியருட்புரிவீரானேறிவர்ந்தேவருமண்ணறலைத்
துணிந்தேயணிந்தீரதிகைப்பதியேதுலங்குமருட்கொண்டுறுதூய்வனென்றும்.

முன்னமடியேனெனும்பாட்டினிலேமூவாமுதல்வாவறியாமையினான்
மன்னுமெனையின்னுமுனிந்திடினேவாழேன்பிணிமூடிவருத்துவதே
யுன்னையடைந்தார்வினைதீர்ப்பதுவேயுன்றன்கடனாகையினானடைந்தே
னென்னையடிமைக்கொளுந்தூயதிகையெம்மானிதுகாத்தருட்செய்கவென்றும்.

# ௧௧௪ திருநாவுக்கரசு சுவாமி சூலைநோய் நீங்கிய படலம்

காத்தாள்பவனென்னுமோர்பாட்டினிலேகரையுற்றகுளத்திலிறங்குதுறை
நீத்தாயகயத்தினில்வீழ்ந்துநிலைகொள்ளாதுவருந்திநாநிற்றலைநீ
பார்த்துங்கரையேற்றவுளத்திலுருப்பதியேயிதுவொப்பது பார்த்தறியே
னுத்தாளொடுமேவியதிகையில்வாழம்மானிதுகாத்தருட்செய்கவென்றும்.(௭௫)

சலம்பூவொடுவென்னுமோர்பாட்டினிலேதமியேனுனையென்றுமறந்தறியே
நிலமேலிடுக்கண்ணலமுற்றிடினும்நீரேகதியென்றுநினைந்துறுவேன் [ன்
தலமேற்றமிழ்ச்செய்யுண்மறந்தறியேன்றமியேன்பிணிமுற்றிலுநீக்கியென்ற
மலமுற்றுமகற்றுகநல்லதிகைவாழுமருட்கொண்டுறுவள்ளலென்றும். (௭௬)

உயர்ந்தேன்மனையென்னுமோர்பாட்டினிலேயுய்யுங்குடிவாழ்க்கையுஞ்செல்வ
நயந்தேயுமதென்றிவண்நானளித்தும்நாட்டும்பெருசூலைவருத்துவதே [முமே
வயர்ந்தேயுறவிப்பெருஞ்சூலைவலிவந்நோவகடோங்கியலைப்பதுவே
பயந்தேனிதைமுற்றுமகற்றுகவேபரனேயதிகாபுரிக்கிறைவவென்றும். (௭௭)

வலித்தேன்மனையென்னு மோர்பாட்டினிலேவாழ்ந்தேன்மனைவாழ்க்கை
மகிழ்வொடுமே,பலத்தாலுறுகின்றவென்வஞ்சமனப்பற்றொன்றுமிலாமலேயிங்
கடைந்தேன், நிலத்தேயிளைத்தாலொருதுணையு முண்டோநீயேதுணைவெண்,
குழைக்காதுடையோய், யலுத்தேயுறவாட்டுமிச்சூலைவலியம்மானிதுநீக்கியருள்
கவென்றும். (௭௮)

பொன்போலெனச்சொல்லுமோர்பாட்டினிலேபுகழுஞ்சுடராடகமேனியினீர்
யின்பார்புரிப்புன்சடைசன்னியிலொருயிலங்கும்பிறைசூடியவெந்தைவந்து
துன்பேபுரிச்சூலையெனும்பிணியைதுடைத்தேயருட்செய்துவென்றுன்பறுத்து
வன்பேயருட்செய்யதிகைப்பதியினம்மானிதுகாத்தருட்செய்கவென்றும்,(௭௯)

போர்த்தாயங்கோரானையாம்பாட்டினிலேபோர்செய்கரித்தோலையணிந்து
வொரு, வார்த்தாங்குமரக்கனையோர்வரைக்கீழ்வன்மைப்பெறவீழ்த்திபின்வாழ்த்
தினையே, வேர்த்தேயுறவிப்பெருஞ்சூலைவலிமெய்யின் வருத்தந்தனைநீக்கியெ
னைச், சீர்த்தாங்குமருட்கொடையிங்களித்துத்தேவேயிதுகாத்தருட்செய்கவெ
ன்றும். (௮௰)

மைவந்தகருங்கலைபூண்டொருகைவார்பீலியைக்கொண்டுறுவெஞ்சமணத்
தெய்வந்தனைநீக்கிபுறச்சமயச்சேர்ப்பையகற்றும்படிசெய்துகடுப்
பைவந்தநன்மாசுணக்கங்கணராம்பரமன்றனைப்பண்பெறவேதுதிக்கக்
கைவந்தயிச்சூலையெனும்பிணிக்கோர்கைம்மாறிலதேயெனநைந்திறைஞ்சும்.

அக்காலையின்வீரட்டமேயபெருவணலுமசரீரியதாகவெனக்
கிக்காலையிற்செந்தமிழ்ச்செப்பினதாலென்றும்பெயர்திருநாவுக்கரசென்
றெக்காலமுமேவவளித்தனம்நீயென்றும்பதிகத்தினைப்பாடுகவே
நக்கானிதையருமரிவறிதாய்நவின்றொருவாய்மையைவானிடையே. (௮௨)

## வேறு.

இன்னபதிகம்பாடியினியதிருக்கடைக்காப்பின்
மன்னுமரக்கன்றனக்குவருளளித்தவகையுரைத்து
பன்னுதிருவதிகையினிலுழவாரப்படையாலே
புன்னறுக்கும்பணிசெய்துவருநாளின்மேற்புகல்வாம். (௮௩)

பாடலிபுத்திரத்தமர்ந்தசமணரெலாம்பள்ளியடைந்
தோடியவர்ப்பல்லவனையுறநோக்கியுத்தமனே
நாடரியநெறிதமருமசேனரொனும்நந்தலைவர்
மூடுபெருஞ்சூலையென முன்மொழிந்துகளவாக. (௮௪)

பொய்புகன்றுநஞ்சமயந்தன்னிலிதுபோகாவென்
றுய்தருநற்சிவசமயந்தனிற்சென்றுலொழியுமெனத்
தெய்வநிலைத்திலதவதித்தவ்வைபாற்சேர்ந்தடைந்து
சைவசமயம்புகுந்துசைவசிகாமணியானான். (௮௫)

அன்னோனையினிவிடுத்தால்நஞ்சமயமழியுமெனச்
சொன்னோரைமன்னவனும்நோக்கியதற்கென்சொன்மி
னென்னோனையவர்நோக்கியீர்த்தவனைநீற்றினறை
தன்னிலவன்றனையிருத்தியுயிர்வாங்கற்றகுதியென. (௮௬)

## வேறு.

அவ்வண்ணம்புரிகவென்றுவரசனுமியம்பலோடும்
மைவண்ணச்சமணர்வாக்கின்மன்னரைக்கொணர்ந்துவெய்ய
பொய்வண்ணச்சமணர்நீற்றினறையினிலரசைப்போக்க
செவ்வண்ணரடியையாங்குசிந்தித்துப்பதிகஞ்செப்பும். (௮௭)

மாசிலென்றெடுத்துவேதப்பதிகமும்மகிழ்ந்துபாட
வீசிடுதென்றலோடுபொய்கைபோற்குளிர்ந்துவீசத்
தேசொடுவிளங்கிநின்றதன்மையைதேர்ந்துநோக்கிப்
பேசிடுவார்களீதென்னதிசயமெனப்பிதற்றி. (௮௮)

மற்றுமச்சமணரெல்லாமருவியேகுழுமிச்சேர்ந்து
வுற்றநஞ்சமயத்துற்றபலத்தினைல்வேகாதுற்றான்
பற்றியிங்கிவனைநஞ்சமருத்தியேபடிறன்றன்னைச்
சுற்றியவுயிரைவாங்கற்றகுதியென்றுரைத்துச்சூழ்ந்தார். (௮௯)

பாலிடைநஞ்சந்தன்னைக்கலந்ததைப்பருகச்செய்தார்
நூலிடைப்பெரியோனுண்டுநோயறக்களித்துநின்றார்
வேதனுங்கொடியரெல்லாம்வெகுண்டுநஞ்சமயச்சார்பான்
மாலுறுநஞ்சந்தன்னைவென்றனனென்றுமற்றும். (௯0)

# ௧௧௬ திருநாவுக்கரசு சுவாமி சூலைநோய் நீங்கிய படலம்.

இனியிவன்றன்னைச்செய்வதென்னென்றுசமணரெல்லாம்
நனிதிரண்டிவனைவேழந்தனாற்கொல்லல்நன்றென்றுன்னிப்
பனிவரையென்னும்வேழந்தன்னைமேற்பாயவேவ
முனிவுடன்வேழ்முன்னவாகீசமூர்த்திநோக்கி. (௬௧)

சுண்ணவென்றுரைக்குஞ்செய்யுளோதவும்வேழஞ்சுற்றித்
திண்ணெனப்படிக்குள்வீழ்ந்துவணங்கியத்திசையினின்றப்
புண்ணுறுசமணர்தம்மைப்புரட்டியேகொன்றுவந்த
வண்ணவத்திசையேநோக்கிசென்றதுவரைமால்வேழம். (௬௨)

அந்தநற்செய்கைகண்டுவமணர்களதிசயித்துச்
சந்தநஞ்சமயமந்திரத்திறற்றவிர்த்தானிங்கு
கந்தமுற்றுறக்கற்றூணிற்கயிறொன்றுகொண்டுவீர்த்துப்
பந்தமுற்றிட்டுக்கார்கோட்பாலிடைவீழ்த்தல்நன்றாம். (௬௩)

என்றவருசாவியெந்தைத்தன்னைக்கற்றூணிலீர்த்துத்
துன்றுவார்கடலில்வீழ்த்தத்துணுக்கென்றுபாசமெல்லாம்
வென்றுநத்தெப்பமாகமேன்மிதந்தொருதேவாரம்
நன்றுறுநமச்சிவாயப்பதிகமும்நலமாய்ப்பாடி. (௬௪)

மறையினைப்பாடிப்போற்றிமலரடிதனைநினைந்து
துறையினிற்றெப்பமீதாரோகணித்தடைந்தார்த்தொண்டர்க்
கறைமிடற்றண்ணலிந்தக்கடவுளேயென்றுபோற்றி
யிறையினைவணங்கினின்றுசூழ்ந்தனரெந்தைபின்னர். (௬௫)

நலம்பெறுதலங்கடோறும்வணங்கிநற்றமிழாற்போற்றி
தலமெனுங்கடந்தைமேவியிலச்சினைத்தரிப்பாயென்ன
யிலகுமோர்பூதந்தோன்றியிடபமுஞ்சூலமிந்தப்
பலமுறுகுறியைக்கொண்டுபதித்தனவிரண்டுதோளில். (௬௬)

அத்தலம்வணங்கிப்போற்றியணைந்துபஃறலஞ்சென்றேத்திச்
சத்திமுற்றத்தின்மேவித்திருவடிசாற்றுகென்ன
சுத்தநல்லூர்க்குவாவென்றெந்தையுந்தோன்றிச்சாற்றச்
சித்திநல்லூரின்மேவித்திருவடிசூட்டப்பெற்று. (௬௭)

பற்பலதலங்கட்போற்றிபதியெனுந்திங்களூரின்
முற்செலவாங்குசோலைக்கூவமுமுதலாயுள்ள
நற்பலசத்திரத்தும்நாவினுக்கரசரென்று
கற்பெறுசிலையிற்றீட்டியுள்ளதையெங்குங்கண்டார். (௬௮)

கண்டவரிறும்பூதெய்திக்கடிதங்குசென்றுவிந்தத்
தண்டடமடமுஞ்சாலைக்கிறைவராரென்னச்சார்ந்தோர்த்
தொண்டர்க்குட்டலைமைசான்றவப்பூதியென்னுந்தொண்ட
ருண்டவரில்லத்திற்கிப்போதுதானுற்றாரென்றார். (௬௯)

அவ்விடங்கடிதிற்சென்றவவர்தமைக்கண்டவோடுஞ்
செவ்வியதொண்டர்முன்வீழ்ந்திறைஞ்சிடவரசுசெப்பு
மவ்வணத்தண்ணீரப்பந்தர்மடத்திலும்பேரைநீக்கி
திவ்வியவேறோர்பேரைத்தீட்டியதென்னவென்றார். (க௦௦)

அப்பூதியார்வெகுண்டுவையநீர்சொற்றமாற்ற
மிப்பாரிற்சொன்னார்யாருங்கண்டிலேனெவ்வூர்நீர்தான்
செப்புமென்றுறுக்கிக்கேட்பத்திருநாவுக்கரசருள்ளே
வொப்பிலாமகிழ்ச்சியெய்தியப்பூதிக்குரைக்குமன்றே. (க௦க)

திருநாவுக்கரசனென்னுஞ்சிறியவனானேயென்றார்
மருவியதொண்டர்கேட்டுமனந்தடுமாற்றமுற்று
யுருகியேநின்றுபோற்றியுறவோர்கண்மைந்தர்மாதர்ப்
பெருகுறவணைந்துவீழ்ந்துவமுதாக்கிப்பெரியமைந்தாம். (க௦உ)

திருநாவுக்கரசைக்கூவியிலைகொணர்வாயென்றேதப்
பெருவாழ்வுவந்ததென்னப்பிள்ளைச்சென்றறியுங்காலைக்
கருநாகமொன்றுவாழையிலைநின்றுகடிக்கவேகம்
மருவிடுமுன்னர்வாழையிலையீந்துமடிந்தானன்றே. (க௦ங)

என்னிதுசெய்தானென்றுயீன்றோர்களெடுத்துவோர்சார்
மன்னுறவைத்துப்பின்னர்மன்னற்குநீரளித்துத்
துன்னிடமனத்தினுள்ளேதடுமாற்றந்துயரம்நோக்கி
பன்னுதேவாரமோதியுயிரீந்துபரமர்மற்ற. (க௦ச)

சிலதலஞ்சென்றுபோற்றித்திருவீழிமிழலையென்னும்
தலமதிற்சென்றுபோற்றவிலம்பாடுசோரவாங்கே
நலமலிகாழிப்பிள்ளையோடுநற்காசுதன்னை
பலமுறுகுடவாயிற்கண்ணளித்திடப்பண்பாற்பெற்று. (க௦ரு)

உண்டுவெற்கடமும்போக்கியுவந்துபஃறலஞ்சென்றேத்தி
விண்டுதாழ்மறைக்காடெய்திவேதத்தாற்சாற்றப்பட்ட
மண்டுநற்கவாடந்தன்னைத்திறந்திடப்பாடிமறறும்
பண்டுபோற்றிரக்கமூடப்பிள்ளையாற்பாடச்செய்து. (க௦சு)

வாய்மூரின்மேவியெந்தைவண்ணமுங்கண்டுபோற்றி
மாய்பெருசமணர்செய்தவஞ்சனையான்மறைத்த
பாய்மறைப்பழையாரைக்கண்பரமனைவெளிப்படுத்தி
தாய்சிவந்தன்னைப்போற்றிதலையெனும்பதிகம்பாடி. (க௦எ)

சிவதலம்வணங்கிப்போற்றித்திருப்பஞ்ஞீலிக்குமேவ
பவமற்றமரசினுக்குபசிவந்தவருத்தம்நோக்கித்
தவமுற்றபனவன்போலவாற்றுணுத்தாங்கியையன்
நவமுறுவரசினுக்குவளித்துநாதன்மறைந்தான். (க௦அ)

## ௧௧௫ திருநாவுக்கரசுசுவாமி சூலைநோய் நீங்கிய படலம்.

அதுதனையுணர்ந்துபோற்றியமுவிழுதெனக்கரைந்து
கதுமெனத்தலங்களெல்லாம்வணங்கிகாளத்தியென்னும்
பதியதைவணங்கிக்கைலைபதியதிலெந்தைக்கோல
மதனையுங்காணவேண்டிவாசுமுத்தரஞ்சென்றால். (௧௦௯)

காசியென்றுரைக்குந்தூயபதிசென்றுகடறுதாண்டி
வீசியப்பாலிற்செல்லமெய்யிருகாலுந்தேய
தேசுறமாமாலூர்ந்துசெல்கையிற்றேவதேவன்
பேசிமுனிவரென்னப்பெரிதுவந்துற்றுசொல்வார். (௧௧௦)

அப்பனேயெங்குசெல்வதென்றவாருளலோடு
யிப்புவிதன்னிற்கைலைமேவவென்றியம்பலோடு
மொப்பருங்கைலைகாண்போருலகினுமுண்டாங்கொல்லோ
செப்புமென்றேதமன்னர்க்காளுதுதிரும்பேனென்றார். (௧௧௧)

என்றலுமறைந்துவிண்ணின்றியம்பிமெப்பநீதான்
நின்றிலெவாயென்றேதயுருப்பினைப்பெற்றுநின்று
மன்றுளோன்றன்னைப்போற்றமற்றயெம்பெருமான்சொல்லும்
பொன்றுமித்தடத்துண்மூழ்கியையாற்றிற்போந்துவாங்கு. (௧௧௨)

மால்வரைக்கைலைக்கோலம்வளம்பெறக்காண்பாயென்று
நூல்வளர்வாயாற்சொல்லிமறைந்திடநவலும்மன்னர்
கால்வளர்த்தடத்துண்மூழ்கியையாற்றிற்கைலைகண்டுப்
பால்வளர்த்தலங்கட்போற்றிபுகலூர்நற்பதியடைந்தார். (௧௧௩)

அத்தலமடைந்துவாங்குவநேகநாட்பணிகட்செய்ய
சித்தயெம்பெருமான்பொன்பெண்விருப்பிலனென்றுசீர்சால்
பத்தர்களறிந்துபோற்றச்சோதனைசெய்யப்பண்பான்
முத்தவத்தலத்தின்மூன்றுபணிசெய்துவருநாடன்னில். (௧௧௪)

விண்ணவர்மண்ணவர்க்கீழ்நாடவர்மகிழ்ந்துபோற்றப்
பண்ணமர்த்தேவாரங்கட்பலசொல்லிப்பரமன்றாட்குப்
புண்ணியாவென்னும்பாடலோதியேபுராரிபாதத்
தண்ணிழலடைந்தார்நாவுக்கரசெனுஞ்சான்றோரம்மா. (௧௧௫)

திருநாவுக்கரசு சுவாமிகட்குச் சூலைநோய்நீங்கியபடலம்
முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௬௬௧.

# குணதரவீச்சுரப் படலம்.

———: o :———

பூவிலோங்கும்புகழ்திரு
நாவின்மன்னரின்நன்மலர்
மேவுதிருவடிவேண்டுவோர்
மாவரும்பதம்வாழ்வரே. (க)

பல்லவக்காடவர்க்கோன்பரமராமையந்தும்வென்றச்
சொல்லரசினுக்குச்செய்த்துன்பத்தைநினைந்துவாடிப்
புல்லியசமணர்ச்சொன்னபொய்மாற்றமறியோமாகி
வல்லவிப்பெரியர்க்கிந்ததுன்பமும்வருந்தச்செய்தோம். (உ)

ஐயகோவிந்தப்பாபமெங்குறிலகலுமென்றுப்
பையவேயுசாவியந்தப்பரமரையடைந்தாலன்றி
வெய்யவிப்பாபம்நீங்காதென்றவன்வெருவிமன்னன்
துய்யநல்லதிகைமேவுந்துரியநாவரசைநண்ணி. (ங)

அவர்திருவடிப்போதின்கணட்டாங்கமாகவீழ்ந்துப்
பவமறுதுறவோர்த்தூயபரமனேபரவைதன்னை
நவமுறுகல்லேநாவாயாகவேநண்ணிவந்தத்
தவமுறுவரசேபூதிதரித்திடுமெய்யோய்போற்றி. (ச)

நாவரசென்னும்நாமம்பெற்றிடுநலத்தபோற்றி
மேவியவதிகையின்கணருட்பெறுமெய்யேபோற்றிப்
பாவியேன்குற்றம்நீக்கியருட்செயும்பரமபோற்றி
தேவனேபோற்றிபோற்றியென்றவன்றெரித்தகாலை. (ரு)

அன்றவன்பத்திநோக்கியரசும்நீறளித்துவன்ப
புன்றுணைச்சமணர்தம்மைநீத்துநீபுரத்தையன்று
வென்றவர்வாழுந்தானமேவிவாழ்வாகவென்றென்
புன்றலையடியைச்சூட்டும்வாசீசர்ப்புகன்றாரன்றே. (சு)

கேட்டலும்வணங்கிப்போந்துவேறுமமணர்தம்மை
வோட்டியேபள்ளிமுற்றுமிடித்தொருநொடிக்குள்வந்து
சேட்டிளஞ்சோலைசூழ்ந்திருவதிகையையடைந்துப்
பீட்டினிலடங்காநாதப்பரமன்வாழ்க்கோயிலெய்தி (எ)

சக்கரதீர்த்தமாடித்தகுதிருநீறுபூண்டு
வக்கமாமணியும்பூண்டுவரசினதடியைப்போற்றி
நக்கனைந்தெழுத்தையோதிநாதனையுட்சென்றேத்தி
வக்கணந்தன்னிற்சைவசிகாமணியானான்மன்னன். (அ)

பின்றவனரிதினீங்கிப்பெட்புறுகுணபாலின்க
ணென்றுநற்றலத்தைப்பாழியி, த்தைக்கொண்டுளுற்றி
நின்றவத்தலத்திலெந்தைச்சிவக்குறிநிறுவினானா
லன்றதுவாதிமூலேச்சரமெனவாயதன்றே. (௯)

அச்சிவபெருமான்றன்னையன்புடனவன்பூசித்து
முச்சகமகிழ்ந்துபோற்றமுதல்வன்றன்முன்னர்நின்று
நச்சணிகண்டன்றனோநன்மனமுறப்பதித்து
யெச்சலிலாதமன்னன்றோத்திரமியம்புவானால் (௧௰)

## வேறு.

காரானைதனையுரித்துவணிந்துநின்றகண்ணேயக்கண்ணினுள்ளமணியேதூயச்
சீரானைச்சின்மயனைத்தேவர்போற்றித்திகழுதிருமுகமைந்தாய்ச்சேர்ந்துநின்ற
நீரானைநின்மலனைநிபிடஞானநிரதிசயமாய்நின்றநிமலன்றன்னைப்
பாரானைக்குணதரவீச்சுரத்தினானைப்பரசிவனைப்பராபரனைப்பணிந்தேன்நானே. ()

வானேற்றிலுமையோடுமெகிழ்ந்துநின்றவடிவேபுன்சமணரெனும்வாரிநின்றுத், தானேற்றிக்கரைகொணர்ந்துதமியேன்றன்னைத்தண்ணடிக்குபணிசெயவும்பணித்துத்தாயாய், வூனேயென்னுயிராய்யென்னுள்ளேநின்றவுண்மையேயும்பர்களுமரியநின்றத், தேனேநற்குணதரவீச்சுரத்தின்மேவுந்தெய்வத்தின்திருவடியைத்தெரிசித்தேனே. (௧௨)

இருளார்ந்தசமணர்புரியிடுக்கணெல்லாமிழிபெனவேயகற்றியென்னையினிமையாக, மருளனைத்துமறநீக்கிமலரடியைத்தந்தமாயையினைமிதித்துநின்றவடிவேயென்னைத், தெருளார்ந்தபவக்குழினின்றெடுத்தாட்கொண்ட திறத்தினுக்கென்கைம்மாறுசெய்கேனந்தோ, வருளார்ந்தவாதிமூலேச்சரத்திலரியசிவக்கொழுந்தாகியமர்ந்ததேவே. (௧௩)

## வேறு.

பன்னுமிவ்வாறுபோற்றிப்பல்லவன்பணிகட்செய்து
மன்னுமத்தலத்திலெந்தைமலரடிநீழற்சேர்ந்தார்
துன்னுமித்தலத்தில்வந்துவணங்குவார்த்துகளனைத்து
முன்னுறவகன்றுமுத்திவீட்டினில்மூழ்குவாரே. (௧௪)

மணம்பொழிலதிகைக்கோயிற்குணபாலின்மன்னுமீது
குணதரவீச்சுரப்பேர்க்கொண்டனரிவருமின்னும்
வணமுறவாதிமூலேச்சரமெனவோர்பேர்மன்னும்
கணமுறுபெயரும்பல்லகரைவதுமெளிதாங்கொல்லோ. (௧௫)

இவ்வணஞ்சூதன்சாற்றமுனிவர்களெழுந்துபோற்றிச்
செய்வணரடியடைந்ததிருநாவுக்கரசர்முன்னே

யெவ்விசவடிவரீ துவியம்புகவென்றுசூழ
வவ்விதந்தன்னையீங்குவறைகுவன்சூதமேலோன். (கசு)

குணதரவீச்சுரப் படலம்
முற்றிற்று.
ஆக திருவிருத்தம். கஎக.

---

## வாகீசப் படலம்.

திருவாரூர்த்தன்னிலுற்றசெழுந்தவவடிவேபோற்றி
கருவாயபிறவிநீத்தகருணைமாமேனிபோற்றி
பொருவாதசமணைவென்றபுலவனேபோற்றியென்கட்
குருவாகவந்தாட்கொண்டகுரவனேபோற்றிபோற்றி. (க)

முனிவர்காள்கேண்மினென்றுமொழிகுவன்முதல்யுகத்தில்
தனியனுஞ்சங்கரன்மேற்றடவுகைலைக்கண்பெற்றப்
பனிவரைவல்லியோடும்பங்கயன்முதலாயுள்ள
நனிவருகடவுட்போற்றயிருந்தனன்நாரிபாகன். (உ)

ஆயகாலையினில்வெய்யவரக்கனுமிலங்கைவேந்தன்
மேயவக்குன்றையண்மிமெய்யிருபதுகரத்தாற்
றூயவக்குன்றைத்தோண்டிப்பெயர்க்கவுந்துணுக்கென்றந்த
நேயவக்குன்றமாங்குநெகிழ்ந்தெனவசைந்தமாதோ. (ஙு)

அக்கணமசலமங்கைவெருவியேயண்ணறன்னை
மிக்கவேயணைத்துமெய்யைத்தழுவியவெருவறன்னை
நக்கனுநோக்கித்தூயகால்விரல்நகத்தாலூன்றப்
பக்கமவ்வரைகளெல்லாமசைந்திடநெறித்தான்பண்பால். (ச)

அப்பொழுதிலங்கைவேந்தனைநான்குகரமுமந்தச்
செப்பருமலையின்கீழேயகப்படச்செறிந்துநிற்கத்
துப்பெனக்கண்கட்டோன்றித்தாரையாய்நீர்ப்பொங்க
யிப்பெரும்வினைக்கென்செய்வேனென்றவனழுதான்பன்னாள். (ரு)

அரக்கனைநோக்கவாங்குவநேகமாதவர்கட்சென்று
புரக்கவுமெம்மாலாமோவென்றவர்ப்புகன்றுபோனார்
வரக்கவிவிசைத்துவெம்மைவாழ்விக்கும்வள்ளலான
யிரக்கமேயுருவாய்த்தோன்றும்வாகீசவிருடிவந்தார். (சு)

வந்துமேவரக்கன்வெய்யவதையினைக்கண்டிரங்கி
யிந்ததுன்பத்தைநீங்காதிரிவதுதகாதேயென்று
புந்தியிலறிந்துவொன்றைப்புகலுவமறிந்துபோற்றி
னந்தநல்லிறையும்வந்துவருட்செயுமென்றறிந்து. (எ)

அரவுறுசாமவேதப்பிரியாவென்றெடுத்துவாங்குப்
பரவிடவிலங்கைவேந்தன்பார்த்துமூன்றாம்வேதத்திற்
புரம்நகைத்தெரித்தவெந்தைப்புராரிக்குவிருப்பமென்று
விரைவினிலறிந்துயாழைமீட்டிவேதத்தைப்பாட. (அ)

இசைக்கருட்செய்யுமெந்தைக்கேட்டலுமகிழ்ச்சியெய்தி
நசையுடனங்குசென்றுவரக்கற்குநாளும்வாளும்
வசையுறவளித்துவன்றேன்றனக்கருள்வழங்கிப்போனன்
கலைசயுறுமவனும்பின்னர்க்கரியவன்கணையான்மாண்டான். (கூ)

பின்பரசிவன்கைலைப்பிறங்கலையடைந்துவந்த
வன்புவாகீசன்றன்னையழைத்திதுயருளுமையன்
யின்புறவரக்கனுக்குவினியமாமொழியைக்கூறி
துன்புறவுரையாய்போலச்சூதாகவுரைத்துநின்றாய். (க0)

புனிதவிக்கைலைநீங்கிப்பூவுலகடைந்துநீதான்
மனிதநல்லுருவாய்த்தோன்றிவருதுன்பந்தன்னுண்மூழ்கி
நனிதவர்வாழுமிந்தநன்மலையடைவாயென்றுப்
பனிவரைமங்கையோடுநின்றபண்ணவன்பகர்ந்தான். (கக)

பன்னுமங்கதுவறிந்தவாகீசப்பரமன்றானு
மன்னுமானிடனாய்த்தோன்றிகலியினில்மயங்கிநின்றால்
நின்னடியடைதன்மிக்கவரிதெனநின்றுபோற்றப்
புன்னகைசெய்யுமெந்தைத்தடுத்தாள்வம்போதியென்றான். (கஉ)

அச்சாபத்தாலேயன்னோன்நாவினுக்கரசேயாகி
யிச்சகமதனிற்றோன்றியின்கதியடைந்தாரென்று
நச்சரவணிந்தவெந்தைத்தடுத்தாண்டநம்பிக்கிங்க
னுச்சியிலடிவைத்திட்டகதையினையுரைப்பான்சூதன். (கங)

வாகீசப்படலம்
முற்றிற்று.
ஆக திருவிருத்தம் கூஅஅ.

# சுந்தரமூர்த்தி சுவாமிகட்குத் திருவடி சூட்டிய படலம்.

இலச்சினைசூலத்தோடுவிடபமுமிரண்டுதோளின்
மிலைச்சியபெருமான்பாதம்முடியினில்மிலைச்சுவாமால்
கலைச்சொலும்வேதமாதிகருவிநூலொருங்கேகற்ற
நிலைச்சொலிதமதுபாதநிழலையுந்தருவரென்றே. (க)

சீர்தருமுனைப்பாடிக்கண்டிருநாவலூரில்வந்து
சார்தருசடையனுதிசைவனுமறையோற்குற்ற
பேர்தருமனைவியானவிசைஞானியென்னும்பெண்பா
லோர்திருமகவுயெந்தையருளினாலுதயஞ்செய்தார் (௨)

அக்குழவிக்குநல்லவாரூரெனும்பேரிட்டு
மிக்கநூன்மார்பிற்சேர்த்துவேதமுமுணரச்செய்து
தக்கநன்மறையோர்சூழமணம்வந்தபுத்தூர்சார்ந்து
புக்கதிலவர்க்குநல்லமணஞ்செய்யப்புகுங்காலெங்கள். (௩)

வெள்ளியமலையோன்வந்துவிளங்கியவோலைகாட்டி
வள்ளலையடிமையென்றுவவையினில்வழக்குப்பேசித்
துள்ளிடப்பனவரெல்லாந்திருவருட்டுறையிற்புக்குக்
கள்ளமாயடிமைகொண்டான்கற்றவாரூரன்றன்னை. (௪)

பின்னர்வன்றொண்டனென்னும்பெயரினையடைந்தாரூரன்
றுன்னியதுறையூர்ச்சார்ந்துதூயவச்சிவத்தைப்பாடி
மன்னியதொண்டர்சூழ்ந்துமருவியேசூழ்ந்துநிற்கும்
பன்னருமதிகையென்னும்பதியினையடைந்தாரன்றே. (௫)

அப்பதிதன்னில்நாவுக்கரசுகைத்தொண்டாலான
விப்பதிதன்னைக்காலான்மிதித்தலுந்தகாதென்றுன்னிச்
செப்புமப்பதியிற்சித்தவடமெனுமடத்திற்சேர்ந்துத்
தப்பறச்சயனித்தோர்பாலிருந்தவச்சமயந்தன்னில். (௬)

திருவதிகையிலேயோங்குஞ்சிவபெருமானுமங்கே
பெருவயதிகஞ்சென்றவிருத்தனாய்ப்பெயர்ந்துபோகித்
தருவளமடத்திலுற்றுவாரூரன்சயனத்தின்கண்
மருவியநாவலூரன்முடிக்குநேர்மலர்க்கால்நீட்ட. (௭)

ஆங்கவர்நோக்கியார்நீரடியினைத்தலைமேல்வைத்தல்
நீங்கியப்பாலேபோமென்றுரைத்திடநிமலனப்பா
தாங்கருமூப்பினாலேநீட்டினனென்றுசாற்றி
பாங்குறத்துயிலும்போதுபரமரும்மறுத்துநீட்ட. (௮)

பாவலர்வெகுண்டுநோக்கிப்பலகாலுமிதித்தநீர்தான்
யாவரென்றுரைக்கும்போதுயானையையுரித்துப்போர்த்த
மேவலூரப்பவென்னையறிந்திலையென்றுமெய்யைக்
காவலர்மறைத்தகாலையாரூரன்கலங்கிநின்று. (௯)

வந்தவரதிகைவாழும்வள்ளலென்றறிந்துபோற்றி
சந்தநல்லதிகைமேவுந்தற்பரனடிநினைந்து
புந்தியிலச்சத்தோடுபுரந்தனைநகைத்தெரித்த
யெந்தையைத்தமிழ்வேதத்தாலின்புறப்பாடுவாரால். (௧௰)

தமமானையென்றுமுன்வைத்தியம்பியப்பதிகஞ்சாற்றி
கைம்மானையணிந்தநெற்றிக்கண்ணுடைக்கடவுளாடும்
பைம்மாசுணத்தைப்பூண்டபரமனும்விடைமேற்பாக
னெம்மான்றன்கெடிலமூழ்கியினியவீரட்டம்போற்றி. (கக)

பின்புபஃறலஞ்சென்றேத்திப்பின்னராரூரடைந்து
யன்புறுபரவைதன்னையணிமணம்புணர்ந்துகொண்டு
துன்பறுவிறன்மிண்டர்க்குமேனையதொண்டர்கட்குந்
தன்புகழ்த்தெரியும்வண்ணந்திருத்தொண்டத்தொகையுஞ்சாற்றி (கஉ)

ஒருகுண்டையூரிற்கோளீச்சரமுற்றுபோற்றியாங்கு
வருகுண்டையூரின்நெல்லையாரூரில்வரப்புர்ந்துந்
திருகவின்புகலூரெய்திசெங்கற்பொன்னாகப்பெற்று
யருகுபஃறலஞ்சென்றேத்தியரன்முதுகுன்றுசென்றார். (கங)

பழமலைசென்றுபோற்றிப்பதிகமும்பாடியாங்குக்
கிழமலைநாதன்றந்தக்கேடிலாப்பொன்னையாரூ
ரெழமலர்த்தடத்தெடுத்துயெண்ணருந்தலங்களெல்லாந்
தொழுதவரிறைஞ்சிப்போற்றித்தொண்டனூடுற்றாரன்றே. (கச)

திருவொற்றியூரைச்சார்ந்துதிருப்பதிகங்கட்பாடி
மருவியதலத்திலுற்றசங்கிலிமார்தைக்கூடிப்
பொருவிலத்தலத்திற்பன்னாட்பொருந்தியேயிருந்துபின்னர்ப்
பெருகியதொண்டர்சூழுமாரூர்க்குப்பின்புவந்தார். (கரு)

வருதலும்பரவைநோக்கிமனத்தினுட்சினந்துகொள்ள
கருதிடவரியகோபந்தனைக்கண்டுகலங்கிநிற்கச்
சுருதியிலடங்காநாதன்றனையடிவருந்தவந்தத்
தெருதனினடந்துதூதாலிருவருஞ்சேரச்செய்ய. (கசு)

சிலகாலமாங்கிருந்துதிருவாரூர்விட்டுநீங்கி
நலமிகுமாதரோடுநல்லவையாறையெய்திக்
குலநதிநீரைநிற்கச்செய்துபின்குடநாட்டின்கண்
மலமுறுமுதலையுண்டமதலையையுமிழச்செய்து. (கஎ)

தேவர்கணீங்காதோங்குந்திருவஞ்சைக்களத்திற்சேர
மாவரசொருமாவேறியணுகவெள்ளானையூர்ந்து
பூவுலகத்திலுற்றப்புண்ணியர்ச்சூழ்ந்துபோற்ற
மேவருங்கைலைசார்ந்துமேற்பதமடைந்துசேர்ந்தார். (கஅ)

இன்னதைவிரித்துச்சொல்லியித்தலமூர்த்திதீர்த்தம்
மன்னியமூன்றால்மேன்மையடைந்தமாதலத்திலீது
துன்னிடவதிகமென்றேசுருதியிலானையாகப்
பன்னுமித்தலத்தின்மேன்மைப்பகரவுமெளிதாங்கொல்லோ. (ககூ)

என்றவண்சூதமேலோனெடுத்திதையியம்பலோடும்
வன்றந்தச்சௌனகாதிமுனிவரெழுந்துவந்த
நன்றுறுவதிகைதன்னைநண்ணியேபரவிப்போற்றத்
துன்றுநல்லவா[illegible]ழ்கித்துதைத்தனர்முனிவரெல்லாம். (௨௦)

புவனத்திலதிகமானவதிகையிற்புகுவதென்றுப்
பவமறுகடிலமாதிதீர்த்தத்திற்படிவதென்று
தவமுறுவீரட்டத்தின்றண்ணடிச்சார்வதென்று
நவமுறவுளத்திலுன்னிநற்றவரிருந்தாராங்கண். (௨௧)

சுந்தரமூர்த்திசுவாமிகட்குத் திருவடிசூட்டியபடலம்
முற்றிற்று,
ஆக திருவிருத்தம் (௧௦௧௧.)

# நைமிசமுனிவர் பூசித்தப்படலம்.

ஒருபெண்மேற்காதற்கொண்டுவுருவம்நூறுகச்செய்து
வருபெண்ணைப்புணர்ந்துகொண்டமலருறுபிரமன்நாணத்
திருவருட்புகலூரின்கண்டிருப்பணிசெயுங்கால்வந்த
வருமந்தப்பெண்ணைநோக்காவண்ணலைவணங்குவாமால். (௧)

முனிவர்களெல்லாஞ்சூதமுனிவனைவணங்கிப்போற்றி
கனிவுடனதிகைமான்மியத்தினைக்காதால்நாங்க
ளினிவுடன்செய்தபுண்ணியத்தினின்றுகேட்டோம்
நனியொருவிண்ணப்பத்தைநாஞ்சொலத்துணிந்துளோமால். (௨)

என்றந்தச்சௌனகாதிமுனிவர்களியம்பச்சூதன்
நன்றந்தவிடயமென்னவீங்குநீர்நவிறியென்னக்
கன்றலிலந்தநல்லவதிகையைக்கண்ணுற்கண்டுப்
பொன்றுறவுளத்திலிச்சைப்பூண்டனமெனப்புகன்று. (௩)

ஐயர்நீரேயல்லாதுவிக்காரியம்யார்செய்வார்ச்
செய்யனேயதிகைமான்மியத்தினைச்செப்பநேர்ந்த
வெய்யநற்சிரமத்தோடுவினையினேம்பொருட்டுமேலோர்ப்
பையவேதாமுமந்தப்பதிக்குமநீர்வருதல்வேண்டும். (௪)

இனையனகூறலோடுஞ்சூதமாவிருடிநோக்கி
யனையதைநணுகவெற்குமவாவுண்டுவருகவென்ன
வினையினையறுத்தவந்தமுனிவர்வெண்கடலேயென்ன
நனைபொழில்நேமிக்காட்டைவிட்டுநற்றவரெழுந்து. (௫)

எழுமவர்க்கானம்நீங்கிமலையெலாமகன்றுபின்னர்
வழிவருகாலைச்சூதவள்ளலுஞ்சௌனகாதி

வழுவிலாமுனிவர்க்கந்தவழிக்கரையடுத்துநின்ற
யிழிவிலாத்தலத்தையெல்லாமெடுத்தெடுத்தியம்புவானால். (சு)

வந்திறந்திடுபவர்க்குமாறுதமுத்திதன்னைத்
தந்திடுந்தலமுமீதுதருக்களும்நிறைந்து
மந்தியுந்தாவிப்பாயமலர்நிறைந்துள்ளதாய
கந்தமார்திருவமல்கும்கவின்மலையீதுகாண்மின். (எ)

ஐகயினான்மலைபெயர்த்தான்களித்திதுபெயர்க்குங்காலை
மெய்ப்பலமாகநின்றமெய்த்தல்மீதுகாண்மின்
மெய்ம்மூன்றெழுத்திலெட்டாமுயிர்சேரமேவுந்தாரத்
துய்யசொல்லடுத்துச்சேர்ந்ததூயநற்றலமீதோர்மின். (அ)

நாகமும்நாகமும்போய்நாதனைப்பூசையாற்றி
யாகத்தைமுடிவுசெய்தவரியநற்றானமீது
பூகமார்ச்சோலைசூழும்நாவலூர்ப்புலவன்வந்து
மோகமாய்ச்சங்கிலித்தோள்புணர்ந்திடுமூதூர்காண்மின். (கூ)

தவநேசமுடையகாழிச்சம்பந்தனிங்குவந்துச்
சிவநேசக்கன்னியென்னைச்சிறந்திடுகன்னியாக்கிப்
பவநாசமாக்குந்தூயபதியிதுபேயாய்வந்துப்
புவநேசத்தாயர்பூசைப்புரிந்தநற்றானமீது. (க0)

பசியினால்வருந்திநின்றநாவலூர்ப்பண்ணவர்க்குப்
பசியினையகற்றவன்னமிறந்தநற்பதியாமீது.
நிசியிருக்கழுகுவந்துநின்மலன்றன்னைப்போற்றுஞ்
சசிவந்துதவிழுமிந்தச்சயிலமுமீதுகாண்மின். (கக)

இன்னநற்றலங்களெல்லாமியம்பிடமுற்றுங்கொல்லோ.
நன்னர்வாழதிகைதன்னைநணுகிடமுனிவரெல்லாம்
மன்னிடநிலத்திழிந்துமருவியத்தலத்தைநோக்கித்
துன்னியத்தலத்தின்வீதிதனிற்றோய்ந்துவணங்கிப்பின்பு, (கஉ)

சிகரியைவணங்கிப்போற்றிச்சக்கரதீர்த்தமேவிப்
பகர்தருமெந்தைத்தூயபதத்தினைநினைந்திரங்கி
வகமுறவைந்தெழுத்துமரகரவென்னுஞ்சொல்லும்
புகன்றுவம்முனிவரெல்லாம்புகுந்ததிற்குடைந்தாரம்மா (கங)

பின்றிருநீறுபூசிப்பிறங்கக்கமணியும்பூண்டுத்
தன்றிருக்கரத்தைச்சென்னிமேற்கூப்பிச்சங்கரற்கு
முன்றிருவாயில்நின்றுமுனிவரட்டாங்கமாக
நன்றரனடியில்வீழ்ந்துநந்தியைவணங்கிநல்லோர் (கச)

அம்பரத்தாடும்வள்ளலடிமலர்த்தன்னைப்போற்றி
நம்பமுற்றோன்றும்யானைமுகத்தனைநண்ணிப்போற்றி

வும்பர்களுய்யப்பாணந்தாங்கியவொருவன்றாளை
யிம்பரிற்படிந்துபோற்றியுட்சென்றுமுனிவரெல்லாம். (கரு)

மாலயன்வணங்கி[illegible]ற்றும்வீரட்டவள்ளறன்னை
மேலவர்வீழ்ந்தி[illegible]மெய்ம்மறையாலேபோற்றி
பாலவர்வெளிக்குள்வந்துபரமரின்றொண்டராயச்
சீலமார்த்தொண்டரானயேனையர்திருத்தாட்போற்றி. (கசு)

திருநாவுக்கரசுதன்னைத்திருக்கண்ணாற்கண்டுவீழ்ந்து
வொருநாமந்தன்னைப்போற்றியுமையவளடியைப்போற்றி
பெருநால்வர்க்கன்றமர்ந்தபெரியவனடித்தாட்போற்றி
கருநாகமுகத்தன்றன்னைக்களித்துப்பின்வணங்கிப்போற்றி. (கஎ)

குமரவேள்தன்னைப்போற்றிநந்தியைக்குனிந்திறைஞ்சி
வமர்தருசூலதீர்த்தமதுநோக்கித்தொழுதுவாங்கே
தமரொடுதீர்த்தந்தன்னைப்புரோக்கணஞ்செய்துசார்ந்து
விமையவர்மேவுமந்தத்தலத்திற்குவெளியிலெய்தி (கஅ)

சீவநன்னதியாயோடுங்கெடிலத்திற்றிளைந்தாடிப்பின்
மேவருமாங்குநின்றசிவலிங்கமேவிப்போற்றித்
தாவருங்காடவர்க்கோன்றாபித்ததலத்தில்வந்துப்
பாவலமுனிவரெல்லாம்பரமனைப்பணிந்துபோற்றி. (ககூ)

பின்றிருவதிகைநாதன்றலமெய்திப்பிறையணிந்தோன்
றன்றிருவடியைப்பன்னாட்போற்றிபின்விழாவைத்தங்கி
மூன்றுசாரோணமாதிவவுரோணமுற்றும்நோக்கி
வென்றவரைந்துமந்தமுனிவரர்மீளவெண்ணி. (உ0)

அருட்புராணம்புகன்றவருமையாஞ்சூதனுக்குப்
பொருட்புகழ்ச்சிறப்புநல்சித்தத்தமதிருக்கைபோக
மருளருஞ்சூதர்ப்போற்றிமருவியேவிடைபெற்றாங்கே
பெருகியமுனிவரெல்லாம்பெயர்ந்துதம்மிடஞ்சேர்ந்தாரால். (உக)

அருமையதாகவோதுமதிகையின்புராணங்கேட்போர்த்
திருவமர்பொருணன்காய்வோர்திகழுறப்படிப்போர்பின்னு
மருவியேபடிப்போர்கட்குமாண்பொருளளிப்போரிந்த
விருமையுநல்குநூலையியம்புறப்பூசைசெய்வோர், (உஉ)

இம்மையிற்செல்வமோடுமனைவியுமக்களேனைச்
செம்மைநற்செல்வந்துய்த்துத்திகழுறப்பதமுமேவி
யம்மையின்பங்கட்பெற்றுயருட்குறியோடுவோங்கு
மெம்மையன்பாதப்போதையடைவதுமெளியதாமால். (உங)

நோய்முதன்மிடியுஞ்சேராநுவலுங்கீழ்மக்கணட்பு
வாயடையார்கடீயமனையடையார்கள்வஞ்சச்

சேய[illegible]டையார்களின்னுந்தீயதீங்கொன்றுமேவா
ராயவிப்புராணங்கேட்டுப்படிப்பவராஞேரெல்லாம். (உச)

மிகவிரித்துரைப்பதென்னேமிக்கவிப்பு[illegible]ந்சன்னிற்
புகலுமோர்செய்யுட்பாதம்நான்கிளைப்[illegible]வார்க்கு
வகமுறுநான்குமுத்தியடைவதுந்திண்[illegible]ந்தப்
பகர்தருபுராணமோங்கும்மனைசெல்வமோங்கும்பாரில். (உரு)

வேறு.

பொருந்துபுகழதிகையில்வாழ்வீரட்டநாதரின்றாய்ப்புராணம்வாழ்கத்
திருந்துபுகழ்வீரட்டநாயகியாந்திரிபுரையின்றிருத்தாள்வாழ்க
வருந்துமிகுசூலமுதற்பவமகன்றவாகீசர்திருத்தாள்வாழ்கத்
தருந்தடங்கணம்மையொடுநடமாடுந்தூக்கியநற்பொற்றாள்வாழ்க (உசு)

நைமிசமுனிவர் பூசித்தபடலம்
முற்றிற்று.
ஆக திருவிருத்தம் க0கூஎ.

திருவதிகைப்புராணம்
முற்றுப்பெற்றது.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 4 | 3 | ரேன்ற | ரேன்றி |
| 13 | 10 | பலலு | புலலு |
| 21 | 17 | ளுடை | ளுடைய |
| 25 | 24 | யமைந்தனர் | யமைத்தனர் |
| 31 | 25 | வற்லை | வற்றை |
| 34 | 11 | சேரென | சேறென |
| ஷை | 17 | யுயவர் | யுயர் |
| 37 | 7 | கேடடத்தூய | கேட்டதூய |
| 39 | 21 | மாயையும் | மாயனும் |
| 40 | 30 | தெரி | அரி |
| 63 | 10 | மாணங் | மாலுங் |
| 64 | 8 | கேடபவ | கேடபவு |
| 75 | 10 | விற்றெரு | விற்ரு |
| ஷை | 21 | மமாலை | மாமலை |
| 87 | 8 | ஓ கு | ஓ ங்கு |
| 88 | 20 | கொக்கின்மே, | கொக்கினமே |
| 95 | 15 | புரம | புறம் |
| 104 | 17 | வியகற் | வியக்கற் |
| 108 | 6 | மறைறகுலவு | மறைறக்குலவு |
| 119 | 7 | சணர் | சமணர் |
| 122 | 24 | ஞுச்சி | ஞுச்சி |
| 127 | 14 | நல்சி | நல்கி |

திருநாட்டுப்படலத்தில் விடுபட்ட ௭௫-வது செய்யுள்.

திருமாணிக்குழிகுடக்கிற்சிறந்தபுட்பகிரியென்ன
வருமாண்புபெற்றகரிவள்ளல்வாழ்[illegible]லையும்
பெருமான்வாழொருதிருச்சோபு[illegible]பெறலரிய
தருமாண்புதலப்பெருமைசாற்றலாந்தகைமைத்தோ.

---

இந்நூலாசிரியரியற்றிய நூற்பெயரட்டவணை.

திருவதிகைப் புராணம்.
புட்பாசல புராணம்.
திருநாவுக்கரசு சுவாமிகள் பிள்ளைத்தமிழ்.
ஷை இரட்டைமணி மாலை முதலியன.

பதிப்பன.

திருவாமூர்ப் புராணம்;
திருவதிகையுலா முதலியன.

---

## விளம்பரம்.

இப்புராணம் வேண்டியவர்கள் திருவதிகை திருநாவுக்கரசு சுவாமிகள் மடம் சிவஞான சுவாமிகளிடத்தும் பாளயம் பச்சைகந்த சுவாமிகள் மடத்திலாவது பண்ணுருட்டியில் இத்திருவதிகைப் புராணம் அரங்கேற்று வித்தவரும் புட்பாசல புராணத்திற்கு உபசரித்தவருமாகிய அ. க. சிவசிதம்பரப்பிள்ளை யிடத்திலும் ஷை யார்தம்பி சென்னப்பநாய்க்கன் பாளயம் மு. கொ. சபாபதிப் பிள்ளை குமாரன், சின்னப்பமுதலியாரிடத்தும், புட்பாசல புராணம், அரங்கேற்று வித்தவரும் ஷை ஸ்தலம் பரிபாலகருமாகிய, அரங்கசாமிப்பிள்ளை, சொக்கலிங்கப்பிள்ளை, முத்தையசுவாமிகள் முதலியவரிடத்து; பெற்றுக்கொள்ளலாம்.

| | | ரூ. | அண | பை. |
|---|---|---|---|---|
| விலை காலிகோட்டடம்... | ... | 1 | 0 | 0 |
| மார்பில் கட்டடம்... | ... | 0 | 12 | 0 |